# தமிழரசு

திங்கள் இருமுறை

ஜூன் 1. 1972 35கா





# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT. 3856

மலர் 2 இதழ் 23

1 - 6 - 1972

# தமிழரசு

முதல்வர் தரும்

குறளோவியம்

பாதுகாப்பு நிதியளிப்பு விழாப் பேருரைகள்

வாணிகம் வளர்ப்போம்

புத்தொளி தருவோம்

நல்வாழ்வுத்துறை அமைச்சர்

பேராசிரியர் வேண்டுகோள்

கேளுங்கள் கொடுக்கப்படும்

சிறு தொழில் வளர சிட்கோ

வெய்யிலுக் கேற்ற வி ஐ பி

ஒன்றுக்கு மேல் வேண்டாம்

பூட்டான் செல்லும் புத்தர் சிலைகள்

உண்மையின் சந்நிதி (தொடர்கதை)

வெண்பாப் போட்டி

மண் (கவிதை)

அறிவே துணை (சிறுவர் கதை)

பொருட்காட்சியின் வரலாறு

நரசிங்கன்பேட்டை நாயனம்

கண்ணகிக்குக் கலைக்கூடம்

எழுநிலை மாடம்

அஞ்சல் தலைகளில் அன்னைத் தமிழகம்

ஆராய்ச்சி மணி (படக்கதை)


குறளோவியம்

# முதல்வர் கலைஞர்

மாலை நேரத்திலே-சோலை ஓரத்திலே-வேலை நிகர்த்த விழியினர் காதல் பயில்வர். அதுபோல் ஆலையிட்ட கரும்பென அவதிப்பட்டு உழல்வர் ஆளன் அருகிலா மாதர். அந்திவானத்தின் அழகு காண்பர்-அதனோடு தன் இதழை ஒப்பிடும் அழகன் அங்கு வரவில்லையே என அயர்வர். தென்றல் அவர்தம் ஆடை நகர்த்தும், அதற்கு வாழ்த்துக் கூறித் தம்மைக் கேலி செய்யும் இன்பலோக ஏந்தல் இன்னும் வரக்காணோமே என விம்முவர். பூங்கொம்பு மலரிதழைத் திறப்பதற்கு முன்பே தேன்வண்டு பறந்து வரும் தன்மை காண்பர். "வண்டு தழுவும் மலர் பார் கற்கண்டே! என, இன்பம் மொண்டு தரும் என் துரையை இன்னும் காணோமே" என ஏங்குவர். மனம் வீங்குவர். மாலைப்பொழுது, அவர்தம் நெஞ்சில் படைகொண்டு தாக்குவது போல் தோன்றும்-இன்பம் தரவல்ல காதலையே நோயென்று கூறுவர். அந்த மனோநிலையைத்தான் வள்ளுவர் அழகாகக் கூறுகிறார்.

காலைப் பொழுதிலே அரும்பாய்த் தோன்றி, பகலெல்லாம் பேரரும்பாகத் தழைத்து, மாலையில் மலராக மாறுகிறது இந்தக் காம நோய்; அதற்கு இதோ குறள்:



"காலை அரும்பிப்
பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய்"

அந்நோய் மலருகிற மாலை நேரம் எப்படி இருக்கிறது தெரியுமா மங்கைக்கு? அவளைக் கொல்ல வருகிற சேனையானது நெருப்புப் போல் உள்ள மாலை நேரத்திற்குத் தூதாக வருகிறதாம்.

"கொல்லும்படி; அழல்போலும் மாலைக்குத் தூதாகி" என்கிறார் அதுமட்டுமா?

மாலை நேரத்திலே ஆயன் குழலூதிக் கொண்டிருக்கிறான். குழலிலேயிருந்து இனிமை அருவியெனக் கொட்டுகிறது; தென்றலுக்கே இன்பம் சேர்க்கிறது, அந்த இசை! அசைந்தாடும் மலர்க்கொத்துகள் குழலிசைக்கு அபிநயம் காட்டுவதுபோல் காட்சி தருகின்றன. குழலோசை நாகத்தையும் மயங்க வைக்கும் என்பர். அதுவும் ஆயர்பாடி இளைஞன் அந்த வாத்தியத்திலே திறமைசாலி. அந்தக் குழலோசையைப் பற்றிக் காதலனைக் காணக் கட்டழகி என்ன கூறுகிறாள் தெரியுமா? "என்னை வருத்தும் சேனை, மாலைக்குத் தூதாக மட்டுமல்ல-ஆயன் குழலாகவும் வருகிறது போலும்!" என்று புலம்புகிறாள்.

"அழல் போலும் மாலைக்குத்
தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை"

# பெருமைக்குரிய நாள்!

வரலாற்றின் திசையை மாற்றியதற்காகவும், உள்நாட்டு வெளி நாட்டுப் பிற்போக்குச் சக்திகளை எதிர்த்துப் போரிடுவதற்காகவும், பெருமைக் குரிய தன்னம்பிக்கையை — முன்னேற்றத்தைக் கொண்டு வந்ததற்காகவும், உலக நாடுகளிடையே உலக மக்களின் நலத்திற்காக இந்தியாவிற்குரிய இடத்தைப் பெற்றுத் தந்ததற்காகவும், தங்களை வரவேற்று எங்கள் நன்றியுணர்வைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ள இந்நாள், எனக்கு மட்டுமல்ல, என்னுடைய முதலமைச்சருக்கும், அவர்தம் அமைச்சகத்தின் அமைச்சர் பெருமக்களுக்கும், எல்லா அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், பெருந்தன்மை மிக்க தமிழக மக்களுக்கும் பெருமைக்குரிய நாளாகும்.

வங்காளத்தில் நிகழ்ந்த இரக்கமற்ற அடக்குமுறையும், கொடிய கொலையும் மலிந்த விடுதலைப் போராட்டத்தின் பின்னருள்ள அபாய நிலையை இந்நாடுஎதிர்த்து நிற்கும் நிலை ஏற்பட்டது.

பகைவர்கள்-யூகத்திலே இருந்தார்கள், காட்டுத்தனமாக வேட்டையாடுவதற்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களது சிறப்புமிகுந்த இராணுவத் தளவாடங்களோ-கொடுமையான நடவடிக்கைகளோ—நமது மக்களை, நாட்டுப் பற்றிலிருந்து மாற்ற முடியவில்லை. நமது பாதுகாப்புப் படைகளை நமது கடமையிலிருந்தும் மாற்ற முடியவில்லை. கடுமையான சிந்தனையின் அடிப்படையில் பகைவர்களால் ' உருவாக்கப்பட்ட சூதுத் திட்டங்கள், நமது இராணுவ வீரர்களின் மாபெரும் சாதனைகளால், குறுகிய காலத்தில் தகர்த்தெறியப்பட்டன.

கடந்த போரைப் பேராற்றலுடன் நடத்திய முறை—போர் நிறுத்தத்தைச் சீரான முறையில் உருவாக்கிய பாங்கு—அகதிகள் திரும்பிச் செல்வதற்குத் தக்க சூழ் நிலைகளை உருவாக்கிக் கொடுத்த விதம்—இவை யாவும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். மத வேறுபாடுகளால், பகைவர்களின் சாகசச் செயல்களால், தொல்லைகளால், சமாதானம், முன்னேற்றம், குடியரசு, சமநிலைச் சமுதாய அமைப்பு ஆகியவற்றின் முன்னேற்றப் பாதையைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை—இந்த நிகழ்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன.

பேராற்றல் வாய்ந்த திருமதி இந்திரா காந்தியின் தலைமையின் கீழ் நிகழ்ந்த போராட்டம் நலம் நாடி நடந்த தத்துவப் போராட்டமேயன்றி, நாடு பிடிக்கும் ஆசையாலோ ' ஏனைய அதிகாரப் பேராசையாலோ நிகழ்ந்ததல்ல என்பதை மிகக் கொடிய கண்டனவாதிகளும் ஒப்புக் கொள்வர்.



**மேதகு ஆளுநர் கே.கே.ஷா.**

இந்தியாவின் நேர்மையை எடுத்துக் காட்டிட இதனை விடச் சிறந்த சான்று கிடையாது. இது சமாதான சக்திகளுக்கு ஆக்கம் கொடுத்திருக்கிறது. அத்துடன், பிற்போக்குச் சக்திகளின் சூழ்ச்சிகளைப் பலவீனப் படுத்தியிருக்கிறது. உலக நாடுகளின் விவகாரங்களில் மூடக் கருத்துகளுக்கு இடமில்லை என்பதும் நிலைநாட்டப்பட்டுவிட்டது.

'போரில் ஏவுகணைகள் நிறுத்தப்படவேண்டும்; படைகள் தத்தமக்குரிய எல்லைக்குத் திரும்ப வேண்டும்; அகதிகள் மீண்டும் செல்வதற்குரிய நிலைமையை உண்டாக்க வேண்டும், என்றெல்லாம் ஐக்கிய நாடுகளில் சில பெரும் வல்லரசுகள் தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் வெற்றி பெற்ற போது, வங்காள தேசத்தில் உள்ள மாற்றார் படைகள் அடைக்கலம் அடைந்தாலன்றி — அத்தேசத்தை விட்டு வெளியேற்றப் பட்டாலன்றி இத்தகைய தீர்மானம் பயன் தராது என்பதை எவரும் உணரவில்லை.

பாகிஸ்தானின், படைகள் ஏந்திய போர் வெறியாளர்களின் காட்டு மிராண்டித்தனமான மிகக் கொடுஞ் செயல்களுக்கு அகதிகள் ஆட்பட்ட போது, அவர்கள் ஏவுகணைகள் நிறுத்தப்பட்ட இந்தியாவையே புகலிடமாக மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது என்ற உண்மையை இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய முக்கியப் பெரியோர்கள் உணரவில்லை.

நமது படைகள் ஆற்றிய அரும் பெரும் வீரப் போராட்டமும், நமது படைகள் கடமையில் காட்டிய தியாக உணர்ச்சியும், பெருமையுடனும், நன்றியுடனும் என்றும் நினைவுகூரத் தக்கவை.

சென்ற மார்ச்சு 1971 முதல் டிசம்பர் 1971 வரையுள்ள நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருந்

தது என்பதை மற்றவர்கள் ஒரு வேளை உணராதிருந்திருக்கலாம். தமிழகத்தின் தெற்குக் கடற்கரையின் முக்கியப்பகுதி அபாயத்திலிருந்தது என்பதைத் தமிழ்நாடறியும். ஆனல், குறிப்பிடத்தக்கவகையில் தக்க நேரத்தில் எவ்வளவு சிறந்த முறையில் அந்த அபாயம் நீக்கப்பட்டது என்பதை உணர்ந்தபோது தமிழர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

இந்நாட்டின் ஒற்றுமையைப் பேணுவதிலும், இந்நாட்டின் எல்லைகளைக் காப்பதிலும், அதற்காகத் தியாகம் செய்வதிலும் தமிழ்நாட்டார் எவருக்கும் பின் தங்கியவர்களல்ல; முன்னணியிலே நிற்பவர்கள் என்பதனைத் தங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். இதற்கு நீங்கள் சான்று விரும்பினல் உண்மையில் இப்போது வழங்கப்படும் இந்தப் பாதுகாப்பு நிதித் தொகையே அதற்கு ஒரு சான்ருகும்.

இந்நாட்டின் நிலைமைக்கும் பெருமைக்கும் சோதனை ஏற்பட்ட அந்நாட்களில் எல்லா மாறுபாடுகளையும் மறந்து, வேற்றுமைகளையும் ஒழித்து, கட்சிகளையும் மறந்து, மக்கள் ஒன்றுபட்ட உள்ளத்துடன்— தமது ஒற்றுமை உணர்ச்சியையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தினுர்கள். இத்தகைய தருணத்தில் தொழிலாளர்கள், தொழில் நிலையங்கள், கல்லூரி மாணவர்கள், உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், பெண்டிர் மற்றும் பல்வேறு மன்றங்கள் எல்லாம் ஒன்றுபட்டு வழங்கிய பேருதவிகளையும் ஒத்துழைப்பையும் நான் பாராட்டத் தவறினல், என் கடமையை நான் மறந்தவனுவேன். இத்தகையோர் அனைவரும் - தமக்கு எளிய வருவாயே இருந்த போதிலும், தம்மால் எவ்வளவு மிகுதியான அளவில் வழங்க இயலுமோ அவ்வளவு வழங்கி, நாட்டுப்பாதுகாப்பு நிதியைப் பெருகச் செய்தனர்.

இந்தப் பாகிஸ்தான் போராட்டம் தொடங்கும் முன்னர் தமிழ்நாட்டு முதல்வர் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கான பெருநிதி திரட்டி வந்தார். ஆனல், தேசியப் பாதுகாப்பு நிதி திரட்டும் நிலை ஏற்பட்ட போது உடனேயே பேரார்வத்துடன் தமிழகம் இந்நிதிக்கு முதலில் தரும் தொகை 10 கோடி என அறிவித்தார். ஒரு கோடி ரூபாய் நிதி திரட்டும் முன்னரே போர்ப் புயல் நின்றது. இந்நிதி திரட்டுவதில் தலைமையேற்ற முதலமைச்சர் அவரோடுள்ள ஏனைய அமைச்சர்கள், தமிழகமக்கள் மாபெரும் வெற்றியைத் தந்த நமது படைகள், அறிவாற்றலும், திறமையும் அமைந்த திருமதி இந்திரா காந்தியின் தலைமை ஆகிய அனைத்தும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கின. ஆகவே, அனைவருக்கும் மிக்க நன்றி. எனவே, தங்களுக்கு எங்கள் அன்பையும், ஆர்வத்தையும், நேர்மையையும் காட்டுதற்குரிய அடையாளமாக இந்த 6 கோடி ரூபாய்க்குரிய காசோலையை முதல்வர் தங்களிடம் வழங்குகிருர். நன்றி கலந்த வணக்கம்.

**(இந்தியத் தலைமை அமைச்சரை வரவேற்றுத் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)**

# பிறந்தநாள் வேண்டுகோள்



## விழி இழந்தோருக்கு ஒளிதர நிதி தருவீர் நாட்டினரே!

தமிழ்நாட்டில் மொத்தம் 10 லட்சம் பேர் விழியிழந்தவர்களாக இருக்கின்றனர். இவர்களில் 6 லட்சம் பேர் இரு கண்களிலும் ஒளியிழந்தோராவர். ஒரு கண்ணில் மட்டும் ஒளியிழந்தோர் 4 லட்சம் பேர். இவர்கள் கிராமப்புறங்களில் பெரும்பாலும் இருப்பதால் தமக்கு ஏற்பட்டுள்ள கண் வியாதி விதிப்பயன் என்று கூறிக் கொண்டு மருத்துவ மனையினை நாடாமல் பார்வை யிழந்தோர்களாகவே உள்ளனர்

ஐந்தாண்டுக் காலத்திற்குள் அவர்கள் அனைவருக்கும் ஒளி வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இலட்சம் பேருக்குக் கண் சிகிச்சை முகாம் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க என் பிறந்த நாளையொட்டி நன்கொடை வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு விழியில் ஒளிதரும் முயற்சிக்கு நிதியளிப்பதே எனக்களிக்கும் பிறந்தநாள் வாழ்த்துக்கள்.




இந்தியாவின் பாதுகாப்பிற்காகவும், ஜனநாயக உரிமைகள் நிலை பெறவும், வங்க தேசத்திற்கு உரிமைகளைப் பெற்றுத் தரவும், இந்திரா காந்தி அம்மையார் தலைமையில் இந்தியா போர்க்கோலம் பூண்ட போது தமிழ்நாட்டு மக்களும், யாருக்கும் நாங்கள் சளைத்தவர்களல்லர் என்ற முறையில் போர்க்கோலம் பூண்டார்கள்.

வங்க தேசத்தின் நியாயங்களை எடுத்துச் சொல்ல— முஜிபுர் ரகுமான் கேட்ட ஜனநாயகக் கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல, உலக நாடுகளுக்குப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் "திக் விஜயம்" செய்து உலக மக்களின் கவனத்தைத் திருப்பினர்.

உலக மக்களின் ஆதரவாலும்—சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் துணையாலும், மக்களின் பேராதரவாலும், வீரர்களின் தியாகத்தாலும் இந்தியா பெருமிதமான வெற்றியை ஈட்டியது.

போர் நடந்த போது, அந்த நேரத்தில் இந்திய மக்கள் ஒன்றாக நின்றது போல், தமிழ்நாட்டிலும் அனைத்துக் கட்சிகளின் சார்பில் ஒரு குழு அமைத்து, அதில் அனைத்துக் கட்சியினருடைய ஒத்துழைப்பையும் பெற்று—தொழிலாளர்—தொழிலதிபர்கள்— மகளிர் மன்றங்கள்—அரசு அலுவலாளர்கள்—ஆசிரியர்கள்—மாணவர்கள் மற்றும் சமுதாயத்தின் எல்லாப் பகுதியினரின் ஒத்துழைப்போடும், ஒரு நிதியினை நாட்டுப் பாதுகாப்புக்குத் தருவது என்ற தீர்மானத்தை வடித்தெடுத்தோம்.

தமிழ்நாடு முழுவதும்— டிசம்பர் 26-ஆம் நாள் அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்டு கூட்டங்களை நடத்தி, இந்திய நிலை எடுத்து விளக்கப்பட்டது.

நல்ல காரியங்களுக்கு உதவுவது என்னும் நோக்குடன் நடைபெறும் பரிசுச் சீட்டு மூலமும் போர் நிதிக்கு ஒரு கணிசமான தொகை திரட்டப்பட்டது.

இந்தியாவின் மீது பாகிஸ்தான் படையெடுத்த போது, களம் புகுந்து வெற்றி எனும் ஒரே குறிக்கோளுடன் போரிட்டு மாண்ட மாவீரர்களின் குடும்பங்களுக்குத் தமிழக அரசின் சார்பில் ஐயாயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது.

நஞ்சையாக இருந்தால் ஒன்றரை ஏக்கரும், புஞ்சையாகஇருந்தால் மூன்று ஏக்கரும் வழங்கிட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

மத்திய அரசின் அனுமதியோடு வீர விருதுகளுக்கு அளிக்கப்பட்டிருந்த தொகையைக் கூட்டி அளித்தோம்.

பரம வீரச் சக்கரத்திற்குப் பதினைந்தாயிரம் ரூபாய் என்றும், மகா வீரச் சக்கரத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் என்றும், வீரச் சக்கரத்திற்கு ஐயாயிரம் ரூபாய் என்றும், சேனா பதக்கம் பெறுவோருக்கு மூவாயிரம் ரூபாய் என்றும், இராணுவ அறிவிப்பு எனும் பாராட்டுப் பட்டியலில் இடம் பெற்றோருக்கு இரண்டாயிரம் ரூபாய் என்றும் உதவித் தொகை அளிக்கப்பட்டது.

அப்படிப்பட்ட மாவீரர்கள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருநூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஆவர்.

பரமவீரச் சக்கர விருது பெற்றவர்கள் 3 பேர்.

வீரச் சக்கர விருது பெற்றவர்கள் 10 பேர்.

சேனா பதக்கம் பெற்றவர்கள் 22 பேர்.

இராணுவ அறிவிப்பில் இடம் பெற்றவர்கள் 46 பேர்.

இந்த வீரர்களின் புகழ் மகுடத்தில் முத்து என விளங்கியவன் தமிழகத்தைச் சார்ந்த 'கன்னர்' ஆறுமுகம்.

அவனது துணைவி கர்ப்பவதியாக இருந்த நேரத்தில் — நாட்டைக் காத்திட ஸ்ரீநகர் களத்தில் உயிரைத் துச்சமென மதித்துப் பகை விமானத்தை வீழ்த்தி விட்டு உயிரைவிட்ட தமிழ்வீரன் 'கன்னர்' ஆறுமுகம்.

அவனுக்கு ஒரு பெண்மகவு பிறந்தது. கன்னர் ஆறுமுகத்தின் துணைவியார்— தனது கணவன், இந்திரா காந்தி அம்மையாரால்தானே களம் புகுந்து உயிர் நீத்தார்—என நினையாமல்—வீர மகவைப் பெற்றெடுத்திருக்கிறோம் என்ற நினைவோடு — தனது பெண் குழந்தைக்கு ''இந்திரா'' எனும் பெயரைச் சூட்டியிருக்கிறார் என்ற செய்தியைப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தமிழகம் நன்றி மறவாதது; தியாகங்களை விரும்பி ஏற்பது; விழுப்புண்களைத் தொடர்பாக— தொய்வில்லாமல் ஏற்பது எனும் செய்தி சொல்லிப் புகழ் முத்தாகக் கன்னர் ஆறுமுகம் சிரிக்கிறான்.

தமிழகத்துச் சட்டமன்றங்களிலும்—பிற பொது மன்றங்களிலும் — தனி நிறுவனங்களிலும் போர் நடந்த வேளையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் —இந்திய அரசுக்கு ஆதரவு தெரிவித்தும், நமது நாட்டை உறுதியோடு ஆதரித்த சோவியத் யூனியனுக்கு நன்றி தெரிவித்தும், அமெரிக்காவிற்குக் கண்டனம் தெரிவித்தும் நிறைவேற்றிய தீர்மானங்களை நாடு அறியும்; நானிலம் அறியும்; நல்லோர் அறிவர்.

நாட்டுப் பாதுகாப்புக்குத் தமிழகத்தின் சார்பில் கணிசமான தொகை ஒன்றை அளிக்கப் போகிறோம் என்று அறிவித்தவுடன் அனைத்துப் பகுதி மக்களும்— எவ்வளவோ இடையூறுகளுக்கு இடையேயும் கை கொடுத்து உதவினார்கள்.

பாதுகாப்பு நிதி திரட்டுகிற போது இடையூறு இருந்தது போலவே, பாதுகாப்பு நிதி தருகின்ற போதும் இடையூறு இருந்தது.

ஊட்டியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு நானும் அமைச்சர் பெருமக்களும் அவசர அவசரமாக வந்து ரயிலில் ஏறினோம்.

ரயில் இடையில் நின்றுவிட்டது. இதற்காக நான் மத்திய அரசைக் குறை கூறுவதாக நினைக்க வேண்டாம்.

ரயில் நின்றுவிட்டது. நாங்கள் அங்கிருந்து காரில் கிளம்பி இரவெல்லாம் பயணம் செய்து, நடுவழியில் எங்கள் ஆடைகளை எடுத்துவரச் சொல்லி—ஆடை மாற்றிக் கொண்டு அவசர அவசரமாக விமான நிலையத்துக்கு வந்து, தலைமை அமைச்சரை வரவேற்றோம்.

இந்த விழாவிற்குத் தலைமை அமைச்சர் வருவதற்கு மறைமுகமான தடைகள் இருந்தனவோ என்னவோ, அது அவர்களுக்குத்தான் தெரியும்.

ஆனால், பகிரங்கமாக இது போன்ற தடைகள் ஏற்பட்டன.

எவ்வளவு தடைகள் வந்தாலும், எவ்வளவு இடையூறுகள் வந்தாலும், நாங்கள் நினைக்கின்ற காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்போம்.

ஐந்தரைக் கோடி ரூபாய் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் — மக்களின் ஒத்துழைப்பால் இன்று தலைமை அமைச்சரிடம் ஆறு கோடி ரூபாய் நிதி அளிக்கிறோம்.

இதையும் சேர்த்து இந்தியாவில் இதுவரை பாதுகாப்பு நிதிக்கு 25 கோடி ரூபாய்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. அதில், ஆறு கோடி ரூபாய் அளித்திருக்கிறது தமிழகம் என்பதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழகம் உத்தரப்பிரதேசத்தைவிடச் சிறிய மாநிலம். உத்தரப்பிரதேசம், பிரதமர் பிறந்த மாநிலம்; 84 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம். ஆனால், 39 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாநிலமான தமிழகம் 25 கோடி ரூபாயில் ஆறு கோடி ரூபாய் அளித்திருக்கிறது என்பதில் நாங்கள் பெருமை அடைகிறோம்.

தமிழகத்தின் சார்பில்நாங்கள் என்றென்றும் 'உறவுக்குக் கை கொடுப்போம். உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதைக் கூறி — இந்த பாதுகாப்பு நிதியை தலைமை அமைச்சரிடம் அளிக்கிறேன்.

## முதல்வர் கலைஞர்

# நாட்டைப் பாதுகாப்பதில் போட்டிகள் தேவையே!



இந்தியத்தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி

நாட்டு பாதுகாப்பு நிதியளிப்பு விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பளிக்கப் பட்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள் கிறேன்.

முதலமைச்சர் எனது சொந்த மாநிலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உத்தரப் பிரதேசம் பெரிய மாநிலம் தான்! உருவத்திலும் — மக்கள் தொகையிலும் அது பெரிய மாநிலம்தான்.

ஆனல், அது ஏழை மாநிலம்; ஏழ்மையில் கடைசி இடத்தைப் பெறுகின்ற மாநிலம்.

கடந்த போரில் அதிகமான வீரர்கள் உயிரிழந்தது—அந்த மாநிலத்தில்தான்; மிகவும் மோசமான காயம் அடைந்த வீரர்கள் கொண்டதும் அந்த மாநிலம்தான்; ஆயினும், அந்த மாநிலத்தின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் பாதுகாப்பு நிதிக்குத் தரப்பட்டிருக்கிறது.

இது போன்று — நாட்டின் பணியில் — நாட்டின் பாதுகாப்புக்கு யார் அதிகம் உழைப்பது என்பதில் நட்புறவுடன் கலந்த போட்டி இருப்பதில் தவறில்லை.

நமக்கு ஏற்பட்ட சோதனையின் போது மகத்தான வெற்றி பெற்றோம். அதற்குச் சிறிய மாநிலமாயினும் — பெரிய மாநிலமாயினும் — அரசுகளும் மக்களும் ஒத்துழைப்புத் தந்ததோடு — ஒற்றுமையுடனும் இருந்ததுதான் காரணம்.

அந்தப் போரில் ஆயுதப் படையினர் — அவர்கள் எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்களாயினும், ஒரே விதமான பங்கைத்தான் பெற்றிருந்தனர்.

கடந்த பத்தாண்டுகளில் நமது எல்லைகளையும், காவல் நிலையங்களையும் பார்த்திருக்கிறோம். மிக முக்கியமான மருத்துவ மனைகளில் சென்று காயம் அடைந்தோரைப் பார்த்து ஆறுதல் மொழி கூறியிருக்கிறேன்.

பனி மூடிய லடாக் பகுதியிலிருந்து, சதுப்பு நிலக் காடுகள் நிறைந்த வடகிழக்கு எல்லை வரையில் உள்ள களங்களில் தீரமும், இளமையும் மிகுந்த தமிழ்நாட்டு வீரர்களை — தென்னாட்டு வீரர்களை நான் பார்த்துப் பெருமைப்பட்டேன்.

இன்றையத் தினம் இந்தியா ஒற்றுமையுடனும் வலிமையுடனும் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அந்த இளைஞர்கள் காட்டிய தீரமும் தியாகமும்தான்.

இந்த நேரத்தில் அந்தத் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துகிறேன். காயமடைந்த — ஊனமடைந்த வீரர்களுக்கு அனுதாபமும், ஆதரவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

போர் உடை அணியாத வீரர்களாய் நாம் இருந்து, சமூக — பொருளாதாரத் தடைகளையும் மூட நம்பிக்கைகளையும் — பகுத்தறிவுக்கு ஒவ்வாத முட்டுக்கட்டைகளையும் விலக்கத் தொண்டாற்ற வேண்டும்.

நாம் அனைவரும் ஒரு பெரிய குடும்பத்தின் உறுப்பினர்கள். சுக துக்கங்களில் நமக்குச் சம பங்கு உண்டு. இந்த உணர்வோடு நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க நாம் உழைக்க வேண்டும்.

நம்மைவிட வசதி குறைந்த மக்களுக்கு — தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ள மக்களுக்கு—உயர்வு தந்திட நாம் உழைக்க வேண்டும்.

ஆகவே, அந்த வழியில் நடந்து, நாட்டை முன்னேற்ற — ஒரு புதிய சமுதாயம் அமைக்க நாம் அனைவரும் உழைப்போம்; வணக்கம்!

**[21—5—1972-ல் சென்னைத் தீவுத் திடலில் நடைபெற்ற நாட்டுப் பாதுகாப்பு நிதியளிப்பு விழாவில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆற்றிய உரை.]**


காந்தியடிகள் கனவை நனவாக்கி
தமிழ் நாடு வழிகாட்டுகிறது!
கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை வெண்கலப் பாத்திரங்கள்
பற்பல கைநுட்பப் பொருள்கள் தயாராகின்றன!
கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்
கதர் - கிராமத் தொழில்கள்
வளர்ச்சியும் முன்னேற்றமும்
விவசாயிகளுக்கு
ஊதியத்துடன் கூடிய
வேலைவாய்ப்பளிக்கின்றன
வெளியீடு: கதர்- கிராமத் தொழில் துறை, உ. சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

# வாணிகம் வளர்ப்போம்

குறை இல்லாத ஓர் இலாகா, ஆனால் நிறையச் சம்பாதித்திருக்கிற ஓர் இலாகா இந்த விற்பனை வரி இலாகா. துவக்கத்தில் இந்த இலாகாவில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகப் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் வியாபாரிகளை மிக அதிகமாகக் கொடுமை செய்யக்கூடாது, வற்புறுத்தக் கூடாது என்று வற்புறுத்திச் சொன்னார்கள். அதே போல் எங்கும் நடப்பதாக இல்லை. சிற்சில இடங்களில் தவறுகள் நடக்கலாம். ஒரு பெரிய இலாகாவில், 100 கோடி ரூபாய் வருமானம் வரும் ஓர் இலாகாவில் ஆங்காங்குச் சில தவறுகள் நடக்கக் கூடும். அவற்றையெல்லாம் அரசாங்கம் கவனித்து, நிச்சயம் அவைகளைச் சரிப்படுத்த என்ன வழி என்று யோசிக்கலாம்.

நண்பர் நரசிம்மன் அவர்கள் வருத்தப்பட்டார்கள், வியாபாரிகளைத் திருடர்கள் என்று எல்லாரும் நினைக்கிறார்கள் என்று. யாருமே அப்படி நினைக்கவில்லை; அரசாங்கமும் நினைக்கவில்லை. அதிகாரிகளும் நினைக்கவில்லை. ஏன் அப்படி நினைத்துக்கொண்டு பேசுகிறீர்கள்? வியாபாரிகள் நல்லவர்கள். அவர்களாகப் பார்த்துத்தான் அரசாங்கத்திற்கு 100 கோடி ரூபாய் வருவித்துக் கொடுத்திருக்கிறார்கள். யாரோ சில வியாபாரிகள் தவறு செய்கிறார்கள் என்பதற்காக எல்லா வியாபாரிகளையும் அரசாங்கம் குற்றம் காணாது. சில வியாபாரிகள் தவறு செய்கிறார்கள் என்று நண்பர் லத்தீப் அவர்கள்கூட ஒப்புக் கொண்டார்கள்.

நண்பர் லத்தீப் அவர்கள் ஒரு வாதத்தைச் சொன்னார்கள். இந்தத் தோல் பொருட்களின் மீது வரி போடுவதன் காரணமாக விலைகள் உயர்ந்து, அதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டு, வாணிபம் பாதிக்கப்பட்டு, இப்படி நாட்டின் பொருளாதாரமே பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த விற்பனை வரி இலாகாவிலே கொடுத்திருக்கும் புள்ளி விவரத்தைப் பார்க்கிறபோது, எவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, எந்த அளவுக்கு வாணிபம் பெருகியிருக்கிறது, இல்லை என்று குறிப்பிட்டார்கள். இந்த இலாகாவின் மொத்த வருமானத்தைப் பார்க்கின்றபோது எந்த அளவுக்கு வாணிகம் பெருகியிருக்கிறது என்பது நிச்சயமாகத் தெரியும். வாணிகம் பெருகியதால்தான் அதிக வருமானம் வந்திருக்கிறது. வரி உயர்த்தியதால் வருமானம் அதிகமாயிருக்கிறது என்று சொல்வது தவறான கருத்தாகும். வரி உயர்ந்தது என்று சொன்னால் சென்ற ஆண்டுதான் உயர்த்தினோம். 3 சதவீதத்திலிருந்து $3\frac{1}{2}$ சதவீதம் ஆகச் சென்ற ஆண்டுதான் உயர்த்தினோம்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி, வியாபார வளர்ச்சி, இதனால் நாட்டில் ஏற்பட்டு இருக்கிற வளர்ச்சிகளை இந்த வணிக வரி இலாகாவின் மூலமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், இருக்கின்ற ஒரே வழி வரியின் மூலமாகக் கிடைத்து இருக்கும் வருமானத்தை வைத்துத்தான். 100 கோடி ரூபாய்க்கு மேல் இந்த அரசாங்கத்திற்கு வருமானம் வந்திருக்கிறது என்று சொன்னால்—ஏறத்தாழ 103 கோடி வந்திருக்கிறது — இந்த ஆண்டு 106 கோடி வரும் என்று நிதிநிலை அறிக்கையில் கணக்கு எடுத்து இருக்கின்றோம்—நிச்சயமாக 106 கோடி வசூல் செய்யப்படும் என்று கருதுகிறோம்—சென்ற ஆண்டு 96 கோடி. இந்த ஆண்டு 106 கோடி என்றால் 10 கோடி அதிகமாகியிருக்கிறது என்று சொன்னால்—வியாபாரம் பெருகியதால் இது வளர்ந்திருக்கிறதே தவிர, வியாபாரிகளைக் கசக்கிப் பிழிந்ததால் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. எங்கேயாவது இந்த இலாகாவினர் வியாபாரிகளைக் கசக்கிப் பிழிந்தார்கள் என்று சொன்னால், தவறு நடந்திருந்தால், அதைச் சுட்டிக்காட்டலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, நாட்டில் வரி அதிகமாகப் போட்டுவிட்டார்கள் என்று பேசுகிறார்கள். வரிஅதிகமாகப் போட்டிருப்பது என்று சொல்வது விற்பனை வரியை 3 சதவீதத்திலிருந்து $3\frac{1}{2}$ சதவீதம் உயர்த்தியிருக்கிறார்கள். சர்சார்ஜ் 5 சதவீதம். அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் 5 சதவீதம். அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் ரூ. 10 இலட்சத்திற்குமேல் விற்று முதல் உள்ள வணிகர்கள் மீது 5 சதவீதம் (இது மோட்டார், ஸ்பிரிட் போன்றவற்றின் மீது) போடப்பட்டிருக்கிறது. மொத்தமாக அரசாங்கம் போட்ட புதுவரியின் மூலமாகக் கிடைத்து இருக்கும் வருமானம் ரூ. $6\frac{1}{2}$ கோடியாகும்.

அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கும் வருமானம் ரூ. 205.66 இலட்சமாகும். சர்சார்ஜ் ஆன் சேல்ஸ் டாக்ஸ் (மோட்டார், ஸ்பிரிட் மூலமாக) கிடைத்தது ரூ. 122.97 இலட்சமாகும். அடிஷனல் சர்சார்ஜ் ஆன் என்டர்டைன்மெண்ட், பெட்டில் டாக்ஸ் (இப்போது புதிதாகப்போடப்பட்டிருக்கும் பங்களா தேஷ் நிதிக்காகப் போடப்பட்டிருப்பது), மூலம் கிடைப்பது ரூ. 48.6 லட்சமாகும். மொத்தமாகச் சேர்த்து ரூ. $6\frac{1}{2}$ கோடிக்கும் அதிகமாக வருமானம் வருகிறது. வரி அதிகமாகப் போட்டு விட்டதால் வருமானம் பெருகியிருக்கிறது என்று சொல்வதுசரியல்ல.வரியைஉயர்த்தியதால்தான் வருமானம் அதிகமாக வந்திருக்கிறது என்று திரு நரசிம்மன் அவர்கள் சொன்னார்கள். பல நடவடிக்கைகளை மேற்கொண்டு, மறைக்கப்பட்ட கணக்குகளைக் கண்டுபிடித்து அவர்கள் மீது வரிபோட்டு இருக்கிறோம்.

தொழிலாளர்கள் விஷயத்திலும் இந்த அரசாங்கம் ரொம்பவும் சலுகை காட்டியிருக்கிறது. பல தரப்பட்ட தொழிற் போராட்டங்களால் தொழில் பாதிக்கப்படுகிறது. தொழிலாளர்களுக்காக நன்மை செய்கிற நேரத்தில் நாட்டின் உற்பத்தி பாதிக்காத அளவுக்குத் தொழிலாளர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். தனிப்பட்ட கட்சிக்காகச் சொல்லவில்லை. நாட்டின் முன்னேற்றத்தைக் கருதிச் சொல்கிறேன். நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நாட்டில் ஏற்பட்ட தொழிற் போராட்டங்கள் காரணமாக நமக்கு வரும் வருமானம் குறைந்திருக்கிறது. போராட்டங்கள் ஏற்படக்கூடாது என்று சொல்லவில்லை. இப்படிப் போராட்டங்கள் ஏற்படுவதால் நமக்கு வரும் வருமானம், விற்பனை வரி எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற விவரத்தை, கணக்கை எடுக்கச் சொன்னேன். அந்தப்புள்ளி விவரங்களைப் படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் போராட்ட நேரங்களில் நாட்டின் உற்பத்தி எந்த அளவுக்குப் பாதித்து இருக்கிறது. நாட்டின் விற்பனை வரி எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறது—பொருளாதாரம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் தொழிற் சங்கத் தலைவர்களும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டெக்ஸ்டுல் ஸ்ட்ரைக் மூலம் இந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்டு இருக்கும் இழப்பு ரூ. 65 இலட்சம். பனியன் பாக்டரியில் ஏற்பட்ட இழப்பு ரூ. 7 இலட்சம். சிம்சன் குரூப் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட இழப்பு ரூ. 22·9 (23·00 இலட்சம்) கோ-ஸ்லோ பாலிசி இன் தி அசோக் லேலண்டு மூலமாக இழப்பு ரூ. 15½ இலட்சம். "ஸ்ட்ரைக் இன் தி சுகர் பாக்டரி" ரூ. 2·14 இலட்சம், நெய்வேலியில் இருக்கும் உரத் தொழிற்சாலை மூடப்பட்டதால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 6 இலட்சமாகும். மொத்தம் சுமார் 120 இலட்ச ரூபாயாகும். அரசுக்குஇந்த வேலை நிறுத்தங்களினால் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. வரவேண்டிய வருமானம் அரசுக்கு வரவில்லை. இவ்வளவு பெரிய தொகை இழப்பு ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் மீது குறை சொல்லவில்லை. இப்படிப்பட்ட வேலை நிறுத்தத்தால் அரசுக்கு ஏற்பட்ட வருமான இழப்பை அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்கிற நேரத்தில் ரூ. 10,000 வரைதான் வரியில்லாமல் இருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆனபிறகு ரூ. 15,000 வரை வரியில்லை என்று அதை உயர்த்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் வந்ததற்குப் பிறகு அதை ரூ. 25,000 என்று உயர்த்தியிருக்கிறார்கள் ஏற்கெனவே ரூ. 30,000 வரை 'கம்பௌண்டிங்' செய்யலாம் என்று இருந்ததை ரூ. 75,000 என்று உயர்த்தப்பட்டது. இன்று அது ரூ. 1 இலட்சம் என்ற அளவுக்குச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வரம்பை உயர்த்தியதன் மூலம் சிறு வியாபாரிகளுக்குச் சலுகை அளித்ததன் மூலம், 'கம்பௌண்டிங்' முறையில் வரி அளவை உயர்த்தியதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழப்பு ரூ. 40—45 இலட்சமாகும். இவ்வளவு பெரிய தொகை இழப்பு ஏற்பட்டிருக்கிறது.



## வருவாய்த் துறை அமைச்சர்

## ப.உ.சண்முகம்

பல உறுப்பினர்கள் இந்த இலாகாவில் டாக்ஸ் இன்செஷனைப் பற்றித் தெரிவித்தார்கள். உணவுப் பொருட்களுக்கெல்லாம் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றுதெரிவித்தார்கள். ஏற்கெனவேசில உணவுப்பொருட்களுக்கெல்லாம் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எதற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றால், அரிசி, நெல் இவைகளுக்கெல்லாம் வரி கிடையாது. அதே போல் சோளம், கம்பு இவைகளுக்கெல்லாம் வரி கிடையாது. இப்பொழுது இருக்கிற வரி, கோதுமைக்கு மட்டும் ஒரு சதவீதம் இருக்கிறது. எண்ணெய், பருப்புக்கு வரி இல்லையா என்று கேட்டால் வரி இருக்கிறது. இந்த வரிகளையெல்லாம் நீக்க முடியுமா என்றால், இப்பொழுது நீக்குவதற்கு இல்லை. ஆனால், பொதுவாக 1967-க்குப் பிறகு, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு அளிக்கப்பட்டிருக்கிற சலுகைகள், ஏறக்குறைய 107 பொருட்களுக்கு வரிச் சலுகைகளும், வரி விலக்குகளும் அளித்திருக்கிறது.

தோல் பதனிடுவது பற்றி அதன் மீதுள்ள வரியைப் பற்றிச் சொன்னார்கள். வெளி நாட்டுக்கு ஏற்றுமதி யாகிற தோலுக்கு வரி கிடையாது. விலக்கு அளித்திருக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து இங்குக் கொண்டு வந்து பதனிடும் தோலுக்கு வரி போடப்படுகிறது. வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகிற தோலுக்கு சி.எஸ்.டி. இல்லை. பதனிடப்பட்ட தோலுக்கு ஏதேனும் ஒரு முனையில் வரி உண்டு. இந்த வரி போடுவதற்குப் பல சங்கடங்கள் ஏற்பட்டு நீதி மன்றத்திற்குச்

சென்றிருக்கிறார்கள். அதைப் பற்றி விவாதிக்க நான் விரும்பவில்லை, அந்த விஷயம் நீதி மன்றத்தில் இருக்கிற காரணத்தினால்.

லத்திப் அவர்கள் பேசும் போது உண்மையிலே விற்பனை வரியை மட்டும் எல்லாரும் ஒழுங்காகக் கட்டினால், வரி ஏய்ப்பு இல்லாமல் கட்டினால், வேறு வரியே இந்த அரசுக்குத் தேவையில்லை. ஆகவே, வரக் கூடிய அவ்வளவு வரியையும் வசூலிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டார்கள். அதைத்தான் நானும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏறக்குறைய 200 கோடிக்குப் பக்கத்தில் வசூலிக்க வேண்டிய இலாகா விற்பனை வரி இலாகா. நிறைய ஏய்ப்புகள் இருக்கின்றன. அதைத் தடுக்க வேண்டும்; அதைத் தவிர்க்க வேண்டும்.

வரி உயர்வால் வரி ஏய்ப்பு நடைபெறுகிறது என்ற வாதத்தை நான் ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. வரி எவ்வளவு குறைவாக இருந்தாலும் ஏய்த்து விடலாம் என்று கருதுகிறவர்கள் நாட்டில் உண்டு. எப்படியும் தடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முயற்சிகள் எடுத்து வருகிறது. வியாபாரிகளைத் திருடர்கள் என்று நினைக்கவில்லை. ஆனால், இந்த இலாகாவில் இருக்கும் 'இன்டெலிஜென்ஸ்' அதிகாரிகள் நிறைய வியாபாரிகள் கணக்கைச் சோதனையிட்டு, கணக்குகள் எடுக்கும் காலத்தில் பிடிபட்டிருக்கிறார்கள். எந்த இடம் என்று சேகரித்து நிறையக் கொடுத்திருக்கிறார்கள். சென்னையில் இன்னொரு பெரிய வியாபாரி. அவர் சித்தூரில்—ஆந்திராவில்—வியாபாரம் செய்ததாக 'பில்' போட்டுச் சென்னைக்கு வர வேண்டிய வரியை ஏமாற்றியிருக்கிறார். பல இலட்சக்கணக்கான ரூபாய் ஏமாற்றியிருக்கிறார்கள். அதைச் சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிறோம். நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்—என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்துக்கும், நமக்கும் இந்தத் துறையில் ஒரு சிறு தகராறு இருக்கிறது. மத்திய அரசாங்கம் தொழில் நடத்துகிறார்கள். அவர்கள் 'பர்டிலைசர்ஸ்' விற்கிறார்கள். இப்பொழுது ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா மூலம் விற்கப்படுகிறது. ஏற்கெனவே மத்திய அரசாங்கம் நேரடியாக விற்றபோது தமிழக அரசுக்கு வரி பாக்கி கொடுக்கவேண்டும் என்று நாம் கேட்டோம். அரசாங்கமே விற்ற காரணத்தால் எங்களை நீங்கள் கேட்கக் கூடாது என்று தெரிவித்தார்கள். நீங்கள் வசூலித்த வரியைக் கொடுங்கள் என்று கேட்டோம். அது ஒன்று, தகராறில் இருந்து கொண்டிருக்கிறது. பர்டிலைசர் மிக வரி வசூலித்து விட்டார்கள். கோதுமை விற்றதற்கு வரி வசூலித்திருக்கிறார்கள். அந்த வரி கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கத்திற்கும் நமக்கும் பேச்சு வார்த்தை நடைபெற்றது. இப்போது எப்.சி.சி. மூலம் உரம் விற்கிறார்கள். விற்பனை வரி வசூலித்து விட்டு, வசூலித்ததைத் தமிழக அரசுக்குக் கட்ட மறுக்கிறார்கள். கேட்டால் மத்திய அரசாங்கத்திடமிருந்து கொடுக்க வேண்டாம் என்று உத்தரவு வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா வியாபாரம் செய்கிறது. வியாபாரச் சட்டப்படி வரி வசூலிக்கும்போது அந்தப் பணத்தை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் கிடையாது. இந்தப் பணத்தை மத்திய அரசு கொடுக்குமென்று நம்புகிறேன். கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், தமிழ் நாட்டில் வியாபாரம் செய்கிறவர்கள் எல்லாரும் ஒவ்வொரு வியாபாரி. ஒரு அசெஸ் என்று எடுத்துக் கொண்டு இருக்கிறோமே, அது போல் ஃபுட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா ஒரு அசெஸ் என்று வைத்திருக்கிறோம். விற்பனை வரி வசூலிக்காமல் இருந்திருந்தால் ஒரு வேளை நாம் கேட்காமல் இருக்கலாம். ஆனால், வசூலித்த பின் அவர்கள் நிறுத்தி வைத்துக் கொள்வது சரியல்ல என்ற முறையில் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பணத்தை மத்திய அரசாங்கம் தமிழக அரசுக்குக் கொடுத்து உதவும் என்று நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் மணவி எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கும் போது, மத்திய அரசாங்கம் எந்த நிபந்தனையும் நம்மிடத்தில் கேட்கவில்லை. ஆனால் மற்ற மாநிலங்களுக்கு நிபந்தனை கேட்டார்கள். வெளி மாநிலங்களுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் போது சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸ் விதிக்கக்கூடாது என்று கேட்டார்கள். நம்மைக் கேட்கவில்லை. நல்ல வேளையாக அப்போது இருந்த தமிழக அரசும் கொடுக்கவில்லை. அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அப்படிக் கேட்காத காரணத்தால், இப்போது மத்திய அரசாங்கம் வேறுபல மாநிலங்களில் வசூலிக்கவில்லை. நீங்களும் வசூலிக்கக் கூடாது என்று நம்மிடத்தில் கூறுகிறார்கள். நாம் கேட்பது, வெளி மாநிலத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும்எண்ணெய்க்கு சி.எஸ்.டி. வசூலிக்க உரிமை தந்திருக்கிறார்கள். அந்த உரிமையை வைத்துக் கொண்டு கேட்கிறோம். 3 சதவீதம் கொடுங்கள் என்று ஆந்திராவுக்கும், கேரளாவுக்கும் வேறு பல மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லும் போது, அப்படி எடுத்துச் செல்லப்படும் அளவுக்கு உள்ள 3 சதவீத வரி கேட்கிறோம். ஆனால், மத்திய அரசு சொல்கிறது—அந்த வரியைக் கொடுத்து விடுகிறோம். அந்த வரிக்குத் தகுந்த அளவுக்குத் தமிழ் நாட்டில் உபயோகப்படுத்தப்படும் எண்ணெய் மீது வரியை உயர்த்துவோம்.

## எவ்வுளூரைத் தெரியுமா ?

சென்னையிலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்திலுள்ள திருவள்ளூர் முதலில் எவ்வுள் என்ற பெயர் பெற்றிருந்தது. நாளடைவில் திரு எவ்வுள் என்றும், திரு எவ்வுளூர் என்றும் அழைக்கப்பெற்ற இவ்வூர், இன்று திருவள்ளூராகி விட்டது !

அதற்குச் சம்மதமா? என்று கேட்டார்கள். அதற்குச் சம்மதிக்க முடியாது; இன்றைக்கு சி.எஸ்.டி.க்காகத் தமிழக மக்கள் மீது வரிப் போடுவது சரியல்ல, அதை ஈடுகட்ட வரி உயர்வு கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தோம். தமிழக அரசு அதிகாரிகளை எல்லா மாநிலங்களுக்கும் சென்று இது பற்றி விசாரித்து வரச் சொன்னோம். விசாரித்த பிறகு, கேரள அரசாங்கம் நம்மைப் பின்பற்றி அந்த வரியைப் புதிதாகப் போடுவது என்று தீர்மானித்து இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறது. நம்மைப் போல் அவர்களும் வரிப் போடுகிறார்கள். மத்திய அரசாங்க நிதியமைச்சர் நம் முதலமைச்சரை வரும்படி எழுதியிருக்கிறார்கள். பலமுறை கடிதங்களும் வந்திருக்கின்றன. அடுத்த முறை சந்தர்ப்பம் கிடைக்கும் போது விவாதிப்பார்கள் என்று நினைக்கிறேன். வேறு பல மாநிலங்களும் இந்த வரிக்குச் சம்மதித்து விட்டதால் தமிழக அரசு கேட்கும் வரி நியாயம் என்று நிரூபணம் ஆகிவிட்டது. எனவே, மத்திய அரசாங்கம் இதற்கு இணக்கம் தெரிவிக்கும்—வரி கட்டும் என்று நம்புகிறேன். சுமுகமாக முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குதிரைப் பந்தயத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். ஐ.ஜி. ஸ்டுவர்டாக இருக்கும் காரணத்தால் பெரிய தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன என்று திரு கே.எம்.எஸ். பேசும்போது தெரிவித்தார்கள். ஐ.ஜி. அவர்களை முதலமைச்சர் போட்டிருப்பது எந்தக் காரணத்துக்காக? இங்கே உள்ள குற்றவாளிகளை மட்டுமல்ல. அங்கே தவறு செய்கிறவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றுதான் முதலமைச்சர் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அங்கே கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர் நடவடிக்கை எடுத்ததற்காகப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு இவ்வளவு பணம் கொடுப்பதா? 22½ சதவிகிதம் ஏன் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி நிச்சயமாகப் பரிசீலிப்போம். இதைப்போல் உறுப்பினர்கள் நல்ல யோசனைகளைச் சொல்லும்போது இலாகா அதை ஏற்றுக் கொள்ளும். நிச்சயம் இதைப் பரிசீலிப்போம்.

வரிசெலுத்த வரும் வியாபாரிகளுக்குச் சலுகைகள் அளிக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் வசதியாக வந்து தங்கியிருந்து, உட்கார்ந்து பேசி, வரி செலுத்துவதற்கு இடவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நிச்சயமாக எல்லா விற்பனை வரிக் கட்டடங்களிலும் இதற்கு ஏற்பாடு செய்யப்படும். 106 கோடி ரூபாய் வரி செலுத்துகின்ற வியாபாரிகளுக்கு இந்த வசதியை அரசாங்கம் நிச்சயமாகச் செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கத்தினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[24—3—1972-ல் சட்டமன்றத்தில் உணவு வருவாய்த் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது உணவு வருவாய்த்துறை அமைச்சர் கூறிய மறுமொழியிலிருந்து....]

# கிழக்குக் கடற்கரையின் அரசி



உடல் நலத்திற்கு உறு துணையாக அமையும் பருவ நிலைமை தொன்று தொட்டே தரங்கம்பாடியில் நிலவி வருவதால், தரங்கம்பாடி 'கிழக்குக் கடற்கரையின் அரசி' (Queen of the Coromandel coast) என்று கூறப்படுகிறது. உடலுக்கு நலமும், வலிவும் அளித்து உள்ளத்திற்கு உவகையும் அளிக்கக் கூடிய 'ஓசோன்' (Ozone) என்னும் ஒரு வகைக் காற்று, தரங்கம்பாடியில் நிறைந்துள்ளது.

தரங்கம்பாடியில் உள்ள கோட்டை 1620-ஆம் ஆண்டில் டச்சுக்காரர்களால் கட்டப்பட்டதாகும். இக்கோட்டை 1845-ம் ஆண்டில் வெள்ளையரின் ஆட்சிக்கு உட்பட்டது. வெள்ளையர் ஆட்சியில் தஞ்சை மாவட்டத்தின் தலைநகராகத் தரங்கம்பாடியே இருந்துள்ளது. அங்குதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், மாவட்ட முன்சீப் நீதி மன்றமும் இருந்துள்ளது. இவ்வலுவலகங்களெல்லாம் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் தஞ்சாவூருக்கும், இதர இடங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளன.

தரங்கம்பாடியில் உள்ள "டான்ஸ்பெர்க்" (Donsberg) கோட்டையிலிருந்து கடலைப் பார்த்தால், கோட்டையின் முன்னுள்ள கடல்பகுதி சிவப்பு நிறமாகக் காட்சி அளிக்கிறது. இது சிந்தைக்கு விருந்தாக உள்ளது. விடுமுறை நாட்களில் கோட்டையின் முன்னுள்ள கடற்பகுதியில் ஏராளமான பேர் குளித்து மகிழ்கின்றனர்.

# பிற்பட்ட மக்களைப் பேணிக் காத்திடுவோம்



தமிழ்நாட்டின் மொத்த மக்களின் தொகை 40,034,200 ஆகும்.

இது, 1971-ஆம் ஆண்டு எடுத்த கணக்காகும். மொத்தப் பிற்பட்ட வகுப்பினர் 20,467,928. அதாவது 51.13 விழுக்காடு ஆகும். பிற்பட்ட வகுப்பினர் 11,514,597 ஆகும். அதாவது 28·76 விழுக்காடு ஆகும். மிகப் பிற்படுத்தப்பட்டோர் 8,953,331. அதாவது 22·37 விழுக்காடு ஆகிறது.

இந்த நிலைமையிலே, பின் தங்கிய சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் சமீபகாலத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, அதற்காக என்று ஒரு துறை உருவாக்கப்பட்டுப் பல்வேறு காரியங்களைச் செய்து வருவதை எல்லாரும் பாராட்டியிருக்கிறார்கள். 1969-ஆம் ஆண்டு இந்தத்துறை உருவாக்கப்பட்ட நேரத்தில் இதற்காக ஒதுக்கியது 248 இலட்சம் ரூபாயாகும். 1970—71-ல் இத்துறைக்கு ரூ. 301 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. தற்போது 1972—73-ல் ரூபாய் 468 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இங்கே, மாணவர் இல்லங்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 1966—67-ல் 11 மாணவர் இல்லங்கள் இருந்தன. 1971—72-ல் 81 மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த மாணவர் இல்லங்களினால் பயன் பெறும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 5,333 ஆகும்.

அடுத்தபடியாக, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் மாணவர் இல்லங்கள் 46 ஆகும். இதனால் பயன் அடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 4,369 ஆகும்.

படிப்பு உதவித் தொகையாக 1969—70-ல் 160·90 இலட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாகப் பயன் அடைந்தவர்கள் 90,565 பேர்கள். 1970—71-ஆம் ஆண்டில் 201·20 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 1,34,249 பேர்கள் பயன் அடைந்தனர். 1971—72-ஆம் ஆண்டில் ஜனவரி முடிய இதனால் 1,65,068 மாணவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள்.

உறுப்பினர் திரு கணபதி அவர்கள் குறிப்பிட்டது போலப் பிற்படுத்தப்பட்டோர், அரிசன மகளிர்க்கென்று விடுதிகள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன். மாணவர்கள் சமுதாயத்திலும் கூட, சாதியின் பெயரால் விடுதிகள் அமைக்கப்பட்டு, பேதங்களை உருவாக்க வேண்டுமா என்று உறுப்பினர்கள் மிக உருக்கத்தோடு கேட்டார்கள். நான் உங்களை வேண்டிக் கொள்வதெல்லாம், நீங்கள்- சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள், அருகிலுள்ள விடுதிகளுக்குச் சென்று பார்க்கவேண்டுமென்பதுதான். அந்த இல்லங்களில் எல்லாம் எந்த அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள் என்று கேட்டால் அது மிக்கப் பயனைத் தரும். அந்த இல்லங்களில் பின் தங்கிய வகுப்பினருக்கு 65 சதவீதம் என்றும், அரிசனங்களுக்கு 25 சத வீதம் என்றும், முன்னிலை வகுப்பு மாணவர்களுக்கு 10 சதவீதம் என்றும் இந்த அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள்.

அரிசன மாணவர் இல்லங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 25 சதவீதம் ஒதுக்கப்படுகிறது. பின்தங்கிய வகுப்பினர் மாணவர் இல்லங்களில் 25 சதவீதம் அரிசனங்களுக்கு ஒதுக்கப் படுகிறது. ஆகவே, சாதி மனப்பான்மைகள் மறைந்து கொண்டே வருகின்றன. பழைய காலக் கொடுமைகள், நிலைமைகள் எல்லாம் இன்றைய தினம் மாணவர்விடுதிகளில், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டது முதல், இல்லாத அளவிற்கு மாறிக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இல்லங்களில், பின் தங்கியவர்களுக்கு 10 சதவீதமும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்கு 60 சதவீதமும், அரிசனங்களுக்கு 25 சதவீதமும் முன்னிலை வகுப்பினருக்கு 5 சதவீதமும் இடம் ஒதுக்கித் தரப்படுகிறது.

இந்த ஆண்டிலிருந்து நம்முடைய மாணவர்களுக்கு, பின் தங்கிய மாணவர்களுக்கு மிகச் சிறப்பான முறையில் உணவு விடுதிகளை அமைத்துத்தரவேண்டுமென்று நாங்கள் தீவிரமாகச் சிந்தித்து, அதற்கான வேலைகளைச் செய்திருக்கிறோம்—என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் மொத்தத்திலே தருவது, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் என்று தருகிறோம். நாங்கள் இப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்பதை அறிக்கைகள் அனுப்பி, அதன்படி காரியங்கள்நடைபெறுகின்றனவா என்பதை அடிக்கடி சென்று பார்த்து, மாணவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்று வருகிறோம். இதன் காரணமாகப், பின்தங்கிய மாணவர்களின் உணவு விடுதிகள் நல்ல முறையில் நடைபெறுவதை நான் சுட்டிக்காட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பின்தங்கிய மாணவர்கள் இல்லங்களில் 400 கிராம் அரிசியும், கோதுமை அல்லது வேறு வகை 75 கிராமும், பருப்பு வகைகள் 15 கிராமும்

சுண்டல் 60 கிராமும், தாய்கறி, மசாலா, புளி, உப்புப் போன்றவைகள் 80 காசுகளுக்கும், இவற்றைத் தவிர, தனியாக தினசரி மோர் தருவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காலையிலே கோதுமை உப்புமா, பொங்கல், கஞ்சி ஏதாவது தருவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவை அத்தனையிலும் தேவையான கலோரி கிடைக்கிறதா, சத்துணவு கிடைக்கிறதா என்று பார்க்கிறோம். சமீபத்திலே ஐக்கிய நாடுகள் சபையிலே ஓர் ஆராய்ச்சி நடத்தினார்கள். ஏன் பின்தங்கிய சமுதாயத்தினரிடத்தில் மட்டும் அறிவு ஒளிவிட்டுப் பிரகாசிக்கவில்லை என்று பல கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவழித்து ஆராய்ச்சி செய்து ‘‘அறிவு என்பது எல்லாருக்கும் பொதுவாகத்தான் இருக்கிறது; அந்த அறிவு வளர்ச்சி கொடுக்கிற சத்துணவைப் பொறுத்துத்தான் வளர்ச்சிக் கூறுகள் அமைந்திருக்கின்றன’’ என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் சத்துணவு என்று அமெரிக்காவிலிருந்து அனுப்பப்பட்ட சத்துணவை நம்முடைய குழந்தைகளுக்கு நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். டாக்டர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் குழந்தைகளுக்கு வாரி வழங்கியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சத்துணவு அரிசனங்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் தான் கொடுக்கப்படுகிறது. பின்தங்கிய மக்களுக்குத் தனி, அரிசனங்களுக்குத் தனி என்று தனித்தனியாக இல்லாமல் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் செய்துகொண்டு வருகிறோம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டுப் பேசிய நேரத்திலே, சலுகைகளைப்பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசு 14·87 இலட்சம் 1969–70-ம் ஆண்டு கொடுத்து வந்ததை ஒரேயடியாக நிறுத்திவிட்டார்கள். 1970–71-ஆம் ஆண்டுக்கு மாநில அரசே அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து அந்தக் காரியத்தைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிதிநிலை காரணமாக இதுவரையிலும் அந்தச் சலுகை பெற்று வந்தவர்கள் தொடர்ந்து பெற்று வருவதற்காக அம்மையார் அவர்கள் மத்திய அரசோடு போராட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப் போராடுவதற்கு அவர்கள் ஒத்துழைப்பார்களானால் நாங்களும் மத்திய அரசோடு போராடுவதற்கும், போராடி அந்தத் தொகையைப் பெறுவதற்கும் முயற்சிக்கலாம்.

மிகப் பின்தங்கிய சமுதாயத்திலே உள்ள சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் ஆகியவர்களுக்காக என்ன என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நம்முடைய நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். 1971–72-ஆம் ஆண்டிலே 1,47,560 ரூபாய் சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்துவோருக்கு 65 ஆயிரம் ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக 868 பேர்கள் பயன் பெற்றார்கள். சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்துவோர்களுக்கும் உபகரணங்கள் வழங்குவதற்குக் கடன்கள்தான் வழங்கப்பட்டு இருந்தன. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு டாக்டர் கலைஞர் அவர்கள் அதை மானியமாகக் கொடுத்துவிட வேண்டுமென்ற அளவிலே சலவைத் தொழிலாளர்கள் உபகரணங்கள் வாங்க 107 ரூபாயும், முடி திருத்துவோர் உபகரணங்கள் வாங்க 75 ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது.



## பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் க. இராசாராம்

சலவைக் கூடத்திற்கு 2½ இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கீடு 50 சதவீதம் மான்யமாகத் தர இருக்கிறது.

சென்ற ஆண்டில் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்ட சமூகத்தினர் கம்பர், ஓவச்சர், பாணன், வேடன், வெள்ளன் செட்டியார், அச்சக்கரை வேளாளர், கன்னட சைனீகர், சக்ரவர், கன்னர், அஸ்தாந்திர கொல்லர், செட்டி (கன்யாகுமரி மாவட்டம்) இந்த 11 சாதிகளும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் பிற்பட்டோர் நலக்குழுவின் பரிந்துரைக்கிணங்க, குஞ்சடிகர் என்னும் சாதியும், கல்வேலி கவுண்டர் என்னும் சாதியும் இணைக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ விடுதிகளில் தங்குவதற்கு நகர்ப்புறத்தில் இருந்தவர்களுக்குக் கலை, விஞ்ஞானம் படிப்பவர்களுக்கு முன்பு 40 ரூபாய் வழங்கப்பட்டது. இப்பொழுது 60 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது; மருத்துவம், பொறியியல் படிப்பவர்களுக்கு முன்பு 40 ரூபாயாக இருந்தது. இப்பொழுது 60 ரூபாயாக உயர்த்தப் பட்டிருக்கிறது. தொழிற் கல்வி படிப்பவர்களுக்கு முன்பு 40 ரூபாயாக இருந்தது. இப்பொழுது 50 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பிற இடங்களில் கலை, விஞ்ஞானம் படிப்பவர்களுக்கு 35 ரூபாய் என்றிருந்தது. இப்பொழுது 50 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பிற இடங்களில் மருத்துவம், பொறி

யியல் படிப்பவர்களுக்கு முன்பு 35 ரூபாயாக இருந்தது. இப்பொழுது 55 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. பிற இடங்களில் தொழிற் கல்வி படிப்பவர்களுக்கு முன்பு ரூ. 35 தரப்பட்டது. இப்பொழுது 45 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த வகையில் எல்லா வகைகளிலும் பின் தங்கியவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பின்தங்கிய வகுப்பினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் ஆகியவர்களின் முன்னேற்றத்திற்கு இந்த ஆண்டு நிறையச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. மாநில அரசு 1969–70-ஆம் ஆண்டில் 17·83 இலட்சம் ரூபாய் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோருக்காகச் செலவழித்திருக்கிறது. இந்த ஆண்டு, 1970–71-இல் 24·83 இலட்சத்திற்குச் செலவழித்திருக்கிறது.

கல்வித் துறையில் தமிழ் முஸ்லிம்களிடையே எழுந்துள்ள உத்வேகத்தின் காரணமாகவும், அந்த முஸ்லிம் சமுதாயத்தினருக்குப் பல ஏற்பாடுகளைச் செய்ததன் காரணமாகவும், இன்றைக்கு அதன் எண்ணிக்கையில் ஏறத்தாழ 20 சதவீதத்தினர் படித்தவர்களாக மாறுகிறார்கள். 50, 60 உயர்நிலைப் பள்ளிகளும், 10, 11 கல்லூரிகளும் சமீபத்தில் தொடங்கப்பெற்றுள்ளன. இந்த வகையிலே அவர்கள் முன்னேறுவதற்கான நல்ல சாத்தியக் கூறுகளை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நரிக்குறவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் பின்தங்கியோர் பட்டியலில்இருக்கிறார்கள். அவர்கள் எங்களை அணுகி உதவி கேட்ட நேரத்தில் காதி இலாகா மூலமாக 10,000 ரூபாய் வரை கடன் கொடுத்து, வெள்ளிக் கம்பி எல்லாம் வாங்கிக்கொடுத்து அவர்கள் கைவினைத் திறனுடன் செய்த பொருட்களைச் சுற்றுலாவுக்கு வருகிற வெளி நாட்டுக்காரர்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு செல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு டிரான்சிஸ்டர் ரேடியோக்களெல்லாம் வாங்கிக் கொடுக்கப்பட்டு, அவர்கள் இன்று சந்தோஷமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

ஊட்டியிலே பின்தங்கியோருக்காக ஓர் உணவு விடுதி இல்லை என்று திரு தேவராசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே இருக்கும் கல்லூரிக்குப் பின் தங்கியோர் உணவு விடுதி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதை உறுப்பினரவர்களும் சென்று பார்வையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையினை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று கோரி முடிக்கிறேன். வணக்கம்.

[20–3–1972-ல் சட்டமன்றத்தில் பிற்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆற்றிய உரையிலிருந்து.]


காலக் கண்ணாடி

அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. திருப்பினும் வாய் திறவாதவை. அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே காலஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
வைத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும், எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த வரலாறை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,
பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB




# நரசிங்கன் பேட்டை நாயனம்

நரசிங்கன் பேட்டையில் செய்த நாயனம் ஒன்று வாங்கி அனுப்புமாறு, அமெரிக்காவிலுள்ள என் நண்பர் தந்தி அனுப்பியுள்ளார். நரசிங்கன் பேட்டை நாயனம் என்றால் அவ்வளவு புகழ் வாய்ந்ததா?" என்று காபி குடித்துக்கொண்டிருந்த ஒருவர், தன்னருகில் சிற்றுண்டி சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு நாயனக்காரரைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாங்க! நரசிங்கன் பேட்டையில் செய்த நாயனங்களுக்கு நானிலமெங்கும் நல்ல மதிப்பு உண்டு. அங்கு செய்யப்பட்ட நாயனங்களையே அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாட்டினரும் விரும்பி வாங்குகின்றனர். நாங்கள் வைத்திருக்கும் நாயனங்களெல்லாம் நரசிங்கன் பேட்டையில் செய்ததுதான்!" என்றார் அந்த நாயனக்காரர்.

அதைக் கேட்டவுடன் காபி குடித்துக் கொண்டிருந்தவர், பாதிக் காபியை அப்படியே வைத்துவிட்டு, விடுவிடுவென்றப் புறப்பட்டுவிட்டார். அவருடைய போக்கு, அவர் ஏதோ திட்டமிட்டுச் செல்கிறார் என்பதைக் காட்டியது. நான் அந்த நாயனக்காரரைப் பார்த்து. "என்னங்க! நீங்க சொன்னதைக் கேட்டவுடன், அந்த ஆள் காபியைக்கூட முழுமையாகக் குடிக்காமல், விரைந்து போய்விட்டாரே!" என்று கூறினேன்.

"எல்லாம் பிழைக்கும் வழிதானுங்க! நரசிங்கன்பேட்டையில் ஒரு நாயனத்தை 20 முதல் 40 ரூபாய் கொடுத்து வாங்கி, அதை அமெரிக்கா போன்ற வெளிநாட்டினரிடம் 200 முதல் 400 ரூபாய்க்கு விற்றுவிடுகின்றனர். இப்படிப் பிழைக்க பலபேர் தற்போது ஆரம்பித்துள்ளனர். அத்தகையவர்களுள் இவரும் ஒருவராக இருக்கக்கூடும்" என்றார் அவர்.

"நரசிங்கன் பேட்டையில் நாயனம் செய்யும் தொழிற்சாலை உள்ளதா?" என்று கேட்டேன்.

"இல்லீங்க! குடிசைத் தொழிலாகத்தான் நாயனம் செய்யும் தொழில் இருக்கிறது" என்று பதிலளித்துவிட்டு அவரும் போய்விட்டார்.



நரசிங்கன் பேட்டைக்குச் சென்று, நாயனம் செய்யும் இடம் எது என்று கேட்டோம். சின்னஞ்சிறுவர்கள் சுமார் 20 பேர்கள் கூடி, அந்த இடத்தைக் காட்டுவதாக எங்களை அழைத்துச் சென்றார்கள். வெளிச்சமே இல்லாத நான்கு, ஐந்து குறுகலான சந்துகளின் வழியாக அழைத்துச் சென்று, கடைசியில் ஒரு வீட்டைக் காட்டினார்கள்.

அந்த வீட்டின் முன்புறத்தில் ஒரு நடுத்தர வயது உள்ளவர், மண்ணெண்ணெய் விளக்கொளியில் நாயனம் கடைந்து கொண்டிருந்தார். அதைவிடச் சற்றுக் குறைந்த வயது உள்ள ஒருவர் கயிறு இழுத்துக் கொண்டிருந்தார். அவர்களுடைய உடலெங்கும் வியர்வை வழிந்து கொண்டிருந்தது. "தமிழரசு" இதழிலிருந்து வந்துள்ளோம் என்றதுமே எங்களை மரியாதையுடன் வரவேற்றனர். அவருடைய பெயர் என். ஜி. என். அரங்கநாத ஆசாரி. அவரைப் பேட்டி கண்டோம். அதன் விவரம் இதோ!

"நாயனம் செய்ய என்ன மரம் உபயோகிக்கின்றீர்கள்?"

"நாயனத்தின் குழாய் (பைப்) செய்ய ஆச்சாமரம் உபயோகிக்கின்றோம். விழுப்புரம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் விற்கப்படும் பழைய வீட்டு ஆச்சா மர விட்டம், தூண் போன்றவைகளை வாங்கி வந்து அவற்றைக் குடைந்து நாயனக்குழாய் செய்கிறோம். நாயனத்தின் அடிப்பாகத்திற்கு 'அனசு' என்று பெயர். அதை 'ரோஸ்வுட்' (Rose wood) மரத்திலிருந்து செய்கிறோம். நாயனத்தின் நுனியில் உள்ள ஊதுவானுக்கு 'சீவாளி' அல்லது 'நறுக்கு' (Read) என்று பெயர். இதை கொருக்காத் தட்டையினால் (நாணல் தட்டை) செய்கிறோம்.

ஒரு மாதத்தில் 10 நாயனம் செய்வதாகக் குறிப்பிட்ட அவர், நாயனம் செய்ய நரசிங்கன் பேட்டையில் 3 பட்டறையும், தேரழுந்தூரில் 2 பட்டறையும் உள்ளதாகக் கூறினர்.

கடுமையாக வேலை செய்தால் ஒரு நாயனம் செய்ய 2 நாள் பிடிக்கும் என்று கூறும் அவர், ஒரு நாயனம் 20 முதல் 200 ரூபாய்க்கு விலை போவதாகக் குறிப்பிட்டார்.

உலகப்புகழ் 'நாதஸ்வர சக்ரவர்த்தி' எனப் பெயர் பெற்ற காலஞ்சென்ற டி. என். இராஜரத்தினம் பிள்ளை அவர்கள், திரு. அரங்கநாத ஆசாரி அவர்களுக்கு 'அகில இந்திய நாதஸ்வரச் சிற்பி' என்ற பட்டத்தைக் கொடுத்துள்ளதுடன், அவருக்கு 'சுத்தமத்திமம் பேசும் நாதஸ்வரத்தை உருவாக்குபவர்' என்ற சான்றிதழையும் தன் கைப்பட எழுதிக் கொடுத்துள்ளார்.

டி. என். இராஜரத்தினம் பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம் போன்ற புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான்களுக்கெல்லாம், தானே நாதஸ்வரம் செய்து கொடுத்து வந்ததாகக்கூறும் அரங்கநாத ஆசாரி "தமிழ்நாடு அரசு கடனுதவி செய்தால் நலிந்து வரும் இத்தொழில், மறைந்து போகாமல் இருக்கும்" என்று தன் உள்ளக் கிடக்கையை எடுத்துக் கூறினர்.

இருபது ரூபாய்க்கு அவர் விற்கும் நாயனத்தைத் தரகர்கள் வாங்கி 200 ரூபாய்க்கு மேல் விற்பதை அறியாத அவர், நாயனம் செய்வதைத் தவிரத் தனக்கும் தன் குடும்பத்துக்கும் வாழ வழியில்லை என்று வருத்தத்துடன் குறிப்பிடுகிறார்.








பொருட்காட்சியினுள் நுழைகிறோம்.

எத்தனை விதமான பொருட்கள் அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன! அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைக்கப் பெற்ற அரும்பெருங் களஞ்சியங்களல்லவா அவை? அக்கால வாழ்க்கை, கலை, நாகரிகம், பண்பாடு முதலானவைகளைத் தெரிந்து கொள்ள அரும் பொருட்காட்சிகளே நமக்குப் பெரிதும் உதவி வருகின்றன.

பண்டைய அருமை பெருமையினை எடுத்துக் காட்டும் காலக் கண்ணாடியாய்த் திகழும் இந்தப் பொருட்களையெல்லாம் எடுத்துத் தொகுத்துப்பேணிக் காத்து வருவது இப்பொருட்காட்சியே ஆகும். இது இந்தியாவில் துவக்கமான கதையே மிகச் சுவையானதாகும். இன்று இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பொருட்காட்சிகள் பொலிவுற்று விளங்கி வருகின்றன. பொதுவாக அரும் பொருட்காட்சிகள் எப்படித் தோன்றின? அதை ஆரம்பிக்கத் தூண்டுகோலாயிருந்தவர் யார்? அவை எப்படியெல்லாம் சிறப்புப் பெற்று இயங்கி வருகின்றன என்பவற்றை இந்தக் கட்டுரை தெரிவிக்கிறது.

பண்டைக் காலத்திலேயே இந்தியாவில் காட்சி இல்லங்களும், சித்திரக் கூடங்களும் இருந்து வந்திருக்கின்றன என்பதை ஆதாரப் பூர்வமாக அறிகிறோம். கிராமத்தில் உள்ள கோயிலையும், கலைகளையும், கைத்தொழில்களையும் வளர்க்கும் சிறிய கூடமாய் அமைந்திருந்தது. அது இசை, நடனம், சிற்பம், சித்திரம், மரவேலை, தச்சுவேலை, துணி நெசவு, உலோக வேலை முதலிய கலைகள் மூலம் கலை உணர்வையே மக்களுக்கு ஊட்டியிருக்கிறது. கோயில்களைத் தவிர மன்னர்களும் கலைக் காவலர்களாய் இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களே அடிக்கடி தனிப்பட்ட காட்சி இல்லங்களையும் கலைக்கூடங்களையும் நிறுவியிருக்கிறார்கள்.

முதன்முதலில் 1814-ல் வங்காள ஆசியக் கழகத்தார் புவியியல், தாவரம், விலங்கினம், மக்கள் இனம், புதைபொருள் முதலிய பொருட்களைச் சேகரித்து வைத்து அரும்பொருட் காட்சியகம் ஒன்றைத் தொடங்கினர். பின்னரே, சித்திரங்களும், நெசவுத் துணிகளும் மற்ற கைத்தொழிற் பொருட்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இதுவே நாளடைவில் கல்கத்தாவில் இந்தியக் காட்சி அகமாக உருப்பெற்று, இன்று ஆசியாவிலே உள்ள காட்சியகங்களுள் மிகப் பெரியதாக விளங்குகிறது.

மார்க்கம், ஹொர்கிரீவ்ஸ் என்பவர்கள் இந்தியக் காட்சியகம் பற்றிய வரலாற்றை முதன்முதல் தொகுத்தனர். 1784-ல் சர் வில்லியம் ஜோன்ஸ் என்ற சிறந்த அறிஞர் துவக்கிய வங்காளத்து ஆசியச்சங்கமும் அதன் உறுப்பினர்களும் பல்லாண்டுகளாகச் சேகரித்து வைத்திருந்த அரிய பொருட்கள், காட்சியகம் அமைக்கப் பெருமளவு உதவின. அப்போது காட்சியகம் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டது. ஒன்று, புதைபொருள் மக்கள் இனத்துறை, மற்றொன்று புவியியல் விலங்கினத் துறை.

காட்சிச்சாலை மெள்ள வளர ஆரம்பித்தது. சங்கத்தின் நிதி நிலைமை போதுமானதாக இல்லாததால், அரசிடம் நிதி கோரப்பட்டது. 1839-ஆம் ஆண்டுவரை திரும்பத் திரும்ப விண்ணப்பித்துக் கொண்டதன் காரணமாகக் கிழக்கு இந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் காட்சிச்சாலையை நிருவகிக்க ஒரு தொகையைத் தந்துதவினர்கள். சிறப்புச் செயல்களுக்காக அவ்வப் போது மானியங்கள் கொடுக்கவும் அரசு அனுமதித்தது.

சென்னையில் ஒரு காட்சியகம் அமைக்க 1819-ஆம் ஆண்டிலேயே முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்போதிருந்த சென்னை இலக்கியக்கழகம் இலண்டன் ஆசியச் சங்கத்தின் ஒரு கிளையாக இயங்கி 1828-ல் பொருளாதாரப் புவியியல் சம்பந்தமான பொருட்களைச் சேகரிக்க ஆரம்பித்திருக்கிறது. 1843-ல் சங்கம் இக்காட்சியகம் அமைக்க அரசின் அனுமதி கோரியிருக்கிறது. கிழக்கு இந்தியக் கம்பெனி நிருவாகிகள், மத்தியப் பொருட்காட்சியகத்தினைச் சென்னையில் அமைக்க அனுமதி தந்தனர். 1850-ல் உதவி அறுவை மருத்துவராக இருந்த எட்வர்ட் கிரீன் பால்பர் என்பவர் இந்தக் காட்சியகத்தின் காவலராகப் பணியாற்றிட முன் வந்தார்; காட்சியகம் விரைந்து வளரப் பணியாற்றியவரும் அவரே. சென்னை தவிர, பெங்களூர், திருச்சி, பெல்லாரி, கோவை, கடலூர், உதகமண்டலம், செகந்தராபாத்து, மங்களூர் முதலிய இடங்களிலும் சிறு காட்சியகங்கள் அமைக்கத் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டவரும்

அவரே: இப்படி ஆறு காட்சியகங்கள் துவக்கப்பட்டன. அவைகளில் இராசமகேந்திரத்தில் உள்ளதைத் தவிர மற்றவை எல்லாம் 1861-ஆம் ஆண்லேயே மூடப்பட்டன.

1851-ல் டாக்டர் எர்க்ஸ்கின் என்பவரால், விக்டோரியா ஆல்பர்ட்டு காட்சியகம் நிறுவப்பட்டது. இந்தியாவில் துவங்கப்பட்ட மிகப் பழைய மருத்துவக் காட்சியகம், பம்பாயிலுள்ள கிராண்ட் மருத்துவக் கல்லூரிக் காட்சியகம் தான். கல்லூரி துவக்கப்பெற்ற சில ஆண்டுகளுக்குள்ளேயே 1845-ல் இந்தக் காட்சியகத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இதற்கான பொருட்களுக்கு 1850-லேயே பட்டியல் தயாரித்திருக்கிறார்கள். 1857-ல் ஜெனரல் காலின்ஸ், திருவனந்தபுரத்தில் ஒரு காட்சியகத்தைத் துவக்கியிருக்கிறார்.

பம்பாயில் காட்சியகம் அமைக்க 1848-ல் எண்ணியிருந்தார்கள். 1851-ல் இலண்டனில் நடத்திய பெரிய பொருட்காட்சிக்குப் பொருட்கள் சேகரிக்கும் முயற்சி தீவிரமாக நடந்ததால் 1857-ல், டாக்டர் பூயிஸ்து என்பவரது முயற்சியால் பொருளாதாரச் சம்பந்தமான பொருட்களைக்கொண்ட ஒரு காட்சியகம் உருவாகியிருந்தது. ஆனால், சிப்பாய்க் கலகம் காரணமாக இந்தக் காட்சியகம் அமைப்பது தடைபட்டு, காட்சியகக் கட்டடம், சிப்பாய் தங்குமிடமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. கடைசியாக 1871-ல் இன்றைய விக்டோரியா ஆல்பர்ட்டு காட்சியகக் கட்டடம் கிடைத்தது.

இலட்சுமணபுரியிலும், நாகபுரியிலும் 1863-ஆம் ஆண்டிலேதான் காட்சியகங்கள் நிறுவப்பட்டன. அதற்கு அடுத்த ஆண்டிலேயே லாகூரில் ஆரம்பித்தார்கள். பெங்களூரில், மைசூர் அரசுக் காட்சியகம், 1865-லேதான் உருவாகியது. மதுராக் காட்சியகமோ, 1874-ல்தான் ஆரம்பிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் ரெய்ப்பூரிலும், 1888-ல் ராஜ்காட்டிலும் அதற்கும் பத்து ஆண்டுகள் கழித்தே ஸ்ரீநகரிலும் காட்சியகங்கள் தோன்றின.

1887-ல் விக்டோரியா பேரரசியின் வெள்ளி விழா நடந்தது. இந்தியாவில் மட்டுமல்லாமல், பிரிட்டிஷ் பேரரசு முழுவதுமே பல காட்சியகங்கள் தோன்றும் புதிய ஊழியை அது உருவாக்கியிருந்தது. பல புதிய காட்சியகங்கள் இந்தியாவில் துவக்கப்பெற்றது இப்போதுதான். சென்னையில் விக்டோரியா தொழில்துறை நிலையம், கல்கத்தாவில் விக்டோரியா நினைவு மண்டபம் ஆகியவை தவிர, ஜெய்ப்பூர், உதயப்பூர், ராஜ்காட், விஜயவாடா முதலிய இடங்களிலும் காட்சியகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இப்படியெல்லாம் காட்சியகங்கள் வளர்ந்திருந்தாலும், இந்தியாவில் காட்சியகங்கள் அமைப்பதில் வேகம் அதிகரித்தது,



கர்சான் பிரபு காலத்திலேதான். 1902 முதலே காட்சியக வரலாற்றிலே புதிய ஊழி துவங்கியிருக்கிறது. வட்டாரக் காட்சியகங்கள் பல அமைப்பதற்குப் புதைபொருள் துறை உதவியிருக்கிறது. பத்து ஆண்டுக் காலத்திற்குள் ஆஜ்மீர், பரிபாடா, சமீபா, ஜோத்பூர், கஜீலாஹோ, குவாலியர், பிஜப்பூர், டாக்கா முதலிய இடங்களில் காட்சியகங்கள் தோன்றுவதற்கெல்லாம் தளரா ஊக்கம் அளித்தவர் புதைபொருள் துறை இயக்குநராய் இருந்த சர் ஜான் மார்ஷலே யாவர். சாரநாத்தில் பொருட் காட்சியகம் ஒன்றை அமைக்கவும், புதுடில்லியிலே மத்திய ஆசியப் பழம் பொருட் காட்சியகம் அமைக்கவும் காரணமாயிருந்தவரும் அவரே.

பம்பாயில் வேல்ஸ் இளவரசர் காட்சியகம் 1904-லே துவக்கத் திட்டமிட்டிருந்தும், அதற்கென்று அரசினரும் செல்வந்தர்களும் நிறைய மானியங்கள் வழங்கியும், 1914-லேதான் கட்டடம் கட்டி முடிந்தது. என்றாலும் போர்க் கால இராணுவ மருத்துவமனை வைத்திருந்ததன் காரணமாகக் காட்சியகத்துக்கு அக்கட்டடம் 1921-லேதான் கிடைத்தது. அதன் பின்னரே, ராயல் ஆசியக் கழகம், மக்கள் வளர்ச்சிச் சங்கம் முதலியவை சேகரித்து வைத்திருந்த பொருட்களும் காட்சியகத்துக்குக் கொண்டு வரப்பட்டன. மேற்கு வட்டாரப் புதைபொருள் துறையினர் சேகரித்த பொருட்கள் எல்லாம் அக்காட்சிச் சாலையில் இடம் பெற்றன.

நிலைபெற்ற காட்சியகங்களில் சாரநாத்துக் காட்சியகம் மட்டும் 1904-லேயே வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. நாளந்தாக் காட்சியகம் 1917-ல் தான் துவக்கப்பட்டிருக்கிறது. ஏழு ஆண்டுகள் கழித்தே, மொகஞ்சதாரோவில் காட்சியகம் தோன்றியிருக்கிறது. அதைத் தொடர்ந்தே ஹரப்பா, தட்ச

சேலம் முதலிய இடங்களிலும், இரண்டு ஆண்டில் காட்சியகங்கள் உருவாகி இருக்கின்றன. இவையெல்லாம் சர் ஜான் மார்ஷலின் பெருமுயற்சியால் உருவானவை.

கௌகத்தியில் வாணிகச் சம்பந்தமான ஒரு காட்சிச் சாலையை, அங்குள்ள பல்கலைக் கழகம் உருவாக்கி இருக்கிறது. பல்கலைக் கழகம் உருவாக்கிய வாணிகச் சம்பந்தமான காட்சிச்சாலை இந்தியாவில் இது ஒன்றுதான். விஞ்ஞான சம்பந்தமானவைகளை எளிதில் கற்க, பல்கலைக்கழகத்தில் உள்ள பல பிரிவுகளில் அவரவர்கள் பாடச் சம்பந்தமான பொருட்களைச் சேகரித்துக் காட்சியகங்கள் நிறுவியிருக்கிறார்கள். இப்படியே மருத்துவம் சம்பந்தமான பல பிரிவுகளுக்கும், பொறி இயற் கல்லூரிகளுக்கும் அவரவர்களுக்குச் சம்பந்தப்பட்ட பாடங்களை விளக்குவதற்கெனக் காட்சியகங்களைத் துவக்கியிருக்கிறார்கள். டேராடூனில் உள்ள வனக் கல்லூரியில் அழகான ஒரு காட்சியகம் இருக்கிறது. மரம், மரம் வளர்த்தல், காட்டில் கிடைக்கும் விளை பொருட்கள், பூச்சி, புழுக்கள் பற்றியெல்லாம் இது விளக்குகிறது. இது ஆசியாவிலேயே, சிறந்ததாகத் திகழ்கிறது.

கோவையிலுள்ள காஸ் வனக் காட்சியகம் 1902-லேயே துவக்கப்பட்டது. அது எச். ஏ. காஸ் என்பவரது பெரு முயற்சியால் துவக்கப்பட்டதால் அவர் பெயரைத் தாங்கியிருக்கிறது.

வேளாண்மை போன்ற தொழில்களை விளக்க 1909-ல், வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சிக் கழகத்தின் ஒரு பகுதியாக வேளாண்மைக் காட்சியகம் துவக்கப்பட்டிருக்கிறது. புவியியல், வேளாண்மைக் கருவிகள், நிலத்தின் தன்மை, உரங்கள் மற்றும் வேளாண்மை, தாவரம், விலங்குகள், பூச்சி, புழுக்கள் என்னும் வேளாண்மை சம்பந்தமான பொருட்களே இக்காட்சியகத்தில் நிறைந்திருக்கின்றன.

சென்னையை அடுத்த கிண்டியில் உள்ள பொறிஇயற் கல்லூரியில் பொறிஇயல் மாணவர்களுக்கு மிகவும் தேவையான மாதிரிப் பொருட்கள், நூற்றுக் கணக்காகச் சேகரிக்கப்பெற்று அங்குள்ள காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. பொறிஇயலின் பல பிரிவுகளில் சேர்ந்து கற்கும் மாணவர்களுக்கான நன்கு பராமரிக்கப்பட்ட பயிற்சிக் கூடமும் நிறுவி இருக்கிறார்கள். தில்லியில் துவக்கப்பட்ட பொறி இயல் காட்சியகம், அணைத் திட்டங்கள், அவைகளை விளக்கும் மாதிரிக் கட்டடங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. நீர்ப் பாசனம், மின்சாரம் முதலியவை நாட்டில் எப்படி வளர்ச்சியுற்றிருக்கின்றன என்பதை இவை நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

(அடுத்த இதழில் முடியும்)






தமிழகத்தில் கடலூர் நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய மூன்று நடுத்தரத் துறைமுகங்களும், பரங்கிப் பேட்டை, தொண்டி, பாம்பன் இராமேசுவரம், கீழக்கரை, குசேலப்பட்டினம், குளச்சல், மற்றும் வேப்பலோடை கன்னியாகுமரி ஆகிய ஒன்பது சிறு துறைமுகங்களும் உள்ளன. இந்த ஒன்பது சிறு துறைமுகங்களுள் வேப்பலோடை, கன்னியாகுமரி ஆகிய இரண்டு சிறு துறைமுகங்களும் சென்ற ஆண்டு புதிதாகத் திறக்கப்பட்டன. இவற்றுள் கன்னியாகுமரித் துறைமுகம் விவேகாநந்தப் பாறைக்குச் செல்லும் படகுகளின் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்காகவும், வேப்பலோடைத் துறைமுகம் உப்பு ஏற்றுமதியின் பொருட்டும் திறக்கப்பட்டவை.

தமிழகத்தின் துறைமுகத் துறையின் செலவுகள், மாநிலச் சிறு துறைமுக நிதி, மாநில இறக்குமதி ஏற்றுமதி நிதி, மாநிலக் கப்பல் வழிகாட்டிக் கட்டண நிதி ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

மாநிலச் சிறு துறைமுக நிதி இம் மாநிலத்தின் சிறு துறைமுகங்கள் அனைத்துக்கும் பொதுவானதாகும். இறக்குமதி ஏற்றுமதி நிதிகள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறைமுகத்திற்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டவை. துறைமுகக் கடல்துறை நிதிகளை இம் மாநிலத் தொகு நிதியுடன் இணைக்கவேண்டுமென அரசு கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. இம்முடிவைச் செயல்படுத்தச் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

# வேளாண்மை வாணிப வளர்ச்சிக்கு இணைப்புச் சாலைகள்

மைய அரசின் நிதி உதவியோடு கீழத் தஞ்சைப் பகுதியில் வேளாண்மை வாணிக வளர்ச்சிக்கான இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 50 இலட்ச ரூபாய்க்குக் கீழ்க்கண்ட 21 சாலை மேம்பாட்டு வேலைகள் சென்ற ஆண்டில் துவக்கப் பட்டுள்ளன.

வேளாண்மை வாணிக வளர்ச்சி
மேம்பாட்டுத் திட்டம்.

| | வேலையின் பெயர் | செலவு (இலட்சம் ரூபாயில்) |
|---|---|---|
| 1 | தேரழுந்தூர்—திருவாடுதுறைச்சாலையை மேம்பாடு செய்தல் கி.மீ. 0/0—8/2ல் | 2·00 |
| 2 | நடப்பூர் கிராம சாலை கி.மீ. 0/0—1/0 மேம்பாடு செய்தல் | 0·50 |
| 3 | மருதம்பட்டினம் — கொட்டாரக்குடி சாலை கி.மீ. 0/0—4/4 மேம்பாடு செய்தல் | 1·30 |
| 4 | கிழையூர்—மீனமநல்லூர் சாலை கி.மீ. 0/0—2/2 மேம்பாடு செய்தல் | 1·01 |
| 5 | ஆண்டிப்பாளையம் — காக்கழனி சாலை கி.மீ. 0/0-4/2 மேம்பாடு செய்தல் | 1·50 |
| 6 | விடங்கலூர்-முப்பதிக்கோட்டகம் சாலை கி.மீ. 0/0—4/0 மேம்பாடு செய்தல் | 2·00 |
| 7 | நெடுங்குளம்-காளியாக்குடி சாலை கி.மீ. 0/0—3/2 மேம்பாடு செய்தல் | 0·90 |
| 8 | ஆனைக்குப்பம்-தட்டாத்தி மூலை சாலை கி.மீ. 0/0—2/0 மேம்பாடு செய்தல் | 1·50 |
| 9 | கமுகக்குடி-கொரடாச்சேரிசாலை கி.மீ. 0/0—3/0 மேம்பாடு செய்தல் | 2·00 |
| 10 | வைத்தீஸ்வரன்கோயில்-அரசூர் சாலை கி.மீ. 0/0—6/0 மேம்பாடு செய்தல் | 2·00 |
| 11 | அய்யாவையனுறு இடது கரையிலிருந்து செம்பதனிருப்பு சாலை கி.மீ. 0/0—8/2 மேம்பாடு செய்தல். | 4·50 |
| 12 | நீர்முளை-எட்டுக்குடி சாலை கி.மீ. 0/0—4/5 மேம்பாடு செய்தல் | 2·80 |
| 13 | நீடாமங்கம் வாளாச்சேரி (வழி) கோத்த மங்கலம், பெரம்பூர், ரிஷியூர் சாலை கி.மீ. 0/0—11/8 மேம்பாடு செய்தல். | 3·50 |
| 14 | நெடும்பலம்—மருதவனம் (வழி) ஓவர் குடி, வங்கநகர், சாலை கி.மீ. 0/0 -8/2 மேம்பாடு செய்தல். | 3·00 |
| 15 | திருப்பயத்தாங்குடி திருச்செங்காட்டான்குடி (வழி) கீழ்ப்புதனூர், வீரப்பெருமா நல்லூர் சாலை கி.மீ. 0/0—6/8 மேம்பாடு செய்தல். | 2·34 |
| 16 | அய்யாவையனுறு கரையோரச் சாலை கி.மீ. 0/0—10/0 விக்கிரமனுறு பாலம் கட்டி மேம்பாடு செய்தல். | 2·50 |
| 17 | அரசலாற்றங்கரை யோரச்சாலை கி.மீ. 0/0—2/0 மற்றும் கி.மீ. 5/6-8/6 மேம்பாடு செய்தல். | 3·00 |
| 18 | விளக்குடி-முன்னியூர் சாலையும் அடப்பாறு கரையிலிருந்து கூத்தாடி மூலை வரை சாலையும் கி.மீ. 0/0-7/2 மேம்பாடு செய்தல். | 3·00 |
| 19 | எடமணல்நல்லூர் சாலை கி.மீ. 0/0-11/4 மேம்பாடு செய்தல் | 3·36 |
| 20 | திருராமேஸ்வரம்-பாண்டுக்குடி சாலை கி.மீ. 0/0-5/2 மேம்பாடு செய்தல் | 4·00 |
| 21 | கூத்தாநல்லூர்-ஆதிச்சபுரம், கண்டமங்கலம்-வேதபுரம் சாலை கி.மீ. 5/4-10/0 மேம்பாடு செய்தல். | 3·00 |
| | மொத்தம் ரூபாய் (இலட்சம்) | 50·00 |

மேற்கூறிய சாலை வேலைகளுக்குச் சென்ற ஆண்டில் ரூபாய் 20 இலட்சம் மட்டுமே செலவு செய்யப் பட்டுள்ளது. மீதி உள்ள வேலைகள் இந்த ஆண்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தால் கீழத் தஞ்சையில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள குறுகிய சாலைகள் வேளாண்மைப் போக்குவரத்திற்கு, அதாவது எல்லாப் பருவங்களிலும் சாகுபடி செய்வதற்குத் தேவையான விதைகள், உரங்கள், பூச்சி—பூஞ்சாள மருந்துகள், கருவிகள் ஆகியவற்றைக் கொண்டு செல்லவும், நெல்லை நவீன அரிசி ஆலைகளுக்கும் விலைபொருட்களை விற்பனைக் கூடங்களுக்கும் எளிதில் கொண்டு செல்லவும் வழி பிறக்கும். அதனால் உழவர் சமுதாயம் விழுமிய பயனடையும்.

நிலைக்கும், வைத்திருக்கும் ஒரு பம்பை எப்படி சோதிப்பீர்கள்?

# கிர்லோஸ்கர் 'KD' மோனோப்ளாக் பம்பு



## செலவுகள் மிச்சப்படுவதனால், கிர்லோஸ்கர் கேடி பம்பின் விலைக்கு

## விரைவில் ஈடுசெய்துவிடலாம்; அதற்காக வாங்கிய கடன் சீக்கிரம் அடைந்து விடுவது உறுதி.

எளிய டிஸைன், உன்னதமான வேலைப்பாடு, உறுதியான மற்றும் கச்சிதமான அமைப்பு போன்ற விசேஷ அம்சங்களின் பயனாக கிர்லோஸ்கர் கேடி பம்புகள், திறன்மிக்கவையாக விளங்கி, அதிக அளவில் தண்ணீர் இறைக்கின்றன.

**கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட்**, உத்யோக் பவன், திலக் ரோடு, பூனா-2

பிராஞ்சு ஆபீஸ்: கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட், 7/3, பட்டுலாஸ் ரோடு, சென்னை-2.



# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வினா :** தென்னங்கன்றுகள் நடுவதற்கு எவ்வளவு அகலம், ஆழம், நீளம் உள்ள குழிகள் தோண்ட வேண்டும்? எவ்வளவு இடைவெளியில் கன்றுகள் நட வேண்டும்? ஒரு ஏக்கருக்கு எத்தனைக் கன்றுகளை நட வேண்டும்? குழிகளில் மண், உரம், மணல் முதலிய கலவைகள் போட வேண்டுமா? கன்றுகள் நட்ட ஒரு ஆண்டுவரையில் உரமிடுதல், தண்ணீர் பாய்ச்சுதல், மருந்து உபயோகித்தல் ஆகியவை சம்பந்தமான அறிவுரைகள் தேவை.

இரா. ஜெயராமன்,
புதுப்பேட்டை,
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை :** தென்னங்கன்றுகள் நடுவதற்கு 3 அடி நீளம், 3 அடி அகலம், 3 அடி ஆழம் உள்ள குழிகள் தோண்ட வேண்டும். ஒவ்வொரு தென்னங்கன்றுக்கும் இடையில் 25 அடி. இடைவெளி இருக்க வேண்டும், இந்த இடைவெளியில் ஒரு ஏக்கரில் 69 தென்னங்கன்றுகள் நடலாம்.

தென்னங்கன்றுகளை நடுவதற்கு 2 அல்லது 3 மாதம் முன்பாகவே குழி வெட்டுதல் சிறந்தது. குழி தோண்டும் போது மேல் மண்ணை ஒரு புறமும், அடி மண்ணை எதிர்ப் பக்கத்திலும் கவனமாய்க் குவித்து வைக்க வேண்டும். தோண்டிய குழிகளில் குப்பை கூளங்களைப் போட்டு எரிக்க வேண்டும். அதனால் மண்ணில் உள்ள கறையான், பூச்சிகள், கிருமிகள், பூஞ்சாளங்கள் ஆகியவை அழிந்துவிடும். அதன் பின்னர் குழிகளை ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு ஆறப் போடுதல் நல்லது. அவ்வாறு ஆறப் போடுவதால், காற்று, மழை, வெய்யில் ஆகியவைகளால் குழியில் உள்ள மண் பக்குவம் அடைகிறது.

புரட்டாசி மாதத்தில் குழிகளில் விழுந்துள்ள மண்களை அகற்றி விட்டு, அடி மட்ட மண்ணைக் கிளறிவிட்டு, அதன் மேல் ஒவ்வொரு குழியிலும் 1½ அடி உயரத்திற்குத் தனியே குவித்துள்ள மேல்மண், மணல், 5 கிலோ சாம்பல் ஆகியவற்றைக் கொண்டு நிரப்ப வேண்டும். செம்மண்ணாக இருந்தாலன்றிக் குழியிலிருந்து எடுத்த மேல் மண்ணை இவ்வாறு நிரப்புவதற்குப் பயன்படுத்துதல், பயனுடைய செயலாகாது. மேல் மண், மணல், சாம்பல் ஆகியவற்றைப் போட்டு நிரப்புவதால், இளந்தென்னங் கன்றுகளின் வேர் விரைவில் வளர்ந்து பரவக் கூடும். தென்னங்கன்றுகளைக் குழிகளில் நடுவதற்கு முன்பாக ஒவ்வொரு குழியிலும் சுமார் 252 கிராம் (½ பவுண்டு) பி.எச்.சி. 10 சத மருந்தைச் சம அளவு மணலுடன் கலந்து தூவ வேண்டும். இதனால் இள இளந் தென்னங்கன்றுகள் கறையான்களால் தாக்கப்படாது.

தென்னங்கன்றுகளை நடுவதற்குப் புரட்டாசி மாதமே சிறந்தது. புரட்டாசியில் நடுவதால், ஐப்பசியில் பெய்யும் பருவ மழையைக் கொண்டு தென்னங்கன்றுகள் நன்கு வளரும். தென்னங்கன்றுகளைத் தரை மட்டத்திலிருந்து 2 அடி ஆழத்தில் குழிகளில் நடவேண்டும். தென்னங்கன்றைக் குழியின் நடுவில் வைத்து, வரிசைகளில் கோணல் ஏற்படாமல் நேர் பார்த்து அமைத்து, அதன் நெற்று நன்றாக மறையும்படி மண்ணைப் போட்டு நிரப்பிக் கெட்டியாக அமுக்கி விட வேண்டும். அதன் பின் தண்ணீர் விட வேண்டும். பிறகு ஒருநாள் விட்டு ஒருநாள் விதம் தண்ணீர் விட்டு வர வேண்டும். மழை இருக்கும் போது தண்ணீர் விட வேண்டிய அவசியமில்லை. கோடைக் காலத்தில் கண்டிப்பாக வாரம் இரு முறையாவது தண்ணீர் விட வேண்டும்.

தென்னங் கன்றுகளைச் சுற்றிலும் குழிகளில் தோன்றும் களைகள் அவ்வப்போது அகற்றப் படவேண்டும். தென்னங்கன்றுகளுக்கு இடையில் வேர்க்கடலை, பயறு வகைகள், காய்கறிகள், வழை போன்றவைகளை வளர்க்கலாம். அதற்குப் போதிய அளவு நீர்பாய்ச்ச வசதி இல்லாவிட்டால் சணப்பை, பில்லிப்பசரா, கொள்ளு, கலப்பகோனியம் ஆகியவைகளை விதைத்து, வளர்ந்தபின் அப்படியே உழுது விடுவது சிறந்தது.

ஓராண்டு வயதுடைய ஒவ்வொரு தென்னங்கன்றுக்கும் 227 கிராம் அமோனியம் சல்பேட், 227 கிராம் சூப்பர் பாஸ்பேட், 170 கிராம் மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை இட வேண்டும். பருவ காலப் பெருமழைக்குப்

பிறகு, பூமியில் போதிய ஈரமிருக்கும்பொழுது உரமிடுதலே சிறந்தது. போதிய ஈரம் இல்லாவிட்டால், உரமிட்டவுடன் தண்ணீரை நன்கு பாய்ச்ச வேண்டும். ஓராண்டிற்குப் பிறகு வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் அளவிலும், முறையிலும் உரமிட வேண்டும்.

* * *

**வினா :** நான் தென்னந் தோப்பு வைத்துப் பயிரிடத் திட்டமிட்டுள்ளேன். ஆகையால் நல்ல தென்னங் கன்றுகள் எங்குக் கிடைக்கும்? ஒரு ஏக்கருக்கு என்ன செலவாகும்? இதற்கு அரசின் கடன் உதவி உண்டா? அவ்வாறென்றால் யாருக்கு மனுச்செய்ய வேண்டும்?

புலவர் அ. முகமது சகாபுதீன்,
புங்கனூர் (அஞ்சல்),
சீர்காழி வட்டம்.

**விடை :** தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும், மூவலூரிலும் அரசினர் தென்னை நாற்றங்கால் உள்ளன. அங்குத் தரமான தென்னங் கன்றுகள் கிடைக்கும். உங்களுக்குத் தேவையான கன்றுகளை உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு ஏக்கரில் முறைப்படி தென்னை நடுவதற்குச் சுமார் ரூபாய் 600 ஆகக் கூடும். நீங்களே நேரடியாக வயலில் உழைக்கும் போது செலவு குறையக் கூடும்.

ஒரு ஏக்கரில் புதிதாகத் தென்னந் தோப்பு ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு ரூபாய் 300-ஐ நீண்ட காலக் கடனாக வழங்குகிறது. கடன் பெறுவதற்கு உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலமாக, உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலருக்குக் கடன் மனு அனுப்புங்கள். கடன் மனு அனுப்புவது பற்றிய விவரங்களை உங்கள் துணை வேளாண்மை அலுவலரிடமிருந்து, அல்லது உங்கள் ஊர்நல ஊழியரிடமிருந்து அறிந்து கொள்ளுங்கள். தென்னை நடுவதற்குரிய குழியின் ஆழம், இடைவெளி, பருவம், உரமிடும் அளவு ஆகியவைகளைப் பற்றி அறிய முதல் வினாவுக்கு அளித்துள்ள விடையையும், இதே இதழில் வெளியாகியுள்ள "தமிழ்நாட்டில் தென்னை ஆராய்ச்சி நிலையம்" என்ற கட்டுரையையும் படிக்கவும்.

* * *

**வினா :** கடலைச் செடிகளுக்கும், பூச்செடிகளுக்கும் தண்ணீர் பாய்ச்ச 'ஸ்பிரிங்க்ளர்' ( Sprinkler ) வேண்டும். எங்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவிக்கவும்.

ஆர். கனகராஜ்,
முசிறி,
திருச்சி மாவட்டம்.

**விடை :** தங்களுக்குத் தேவையான 'ஸ்பிரிங்க்ளர்' பெற, கோயம்புத்தூர்-18-ல் உள்ள 'பிரிமியர் இரிகேஷன் எக்யுப்மெண்ட் பிரைவேட் லிமிடெட்' (Premier Irrigation equipment Pvt Ltd.) என்ற நிறுவனத்திற்கோ அல்லது சென்னை, அண்ணாசாலையில் உள்ள 'வோல்டாஸ்' கம்பெனிக்கோ சென்று கலந்தாலோசியுங்கள்.

* * *

**வினா :** நான் ஒரு இலங்கை அகதி. இலங்கையிலிருந்து வந்து 26—10—1971-முதல் குளமங்கலம் கிராமத்தில் வசிக்கின்றேன். இந்திய அரசை நம்பித்தான் வந்திருக்கின்றேன். எனக்குச் சொந்த நிலம் இல்லை. வேறு எந்த வருமானமும் இல்லை. என்னை நம்பி 10 நபர்கள் என்னுடன் இருந்து அல்லல் படுகிறார்கள். என் கையில் இருக்கும் பணம் முடியும் தறுவாயில் இருக்கிறது. ஆகையால், என் வருங்காலம் பெரும் தடுமாற்றமான நிலையில் போகின்றது. எனக்குத் தேயிலைத் தோட்டத்தில் 35 ஆண்டு அனுபவம் உண்டு. ஊட்டியிலிருக்கும் கலெக்டருக்கு கடிதத் தொடர்பு வைத்தோ, நேர்முகமாகச் சந்தித்தோ கேட்டால், தேயிலைத் தோட்டத்திற்குப் போக முடியுமா? அல்லது யாரை அணுக வேண்டும்? தயவு செய்து தெரிவிக்கவும்.

மு. விஸ்வநாதன்,
குளமங்கலம் (தெற்கு அஞ்சல்),
பட்டுக்கோட்டை வட்டம்.

**விடை :** இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்காகத் தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவ்வுதவிகளைப் பெற நீங்கள் மனு அனுப்பினீர்களா, இல்லையா என்று தெரியவில்லை. இதுவரை மனு அனுப்பாதிருந்தால், உடன் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, உங்கள் குறையையும், வேண்டுகோளையும் தெரிவித்து ஒருமனு அனுப்புங்கள். மறுவாழ்வுத்துறை இயக்குநர் அவர்களுக்குத் தங்களுக்குத் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த அனுபவம் உள்ளது என்பதைத் தெரிவித்து மனு அனுப்புங்கள். தமிழ்நாடு அரசு அகதிகளுக்காக ஏற்படுத்தி வரும் தேயிலைத் தோட்டங்களில் தங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கலாம். எனவே, உடன் முயற்சி செய்யுங்கள்.

## புளிய இலையில் புதிய அமிலம்

புளிய மரத்து இலையிலிருந்து டார்டாரிக் அமிலம் தயாரிக்கும் புதிய முறை ஒன்றை ஜோர்ஹாட்டிலுள்ள வட்டார ஆய்வுக் கூடம் கண்டுபிடித்துள்ளது. இந்திய தேசிய ஆய்வு வளர்ச்சிக் கழகத்திடம் இது பற்றிய விவரங்கள் உள்ளன.

நெசவுத் தொழிலுக்கும், மருந்துப் பொருளுக்கும் டார்டாரிக் அமிலம் மிகவும் பயன்படுத்தப் படுகிறது. இது இப்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படுகிறது.

புளியமர இலைகள் தென்னிந்தியாவில் அதிக அளவில் உள்ளன. இவற்றில் 8 முதல் 13 சதவிகிதம் வரை டார்டாரிக் அமிலம் அடங்கியுள்ளன.

ஆண்டொன்றுக்கு 100 டன் டார்டாரிக் அமிலம் உற்பத்தி செய்யக் கூடிய தொழிற்சாலை அமைப்பதற்குப் பதின்மூன்றரை இலட்ச ரூபாய் மூலதனம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# கண்ணகிக்குக் கலைக்கூடம்



கரிகாற் சோழனின் தலை நகரமாகவும், கி.மு. நான்காம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே தமிழகத்தின் தலைசிறந்த துறை முகமாகவும் விளங்கிய காவிரிப் பூம் பட்டினத்தில் பிறந்து வளர்ந்து, கோவலனை மணந்த, மாதவியின் ஆடலில் மயங்கிக் கோவலன் பிரிந்ததால் வருந்தி, பின் மாதவியைப் பிரிந்து வந்த கோவலனுடன் மதுரைக்குப் புறப் பட்டு, மதுரையிலே காற்சிலம்பில் ஒன்றை விற்கச் சென்ற கோவலன் கொலை செய்யப் பட்டவுடன் தன் கணவன் கள்வனல்லன் என்பதை மெய்ப்பித்து, தன் கற்பின் திறனால் மதுரையை அழித்து, மனமொடிந்து சேர நாடு சென்று, அங்குள்ள ஒரு மலை மேல் ஏறித் தன் கணவன் கோவலனுடன் விண்ணுலகம் சென்ற கற்புக்கரசி கண்ணகியின் கதையை விளக்கும் கலைக் கூடம் பூம்புகாரில் அமைக்கப் பட்டு வருகிறது.

கற்சிலை மூலம் கதை சொல்லும் முதற் கலைக் கூடமாக, ''பூம்புகார்க் கலைக்கூடம்'' அமையவிருக்கிறது. படிக்காத பாமர மக்களும், கலைக்கூடத்தில் அமையவிருக்கும் சிலைகளைக் கண்டு, சிலப்பதிகாரத்தின் கதையை எளிதில் புரிந்து கொள்ள இயலும்.

கற்புக்கரசி கண்ணகியின் கதை கூறும் சிலப்பதிகாரக் காட்சிகளைக்கருங்கல்லில் செதுக்கி இக்கலைக் கூடத்தின் சுவர்களில் பதிக்கப் பெறும்.

பூம்புகார்க் கலைக்கூடத்தில் அமையவிருக்கும் சிற்பச் சிலைகள் மாமல்லபுரத்தில் உள்ள சிற்பப் பயிற்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டு வருகின்றன. சிற்பங்களுக்குரிய கருங்கற்சிலைகள் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள பட்டுமலைக் குப்பத்தில் இருந்து எடுத்துவரப் படுகின்றன.

கடற்காற்றில் அடங்கியுள்ள உப்புத் தன்மையால் கலைக் கூடத்தில் எந்தவித ஊறும் ஏற்படாதிருக்க வேண்டுமென்பதற்காக, கருங் கல்லையும், கான்கிரீட்டையும் கொண்டே கலைக்கூடம் கட்டப்பட்டு வருகிறது.

கலைக்கூடத்தின் வெளிச் சுவர்களில் பொருத்துவதற்கான இளஞ்சிவப்புக் கற்கள் மதுரை மாவட்டத்தில் மேலூருக்கு அருகில் உள்ள வாஞ்சி நகரிலிருந்து கொண்டு வரப்படுகின்றன.

கலைக்கூடத்தின் தரையில், கண்ணைக்கவரும் வண்ண வண்ணப் பலகைக் கற்கள் (Slab) பதிக்கப் பட்டிருக்கின்றன. இதற்கான கருங்கற் பலகைகள் கிருஷ்ண கிரியில் உள்ள அரசினர் கருங்கல் மெருகிடும் நிலையத்தில் செய்யப்பட்டு வருகின்றன.

கலைக்கூடத்தைச் சுற்றிலும் வண்ணப்பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. கலைக்கூடம் அமைக்கும் வேலை இரவும் பகலும் நடந்து வருகிறது. மூன்றரை இலட்சம் ரூபாயில் படத்தில் கண்டவாறு கற்புக்கரசி கண்ணகிக்கு எடுக்கப்படும் கலைக் கூடம், தமிழகத்தின் கலைத் திறனுக்கோர் எடுத்துக் காட்டாகவும், சுற்றுலாப் பயணிகளின் கவனத்தைக் கவருவதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

கலைக்கூடத்தின் முகப்பு, சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள எழுநிலை மாடம் போல் அமைக்கப்பட்டுள்ளது. எழுநிலை மாடம் என்பது, ஆண்டின் ஏழு பருவங்களிலும் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ள மாடங்களாகும். அவைகளை நினைவு கூரும் வகையில்தான் எழுநிலை மாட முகப்பு அமைக்கப்பட்டுள்ளது.




மாதவி கோவலனைப் பிரிந்து மயங்கியது வைகாசித் திங்கள். அதாவது இளவேனிற் பருவம். எனவே, இளவேனிற் பருவத்திற்குரியது நான்காவது நிலம் என்றாகிறது.

திருமணம் முடித்துக்கொண்ட கண்ணகியும் கோவலனும்,

''கயமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும்
மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை

நெடுநிலை மாடத்து இடைநிலத்து இருந்தார்கள். அந்நாட்கள் இளவேனிற் பருவத்தின் இறுதி நாட்கள். அடுத்து முதுவேனிற் பருவம் தொடங்க உள்ளது. மாடத்தின் ஒவ்வொரு நிலமும் சிறந்த படுக்கையமைந்த பள்ளியறைகள் கொண்டது. அதனால், அவ்வந்நிலங்கள் அவ்வப் பருவத்துப் பள்ளிகளாகக் குறிக்கப்பட்டன. கோவலன் கூடாது ஏகியபின் மாதவி எழுநிலை மாடமாம்,

''வானுற நிவந்த மேல்நிலை மருங்கின்

வேனிற் பள்ளி ஏறி''னாளாம். இங்கு இளவேனிற் பருவத்தில் தங்கும் நான்காம் நிலம் ''வேனிற்பள்ளி'' எனப்பட்டது. பருவத்திற்கேற்ப மாடிகள் அமைக்கப்பட்டதை இவ்வரிகளுக்கு எழுதிய உரையில் அடியார்க்குநல்லார் பின்வருமாறு புலப்படுத்தியுள்ளார் :

'' பருவத்திற்குப் பொருந்த வானிலேயுற
உயர்ந்த மேனிலையில் (மாடியில்) ஒருபக்கத்து
நிலாமுற்றத்தே யேறி'' —என்பது நோக்கத் தக்கது.

முன்னர்க் கண்ணகியும் கோவலனும் நெடுநிலை மாடத்தின் இடைநிலமாம் நான்காவது நிலத்தில் இருந்தவர்கள் அங்குப் புகுந்த தென்றலைச்சுவைத்துக் காம உணர்ச்சி மேலீட்டால்,

''விரைமலர் வாளியொடு வேனில்வீற் றிருக்கும்
நிரைநிலை மாடத்தரமியம்'' (நிலாமுற்றம்)

ஏறினார்கள், என்று குறிக்கப்படுவதால் இளவேனிற் பள்ளிக்குமேல் நிலாமுற்றம் அமைந்த முதுவேனிற் பள்ளி நிலத்தில் ஏறியதாகும். அதன் உரையும்,

''அவர் காதல் மிகுதலாலே இடைநிலத்து (நான்காவது) நின்றும் மேல் நிரைத்து வகுத்த நிலங்களில் மணத்தினையுடைய மலர்வாளியோடே காமன் வீற்றிருக்கும் மேல் நிலமாகிய (ஐந்தாவது நிலம்) நிலாமுற்றத்தின் மேல் ஏறி என்க'' என்கிறது.

எனவே, ஐந்தாம் நிலம் முதுவேனிற் பருவத்திற்கு உரியது. மேலும்,

கூதிர்ப்பருவத்தில் காதலரைப் பிரிந்த மாதர் பிரிவுத் துன்பத்தால் நொந்து ஊது உலை போன்று பெருமூச்சுவிட்டு,

''வேனிற் பள்ளி மேவாது கழிந்து
கூதிர்ப் பள்ளிக் குறுங்கண் அடைத்து''

ஒடுங்கினராம். இவ்வடிகளில் வேனிற் பள்ளியினின்றும் 'மேவாது' என்றுள்ளதால் அதன்மேல் மேவுமாறு அமைந்தது ஐந்தாவது நிலம். அது கோடைப் பருவத்திற்குரிய மாடியாகிய முதுவேனிற் பள்ளி. எனவே, இவ்விரண்டு குறிப்பாலும் ஐந்தாவது நிலம் கோடைப்பருவத்திற்குரிய அடுக்கு ஆகிறது. வேனிற்பள்ளி என்பது போன்று கூதிர்பருவத்திற்குரியமாடி 'கூதிர்ப்பள்ளி' எனப்பட்டதையும் இவ்வடிகளிற் காண்கிறோம். இவ்விடத்தும் அடியார்க்குநல்லார்,

''இளவேனிற் காலத்திற்கு அமைந்த நிலாமுற்றத்தின் (மேல்) மேவாது ஒழிந்து கூதிர்க் காலத்திற்கு அமைந்த இடைநிலத்து ஒடுங்கி''

—என்று குறித்தார். இங்கு 'இடைநிலம்' எனப்படுவது இளவேனிற் பள்ளிக்கும், கீழுள்ள கார்ப் பள்ளிக்கும் இடைநிலமாகும். ''வேனிற் பள்ளி மேவாது கழிந்து'' என்பதில் 'கழிந்து' என்றதை நோக்க வேண்டும். கழிந்து என்பது இறங்கி என்று பொருள்படும். கீழிறங்கிக் கூதிர்ப்பள்ளிக்கு வந்ததாகக் குறிக்கப்படுவதால் நான்காவதன் கீழ்நிலமாகிய மூன்றாவது நிலம் கூதிர்ப் பள்ளிக்கென அமைந்ததாகும்.

சீவகசிந்தாமணியில், கூதிர்ப்பருவ இருப்பிடத்தினின்றும், ''இழிந்து கீழ்நிலை இன்னகிற் சேக்கைமேல்''—என்று குறிக்கப்படுவது கொண்டு அடித்தள நிலத்திற்குமேல் உள்ள இரண்டாவது நிலம் கார்ப்பருவ மாடி.

அதே சிந்தாமணி, முன்பனிப்பருவத்தில் தங்கியதை,

'மாமதி உரிஞ்சும் ஒண்பொனின்
மாடக் கீழ்நிலை மகிழ்ந்து வைகினார்''—என்று

குறிக்கிறது. 'மாமதி உரிஞ்சும் மாடம்' என்பது உயர்ந்து மேலிருக்கும் ஏழாவது நிலத்தைக் குறிக்கும். அம்மாடத்தின் கீழ் என்பதால் ஆறாவது நிலம் ஆகிறது. எனவே, ஆறாவது நிலம் முன்பனிப் பருவ நிலமாகிறது. பின்னர்க் குறிக்கப்படும்

கருத்துகளால் இக்கருத்தும் வலியுறும். எஞ்சி நிற்பது ஏழாவது நிலம். அஃது முன்பனிப் பருவ நிலமாக வேண்டும்.

இவ்விளக்கங்களால்,

கீழ்த்தளம்—சரக்கறை ;
இரண்டாவது நிலம்—கார்ப்பருவ மாடி;
மூன்ருவது நிலம்—கூதிர்ப்பருவ மாடி;
நான்காவது நிலம்—இளவேனிற்பருவ மாடி;
ஐந்தாவது நிலம்—முதுவேனிற்பருவ மாடி;
ஆருவது நிலம்—முன்பனிப் பருவ மாடி;
ஏழாவது நிலம்—பின்பனிப் பருவ மாடி;

—என வரையறை செய்துகொள்ள முடிகிறது. இவ்வரையறைக்குப் பல உரையாசிரியர்களது கருத்துரைகளும் முத்திரையிடுகின்றன.

### பருவகாலப் பக்குவப் பள்ளியறைகள்

ஒவ்வொரு பருவத்திற்கும் ஒவ்வோர் அடுக்கு என்பது பெயரளவில் மட்டும் ஒதுக்கப்பட்டது அன்று. ஒவ்வொரு மாடியும் அவ்வப் பருவத்தின் தட்ப, வெப்ப நிலைக்கேற்ற கட்டட அமைப்பைக் கொண்டது. பருவத்திற்கு ஏற்ப இயற்கையில் தட்பமும் வெப்பமும் எழும் அன்ருே? அவற்றை உள்ளே உறைவோர்க்கு நலம் பயக்கும் அளவில் கொடுக்கவும், தீமை தராத வகையில் தடுக்கவும் வாய்ப்பாக ஒவ்வொரு நிலமும், அடுக்கும் அமைக்கப்பட்டிருந்தது. எழுநிலை மாடத்தை உருவாக்கியவர்கள் வெறும் கல்லடுக்கும் கொத்தர்கள் அல்லர்; எழுநிலை மாடம் உறைவோர் பருவத்திற்கும், நாளுக்கும், நேரத்திற்கும் ஏற்பப் ''புகர் அறு கோலம்'' செய்து கொள்வர். புகர் அறு கோலம் என்ருல் ஒரு சிறு புள்ளியளவு குறையும் அற்ற ஒப்பனை என்பது பொருள். இவ்வாறு கோலம் கொள்ளுதல் அடியார்க்கு நல்லாரால்,

''அக்காலத்திற்கு ஏற்பன உடுத்தும், முடித்தும்,
பூசியும், பூணுதல்''
—என்று விரிக்கப்பட்டுள்ளது.



பருவத்திற் கேற்றதும், அப்பருவத்தில் நேரத்திற்கு ஏற்றதுமான உடைகளை உடுப்பர்.

### கார்ப்பருவப் பள்ளியறை

(இரண்டாவது அடுக்கு)

மாடத்தின் வெளியில் நின்று பார்த்தாலே ஏழாவது மேல் அடுக்கில் கார்முகில்கள் படிந்திருப்பது தெரிகிறது. அதனுல்தான் அந்த அடுக்கில் கார்ப் பள்ளியினை அமைக்காமல் கீழ் அடுக்கைத் தேர்ந்துள்ளனர் போலும்.

அணை, மலர், உடை, அணி எல்லாம் சிவப்பு. நீர் சேர்ந்த குழம்பான பூச்சுப் பொருட்களைக் காணவில்லை. மழைக்காலமன்ருே? யாவும் பொடிகளாகவே உள்ளன. அதோ குழல் பொன்பூண் கட்டப்பட்டு உள்ளது. வங்கியம் இதோ இருக்கிறது. ஆவஞ்சி, குடுக்கை எனும் தோற்கருவிகள் அதோ மாட்டப்பட்டுத் தொங்குகின்றன.

### கூதிர்ப்பருவப் பள்ளியறை

(மூன்ருவது அடுக்கு நிலம்)

''குன்றையே குளிரவைக்கும் கூதிர்க்காலம்'' என்பர். வாயில் மிகத் தாழ்வாக உள்ளது. பணிந்துதான் போகவேண்டும். நடுவே தொங்கும் ''இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரி'' ஒளிவிடத் தொடங்கி விட்டது. கிழக்கிலும், மேற்கிலும் அமைந்த ''கூதிர்ப் பள்ளியின் குறுங்கண்'' சாளரம் வெளியே சிறு துளையாகவும், உள்ளே விரிந்து வரும் வாயாகவும் அமைந்துள்ள அமைப்பு, கூதிர்க் குளிருக்கு வாய்ப்பானது. அந்தக் குறுங்கண்ணுக்கும் அடைப்பான்கள் இருக்கின்றன.

கதவின் நிலைகள் மிகத் திண்ணியதாய் உள்ளன. இரட்டைக் கதவுகள் திறக்கப்பட்டதும் மோதிப் பொருந்திக் கொள்கின்றன. மோதும் விரைவில் தாழ்கள் இறுகிக் கொண்டதைப் பார்த்தீர்களோ? இக்காலக் குளிர்பதன அறைக்கதவைப் போன்று உள்ளதன்ருே. இந்தக் கதவைப் பார்த்துத்தான் நக்கீரர்,

''திண்ணிலைப் போர்வாய்க் கதவம் தாழொடு துறப்ப''—என்று பாடினர்.

அதோ பெரிய கட்டில் கிடக்கிறது. மேலே மிக மென்மையான அமளி (மெத்தை) கிடக்கிறது. அன்னங்கள் புணர்ந்தபோது உதிர்ந்த தூவி இறகுகளை உள்ளே வைத்திருக்கின்றனர். மென்மைக்கு மென்மை; ஈரத்தையும் வாங்காது. இயற்கை வெதுவெதுப்பானது. ''துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி'' அன்ருே? ''என்புருகி மிக்க அன்போடு புணர்தலின் சூட்டிற்கு (அடிவயிற்று இறகிற்கு) மென்மை பிறக்குமாம். கூதிர்க் குளிரில்,

''கூந்தல் மகளிர் கோதை புனையார்;
பல்லிருங் கூந்தற் சின்மலர் பெய்து'' கொள்வர்.



இத்துணை நேரம் இங்கிருந்தோமே குளிர் தெரிந்ததோ? ஏன்? அதோ அந்த மூலையை நோக்குங்கள்; ஒரு திரை மறைக்கப்பட்டுள்ளது. அது ''தடவுத் திரை'' எனப்படும். அதற்குள் பெரிய சுடுமண் தடா—தடவு—சால் இருக்கிறது. அங்கு ஒரு ஏவற்பெண் அமர்ந்து நெருப்பை மூட்டிக்கொண்டிருக்கிருள். அந்தத் தடாவில் நெருப்பை மூட்டுவதற்கு மயிற்சந்தன விறகைப் பயன்படுத்தினுள். அவ்விறகு தொட்டால் தண்ணென்றிருக்கும். சூடு பிடித்தால் மணக்கும். தீப்பிடித்ததும் தடாவில் வைரம் பாய்ந்து முற்றியதாய்க் கருமை நிறத்த தாய் உள்ள அகிலையும், கண்டு சருக்கரை என்னும் மணப்புகைப் பொருளையும் இட்டுவைத்துள்ளாள்.

''தண்ணரும் தகர முளரி நெருப்பமைத்து'
இருங்காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்ப ''

என்று நெடுநல் வாடை குறிப்பதை இங்கே கண்ணுரக் காணலாம். எழுந்த வெப்பம் மணப்புகையுடன் பரவுகிறது. அந்தத் ''தடவுத்திரை'' அதை வடிகட்டி வழங்குகிறது. அதோ அந்த ஏவற்பெண் எழுகிருள். ''அவர்கள்'' வந்து ''கூதிர்ப் பள்ளிக் குறுங்கண்ணை அடைத்து''த் தம்மை மறக்கப் போகிருர்கள். நாம் நம் பயணத்தை மறக்காமல் மேலே செல்வோம்.

### இளவேனிற் பள்ளியறை

(நான்காவது நில அடுக்கு)

இந்த இளவேனில் அடுக்கில் ஏறிய உடனே ஓர் உவகைப் பெருக்கு உடலில் ஊர்கிறது. இன்பச் சிலிர்ப்பு எவருக்கும் எழும். இது ஒரு தனியமைப்பான கலைக்கூடம் என்னலாம்.

மேல்தளம் உயரமாக உள்ளது. எங்கும் வெண் சுதைப் பளபளப்பு; வழவழப்பு. சுவரில் பல்வகைப் பூத்தொழில்கள் மின்னுகின்றன.

வீதி உலாக்களையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டு உவக்க வாய்ப்பாகப் பார்வைப் பக்கத்தில் அமைந்த ''நேர்வாய்க் கட்டளைகளாம் சாலேகச் சாளரங்கள். இவை திறந்த பாங்கின.

அதோ நடுவே வட்டமான கட்டில் கிடக்கிறது. போரில் வென்ற நாற்பதாண்டு அகவையடைந்த களிற்றினது தானே விழுந்த வெண்கோட்டைச் செதுக்கி இலைத்தொழில்கொடிவேலை செய்து கால்களாக்கிய கட்டில். சட்டமெல்லாம் வெண்கோடு. அவற்றின் மேலும் புலித்தோல் உறை இணைத்துத் தைக்கப்பட்டுள்ளது. கட்டில் கால்கள் மகளிரது பால்நிறைந்த கொங்கைகள் போன்ற குடங்களையும் அவற்றின் கீழே உள்ளி போன்ற குமிழையும் கொண்டவை. சுற்றிலும் நூலோடு நூலாய்த் தோன்றும் சிறிய முத்துத் தொங்கல்கள் தொங்கி அசைகின்றன. புலித்தோல் கச்சுப் போன்று கால் குடங்களில் தைக்கப்பட்டுள்ளமையால் இதற்கு ''கச்சுக் கட்டில்'' என்றும் பெயர். சிறுபூளை, செம்பஞ்சு, வெண்பஞ்சு, அன்னத் தூவி தனித் தனியே அடைக்கப்பட்ட மெத்தைகள் ஆங்காங்கே உள்ளன. மெல்லிய வெண்மைநிறத் துணி விரிப்பின்மேல் முல்லை இதழ்கள் பக்குவமாகத் தூவப் பட்டுள்ளன. இது ''பூவணைப்பள்ளி'' எனப்படும்.

''யவனர் இயற்றிய வினைமான் பாவை'' விளக்கும் கலைப்பொலிவுடன் கண்களைக் கவர்கிறது.

வடக்குப் புறத்தில் நீராடும் முற்றம். அதில் அருவி போன்று நீர் ஊற்று பனிநீரைச் சிதறுகிறது. அதற்குமுன் நீராடி 32 ஓமாலிகை ஊறி, இள வெயிலில் இளஞ்சூடு ஏறிய மண நீர் பெருந் தடாவில் நிறைந்துள்ளது. பக்கத்தில் அமைந்த புரையில், கதுப்பில் தடவிக்கொள்ளும் தைலக் குப்பி. தேய்த்து நீராட நெல்லி அரைத்த சாந்து. அடுத்துள்ளது ஒப்பனை அறை. நீராடியதும் கூந்தலையும் குஞ்சியையும் உலர்த்த, சந்தன நெருப்பில் அகிற் புகையை ஆவியாய் வெளிவிடும் வெண் கலத் தாழி. கூந்தலுள்ளே விரலாலே நீவிப் பூசிக் கொள்ள வாத்த புனுகு. ஆண்கள் தூவிக் கொள்ளக் கருப்பூரப்பொடி. பல்வகை மணச் சுண்ணங்கள் உள்ளன.

அந்த மூலையில் இமயமலைக் கல் வட்டம் பதிக்கப் பட்டுள்ளது. அது ''வடவர் தந்த வான்கேழ் வட்டம்'' (நெடுநல்வாடை). பக்கத்தில் பொதிய மலைச் சந்தனக் கட்டைகள். இது தென்புல மருங்கினது.



"வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தன மருகும்"
—(சிலப்பதிகாரம்)

பொதியில் சந்தனம் குளுமையின் தாய். அத்துடன் இமயத்துக் கந்தகக் கலப்புடைய கல் தேய்ந்து உடல் நலத்திற்கும், மெருகிற்கும் துணை செய்யப் போலும் இரண்டையும் இணைத்தனர். அன்றி இமயக் கல்லானாலும் பொதியில் சந்தனம் தேய்க்கும் என்பதற்கு அமைத்தனரோ என்னவோ? வன்மையை மென்மையாலும் வெல்லத் தெரிந்தவரன்றோ தமிழர்!

மருகிய சந்தனத்தை ஆடவர் மார்பிற் பூசிக் கொள்வர். பெண்களுக்குரிய தொய்யிற் குழம்புகள், காலில் தீட்டும் செம்பஞ்சுக் குழம்புகள் அமைந்த கிண்ணிகள் (பொன்) உள்ளன. முழு உருவையும் காட்டும் பல்வகைப் பளிங்கு ஆடிகள்



ஆங்காங்கே ஒழுங்காக நேருக்கு நேர் பொருத்தப் பட்டுள்ளன.

இதோ 'ஓவிய உறையிடப்பட்டு செழுங் கோட்டில் மலர் சூடி,' "மைத்தடங்கண் மண மகளிர் கோலம்போல் வனப்பெய்தி"ய சகோட யாழ் படுத்திருக்கிறது. பல இயங்களும் பார்க்கின்றன. தோற் கருவிகள் தூங்குகின்றன.

"தாழிக் குவளை தண்செங் கழுநீர்" பூத்துள்ளன. பக்கத்தே வரிப்பந்தாடும் மேடை; கழங்காடும் தெற்றி உள்ளது.

### முதுவேனிற் பள்ளி

(ஐந்தாவது அடுக்கு)

இங்கே முகப்பு நடுவில் அமைந்த சாளரம் இன்றிக் காற்றுப் போவதற்குத் திறந்த வழியாய் வளைவுகளாய்க் கட்டப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். இது "கால்போகு பெருவழி" எனப்படும். இதனை மணிமேகலை,

"சாளரம் ஒழிந்த கால்போகு பெருவழி"

—என்று குறிக்கின்றது. இவ்வமைப்பு வருங் காற்றினை ஓடவிட்டு வெப்பத்தைக் குறைப்பது போலும். இப்பெருவழியாம் திறந்த கூடத்தில் ஒரு பூவணையை இட்டு மாலைக் காலத்தில் கூடியிருந்து உவப்பர்.

இந்தக் கால்போகு பெருவழியின் இரு பக்கங்களிலும் பெரும் அறைகள் போன்ற கூடங்கள் இரண்டு அமைந்துள்ளன. அவற்றுள் இளவேனிற் பள்ளியைப் போன்ற சாளர அமைப்புகள் உள்ளன. பிற பொருட்களும் அவ்வவ்வாறே உள்ளன. முன் காணப்பட்ட ஆடைகளோடு 'பாம்பு உரித்துப் போட்ட சட்டை போன்று' மெல்லியதாய்ப் பளபளப்பான அறுவை ஆடைகள் உள்ளன. "தென்கடல் முத்தும், தென்மலைச் சாந்தும்" நிறைந்துள்ளன. வடபுறக் கூடத்தில் சந்தனக் குழம்பு நிறைந்த தொட்டி ஒன்று உள்ளது.

"வேனில் வாய்க்கதிர் வெம்பலின் மேனிலைத்
தேனு லாங்குளிர் சந்தனச் சேற்றிடை"க்

குளிப்பது போன்று பூசிக் கொண்டு வெப்பத்தைக் குளுமையாக்கிக் கொள்வர். பலவகை மண மலர்கள் வண்டுகள் சூழ உள்ளன. முல்லை, மல்லிகை மாலைகள் நிறைய உள்ளன. மகர யாழ் உள்ளது. கைவினை வல்ல கம்மியர் செய்த ஆலவட்டம் ("செங்கேழ் வட்டம்"—நெடுநல்வாடை) உறையிடப்பட்டுச் சுவரில் மாட்டப்பட்டுள்ளது. மயிற் பீலியும், மண நார்களும் பின்னப்பட்டுக் கலைத் தொழிலோடு அமைந்த இது பெரிய விசிறியாகும். ஒருவர் நின்று இருவகைகளாலும் பிடித்து வீசவேண்டும்.

இவ்வடுக்கிலும் நிலாமுற்றம் உள்ளதைக் காண்கின்றோம். இஃதும் "நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றம்". இங்கும் இளவேனிற்பள்ளி அமைப்பையே காண்கின்றோம்.

தென்புறக் கூடத்தில் முத்தமை அமளிமேல் "அவர்கள்" இருக்கின்றனர் போலும். ஓசையிடாமல் உயர ஏறுவோம்.

### முன்பனிப் பள்ளி

(ஆறாவது அடுக்கு)

இப்பள்ளி காலதர் முதலிய சாளரங்கள் இன்றிச் சிறு சிறு புழைகளை ஆங்காங்கே கொண்டு விளங்குவது. அவை வெளிப்புறத்தினின்றும்மேல் நோக்கிய துளைகளாய் உள்ளமை பனிவாடை உள்ளே புக இயலாமல் செய்கின்றன. உள்ளே வைரமணிக் கலங்கள் உள்ளன. எளிதிற் கிடைக்காத எலி மயிர்க்கம்பளம் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள கனப்புக் கலத்திலிருந்து வெளிவரும் மனப் புகையால் அக்கம்பளங்கள் சூடு ஊட்டப்பட்டுள்ளன.

"கொங்கு விம்முபூங் கோதை மாதரார்
பங்க யப்பகைப் பருவம் (முன்பனிக் காலம்)
வந்தென
எங்கும் இல்லன எலிமயிர்த் தொழில்
பொங்கு பூம்புகைப் போர்வை மேவினர்"

—என்று சீவக சிந்தாமணி பாடுகிறது. மலர்களும் மாலைகளும் அதிகம் இல்லை. சில மலர்களையே பெய்துகொள்வர்.

புது அமைப்பு ஒன்றைக் காண்கின்றோம். மாடத்தின் கிழக்கில் முன்னே நீட்டிக் கட்டப்பட்ட முற்றம் தெரிகிறது. இது நிலாமுற்றம் அன்று. இளவெயில் முற்றம். விடியலில் பனி பெய்யத் தொடங்கியதும் குளிர் வாடை நடுக்கும். காலையில் ஞாயிறு கதிர்களை விரித்ததும்

''வளமனை மகளிரும் மைந்தரும் விரும்பி
இளநிலா முன்றிலில் இளவெயில் நுகர''
(சிலப்பதிகாரம்)

இந்த முற்றத்தில் அமர்வர்.

### பின்பனிப் பள்ளி

(ஏழாவது அடுக்கு)

பனியைத் தடுக்கும் வகையில் சுவர்ச் சுண்ணங்கள் பூசப்பட்டுள்ளன. குறுங்கண்களையுடைய புழையும் அடைப்பான்களால் அடைக்கப்பட்டுள்ளது.

கலைமிகு கட்டில் சேக்கை மெத்தென்று செவ்வெலிமயிர்க் கம்பளத்தால் போர்த்தப்பட்டுள்ளது. நெய்திரி இரும்பு விளக்கு எரிகிறது. ''அரத்தப் பட்டு உடைகள் ஆடைகள் நிறைந்துள்ளன''

தொண்டியிலிருந்து கலத்தில் வந்த,

'' அகிலுந் துகிலும் ஆரமும் வாசமும் தொகுகர்ப்பூரமும்'' உள்ளன. இப்பொருட்கள் பலவகைகளாக விரியும்: 4 வகை அகில்; 36 வகைத் துகில்; 7 வகை ஆரம்; 15 வகை மணம்; 14 வகைக் கருப்பூரம். இவற்றுள் குளுமையற்ற பொருட்கள் உரிய சிமிழ்களிலும் பேழைகளிலும் உள்ளன. வெண்மை மலர்கள், மாலைகள் இல்லை. தமால மாலை எனப்படும் பச்சிலை மாலைகள் உள்ளன.

மலையடிவாரத்தில் தவழத் தொடங்கிய இக் கட்டுரை மலை முகடு அன்ன மாடத்தில் நிறைவேறுகிறது.

இங்கே ஒன்றைக்குறித்து முடித்தல் பொருந்தும். சிலப்பதிகாரத்தின்பால் நெஞ்சார்ந்த காதல் கொண்டுள்ள நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பூம்புகாரில் ''பூம்புகார்க் கலைக்கூடம்'' ஒன்று உருவாக்கப் பணித்துள்ளார்கள். அதன் கண் காலமெல்லாம் கல்லில் நிலைத்திருக்குமாறு சிலம்புக் காட்சிகள் கற்சிற்பங்களாக அமையச் செய்துவருகிறார்கள். இது ஓரிலக்கியம் கற்சிற்பமாகும் நிலையில் உலக முதல் நிகழ்ச்சியாகும். இப்பூம்புகார்க் கலைக்கூட முகப்பு எழுநிலை மாடமாக அமைவது சாலப் பெருமையாகும். கண்ணகி, கோவலன், மாதவி வாழ்ந்ததும் எழுநிலை மாட மாகையால் சாலப் பொருத்தமும் ஆகும்.


# நெய்வேலியும்...நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரோஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கீழ்த்திசையிலேயே இந்நிலையம்தான் முதலாவது.

**சுட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், டுட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது—தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.



**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலினால், பாலிவாலென்ட் ஃபினல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது.

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி–1**

FDSNLC946TM

# உண்மையின் சந்நிதி



**சோம. மகாதேவன்**

## 2. மலரும் அரும்பும்

சில ஆண்டுகளுக்கு முன்னால் குருபாதத்தின் குடும்பத்தில் தகப்பனுக்கும், மகனுக்கும் இப்படி முகம் நோக்கப்பொறுக்காத பெரும் பிளவு ஏற்படப் போகிறதென்று, யார் சொல்லி இருந்தாலும், அந்த வட்டாரத்தில் ஒருவரும் நம்பி இருக்க மாட்டார்கள்.

புதிய தலைமுறை உருவாகிய போது, எதிர்பார்க்காததெல்லாம் அங்கே நடந்து முடிந்து விட்டது.

பரம்பரையாகவே செல்வத்தில் மிதந்து வரும் குடும்பம். குருபாதத்துக்கு மக்கட் செல்வம் என்பதில் ஆணும் பெண்ணுமாக இருவரேதான். மூத்தவன் முத்துப் பாண்டியன், இளையவள் அரசி.

இளம் பிராயத்திலிருந்தே முத்துப்பாண்டியனது போக்கு, அந்தக் குடும்பத்திலிருந்து மாறுபட்டே வந்தது. சிறு பிராயத்தின்போதே, இந்தக் கிராமத்தில் அவன் நுழையாத இடமே பாக்கி இருக்காது. யார் வீடானாலும் புகுந்து, 'என்ன' 'ஏது' என்று கேட்டுக் கொண்டிருப்பான். எதையும் ஒளித்து மறைத்துப் பேசவே தெரியாது அவனுக்கு. அப்பொழுதே பாலர் சங்கமென்று ஒன்றை ஆரம்பித்தான். வாரம் தவறாமல் அங்கே கூட்டம் நடக்கும். சமுதாய மாறுபாடுகள் குறித்தும் பேச்சு நிலவும். பிள்ளைகளைப் பெற்றவர்கள் வேடிக்கையாகவேதான் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சகல வசதிகளும் இருந்தும், மேலே மேலே படிக்க வேண்டும் என்பதில் நாட்டம் இல்லாமல், 'நாம்' 'நமது' என்று பேசிக் கொண்டிருக்கும் மகனைத் திசை திருப்ப, குருபாதமும் வெகு பாடு பட்டார். மகனை மதுரையிலேயே தங்கிப் படிக்கவும் வைத்தார். அவன் கிராமத்திற்குத் திரும்பி ஓடி வந்து விடாமல் பார்த்துக் கொள்வதற்கென்றே தனியாக ஆளையும் நியமித்திருந்தார். மகன் முன்னால் வந்துவிடுவான். மகனுக்குக் காவல் இருந்தவன் பின்னால் தேடிக்கொண்டு வருவான்.

அப்படித் திரும்பும்போதெல்லாம் வீடு தேடி வருவான் என்பதும் இருக்காது. அவனுக்கென்ன, உயர்வு-தாழ்வு என்பதே இல்லாமல், ஊரெல்லாம் விருந்து நடக்குமே!

கண்டிப்பு மேலும் அதிகரித்த போது, வீட்டிற்கே நினைத்த போது வருவதென்றாயிற்று. குருபாதத்துக்கு மகன் மீது வெறுப்பே வளர்ந்து வந்தது.

இப்படியே வருடங்கள் உருண்டன.

மகனின் போக்கை நினைத்து நினைத்து மகள் அரசியின் மீது உயிரையே வைத்திருந்தார் குருபாதம். அந்த மனக் கலக்கத்தில், பதினாறே வயதான மகள் அரசிக்கு, வீட்டோடு வந்துவிடும் மருமகனாகப் பார்த்து, அவ்வளவு அவசரத்தோடு திருமணத்தை நடத்தி வைக்கவும் முனைந்தார் குருபாதம்.

மாப்பிள்ளை சுந்தரம் அவருக்குத் தங்கை மகன். அங்கேயும் நொடித்துப் போன குடும்பம். சுந்தரம் மன மருமகனாகப் பக்கத்திலே வந்திருக்க, ஓரளவு மன நிறைவு ஏற்படாதா என்ற ஏக்கம்தான் குருபாதத்துக்கு. இந்த முடிவில், முத்துப் பாண்டியனிடம் எதற்காகவும் கலந்துகொள்ளவும் இல்லை.

இருப்பினும், மண விழாவின் போதெல்லாம் பாண்டியனும் கூடவே தான் இருந்தான். தகப்பன் இருக்குமிடத்தில் மகன் இருக்க மாட்டான். மகன் நிற்குமிடத்தில் தகப்பன் இருக்க மாட்டார்.

இன்றைக்கும் அந்தக் கிராமத்தில் நினைத்துப் பார்த்துப் பேசும் அளவுக்கு, அரசி—சுந்தரம் திருமணம் கோலாகலமாகவே நடந்தேறியது.

மணம் முடித்த பத்தாவது நாளே ஜுரம் என்று படுத்தான் சுந்தரம். மதுரையில் புகழ் பெற்ற டாக்டரின் தனிப்பட்ட மருத்துவ மனைக்கே அவனை அழைத்துச் சென்றனர்.

அங்கு, ஏற்கெனவே சுந்தரம் இருதயக் கோளாறினால் பாதிக்கப்பட்டவன் என்பது தெரிய வந்தது.

குடும்பம் மட்டுமல்ல; கிராமமே கலங்கியது.

அதன் பிறகு இரண்டு மாதங்கள் மருத்துவ மனையிலே கழிந்தன. இரவு பகலாகக்

கணவனுக் கருகே கண் விழித்திருந்தாள் அரசி.

என்ன செய்வது? சுந்தரத்தின் உடலைத்தான் ஊருக்குக் கொண்டு வந்தார்கள்.

பதினாறு நிறைவதற்குள்ளாக, அரசி பொட்டிழந்தாள்.

வாழ்வின் இன்பங்களை நுகர அடியெடுத்து வைக்கும் பருவம் எய்துவதற்குள், அடியெடுத்து வைத்துக் கருகிப்போன மலராக நின்றாள்.

குருபாதம் அதிர்ச்சியால் குறுகிப் போனார்.

பெரிய வீடு சோகத்தில் மூழ்கியது.

யாரும், யாருக்கும் ஆறுதல் சொல்ல இயலாமலே நாட்கள் நகர்ந்தன.

வாழ்நாள் முழுவதும் அமங்கலியாகவேதான் நிற்க வேண்டுமா அரசி?

வேறு என்ன செய்வது?

பாரம்பரியமாகக் காத்து வரும் நடைமுறையை மாற்ற முடியுமோ? "அவள் பதினெட்டில் தாலி இழந்தவள்; இன்று வரை கைம்மை காத்து இருக்கவில்லையா? இவள் இல்லையா?" என்று சுட்டிக் காட்டினார்கள்.

எப்படியோ வீட்டிலே இருள் சூழ்ந்து விட்டது. யாரை யார் குறை சொல்லி என்ன செய்ய?

தங்கையின் அவல நிலைக்குப் பிறகு, பாண்டியனும் ஓரளவு வீடு தங்கினான்.

ஓராண்டுக்குப் பிறகு, நிரந்தரமாகிவிட்ட மனக் கலக்கமாவது ஓரளவுக்குக் குறையட்டும் என்பதை நினைத்துப் பெற்றவள் மீனாட்சியம்மாளின் வேண்டுகோளுக்காகப் பாண்டியனுக்குத் திருமணம் முடிக்க, பேச்சு தொடங்கியது.

அன்றைக்கே, தகப்பனும் மகனும் நேரிடையாக மோதிக் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

"தனக்குத் திருமணம் நடப்பதற்கு முன், வாழ்விழந்து நிற்கும் அரசிக்கு மறு மணம் செய்தாக வேண்டும்" என்று ஆரம்பித்தான் பாண்டியன்.

இந்தப் பரம்பரையில் மறு மணம் என்று பேசவே வாய் கூசும். மணவினையின் சின்னங்கள் மறைவதற்குள்ளாக, மகள் பொலிவிழந்துவிட்டதைக் கண்டு பெற்ற மனம் பதைக்கத்தான் செய்தது. ஆயினும், இது வரையிலும் இல்லாத தொன்றை நடத்தி வைக்கவும் குருபாதத்தின் மனம் துணியவில்லை. 'விதியை' நொந்துகொண்டு, "அவள் என்றைக்கும் அரசியாகவே இந்த வீட்டில் இருந்து விட்டுப் போகட்டுமே!" என்ற எல்லைக் கோட்டுக்குள் சுருண்டு விட்டார் அவர்.

பாண்டியனது பேச்சு கொதிப்பையே கொடுத்தது.

தம்பி வேலாயுதமும் இதர உறவினர்களும் கூடினார்கள்.

பாண்டியனும் மனத்தில் இருப்பதைச் சொன்னான். யார் காதிலும் நுழைந்து நெஞ்சைத் தொடவில்லை.

அன்றைக்கே இந்த வீட்டில் நுழையாதே என்று சொல்லித்தான் பாண்டியனை வெளியே அனுப்பி வைத்தார் குருபாதம்.

"நடக்கப் போவதை யாராலும் தடுக்க முடியாது" என்று சொல்லிவிட்டுத்தான் சென்றான் பாண்டியன்.

உடனடியாக அரசியிடமும் கேட்டார்கள்.

"இல்லை" என்றுதான் அப்போது சொன்னாள்.

அரசியின் திருமணம் ஊர்ப் பிரச்சினையாகவே பேசப்பட்டது. ஒரு வாரத்திற்குப் பிறகு, எங்கு என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாதபடி அந்தப் பேச்சு அடங்கிக் கிடந்தது.

ஒரு வெள்ளிக்கிழமையன்று பொழுது விடிந்தது.

அரசியை வீட்டிலே காணவில்லை.

கிராமமே பரபரப்படைந்தது.

அரசி எந்த வழியாக எங்குச் சென்றாள்?

முத்துப் பாண்டியனையும் அவனது தோழர்களில் சிலரையும் காணவில்லை.

என்ன நடக்கப் போகிறதோ என்ற தவிப்பில் கிராமமே மூழ்கி இருந்த போது, அன்று மாலைப் பொழுதிலேயே, பாண்டியனின் உயிர்த் தோழன் லிங்கத்துக்கும் அரசிக்கும், பதிவு முறையில் திருமணம் முடிந்து, கழுத்தில் மாலைகளோடு வந்திறங்கினார்கள்.

யார் என்ன செய்ய முடிந்தது?

பாண்டியன் சிரித்துக் கொண்டே நின்றான்.

லிங்கமும் அந்தக் கிராமத்திலேயே செயலான விவசாயி.

திருச்சியில் 27–2–1972 அன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்று 2–3–1972வரை நடைபெற்ற தென்மண்டல கால் நடைக் கண்காட்சியில், 700 ரூபாய் எனக்குப் பரிசாகக் கிடைத்துள்ளது. நான் முதல் பரிசு பெற்றமைக்காக 200 ரூபாயும், தரம் உயர்த்தப்பட்ட 'முர்ரா' எருமை இனப் பொலி கடாக்களில் சிறந்தவகை அமைந்தமைக்காக 500 ரூபாயும் ஆக 700 ரூபாய் கிடைத்ததை, என்னை வளர்க்கும் என் முதலாளி திரு. டி. எஸ். கலியபெருமாள் பெற்றுக் கொண்டார். இவைகளுக்கான சான்றிதழும், என் முதலாளியிடம் உள்ளது.

நானும் என் முதலாளியும் தஞ்சை மாவட்டத்தில் திருநாகேசுவரம் என்ற ஊரில் வாழ்கிறோம். 'தமிழரசு' இதழில் வெளியிட என் புகைப்படம் வேண்டுமென்று திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் கேட்டார். 'சரி! புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்களேன்' என்று ஒரு 'போஸ்' கொடுத்தேன். அதைத்தான் இங்கே காணுகின்றீர்கள்.

தகப்பனைப் பெற்ற மீனம்மா பாட்டி மட்டுமே இருக்கிறாள். அந்த ஒரு பொழுதுக்குள், கிராமத்தில் நடந்த அத்தனை அமளிக்கும் வாயடைத்துப்போயிருந்த மீனம்மா பாட்டியும், தனது மருமகளை அன்போடு தழுவிக்கொண்டு வரவேற்றாள் என்பது, அங்கு நடக்காத ஒன்று இல்லையா ?

ஊரே அதிர்ந்தது.

சம்பிரதாயத்தைக் கெடுத்த வீடுகளின் மீது கற்கள் விழுந்தன. ‘வெட்டுவோம்—குத்துவோம்’ என்றெல்லாம் முழங்கினர்.

பாண்டியன் அமைதியாகவே நின்றான்.

இத்தனைக் காலமும் கொடி கட்டிப் பறந்த பெருவாழ்வு, எங்கோ பாதாளத்தில் சரிந்து விட்டதாக எண்ணிப் பதைத்தார் குருபாதம். சந்தர்ப்பத்தை அனுசரித்து, வேலாயுதம் தமையனோடு ஒட்டிக் கொண்டு விட்டார்.

இனிமேல் இந்த மகனோடு வேறு என்ன பாக்கி இருக்கிறது?

பாகப் பிரிவினை என்பதும் நடந்தது.

ஒரு நாள், தன் நண்பர்களோடு, பாண்டியனும் இந்தத் திண்ணையிலே வந்து உட்கார்ந்தான்.

அப்போதும் சித்தப்பனே முன்னாலிருந்தார்.

பூர்வீகச் சொத்தென்று நான்கு ஏக்கர்கள் நன்செய்யும், இப்போது பாண்டியன் இருக்கும் வீட்டையும் பிரித்துக் கொடுத்தார்கள். இனி, எந்தச் சொந்த பந்தமும் இல்லை என்பதையும் எழுதி வாங்கிக்கொண்டார்கள்.

பாண்டியன் எதையும் மறுத்துச் சொல்லவில்லை.

சிரித்துக்கொண்டே காட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு எழுந்து வந்தான்.

அன்றிலிருந்தே, குருபாதத்தின் வீட்டில் தம்பி வேலாயுதத்தின் மேற்பார்வையில் காரியங்கள் நடக்கத் தொடங்கின. கனிந்துவரும் நெருப்பை அணையாதபடி, ஊதி விட்டுக் கொண்டே இருந்தார் வேலாயுதம்.

அடுத்த புயலும், ஊராட்சித் தேர்தல் உருவிலே வந்தது.

முன்பெல்லாம் இந்தக் கிராமத்தைப் பொறுத்த வரையில், ஊராட்சித் தேர்தல் என்பது, சந்தடியின்றி நடந்து முடிந்துவிடும். இரண்டு நாட்களுக்கு முன்னதாகப் பெரிய வீட்டுத் திண்ணையிலே, யார் யார் உறுப்பினராகலாம் என்பது குறித்து எடுக்கப்படும் முடிவே இறுதியாகும். இது வரையிலும் போட்டி என்ற பேச்சே இருந்ததில்லை.

இன்றைக்குப் போட்டி வந்தது.

முத்துப்பாண்டியன் நிற்கப் போவதாக ஆரம்பத்தில் கேள்விப்பட்டதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை வேலாயுதம்.

தாய்க் கிராமமாகிய முத்தாலபுரத்துக்கு, வடக்கே மேட்டுப் பகுதியில் 6 உட்கடைக் கிராமங்கள் உண்டு. உள்ளூரில் நான்கு உறுப்பினர்கள்; வெளிக் கிராமங்களில் 9 உறுப்பினர்கள்.

போட்டி வலுவடைந்தது.

ஆங்காங்கே இளவட்டங்கள் ஒன்று சேர்ந்தார்கள். உட்கடை கிராமங்களில் பாண்டியனுக்கு ஆதரவு திரண்டது. நடப்பதையும், நடைபெற வேண்டியதையும் பாண்டியன் எடுத்துச்சொல்லும்போது, அதில் கவர்ச்சியும் கருத்தாழமும் இருந்தன. கூட்டம் சேர்ந்தது.

வேலாயுதம் தமையனின் பக்க பலத்தோடு முனைந்து நின்றார்.

போட்டி புகைந்தது. பற்றியும் எரிந்தது.

கிராமமே இரு கூறாகியது.

யார் எதிர்பார்த்தார்கள்? இறுதியில் பாண்டியனே வெற்றி வாகை சூடினான்.

அதன் பிறகு வேலாயுதத்துக்கு நிம்மதியான கண்ணுறக்கமே இல்லையென்று சொல்லலாம். அண்ணன் மகளுக்கு மறுமணம் நடந்துவிட்ட நிகழ்ச்சி கூட அவருக்குப் பெருத்த அதிர்ச்சியைக் கொடுத்துவிட வில்லை. ஆனால், தலை தூக்க முடியாதவாறு ஏற்பட்டுவிட்ட இறக்கம், இனி என்றைக்கு நிறைவு பெறப் போகிறது ?

இனியும் சிறுவனென்று நினைத்து, இந்த மகனை எதிலும் மீற விடலாமா ?

வேலாயுதம், குருபாதத்தின் பக்கத்திலேயே இருந்தார்.

இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள் அமைதியாக இருக்க வேண்டுமாமே !

அடுத்து என்னென்ன நடக்க இருக்கின்றனவோ ?

(வளரும்)



# வெண்பாப் போட்டி-36

'வாழ்க' எனத் தொடங்கி
'வளர்ந்து' என முடியும் வெண்பா

முடிவு நாள் : 15—6—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை-2.

குறிப்பு :—
அஞ்சல் அட்டையிலேயே எழுதி
அனுப்புதல் வேண்டும்.



## தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்



Dr S. K.

கலந்து சாப்பிடுங்கள். அதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கைப்பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்திப் புதிய சக்தி புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லா வெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே ! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்—விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி பி.பி.யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.S., A.M.I.H.

பழனி சித்தர் வைத்தியசாலை (REGD.) பழனி, S.I.

போன் : 16 தந்தி : சித்தர்

சென்னை கிளை ஆபீஸ் :

41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1

போன் : 21448



Your deposits with

**THE TAMIL NADU STATE CO-OPERATIVE BANK LTD., MADRAS**

Assist the bank to finance agriculture and agro-industries which form the backbone of the Nation's economy

*Schedule of Rates.*

| | *Per cent per annum* |
|---|---|
| Current Account | 0·50 |
| Savings Bank account (on monthly minimum balances) | 4·00 |
| **SEASON DEPOSITS**—Rs. 1,000 and over | |
| 15 days | 2·00 |
| 46 days | [illegible] 00 |
| **FIXED DEPOSITS**—Rs. 100 and over | |
| 91 days | 4·75 |
| 6 months | 5·25 |
| 12 months | 6·25 |
| 24 ,, | 6 75 |
| 36 ,, | 7 25 |
| 60 months and over | 7 50 |

*Additional*—1/2 per cent per annum for deposits of *Charitable, Religious, and Educational Institutions*
*Interest Paid Monthly* on Rs. 1,000 and over and for periods of one year and over

**RECURRING DEPOSITS**—

Rs. 5 per month in

| Months | | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Yields | Rs | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

*Local Branches*—Mylapore, Egmore, Triplicane, T. Nagar, Gandhinagar, Shenoynagar, Greenways Road, Kellys. Santhome, Mylapore Tank, Shastrinagar, Anna Salai (Kamadhenu), Ashok Nagar Anna Nagar, Anna Salai (Anna Silai)

Opening shortly: Nungambakkam and Jawaharnagar

R. KANAKASABAI,
*Chairman.*

P. N. T. CHARY,
*Secretary.*



# புத்தொளி தருவோம்

தமிழக முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் தமது பிறந்த நாள் விழாவைக் கடந்த ஆண்டு கொண்டாட முனைந்தோர்க்கெல்லாம், அரியதொரு சமுதாய நல்வாழ்வுத் திட்டத்தை வகுத்து, அதனை நிறைவேற்ற உதவுமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே, "பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி" துவக்கப்பட்டது. மக்களின் பேராதரவுடன் நிதியும் நிறைந்தது. சமுதாயத்தினால் அருவெறுப்புடன் நோக்கப்பட்டு, நொந்து போன உள்ளத்துடன் துயரத்தில் மூழ்கியவராய்ப் பிச்சை ஏற்று அலையும் தொழு நோயாளர்கள் பலரையும், அவர்கட்கென அமைக்கப்பட்டுள்ள நிலையங்களில் சேர்த்து மறுவாழ்வு அளிக்கும் திட்டம் செயல்படத் துவங்கி விட்டது.

இந்த ஆண்டு ஜூன் 3—கலைஞரின் பிறந்த நாள்! நாட்டு மக்கள் பேருவகையுடன் கொண்டாட முன்வரும் அந்நாளினை, ஓர் அரிய சமூக நலப்பணிக்கு ஏதுவாக்க வேண்டும் என்று விரும்பிக் கலைஞரிடம் அத்திட்டத்தைத் தெரிவித்தேன். தமது வாழ்நாள் யாவுமே சமுதாய நல்வாழ்வுக்கு என ஒப்படைத்துள்ள கலைஞர்— இதனைப் பேரார்வத்துடன் வரவேற்றுக் "கண் பார்வை இழந்தோர் சிகிச்சை முகாம்" நாடெங்கும் நடைபெறும் திட்டத்திற்கே இந்தப் பிறந்த நாள் பயன்படட்டும் என்றார்.

கண்ணில் பூவிழுதல், திமிரம், பார்வை மங்குதல், அமரம், முதலான பல்வேறு கண் நோய்களால் துன்புற்றுப் பார்வை இழந்துள்ளோர் இம்மாநிலத்தில் ஏறக்குறைய ஆறு இலட்சம் பேர் உள்ளனர். நமது மக்களில் நூற்றுக்கு இரண்டு அல்லது மூன்றுபேர் தமது பார்வையை முழுவதுமோ—பகுதியையோ இழந்துள்ளனர். ஓர் இலட்சம் மக்களுக்கு 2,000 பேர் அளவில் (ஒவ்வொரு மாவட்டத்திலும் 30,000 முதல் 75,000 வரை) கண் பாதிக்கப்பட்டு—வாழ்வினில் 'ஒளி' காணாத நிலையினராகியுள்ளனர். 'தகுந்த காலத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டால்—இவர்களில் பலருக்கு இழந்த பார்வையைத் திரும்பவும் பெறச் செய்ய முடியும்' என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.



நல்வாழ்வுத் துறை அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

கடந்த ஆண்டுகளிலும், குறிப்பாக இந்த ஆண்டிலும், இந்த மாநிலத்தில் உள்ள பொதுநலப் பணியாற்றும் அமைப்பினில் உள்ளோர் பலரது ஆதரவினாலும், நன்கொடையைக் கொண்டும், டாக்டர் வெங்கடசாமி அவர்கள், மற்றும் பல மருத்துவர்களின் ஒத்துழைப்போடு, பல்வேறு இடங்களில் கண் சிகிச்சை முகாம்களைச் சிறப்புடன் நடத்திப் பலநூறு மக்கட்குக் கண் பார்வை அளித்துள்ளார். ஒவ்வொரு கண் சிகிச்சை முகாமிலும் 500 முதல் 800 பேருக்கு அறுவை முதலான சிகிச்சை மூலம் கண்பார்வை அளிக்க முடியும் என்று தெளிவாகியுள்ளது. எனவே, பார்வை மங்கியும், இழந்தும் உள்ள ஓர் இலட்சம் பேருக்கேனும் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் பார்வையளிக்கும் தீவிரத் திட்டத்தை நடத்த வேண்டும் என்று விரும்புகிறோம்.

கடந்த ஆண்டில் (1971–72) அரசின் உதவித் தொகையுடன் நடத்தப்பட்ட கண் சிகிச்சை

முகாம்களில் பத்தாயிரம் பேருக்கு அறுவைச் சிகிச்சை நடத்திக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. வரும் ஆண்டில் (1972—73) இத்தகைய முகாம்களில் ஓர் இலட்சம் பேருக்குக் கண்சிகிச்சை செய்ய வேண்டும் என்பது நமது குறிக்கோளாகும்.

ஒவ்வொரு முகாம் நடத்தவும் குறைந்தது ரூ. 25,000 அளவிற்குச் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சிகிச்சை முகாம்கள் கண் மருத்துவ நிபுணர்களான டாக்டர் வெங்கடசாமி—டாக்டர் ஆப்ரகாம் ஆகியோர் தலைமையின் கீழ் அமையும் குழுவினரால் நடத்தப்படும். மக்களின் நல்வாழ்வுத்துறை இந்த வேலைத் திட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கும். அரசின் மாவட்ட அலுவலர் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

மக்கள் இத் திட்டத்தின் அருமையையும், தனிச்சிறப்பையும் உணர்ந்து பயன் கொள்ளுமாறு செய்ய இந்த முகாம்கள் —'' முதல்வர் கருணாநிதி கண் சிகிச்சை முகாம் '' என்னும் பெயரில் நூறு இடங்களில் நடத்தப்படும்.

இந்த முகாம்களை நடத்துவதற்காக—'' முதல்வர் கருணாநிதி கண் சிகிச்சை முகாம் நிதி '' என்னும் பெயரில் ஒரு நிதி ஏற்படுத்தப்படும். இந்த நிதிக்கான நன்கொடை வசூல் —முதல்வர் கலைஞர் பிறந்த நாளன்று (ஜூன் 3) தொடங்கும். ஆதரவற்ற ஏழை மக்களுக்குக் கண்ணொளி வழங்கும் கருணை மனச் செயலுக்கு— நாட்டு மக்கள் அனைவரும் அன்புக் காணிக்கையாய் நிதி வழங்க வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்.




**உயிரோவியம்!**

வெள்ளிப் பாற்குடத்தின் வாய்போன்ற வட்டநிலா என்று வெண்ணிலவை வருணித்துக் குறளோவியத்தை உயிரோவியமாகத் தீட்டியிருக்கிறார் முதல்வர். படிக்கப் படிக்கச் சுவை கூடுகிறது.

எஸ். சுவாமிநாதன்,
சென்னை-24.

**கவிதையா ? கட்டுரையா?**

நீண்ட காலத்திற்குப் பிறகு, கலைஞரின் கவிதைநடைக் கட்டுரையைப் படிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த அரிய வாய்ப்பினை எங்களுக்கு எப்போதும் கிடைக்கச் செய்வது ' தமிழரசு ' இதழின் கடமை என்பதை நினைவுறுத்த விரும்புகிறோம்.

கே.எம். நாராயணன்,
நெல்லை.

**நாவலரின் குறிப்பு!**

''உடற்பயிற்சியின் மூலம் ஜப்பான் நாட்டு மக்கள் சராசரி உயரத்தை அரை அங்குலம் உயர்த்திக் காட்டியிருக்கிறார்கள்'' என்ற செய்தியைக் கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தமது கட்டுரையில் எடுத்துக் கூறியுள்ளார். நமது தமிழ் நாட்டு மக்களும் உயர்ந்த மனிதர்களாக மாற வேண்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்தியிருக்கும் கல்வியமைச்சருக்கு எங்கள் பாராட்டு!

—சி.வி. மோகனசுந்தரம்,
கோவை-3.

**மதுரைக்கும் தருக!**

மாதவரத்திலுள்ள பால் பண்ணையின் சாதனைகளைச் '' சென்னையில் பால் ஆறு '' என்ற கட்டுரையின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறீர்கள். எங்கள் மதுரையில் உள்ள பால் பண்ணையைப் பற்றியும் எழுதும் படி கேட்டுக் கொள்கிறேன்.

பி. இராமன்,
மதுரை-1.

**செர்ரியின் சிறப்பு**

செர்ரிப் பழத்திற்கு இவ்வளவு சிறப்பா? மேனியை எழிலாக்குவதற்கு இந்தச்சாதாரணச் செர்ரிப் பழத்தினால் முடிகிறது என்பது 20 வருடங்களுக்கு முன்பே தெரிந்திருந்தால், நான் இளமையாக இருந்திருப்பேனே! இனிமேல் என்ன செய்வது? முதுமையை நீக்குவதற்கு ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்களேன் !

ஜானகியம்மாள்,
காரைக்குடி.

**மெய்சிலிர்க்க வைக்கும் கதை**

" உண்மையின் சந்நிதி " என்ற தொடர்கதையின் ஆரம்பமே சுவை கூட்டி நிற்கிறது. முற்போக்குக் கொள்கைகளைத் தன்வசம் கொண்ட பாண்டியன் பொதுநலச் சேவைக்காகத் தனது பந்த பாசத்தையே புறக்கணிப்பது மெய்சிலிர்க்க வைக்கிறது.

என். எஸ். மணியன்,
நடுவலூர்.



# ஒளிபெறுவோம் வா!

தாமரையைப்போல் சிரிக்கின்ற தோழி! ஆளும்
தமிழரசின் புதுமைகளைப் பார்த்திட் டாயா?
'ஏழைகளின் சிரிப்பினில்தான் இறைவன் உள்ளான்'
எனச்சொன்னர் நம்அண்ணு! நிழலாய் நிற்கும்
சோழமண்ணின் கலைஞரின்று செயல்ப டுத்தத்
தொடர்ந்திங்கே என்னென்ன திட்டம் தந்தார்!
வாழை, தினை, நெல்வகைகள் சிரித்த தாலே
'வயற்புரட்சி' கண்டோம்நாம்! பஞ்சம் உண்டா?

குடிசைமக்கள் வாழ்வினிலே ஒளியை ஏற்றக்
கோடிகளில் மாடிகளைக் கட்டு கின்ருேம்;
படிக்கின்ற பிற்பட்டோர், தாழ்த்தப் பட்டோர்
பயனடையப் பலமடங்காய் ஒதுக்கு கின்ருேம்;
நெடும்உழைப்புப் பாட்டாளி உரிமை சொல்ல
நிலப்பட்டா பலலட்சம் அளித்தே உள்ளோம்;
அடிமட்ட ஏழைகளை வாழ வைக்கும்
ஆட்சியைப்போல் வேறெங்கே பார்த்தோம், தோழி?

'இரந்துமிங்கே வாழ்வோரை இருக்க வைத்த
இறையவனே அழிக!' என்ருர் குறளார்! தூய
இரக்கமுள்ள நம்முதல்வர் இரப்போ ருக்கே
இருப்பிடங்கள் அமைப்பதற்கே இரந்து காட்டி
இரக்கின்ற நிலைஇறக்கப் புதுமை செய்தார்!
எவர்தோழி இவர்போலே சிந்தித் தார்கள்?
கருமேகம் திருவிழியைத் திறக்கும் போது
கடலுக்குள் போய்ப்பெய்தால் என்ன நன்மை?

பாரெல்லாம் பார்ப்பதற்குப் பார்வை யற்ருேர்
பலலட்சம் இருக்கின்ருர் என்ற றிந்தே
ஊரெல்லாம் திட்டமுகாம் நூறு கண்டே
ஓர்லட்சம் பேருக்கே ஒளியை ஏற்ற
சீர்மிகுந்த திட்டத்தைப் பிறந்த நாளில்
சிறப்பாக வகுத்துள்ளார் ஆரூர்ச் செம்மல்!
நேரில்லாத் திருப்பணிக்குத் துணையாய் நிற்க
நிதிஅள்ளித் தந்திடுவோம், வா, வா! தோழி!







கவிஞர்—
கா. வேழவேந்தன்
எம். எல். ஏ.

# அஞ்சல் தலைகளில் அன்னைத் தமிழகம்!

### இராமேஸ்வரம் கோயில்

**வா**னுயர் கோபுரங்கள் பல கொண்ட வண்ணத் திருக்கோயில்கள் மலிந்த தமிழகத்தில், தமிழகச் சிற்பக் கலைக்கும், திருக்கோயில் கட்டும் கலைக்கும் எடுத்துக் காட்டாக உள்ள— பழம் புகழ் வாய்ந்த திருக்கோயில்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, இராமநாதபுர மாவட்டத்தின் தென்பகுதியில் இராமேசுவரம் தீவில் நின்றிலங்கும் இராமநாத சுவாமி கோயில்; திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் பாடிப் பரவிய திருத்தலம் இது. இத்திருத்தலத்




தின்பெருமைகளை நிரம்ப வழங்கிய தேசிகர் இயற்றிய 'சேதுப் புராணம்' சிறப்பித்துப் பேசும்.

இராமேசுவரம் கோயில், அனைத்திந்திய யாத்திரைத் திருத்தலமாகப் போற்றப்படுகிறது. வடக்கே கங்கைக் கரையிலுள்ள மாப்புகழ் பெற்ற யாத்திரைத் திருத்தலமான காசியோடு இணைத்துக் 'காசி-இராமேசுவரம்' என்று பக்தர்கள் பாராட்டுவார்கள்.

இந்தியாவில் கிழக்கு, மேற்கு, வடக்கு ஆகிய முப்பகுதியினரும், அயல் நாட்டுக்காரர்களும், இங்கு யாத்திரையாக வந்து போவதால் இதனை ஓர் 'ஒருமைப்பாட்டுத் திருத்தலம்' என்று குறிப்பிடுவதில் எத்தகைய தவறும் இல்லையன்றோ!

இராமேசுவரம் கோயிலில் உள்ள நான்கு பிரகாரங்களில் (சுற்றுப் பாதைகளில்) மூன்று, கரையால் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. மூன்றும் சுற்றுப் பாதையில், இருபுறங்களிலுமுள்ள மேடைகளின்மேல் வரிசையாக நிற்கும் கரையின் அடியிலுள்ள நடைபாதை பேரழகு வாய்ந்தது. இக் கோயிலின் பெரும்பகுதி 15—16-ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்டது. இதற்குத் தேவையான கற்கள் இலங்கைத் தீவிலுள்ள திரிகோணமலை என்னும் இடத்தில் உருவாக்கிச் கொண்டு வரப்பட்டதாகத் சொல்லப்படுகிறது. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் புகழ் சேதுபதி மன்னர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கோயிலில் பலவகையான அழகிய வேலைபாடுகளமைந்த பழங்காலத்து நகைகளை இன்னும் காணலாம். இக் கோயிலுக்குள்ள இன்னொரு சிறப்பு உலகிலேயே மிகவும் நீளமான பிரகாரத்தைக் கொண்டிருப்பது ஆகும்.

முன்னர், இந்தியா விடுதலை பெறும் முன்பு, 6—5—1933-ல் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழாவின் நினைவாக இராமேசுவரம் கோயிலின் உருவம் பொறிக்கப்பட்ட ஓரணா விலையுள்ள அஞ்சல் தலை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

### சென்னை உயர்நீதி மன்றம்

சென்னை உயர் நீதி மன்றம் 1862-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாள் நிறுவப்பட்டது. மாவட்ட நீதி மன்றங்களிலிருந்து வரும் வழக்கு முறையீடுகளைத்துக்கும் இறுதியான தீர்ப்பு வழங்கிடும் மேல் நீதி மன்றம் இதுவே யாகும். 1953-ஆம் ஆண்டில், ஆந்திரம் அன்றையச் சென்னை மாநிலத்திலிருந்து பிரிந்த பின்னரும், மொழிவழி மாநிலச் சீரமைப்பிற்குப் பிறகும் சென்னை உயர்நீதி மன்ற அதிகாரத்திற்குட்பட்டிருந்த மாநிலங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.




இன்று உயர்நீதி மன்றம் இருந்து வரும் கட்டடத்தில் இம் மன்றம் இயங்கச் செயற்படத் தொடங்கிய நாள் 1892-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12 ஆகும்.

அசோகச் சின்னத்தையும், தென்னிந்தியக் கோவில்களில் காணப்படும் கோபுர அமைப்பையும் கொண்டு இந்த நீதி மன்றத்தின் முத்திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. கோபுர வட்டத்தின் கீழ் 'வாய்மையே வெல்லும்' என்னும் பொன்மொழி பொறிக்கப் பெற்றுள்ளது.

1962-ஆம் ஆண்டில் சென்னை, பம்பாய். கல்கத்தா உயர்நீதி மன்றங்களின் நூற்றாண்டு நிறைவேறியது, இந் நூற்றாண்டு நிறைவை நினைவுறுத்தும் வகையில் இந்தியத் தபால்-தந்தித் துறை 1962-ல் 15. காசு விலையுள்ள 25 இலட்சம் சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்டது. இவ்வஞ்சல் தலைகளில் இம்மூன்று உயர்நீதி மன்றக் கட்டடங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. சென்னையில், சென்னை உயர் நீதி மன்றம் பொறிக்கப்பட்ட முதல் அஞ்சல் தலையை ஒரு தலைமை நீதிபதி பெற்றுக் கொண்டார்.

## கணித மேதை இராமானுஜம்

இந்தியக் கணித மேதை இராமானுசன் 1887-ல் ஈரோட்டில் பிறந்தார். 7-ஆம் வகுப்பில் படிக்கும் போதே இவர் கணக்கியலில் பேரார்வம் காட்டினார்; அத்துறையில் வல்லவராக வேண்டுமெனவும் முடிவு செய்தார். பள்ளியில் பயின்ற போதே இவர் கல்லூரி வகுப்புக்குரிய கணிதப் பாடங்களில் தேர்ச்சி பெற்றுப் பிறர் உதவியின்றி ஆயிலரின் தேற்றங்களைத் தாமாகக் கண்டறிந்தார்.

1903-ல் இவர் மெட்ரிகுலேசனில் சிறப்பாகத் தேறி, உபகாரச் சம்பளத்துடன் கல்லூரியில் சேர்ந்தார். எனினும், கணிதத்திலேயே நாட்டம் செலுத்தி, மற்றப் பாடங்களில் ஆர்வம் காட்டாததால் பன்முறை முயன்றும், இவர் பல்கலைக்கழகத்தின் முதலாவது பரிட்சையிலே தேறவில்லை.

1909-ல் இவருக்கு மணமாயிற்று; பெருமுயற்சிக்குப் பின்னர், சென்னைத் துறைமுகக் காரியாலயத்தில் இவருக்கு எழுத்தர் வேலை கிடைத்தது. தொடர்ந்து தம் ஆராய்ச்சிகளைச் செய்து, அவற்றைக் கணிதக் கழகப் பத்திரிகையில் வெளியிட்டார். இவரது மேதைத் திறன் இந்தியாவிலும், இங்கிலாந்திலும் இருந்த பல அறிஞர்களின் கவனத்தை ஈர்த்தது; பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழக உதவியுடன் இவர் தனது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தினார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகக் கணிதப் பேராசிரியரான ஹார்டி, இவருடைய பெருமையை அறிந்து, இவரை இங்கிலாந்துக்கு வரவழைக்க ஏற்பாடு செய்தார். முதலில் அங்குச் செல்ல மறுத்த இராமானுஜர் 1914-ல் இங்கிலாந்து சென்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் இவரது கணித அறிவை வளர்த்து, இவருடைய திறமை முழுப் பொலிவுடன் மலர உதவியது. அங்கே இருந்த போது இவருக்குக் கொடிய நோய் கண்டது. சிறந்த சிகிச்சையளித்தும் நோய் குணமாகவில்லை. நோயினால் மெலிவுற்றும் இவர் தம் ஆராய்ச்சிகளை விடவில்லை. 1918-ல் இங்கிலாந்தில் உள்ள 'ராயல் சொசைட்டி' இவரை ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்துச் சிறப்பித்தது. இப்படி ஒரு பெருமையைப் பெற்ற முதல் இந்தியர் இவரே. 1919-ல் இவர் இந்தியாவுக்குத் திரும்பினார். நோய் குணமாகவில்லை; அவரைக் குணப்படுத்தச் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. 1920-ல் கணித மேதை இராமானுஜர், இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

'என் கொள்கை' என்ற கணிதத் துறையில் இவர் செய்த பணி மிகவும் முக்கியமானது. நீள்வட்டச் சார்புகளையும், தொடரும் சார்புகளையும் இவர் ஆராய்ந்து பல புதிய உண்மைகளைக் கண்டுபிடித்தார். இவருடைய நினைவாற்றல் மற்றவர்களைத் திகைக்க வைத்தது. இயற் கணிதத் துறையில் செய்த புதிய ஆராய்ச்சிகளில் இவர், ஆயிலர், ஜாக்கோபி என்ற மேனாட்டுக் கணித அறிஞர்களோடு ஒப்பிடத்தக்க சிறப்புப் பெற்றிருந்தார்.







இந்தியத் தபால் தந்தி-துறை இவரது 75-வது பிறந்த நாளில் அதாவது 22—12—1962-ல் இவர் நினைவாக 15காசு விலையுள்ள 25 இலட்சம் தபால் தலைகளை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது.

## அறிவியல் மேதை
## சி. வி. இராமன்

'இராமன் விளைவு' என்கிற புதியதோர் உண்மையைக் கண்டுபிடித்து, விஞ்ஞான உலகில் வரலாறு படைத்த அறிவியல் மேதை சி. வி. இராமன். சந்திரசேகர வெங்கடராமன் என்பதன் சுருக்கமே சி. வி. ராமன்.

திரு சி. வி. இராமன், 7—11—1888-ல் திருச்சியில் பிறந்தார். அவர் தன்னுடைய உயர்நிலைப் பள்ளிக் கல்வியை விசாகப்பட்டினத்திலும், பி.ஏ., எம்.ஏ. ஆகிய பட்டப்படிப்புகளைச் சென்னை மாநிலக் கல்லூரியிலும் படித்து முதன்மையாகத் தேறினார். கல்லூரி மாணவப் பருவத்தில் செய்த அவரது ஆராய்ச்சிகள் புதுமையாகவே விளங்கின; அவர்தம் ஆராய்ச்சியின் முடிவுகள் புகழ் பெற்ற பெரும் பத்திரிகைகளில் வெளியாயின.

1907-ல் கல்கத்தாவில் உதவி மாநிலக் கணக்காய்வுத் தலைவராக நியமிக்கப்பட்டார். இங்கு அவர் 10 ஆண்டுகள் பணியாற்றினார். இவ்வாறு பணிபுரிந்த காலத்திலும், அவர்தம் உயிர்மூச்சாக விஞ்ஞான ஆர்வமே மேலோங்கி நின்றது.

1917-ல், அரசாங்க அலுவலினின்றும் விலகி, கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பௌதிகத் துறையின் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். திரு சி. வி. இராமனின் வாழ்க்கையில், 1917 முதல் 1932-ம் ஆண்டு வரையுள்ள காலம் குறிப்பிடத்தக்கதொரு விஞ்ஞானச் சாதனைக் காலம் ஆகும். ஆம்! அதுவே அறிவியல் பொற்காலம்.

1928-ஆம் ஆண்டில் திரு சி.வி. இராமனின் புதிய கண்டுபிடிப்பு 'இராமன் விளைவு' புகழ்பெற்றது. 1930-ஆம் ஆண்டின் பௌதிக இயலுக்கான 'நோபல் பரிசு' அவருக்கு வழங்கப்பட்டது. 1933-ல் பெங்களூரில் இந்திய விஞ்ஞானப் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராக பொறுப்பேற்றார். பின்னர், 1948-லிருந்து தாம் இறக்கும் வரை பெங்களூரில்தான் வாழ்ந்தார், அங்குப் புதிதாக நிறுவப்பட்ட இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராகப் பணி புரிந்தார். தம் செல்வத்தின் பெரும்பகுதியை இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கே செலவிட்டார்.

திரு சி. வி. இராமன் ஒப்பற்ற ஒரு விஞ்ஞானி; உன்னதமான சொற்பொழிவாளர்; மிக எளிய தோற்றத்தினர்; நுண்ணறிவு படைத்தவர்; எவரிடமும் அன்பாகப் பழகும் இனிய பண்பினர்; அவர், உடல்நலம் குன்றி 1970-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 21-ஆம் நாள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

இந்தியத் தபால்-தந்தித்துறை இந்த மாபெரும் விஞ்ஞானியைச் சிறப்பிக்கும் பொருட்டு 21—11—1971-ல் அவரது நினைவு நாளில் 20 காசு விலையுள்ள 30,00,000 அஞ்சல் தலைகளை வெளியிட்டது. சென்னையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில், முதல் அஞ்சல் தலையைப் பெற்றுக் கொண்டவர் தலைமை நீதிபதி திரு. கே. வீராசாமி.

### கவியரசர் கம்பர்

“கல்வி சிறந்த
தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு”

என்று மக்கள் கவி பாரதியால் பாராட்டப் பெற்ற கவியரசர் கம்பருக்குத் தமிழ் இலக்கியத்தில் ஒரு சிறப்பான இடமுண்டு; தென்னக இலக்கிய வானில் அவர் ஒளி மிகுந்த தாரகையாக விளங்குகிறார்.

கம்பரின் வாழ்க்கையைப் பற்றிய கதைகள் கணக்கிலடங்கா. அவற்றை நாம் எப்படி எடுத்துக் கொண்டாலும், அவர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் வற்றா வளஞ்சுரக்கும் பொன்னி பாயும் பூம்புனல் நாடான சோழ நாட்டில் வாழ்ந்தார்—வள்ளல் சடையப்பர் அவரை ஆதரித்து வளர்த்தார்—என்றும் அழியாமல் நின்று விளங்கும் இணையற்ற செந்தமிழ்க் காப்பியமான இராம காதையை அவர் உருவாக்கித் தந்தார் என்னும் பேருண்மைகளை யாரும் மறுப்பதற்கில்லை.

கம்பர் மாயூரம் அருகிலுள்ள தேரழுந்தூரில் பிறந்தார் என்றும், இராமநாதபுர மாவட்டத்திலுள்ள நாட்டரசன் கோட்டையில் அவர் உயிர் துறந்தார் என்றும் சொல்லப்படுகிறது. நாட்டரசன் கோட்டையில், கவியரசர் கம்பருக்குக் கல்லறை உள்ளது. அருகிலுள்ள காரைக்குடியில் அவருக்கு ஆண்டுதோறும் சிறப்பான முறையில் விழா எடுக்கப்படுகின்றது. காரைக்குடியில் தொடங்கும் கம்பன் திருநாளின் இறுதி



நாள் விழா நாட்டரசன்கோட்டையில் நிறைவுறுகிறது.

'கம்பன் என்றோர் மானுடன்' பிறந்து வாழ்ந்ததும் நமது கன்னித் தமிழ்நாட்டிலேயே என்பதிலே எல்லாருக்கும் பெருமைதானே; கன்னித்தமிழ் உள்ள வரை கம்பரின் இராம காதை அவர் புகழ் பாடி நிற்கும்.

கவியரசர் கம்பருக்குச் சிறப்புச் செய்யும் பொருட்டு, இந்தியத் தபால்-தந்தித் துறை 5-4-1966-ல் அவரது விழாவையொட்டி, அவர் உருவம் பொறித்த 15. காசு விலையுள்ள 20,00,000 அஞ்சல் தலைகளை வெளியிட்டது. தமிழ்நாட்டில் நடைபெற்ற கம்பர் நினைவு அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில், முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்சலம், முதல் அஞ்சல் தலையைப் பெற்றுக் கொண்டார்.



## காசநோய் நிவாரண வில்லைகள் விற்பனை

முதற்பரிசு தமிழ் நாட்டுக்கே!

காசநோய்த் தடுப்புப் பிரச்சினையில் தமிழ்நாடு கடந்த 20 ஆண்டுகளில் ஓரளவுக்குப் பல கடமைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வந்திருக்கிறது. இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களிலும், ஆண்டு தோறும் காசநோய் நிவாரண வில்லைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு 1970–71-ல் நடைபெற்ற இந்தக் காசநோய் நிவாரண வில்லைகள் விற்பனையின் மூலமாக ரூ. 4,28,000 தமிழகத்தில் மட்டும் கிடைத்திருக்கிறது. 1970–71-ல் காசநோய் நிவாரண வில்லைகள் விற்பனையில் முதலிடம் பெற்றிருப்பது தமிழ்நாடுதான். இவ்வாறு, பெருந் தொகையை ஈட்டிக் கொடுத்ததற்காகத் தமிழ்நாடு அதற்குரிய முதற் பரிசுக் கோப்பையைப் பெற்றுள்ளது. இரண்டாவது பரிசு, டில்லி மாநில காசநோய் நிவாரணச் சங்கத்திற்குக் கிடைத்துள்ளது. ஆந்திரா, கேரளம், திரிபுரா ஆகியவை பாராட்டுப் பத்திரங்கள் பெற்றுள்ளன.



# சிறு தொழில் வளர 'சிட்கோ'

சிட்கோ! சிட்கோ என்ற பெயரை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். இந்தச் சிட்கோ (Sidco) என்னும் ஐந்து எழுத்துக்குள் அடங்கியிருப்பதென்ன? இது எப்படியெல்லாம் பணியாற்றி வருகிறது? இந்த வினாக்களுக்கெல்லாம் விடை இதோ!

தமிழகத்தில் சிறு தொழில்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதன் மூலம் சிறுதொழில்கள் சிறந்திடவும், வளர்ந்திடவும் மாநில அரசினரால் நிறுவப்பட்டதே 'சிட்கோ' (Sidco) எனப்படும், ''தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்'' ஆகும். சிறு தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களை வழங்குவதிலிருந்து முழு உருப்பெற்ற பொருட்களுக்கு விற்பனை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுப்பதுவரை சிட்கோ சிறந்த பணியாற்றி வருகிறது.

சிட்கோ'வின் பல்வேறு திட்டங்களுள், தவணை முறையில் உள்நாட்டு இயந்திரங்களை வாங்கி வழங்குதலும் ஒன்றாகும். தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள எல்லாவிதமான சிறு தொழில் நிறுவனங்களும் இத்திட்டத்தின் மூலம் உதவி பெறலாம். இயந்திரச் சாதனங்களில் ரூ. 7·5 இலட்சத்திற்கு மேற்படாமல் முதலீடு உள்ளவைகளே ''சிறு தொழில்கள்'' எனப்படும். ஒரு பெருந்தொழில் நிறுவனத்தின் துணைத்தொழில் நிறுவனமாக 'இருந்தால் மேற்சொல்லப்பட்ட முதலீட்டின் எல்லை ரூ. 10 இலட்சமாக உயர்த்தப்படும்.

சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தியாளர்களிடமிருந்தோ அல்லது விற்பனையாளர்களிடமிருந்தோ 'சிட்கோ' நேரடியாக வாங்கி, விண்ணப்பம் செய்கின்றவர்களுக்கு வழங்குகிறது. ரூ. 500-க்குக் குறையாமலும் ரூ. 1 இலட்சத்திற்கு மேற்படாமலும் மதிப்புள்ள உள்நாட்டு இயந்திரங்களை இத்திட்டத்தின் மூலம் பெறலாம்.

கைத்தறி, உலர்ந்த அல்லது ஊற வைத்த மாவு அரைக்கும் இயந்திரங்கள், நெல் அரைக்கும் இயந்திரங்கள், எண்ணெய் பிழியும் இயந்திரங்கள், காப்பிக் கொட்டை அரைக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றிற்குச் 'சிட்கோ' தற்போது உதவி புரிவதில்லை.

விண்ணப்பம் செய்யும் ஒருவருக்கு வழங்கும் அதிகமான உதவித் தொகை ரூ. 3 இலட்சமாகும்.

தவணைமுறைத் திட்டத்தின் கீழ் மனுச் செய்பவர் உதவி கோரும் தொகையின் மதிப்பு ரூ. 25,000-க்கு உட்பட்டு இருந்தால் உதவி வழங்கப்படும் தொகையில் 5 சதவீதத்தையும், உதவி கோரும் தொகையின் மதிப்பு ரூ. 25,000-க்கு மேல் இருந்தால் உதவி வழங்கும் தொகையில் 10 சதவீதத்தையும் தங்கள் பங்குப் பணமாகக் கட்ட வேண்டும். மிகுதிப் பணத்தை 'சிட்கோ' ஏற்றுக் கொள்ளும். இயந்திரங்கள் வந்து சேர்ந்த ஓராண்டிலிருந்து ஒவ்வோர் அரையாண்டிலும் தவணை முறையில் இந்தக் கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். அதிகப்படியாக ஆறு ஆண்டுகளுக்குள் கடன் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தற்போது 'சிட்கோ' இந்தத் தவணை முறைத் தொகைக்கு 8 சதவீதம் வட்டி விதிக்கிறது.

இதன் நோக்கமென்ன?

வாய்ப்பு வளங்களை அறிதல், தொழிற்கூடங்களை அமைத்தல், தொழில்நுட்பங்கள் மற்றும் விற்பனை வாய்ப்புகளைத் தெரிந்து கொள்ள மற்ற நிறுவனங்களோடு உறவு கொள்ளுதல் போன்ற சிறு தொழில்களின் அடிப்படைத் தேவைகளுக்கு உதவுதல் ஆகியவையாகும்.

தொழில்துறை இயக்குநர் அலுவலகம் இதுவரை வழங்கி வந்த பலதரப்பட்ட மூலப் பொருட்களையும், இதர பற்றுக் குறைப் பொருட்களையும் இனிச் சிட்கோ சிறு தொழில்களுக்கு வழங்கும். 'இதற்காகத் தொழில் துறையின் கீழ் இயங்கி வந்த சென்னை, மதுரை, போத்தனூர் மூலப்பொருட் கிடங்குகளை இனி சிட்கோ இயக்கும். மேலும் மாநில வர்த்தக நிறுவனம்'' (State Trading Corporation) ''கனிப்பொருள் உலோகங்கள் வணிக நிறுவனம்'' (Minerals and Metals Trading Corporation) ''தேசியச் சிறுதொழில் நிறுவனம் (National Small Industries Corporation) போன்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு இது சிறந்த தொண்டாற்றும். மூலப் பொருள்களைக் காலதாமதமின்றி வழங்க விநியோகப் பிரிவு ஒழுங்குபடுத்தப்படுகிறது.

இதன் சிறப்புப் பணிகள் இன்னும் உள. அவை தனிப்பட்ட முறையில் பல்வேறு சிறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இறக்குமதி உரிமங்களை ஒன்று திரட்டி, அதன்மூலம் தேவையான பொருட்களை மொத்தமாகவும், குறைந்த விலையிலும் சிட்கோ இறக்குமதி செய்கிறது. சிறு தொழிலதிபர்கள் தாங்கள் விரும்பும் இடத்திலேயே தொழிற்கூடங்கள் நிறுவச் சிட்கோ உதவுகிறது. இதன் மூலம் சிறு தொழிலதிபர்கள் தவணை முறையில் பணம் செலுத்தித் தொழிற்கூடங்களைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். சிறு தொழில்கள் நிலையான முதலீட்டைப் பெறச் சிட்கோ கடனுதவி செய்யும். சிறு தொழில்களின் முதலீட்டில் சிட்கோ பங்குகள் வாங்கவும் வாய்ப்புகள் உண்டு.

சிறு தொழிலதிபர்களுக்குத் தொழில் நுட்பங்களைப் பற்றியும், பொருளாதார வசதிகள் பற்றியும், அறிவுரை வழங்குதல், விலைக்கட்டுப்பாடு, தொழிற்கூட

TAMIL NADU SIDCO

**மலிவான விலையில் மூலப் பொருள் வழங்குதல்**
**எளிய தவணையில் இயந்திரங்கள் தருதல்**
**தொழிற்கூடங்கள் அமைக்க உதவுதல்**
**தொழில் நுட்ப அறிவுரைகள் வழங்குதல்**
**விற்பனை வாய்ப்புகள் அளித்தல்**

அமைப்பு, இயந்திரத் தேவைகள், பிற தொழில் முறைகள் இவை பற்றித் தொழிலதிபர்கள் கலந்து உரையாடல், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும், நிபுணர்களுடனும் கலந்து தொழிலுக்குப் பயன்தரும் கருத்தரங்குகளையும் பயிற்சித் திட்டங்களையும் நடத்துதல் போன்றவை சிட்கோவின் சிறந்த டணிகளாகும். சிறு தொழிலதிபர்கள் தங்கள் பொருட்களைத் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் விற்பனை செய்யத் தேவையான உதவிகளையும் இது ஆர்வமுடன் செய்ய முன் வருகிறது.

அந்நியச் சந்தையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களைப் பற்றி அறிவித்தல், அந்நியச் சந்தையில் விற்பனை செய்யத் தேவையான மற்ற உதவிகளைச் செய்தல், போன்றவைகளைச் சிட்கோவின் ஏற்றுமதிப் பிரிவு செயலாற்றி வருகிறது.

சிறு தொழில்களுக்கு ஏற்படும் ஐயங்களைத் தீர்த்து வைக்கவும் இது பணியாற்றி வருகிறது. சிறு தொழிலதிபர்கள் விரும்பும் பல புள்ளி விவரங்கள், செய்திகளை வழங்கவும், சந்தை நிலவரம் பற்றி அறிவிக்கவும், தயாரிப்புகளின் தேவை முதலானவற்றைத் தெரிவிக்கவும், தகவல் வளர்ச்சிப் பிரிவு செயலாற்றி வருகிறது. அவ்வப்போது இதழ்கள், பத்திரிகைகள் முதலியன வெளியிட்டுச் சிறு தொழிலின் தேவைகளை நிறைவேற்றுவதும் இதன் பணிகளில் ஒன்றாகும்.

சிறு தொழில்கள் தேவைகளை நிறைவேற்றும் சிறந்த நிறுவனமாகத் தமிழகத்தில் முதல் முதல் துவக்கப்பட்ட இது, சிறு தொழில்களைத் துவக்கவும், நடத்தவும் வழிகாட்டுகிறது.

1970-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் 'சிட்கோ' மூலப் பொருட்களைச் சிறு தொழில்களுக்கு வழங்கும் பணியினைத் துவங்கியது.

இதுவரை அது வழங்கியுள்ள மூலப் பொருட்களின் விவரம் :

14—10—1970 முதல் 31—3—1971 முடிய இரும்பு மற்றும் எஃகுப் பொருட்கள் ரூ. 106,58,000. 1—4—1971முதல் 28—2—1972 முடிய இதன் மதிப்பு ரூ. 3,25,11,000.

சிறு தொழில் அதிபர்கள் தாமாகவே தேர்ந்தெடுத்த இயந்திரங்களைச் 'சிட்கோ' வாங்கி அவர்களுக்கு எளிதான தவணை முறையில் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு தொழில் நிறுவனம் ரூபாய் .3 இலட்சம் வரை இயந்திரம் வாங்க இயலும். இத்திட்டம் 1971—ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் துவக்கப்பட்டது. இதுவரை அளிக்கப்பட்ட உதவியின் விவரம்:—31—3—1971 முடிய உதவி பெற்றவர் எண்ணிக்கை 11. 1—4—1971 முதல் 28—2—1972 முடிய உதவி பெற்றவர் எண்ணிக்கை 132. உதவி பெற்ற தொகை முறையே ரூ. 7·62 இலட்சம், ரூ. 61·80 இலட்சம். இத்திட்டத்தின் கீழ் படித்து வேலையற்றோர், சிறப்புச் சலுகைகள் பெற வாய்ப்புகள் இருக்கின்றன.

அம்பத்தூரில் உள்ள தனது நிலத்தில் 'சிட்கோ' சிறு தொழிலதிபர்கள் விருப்பத்திற்கேற்பத் தொழிற்கூடங்களைக் கட்டி எளிய தவணை முறையில் வழங்குகிறது. இதைத் தவிர வேறு இடங்களில் தனது நிலத்தில் தொழிற்கூடங்கள் அமைக்கவும் இது கடனுதவி அளிக்கிறது.

இத்திட்டம் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் துவக்கப்பட்டது. இதுவரை வழங்கியுள்ள உதவி விவரம்: உதவிபெற்றோர் எண்ணிக்கை அம்பத்தூர் 16. மற்ற இடங்கள் 14. உதவித்தொகை முறையே ரூ. 6·77 இலட்சம் ரூ. 11·41 இலட்சம்.

தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் பதிவு பெறாத சிறு தொழில்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும் பணியினை அரசு சிட்கோவிடம் ஒப்படைத்துள்ளது. 1—7—1971 அன்று இப்பணி துவங்கப்பட்டது. இதுவரை 16,948 தொழிற்கூடங்களைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இப்புள்ளி விவரங்கள் எதிர்காலத்தில் சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு அரசினர் பற்பல திட்டங்கள் வகுக்க உதவும்.

சிட்கோவின் எதிர்காலத் திட்டங்கள் என்னென்ன?

1. சிறுதொழில்களுக்கு மாவட்டக்குழுக்கள் மூலம் விரைவாகக் கடனுதவி கிடைக்க வழிவகுத்தல்; 2. தட்டுப்பாடுள்ள மூலப் பொருட்களை அதிக அளவில் வழங்குதல், இரசாயனப் பொருட்கள், தீப்பெட்டிக் காகிதம், மெழுகு, உலோகப் பொருட்கள் முதலியன; 3. நூற்பாலைகளின் இயந்திர உறுப்புகள், பிளாஸ்டிக் பொருட்கள்; மோட்டார், உறுப்புகள் முதலியன தயாரிக்கும் சிறப்புத் தொழிற்பேட்டைகளை அமைத்தல்; 4. டீசல் இன்ஜின்கள், மோட்டார்கள், பம்புகள் மற்றும் பல சிறு தொழில்கள் உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பு அளித்தல்; 5. மின் அணுத்துறையிலும், இரசாயனத் துறையிலும் தொழிலியல் வகைகளை ஆராய்ந்து திட்டங்கள் வகுத்தல். 6. அரசினருக்கு வேண்டிய பொருட்களைச் சிறு தொழிலகங்களிலிருந்து வாங்க உதவுதல்.

'சிட்கோ' 14–10–1970 முதல் செயல்படத் துவங்கியது 31–3–1971 முடிய 5 மாதங்களில் 'சிட்கோ' ஈட்டியுள்ள இலாபம் ரூ. 2·55 இலட்சம் ஆகும். இதில் வருமான வரியாக ரூ. 1·40 இலட்சம் கொடுத்தது போக ரூ. 1 இலட்சம் அரசினருக்கு முதலீட்டு வருமானமாக அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இதன் இலாபம் இன்னும் அதிகரித்திருக்கிறது.

# உருளைக் கிழங்கு பிறந்தது எங்கே?

சுவையான உணவு வகைகளில் இதுவும் ஒன்று. இதன் பிறப்பிடம் எங்கே? இப்போது இதன் இருப்பிடங்கள் எங்கெங்கே?

அமெரிக்காவிலுள்ள சிலி, பெரு, மெக்சிகோ, நாடுகளின் மேட்டு இடங்களே உருளைக்கிழங்கின் பிறப்பிடமாகும். ஸ்பானியர் அமெரிக்காவைக் கண்டு பிடிப்பதற்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அந்த இடங்களில் உருளைக் கிழங்கு பயிரிடப்பட்டு வந்தது. அப்போது அங்கே வாழ்ந்த ஆதிக்குடிகளுக்கு இது உணவாக மட்டுமல்ல, மதச் சடங்குகளுக்கும் பயன்பட்டு வந்தது.

முதன் முதலில் ஸ்பானியர் இதனை கி.பி. 1570ல் தம் நாட்டுக்குக் கொண்டுவந்து பயிரிட்டனர். அங்கிருந்து இது மற்ற ஐரோப்பிய நாடுகளுக்குப் பரவிற்று. பிறகு இங்கிலாந்துக்குப் பரவிய உருளைக் கிழங்கை, பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதியில் போர்ச்சுகீசியர் இந்தியாவுக்குக் கொண்டு வந்தனர்.

ஐரோப்பாவில் இது பரவிய போது எவரும் இதற்கு முக்கியத்துவம் தரவில்லை. தோட்டத்தில் ஒரு மூலையில் இதை ஒதுக்கினர். இது ஒரு சிறந்த உணவுப் பொருள் என்று உணர்ந்தவர்கள் அயர்லாந்து மக்களே யாவர். அவர்களே இதனை முதன் முதல் மிகுதியாகப் பயிரிட்டனர். அவர்கள் செடிகளின் விதைகளிலிருந்து பல வகைகளை உண்டாக்கினர். முள் ரோசா, டேபர் என்ற இரு வகைகளில் ஒவ்வொன்றிலிருந்தும் 300 வகைகள் உண்டாக்கப்பட்டன. கார்னெட் சிலி என்பது ஓர் இனம். இதிலிருந்து அமெரிக்காவில் 171 வகைகளை உண்டாக்கியிருக்கிறுர்கள்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் 1843-47-ம் ஆண்டுகளில் பின் அழுகல் (Late Blight) என்ற கொடிய நோய் பரவி உருளைக் கிழங்குகளை உருத் தெரியாமல் ஆக்கிவிட்டது. இதனுல் அயர்லாந்தில் பெருத்த பஞ்சம் ஏற்பட்டது. இச் சம்பவத்திற்குப் பிறகு, நோய்களை எதிர்க்கும் வலிமை மிக்க செடிகளை விதைகளின் மூலம் பயிர் செய்யும் ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

உருளைக் கிழங்கு இந்தியாவுக்கு வந்தபின் வேளாண் துறையினரும், ஐரோப்பியரும் இதனை ஆராய்வதில் கவனம் செலுத்தினுர்கள். பால், புஷ்கரநாத் என்பவர்கள் இந்தியாவில் விளையும் எல்லா இனங்களையும் ஆராய்ந்து 38 வகைகள் ஐரோப்பிய இனத்தவை என்றும், 16 வகைகள் உள்நாட்டு இனத்தவை என்றும் வகைப்படுத்தி யிருக்கிறுர்கள்.

உருளைக் கிழங்கு உணவுக்கு மட்டுமா பயன்படுகிறது? சில ஐரோப்பிய நாடுகளில் இது கால்நடைகளுக்கு நல்ல தீனியாகப் பயன்படுகிறது. சில நாடுகள் இதிலிருந்து ஆல்கஹால், மாப்பொருள்களைத் தயாரிக்கின்றன. காகிதங்களுக்கும், துணிகளுக்கும் கஞ்சி போட இதிலிருந்து கிடைக்கும் மாப்பொருள் மிகவும் பயன்படுகிறது. செயற்கை ரப்பர், பிளாஸ்டிக், ஒட்டுப்பசை, ஒரு வகைப் பால் பொருள் முதலானவைகளுக்கு உருளைக் கிழங்கு உதவுகிறது.



உலகத்தில் விளையும் உணவுப் பொருள்களில், உருளைக் கிழங்கு முதலிடம் பெறுகிறது. 1942–44ஆம் ஆண்டில் 12 ஆயிரம் டன் உருளைக்கிழங்கு வற்றல் இராணுவத்துக்கு அனுப்பப்பட்டது. வைட்டமின் சத்துக்கள் மிகுந்த உருளைக்கிழங்கின் மலர்கள் வெள்ளை, ஊதா நிறமுள்ளவை. பழம், பச்சைத் திராட்சை அளவில் இருக்கும். ஊதா அல்லது மஞ்சள் நிறமுள்ள பழத்தில் 200, 300 விதைகள் காணப்படும். ஓர் இராத்தல் வேக வைத்த கிழங்கில் உள்ள சி-வைட்டமின் ஒருவனுக்கு ஒரு நாளைக்குப் போதுமானது.



" தாயைப்போல பிள்ளை "
" நூலைப்போல சேலை "
என்பதுபோல் தரமான தாய் மரங்களிலிருந்து எடுத்த தென்னை நெற்றுக்களிலிருந்து முளைக்கும் தென்னங் கன்றுகளே விரைந்தும் நிறைந்தும் காய்த்து வெகுவாகப் பலனளிக்கும் என்பதை வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் இருக்கும் இவ்வரிய தென்னை மரம் நன்கு புலப்படுத்துகிறது.




தமிழ் நாட்டின் தென்னை ஆராய்ச்சி நிலையம், தஞ்சை மாவட்டத்தில், பட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள வேப்பங்குளம் என்ற ஊரில், 33·18 ஹெக்டேர் பரப்பில் (81.98 ஏக்கர்) இயங்கி வருகிறது. தமிழ் நாட்டின் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள பெருவாரியான தென்னந் தோப்புகளை முன்னேற்றுவிப்பதற்கான சிறந்த வழி முறைகளை ஆராய்ச்சி மூலம் கண்டு பிடிப்பதும், தென்னைச் சாகுபடியில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதும் இவ்வாராய்ச்சி நிலையத்தின் முக்கிய நோக்கங்களாகும். இவ்வாராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டு—14 ஆண்டுக் காலமே ஆகியிருப்பினும், இதனால் தென்னைச் சாகுபடி செய்பவர்களுக்குப் பெரும் பயன்கள் ஏற்பட்டுள்ளன. இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து பின்கண்ட முடிவுகள் தெரிந்துள்ளன.

1. தென்னங் கன்றுகளை 60 சென்டி மீட்டர் (2 அடி) ஆழத்தில் நட வேண்டும். அவ்வாறு நடப்படும் தென்னங் கன்றுகளே, பூமியின் மேற்பரப்பில் குறுகிய ஆழத்தில் நடப்படும் கன்றுகளை விட, நன்கு வளர்ந்து, 10 மாதம் முன்கூட்டியே பாளைவிட்டு, அதிகத் தேங்காய்கள் கொடுக்கின்றன.

2. தென்னை மரங்களுக்குத் தகுந்த இடைவெளி கொடுக்க வேண்டும். மிகவும் நெருக்கமாக உள்ள மரங்களை அகற்றுவதன் மூலமாக ஹெக்டேருக்கு ரூபாய் 800 அதிக இலாபம் கிடைக்கும். எனவே, தென்னங் கன்றுகளை நடும் பொழுது 7.5×7.5 மீட்டர் (25 அடி× 25 அடி) இடைவெளி விடுவது இன்றியமையாததாகும்.

3. தென்னை மரங்கள் அதிக அளவில் காய்க்க ஒவ்வொரு பெரிய மரத்திற்கும் ஆண்டு தோறும் 3 கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர்பாஸ்பேட், 1 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்களையோ அல்லது 5 கிலோ 14-ஆம் எண் தரப்படுத்தப்பட்ட கலவை உரத்தையோ இட வேண்டும். மரத்திலிருந்து 1.2 மீட்டர் சுற்றளவில், 30 சென்டி மீட்டர் ஆழமும், 30 செ. மீட்டர் அகலமும் உள்ள பள்ளம் வெட்டி அதில் இரசாயன உரங்களையும், 20 கிலோ தழை அல்லது தொழு உரத்தையும் இட்டு மண்ணால் மூடவேண்டும். மழைக் காலத்தில், சிறப்பாக ஐப்பசி-கார்த்திகையில் உரமிடுதல் சிறந்தது. கோடைக் காலத்தில் நீர் பாய்ச்சினால், உரமிட்டதன் பலன் அதிகமாகும்.

4. உலகெங்கிலுமுள்ள 28 தென்னை வகைகளும், 3 வீரிய ஒட்டு வகைகளும் சேகரிக்கப்பட்டு இவ்வாராய்ச்சி நிலையத்தில் பயிரிடப்பட்டுள்ளன. இந் நிலையத்தில் உள்ள 28 வகைத் தென்னைகளிலும், 3 வீரிய ஒட்டு வகைகளிலும், நீளம் × குட்டை வீரிய ஒட்டு ( Tall×Dwart Hylaid ) வகையே மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். இவ் வீரிய வகை சராசரியாக மரத்திற்கு 152 தேங்காய்கள் கொடுத்துள்ளன. ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட நீண்ட தென்னை மரங்கள் ஒவ்வொன்றும் சராசரியாக 100 தேங்காய்களே கொடுக்கின்றன. வீரிய ஒட்டுத் தென்னை வகை அதிக மகசூல் அளிப்பதுடன், அதன் தேங்காய்கள் நல்ல பருமனுடனும், அடர்த்தியான கொப்பரையுடனும் இருக்கின்றன.

5. நீண்ட ரகத்தையும், குள்ள ரகத்தையும் கரு இணைப்புச் செய்து உருவாக்கியதே வீரிய வகைத் தென்னையாகும். இவ்வாராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ள வீரிய வகைத் தென்னங் கன்றுகள், ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ், தென்னைச் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

6. ஏராளமான புதிய கலப்பினத் தென்னை ரகங்கள் உருவாக்கப்பட்டு, பரிசோதனையாகப் பயிரிட்டுப் பார்க்கப்படுகின்றன.

7. வளர்ச்சி ஊக்கியைத் (Hormone) தெளிப்பதன் மூலம், தென்னையில் குரும்பை கொட்டுதல் ( Button Shedding ) நின்றுவிடும். '2-4 டி' என்ற வளர்ச்சி ஊக்கி மருந்தை, குரும்பைகள் மகரந்தச் சேர்க்கை அடைந்தது முதல், வாரம் ஒரு முறை வீதம் நான்கு வாரங்களுக்குப் பாளையில் தெளித்துப் பார்த்ததில், அதிக எண்ணிக்கையில் தேங்காய்கள் உருவாகின்றன என்பது புலனாகியுள்ளது.

8. பிப்ரவரி முதல் ஜூலை மாதம் வரை தென்னைக்கு நீர் பாய்ச்சினால், கோடைக்காலங்களிலும் தேங்காய்க் காய்ப்பை உயர்த்துவதுடன், வடகிழக்குப் பருவ காலத்தில் தேங்காய்களின் உற்பத்தியையும் பெருக்குவதன் மூலம் தென்னை மகசூலைக் கணிசமான அளவில் அதிகப்படுத்த வாய்ப்பு இருக்கின்றதென்பது இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளிலிருந்து தெரிய வருகிறது.

9. பருவத்தின் செல்வாக்கு, ஊடு சாகுபடி, கலப்புச் சாகுபடி ஆகியவை தென்னையின் மகசூல் அளிக்கும் தன்மையை அதிகப் படுத்துகின்றன. அவை பற்றிய பரிசோதனைகள், முன்னேற்ற நிலையில் உள்ளன.

விரைவில் இவ்வாராய்ச்சி நிலையம், பெருமைக்குரிய முடிவை வெளியிடும். அதன் பயனைத் தமிழகத்தில் தேங்காய் உற்பத்தி பெருக வழி பிறக்கும்!

வி.ஐ.பி. என்றால் ஆங்கிலத்தில் (Very Important Person) என்று சொல்லுவார்கள். அதாவது மிகவும் முக்கியம் வாய்ந்தவர் என்று அதற்குப் பொருள். அது போலத் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் துறை, தனது தயாரிப்புகளில் ஒன்றான காலணிகளுக்கு வி. ஐ. பி. (V.I.P.) என்று பெயர் சூட்டியிருக்கிறது. Villiage Industries product என்பது அதன் பொருள். என்றாலும் (Very Important Person) என்று சொல்லப்படும் பொருளையும் இதற்கு இணைத்துச் சொல்லலாம் என்றே தோன்றுகிறது. ஏனென்றால் இந்த வெய்யிற் காலத்தில் ஒவ்வொருவருக்கும் தேவைப்படுவது காலணிகள் அல்லவா? கையில் குடை இல்லாவிட்டாலும் பரவாயில்லை-காலுக்குச் செருப்பில்லாமல் இந்தப் பருவத்தில் யாராவது வெளியில் சென்று வர முடிகிறதா? அவ்வளவு அவசியமாக விளங்கும் காலணிகளின் விலை அதிகமாக இருந்து விட்டால் என்ன செய்வது? அது வெய்யிற் கொடுமையை விட அதிகக் கொடுமை உள்ளதல்லவா? அதனால்தான் கதர் கிராமத் தொழில் துறை, குறைந்த விலையில் காலணிகளை உருவாக்கித் தருகிறது.




வெளிச் சந்தையை விட 4 அல்லது 5 ரூபாய் குறைவான விலையில் தருகிறது; தரமாகவும் தருகிறது; புதுப் புது வகைகளில்—கண்ணைக் கவரும் பான்மையில் தயாரித்துக் கொடுக்கிறது. இந்தக் காலணிகளைப் பார்க்கும் போது நமக்கு ஒரு வகை வருத்தமே ஏற்படுகிறது. அழகழகான பளிங்கு போல் காட்சிதரும் வழவழப்பான காலணிகளைக் கால்களில் அணிந்து வீணாக்க வேண்டியிருக்கிறதே என்ற கவலை ஏற்படுகிறது. என்றாலும் காலணிகள், கால்களுக்காக உருவானவைதான் என்பதை உணர்ந்து ஒருவாறு கால்களில் அணிந்து கொள்ள நமது உள்ளம் ஒப்புக் கொள்கிறது. இவற்றிற்குச் சூட்டப்பட்டுள்ள பெயர்களும் கவர்ச்சியாக அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

மணிபல்லவம், செண்பகம், முத்துச் செல்வம் இப்படிச் சில தமிழ்ப் பெயர்கள் கொண்ட காலணிகள் .. ... .. ... .. ..

எக்ஸ்போ, சோலாப்பூர் அப்பலோ, ஜூபிலி, ஈஸிவாக், இப்படி வணிகச் சந்தைக்கு ஏற்ற திருநாமங்கள் கொண்ட காலணிகள் .. ..

இவ்வாறு, தரமான, விலை மலிவான, அழகான காலணிகளைத் தயாரித்துத் தனது பதினைந்து விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வரும் இந்தத் தயாரிப்பு நிறுவனம், சென்னையில் பெரியமேட் பகுதியில் கற்பூர முதலி தெருவில் இருக்கிறது. இருக்கும் இடம் தெரியாதபடி, சிறிய கட்டடத்தில் இருக்கும் இந்த நிறுவனம்தான் புகழ்பெற்ற காலணிகளை உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது.

தியாகராயநகர், புரசைவாக்கம், மயிலாப்பூர், அண்ணாசாலை, திருவல்லிக்கேணி, வாலாசா

சாலை, அடையாறு, வண்ணரப் பேட்டை, சட்டமன்ற உறுப்பினர் விடுதி ஆகிய இடங்களில் உள்ள கதர் விற்பனை நிலையங்களிலும் சென்னைக்கு வெளியே பூந்தமல்லி, தாம்பரம் முதலிய பகுதிகளில் உள்ள விற்பனை நிலையங்களிலும் இந்தத் தரமான காலணிகளை நாம் பெறலாம்.

தினமும் 25 இணைகள் (ஜோடிகள்) சாதாரணமாகத் தயாரிக்கப்படுகின்றன. வெய்யிற் காலத்தில் இவற்றிற்கு அதிக வரவேற்பிருப்பதால், அந்தச் சமயங்களில், தினசரித் தயாரிப்புச் சுமார் 40 இணைகளாக உயர்கின்றது. 16 விற்பனை நிலையத்திலும் சேர்ந்து நாளொன்றுக்கு 50 இணைகள் விற்பனை ஆகின்றன. வெய்யிற் காலத்தில் 75-லிருந்து 80 இணைகள் வரை விற்பனையாகின்றன.



அட்டைப் பெட்டிகளில் காலணிகள் தயாராக உள்ளன.

வி.ஐ.பி. காலணிகள், கதர் கிராமத் தொழில் துறையின் விற்பனை நிலையங்களில் மட்டுமல்ல, வெளியாரின் காலணிக் கடைகளிலும் கிடைக்கின்றன. அங்கெல்லாம் பொது மக்களால் மிகவும் வரவேற்கப்படுகின்றன. அதன் விளைவாக நாள்தோறும் இந்த நிறுவனத்துக்கு ஆணைகள் ( Order ) வந்து குவிகின்றன. தற்போது இங்கு அலுவல் பார்க்கும் ஊழியர்களால், வளர்ந்து வரும் தேவைகளை உடனடியாக நிறைவேற்றி வைப்பது சற்றுக் கடினமாக இருப்பதால், கதர் கிராமத் துறையின் வெளியூர்த் தயாரிப்பு நிலையத்திலிருந்தும் ஊழியர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். அவர்களின் உதவியினாலும் இங்குள்ளவர்களின் உதவியினாலும் காலணிகள் விரைவாகத் தயாரிக்கப்பட்டுக் கடைக்காரர்களுக்கு அனுப்பப்படுகின்றன.

தனிப்பட்ட கடைக்காரர்கள் ரூ. 250க்கு மேல் விற்பனை செய்தால் அவர்களுக்கு 10 சதவீதக் கழிவு கொடுக்கப்படுகிறது. துறையைச் சேர்ந்த விற்பனை நிலையங்களாக இருந்தால், அந்தக் கழிவுத் தொகை அவற்றிற்குக் கொடுக்கப்பட்டபோதிலும் துறையைச் சேர்ந்துவிடுகிறது.

சில நண்பர்கள் பத்து இருபது பேராகச் சேர்ந்து, தங்களுக்குத் தேவையான காலணிகளுக்கு ஆணை கொடுத்தால், அவர்களுக்கும் 10 சதவிதம் கழிவு கிடைக்கிறது.

அரசுத் துறையில் ஓர் அதிசய நிகழ்ச்சி இங்கே நடைபெறுகிறது. பொதுவாக அரசுத் துறைகளுக்குத் தேவையான பொருள்களை வாங்க வேண்டுமென்றால் பொது ஒப்பந்தப் புள்ளிகள் மூலமாகத் (Tenders) தான் வாங்க வேண்டும். ஆனால், இந்தக் காலணிகளைப் பொறுத்த வரையில், கச்சாப் பொருள்கள் வாங்குவதற்கு ஒப்பந்தப் புள்ளி முறை கையாளப்படுவதில்லை. ஏனென்றால் காலணிகள் செய்வதற்குரிய அடிப்படையான கச்சாப் பொருள்களில் ஒன்றான தோல், அன்றாடம் ஒவ்வொரு விலையில் வணிகச் சந்தையில் விற்கப்படுகிறது. எனவே, ஒரு திங்களுக்கு முன்பே ஒப்பந்தப் புள்ளியை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் அனுப்பி, விற்பனை செய்வதற்காக எந்த ஒப்பந்ததாரரும் முன்வருவதில்லை. இதன் காரணமாகக் கொள்முதல் செய்யும் குழு ( Purchasing Committee ) ஒன்று இருக்கிறது. சம்பந்தப்பட்ட காலணி அலகின் மேலாளர், மத்திய தோல் விற்பனை நிலைய உதவி மேலாளர், தோல் வளர்ச்சி அலுவலர் ஆகிய மூவர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள். அவ்வப் பொழுது வணிகச் சந்தைக்குச் சென்று வாணியம்பாடி, கல்கத்தா, முதலிய நகரங்களிலிருந்து வரும் தோல்களைப் பார்வையிட்டு விலைக்கு வாங்குகிறார்கள்.

இந்தத் தயாரிப்பு நிலையம் பார்வையான இடத்தில் இல்லை என்றாலும் இங்கே தயாரிக்கப்

### தமிழகத்தில் தயாராகும் மின் தட்டெழுத்துப் பொறி

தொலையச்சுக் கருவிகளைத் தயாரிக்கும், தொலைத் தொடர்பு சாதன நிறுவனம் மின் தட்டெழுத்து இயந்திரங்களைத் தமிழகத்தில் உற்பத்தி செய்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளது. வெளிநாடுகளின் கூட்டுறவு எதுவுமின்றி இது தயாரிக்கப்படும். இத்திட்டத்திற்கான அதிக மூலதனம் ரூ. 4·77 இலட்சம் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

படும் காலணிகள் இந்த இடத்திற்குச் சரியான விளம்பரத்தைத் தேடித் தருகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. சென்ற திங்களில் மட்டும், பெரியமேட்டில் உள்ள தயாரிப்பு நிலையத்தைத் தேடி 60 பேர்கள் வந்து தங்களுக்குத் தேவையான காலணிகளுக்கு ஆணை கொடுத்து, வாங்கிச் சென்றிருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? இந்தத் தயாரிப்பு நிலையம் பொது மக்களின் கருத்தில் இடம் பெற்று விட்டது என்பதுதானே!

அதிலும், குறிப்பாகப் பெண்டிர் இந்த நிலையத்தைத் தேடி ஆவலுடன் வருகிறார்கள். ஏனென்றால் பெண்களுக்குரிய காலணிகள் — 5 ரூபாய்க்கும் குறைவான விலையுள்ள 'காலணிகள் இங்கே ஏராளம், ஏராளம்! அதுமட்டுமல்ல, அவை உறுதியாகவும், தரமாகவும் உள்ளன. வெளிச் சந்தைகளில் தோலுக்குப் பதிலாகச் சாதாரண விலையுள்ள ரெக்சின் என்ற பொருளை வைத்தும் செய்து தந்துவிடுவார்கள். ஆனால், இந்த நிலையம், முழுக்க முழுக்கத் தோலைக் கொண்டுதான் காலணிகளைச் செய்கிறது. அதனால்தான் ''இருக்கும் இடம் தேடி'' மக்கள் வருகிறார்கள்.

பொதுவாகத் தேடிவரும் மக்களின் விருப்பத்திற்கேற்றபடி காலணிகள் தயாரிப்பதில் ஒரு சில தொல்லைகள் இருக்கின்றன. சாதாரணமாக, ஒரு குறிப்பிட்ட அளவில் 6, 7, 8 என்று சொல்லப்படும் அளவுகளில், நாள் ஒன்றுக்கு 6 அல்லது 7 இணைகளைத் தயாரிக்கும் ஓர் ஊழியர் ஆணை தரும் ஒருவரின் கால்களின் அளவுக்கு ஏற்றவாறு தயாரிக்கத் தொடங்கினால், தயாரிப்பின் விரைவு குறைந்து விடுகிறது. இரண்டு அல்லது மூன்று இணைகளுக்கு மேல் தயாரிக்க அவரால் முடிவதில்லை. ஏனென்றால், நிலையத்தைத் தேடி வரும் மக்களின் நெஞ்சங்களைக் குளிர வைக்க வேண்டும் என்ற கொள்கையையுடைய இந்த நிறுவனம் இணைக்கேற்றபடி தயாரித்துத் தருவதை ஓர் இலட்சியமாகக் கருதி வருகிறது. எத்தகைய ஆணையாக இருந்தாலும் ஏழு நாட்களுக்குள் சம்பந்தப்பட்டவருக்குத் தயாரித்துக் கொடுத்து விடுகிறது.

## ஊராட்சியின் கதை

இன்று 'ஊராட்சி ஒன்றியம்' என்று அழைக்கப்படுவது, ஆரம்ப காலத்தில் எப்படியெல்லாம் அழைக்கப்பட்டு வந்ததென்று தெரியுமா?

தமிழ் நாட்டில் 1946-ல் 'பிர்க்கா அபிவிருத்தித் திட்டம்' தொடங்கப்பட்டது. பிறகு 'கிராம நலத் திட்டம்' என்ற பெயரில் மாற்றியமைக்கப்பட்டுத் துணைத் தாசில்தார் மேற்பார்வையில் இயங்கி வந்தது. அதன் பிறகு 'தேசிய வளர்ச்சித் திட்டம்' என்று இந்தியா முழுதுக்கும் விரிவாக்கப்பட்டது.

1952-ல் அனைத்து இந்தியாவிற்கும் சமுதாய நலத்திட்டம் ஆரம்பமாயிற்று. 1953-ல் பிர்க்காக்கள் இரண்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு, திருவள்ளூர், கடம்பத்தூரில் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளை இதன் முதலாக நியமித்தனர். இந்தச் சமுதாய நலத்திட்டம் மாவட்ட ஆட்சியாளரின் மேற்பார்வையில் இயங்கி வந்தது.

இத்திட்டச் சாதனைகளை விளக்குவதற்காகக் 'கிராம நலம்' என்ற பத்திரிகை 1955-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

1961-ல் பஞ்சாயத்து யூனியன் என்று மாறி, படிப்படியாக 'ஊராட்சி ஒன்றியம்' என்று இந் தமிழில் அழைக்கப்பட்டு வருகிறது. 1955-ல் 'நேரு பரிசுத் திட்டம்' என்ற பெயரில் தமிழ்நாட்டில் சிறந்த கிராமங்களுக்கான பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் அறுபது கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றியம் தோன்றிச் சுமார் 25 ஆண்டுகளாகின்றன.

''புகழுக்குரிய இந்த நிறுவனம் பொது மக்கள் அனைவரின் பார்வையிலும் படாமல் எங்கேயோ இருக்கிறதே! அனைவரின் கண்களிலும் படுமாறு செய்தால் என்ன?''—என்ற ஏக்கம் நமது உள்ளத்தில் எழுகிறது. உடனே நிலையத்தின் பொறுப்பாளரான, சென்னை மாவட்டக் கதர்கிராமத்தொழில் அலுவலர் அவர்களிடம் இது பற்றி வினவுகிறோம். அவர் பதில் தருகிறார்.

''தற்போது கதர் கிராமத்துறையைச் சேர்ந்த மத்திய தோல் கிடங்கு இருக்கும் இடத்திலேயே இந்தத் தயாரிப்பு நிலையத்தை வைத்துள்ளோம். இது கிடங்குக்காக ஏற்பாடு செய்த இடம். அதனால்தான் பார்வையாகத் தெரியவில்லை. ஓரளவு வளர்ச்சியுற்றதும் பெரும் மாறுதல்கள் செய்வதற்கு முடிவு செய்திருக்கிறோம். கிண்டியிலுள்ள தொழிற் பேட்டைக்குச் சென்று மிகவும் விரிவான முறையில் உருவாக்கலாம் என்ற திட்டமிருக்கிறது.''

''காலணிகள் தவிர வேறு புதிய பொருள்கள் ஏதாவது தயாரிப்பதற்குத் திட்டம் உள்ளதா? ... ... ... ... ... ... ...'' என்று வினவும் போது,

''ஆமாம்! ஆமாம்!'' என்று மகிழ்ச்சியுடன் தொடங்கி, ''சூட்கேஸ், ஷூ, பணம் வைத்துக் கொள்ளும் பை, பெண்கள் பயன் படுத்தும் அலங்காரப்பை (Fancy Bag) ஆகியவை செய்யும் திட்டமும் உள்ளது'' என்று கூறுகிறார்.

''உங்கள் நிறுவனத்தின் குறிக்கோள் என்ன?''— நமது கேள்வி.

''எத்தகைய தோல் பொருளானாலும் சரி, தரம், விலை மலிவு, வனப்பு இவற்றுடன் தருவதே எங்கள் குறிக்கோள்''— அவரது உறுதியான பதில்.

எதிர்காலத்தில் இந்த நிலையம் மாபெரும் நிறுவனமாக மாறப் போவது உறுதி என்பதற்கு ஊழியர்களின் தொண்டும், அவர்கள் கொண்டுள்ள தூய குறிக்கோள்களும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

# ஒன்றுக்கு மேல் வேண்டாம்!



"குடும்பக் கட்டுப்பாடு மனித இனத்திற்கு மட்டுமல்ல, வாழைக்கும் கூடத் தேவைப்படுகிறது. வாழையினம் வளங்கொழிக்க வேண்டுமானால், அதனுடைய வளர்ச்சிப் பருவத்தில் ஒன்றுக்கு மேல் கீழ்க்கன்று விடக்கூடாது'' என்று ஆடுதுறையில் உள்ள வாழை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது. இது போன்ற பலவகை பயனுள்ள ஆராய்ச்சி முடிவுகளை ஆடுதுறை வாழை ஆராய்ச்சி நிலையம் வழங்கியுள்ளது.

முக்கனிகளில் ஒன்றான வாழை, தஞ்சை மாவட்டத்தின் படுகை நிலங்களில் சுமார் **5,460** ஹெக்டேர் பரப்பில் பரம்பரை பரம்பரையாகப் பயிரிடப்பட்டு வருகிறது.

வாழையடி வாழையாகத் தஞ்சை மாவட்டத்தின் படுகை நிலங்களிலே பல்லாண்டுகளாகப் பயிரிடப்பட்டு வந்த வாழைகளின் வளம் கொடுக்கும் தன்மையை மேம்படுத்துவதற்காக, **1949**-ஆம் ஆண்டிலே ஆடுதுறையிலே துவக்கப்பட்ட மைய வாழை ஆராய்ச்சி நிலையம் ( **Central Banana Research Station, Aduthurai)** பல்வேறு சோதனைகளை நடத்திப் பல சாதனைகளை உருவாக்கி, வாழைச் சாகுபடியாளர்களின் வருவாயைப் பெருக்க வழிகாட்டி வருகிறது.

இவ்வாராய்ச்சி நிலையம், இந்தியாவிலுள்ள வாழை ஆராய்ச்சி நிலையங்களுள் முக்கியமானதாகவும், முன்னோடும் நிலையமாகவும் விளங்குகிறது. இந்த நிலையத்தில், முறையான ஆராய்ச்சிகளும், இனப்பிரிவு அடிப்படையான ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றன.

நம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இந் நானிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் **228** வகை வாழை கொண்டுவரப்பட்டு, பயிரிட்டு ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகள் அனைத்திற்கும் உருவ இயல், பயன் நல்கும் பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் முழுமையான விவரக் குறிப்புகள் எழுதப்பட்டுள்ளன. அவ்வகைகளை **80** வகைகளாகக் குறைத்து, **8** தொகுதியில் அடக்கியுள்ளனர்.

சாகுபடியில் இருக்கும் வாழைகளுக்கும், காட்டு ரக (Wild) ஆண் வாழைகளுக்கும் பெருமளவில் கரு இணைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலமாகக் கிடைத்த தோட்டி, ராஜா வாழை, பேய் குன்னன், கோவாக்கர், நெய்வண்ணன் ஆகியவைகள் கருவுறக் கூடிய பெண் பாகங்கள் அதிகம் நிறைந்ததாகவும், பூவன், ரஸ்தாளி, பச்சைநாடன், செவ் வாழை, ஆகியவை கருவுறும் பெண் பாகம் குறைந்ததாகவும் உள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கரு இணைப்புச் செய்ததனால் கிடைத்த வீரிய ஒட்டுகளில் (Hybrids) தென் மாவட்டங்களில் வணிகப் பயிராகப் பயிரிடப்படும் நெய்வண்ணன் என்ற வகையும், 'மூசா பல்பிசியானா' (Musa balbisiana) என்ற காட்டு வகை வாழையையும் கரு இணைப்புச் செய்ததனால் கிடைத்த 'சவாய்' (Sawai) என்ற வீரிய ஒட்டு வகை வாழை பெரும் பயன் அளிக்கக் கூடியதாகவும் 'ஜமெய்க்கா' தீவிலிருந்து கொண்டு வந்து புகுத்தப்பட்டுள்ள, 'க்ளு டெபராட்' (Klue Teparod) என்ற வகையை விடத் தரத்தில் உயர்ந்ததாகவும்காணப்படுகிறது.

உருவ மாற்றத்தினால் ஏற்பட்ட வகைகளிலிருந்தும் (Mutants), நற்பயன் அளித்து வரும் தேர்ந்த வகைகளிலிருந்தும் (Promising Selection) தனிப்படுத்திச் சோதனை செய்யப் பட்டதில், 'ரொபாஸ்டா'(Robusta) எனப்படும் குள்ள வாழையின் (Dwarf Cavendish) நடுத்தர உயர, உரு மாறிய, வகை வாழையே (Semi-tall Mutant) வணிக முறையில் பயிரிடுவதற்குச் சிறந்ததாகும்.

வாழைக்குத் தேவையான இரசாயன உரத்தின் அளவையும், சாகுபடி முறைகளையும் கண்டு பிடிப்பதற்காகப் பல்வேறு உழவியல் பரிசோதனைகள் நடத்தப்பெற்றன. பழம் உற்பத்தியாதல், வேர் மற்றும் வாழைக் கன்று உற்பத்தியாதல் போன்ற வாழை பற்றிய அடிப்படை ஆராய்ச்சிகளும் அங்கு மேற்கொள்ளப்பட்டன.

ஆடுதுறையிலுள்ள வாழை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளின் மூலம் பின் கண்ட முக்கிய முடிவுகள் கிடைத்துள்ளன.

### நடுதற்கேற்ற நல்ல முறைகள்

1. வாழையைப் பயிரிடுவதற்கு அகன்ற இலைகளை உடைய கன்றுகளை நடுவதை விடக் குறுகலானதும், கத்தி போன்றதுமான இலைகளையுடைய மூன்று மாதக் கன்றுகளை (Sword suckers) நடுவதே சிறந்தது. அம்மாதிரிக் கன்றுகளே விரைந்து வளர்ந்து வெகு விரைவில் நிறைந்து காய்க்கின்றன.

2. வாழை மரத்தின் அடியில் உள்ள கிழங்கைத் துண்டுகளாக்கி (ஒவ்வொரு துண்டுடனும் ஒரு வளரும் முளை இருக்க வேண்டும்) நடுவது, முழுக் கன்றை நடுவது போலவே பயனுள்ளதாக அமைந்துள்ளது. இம்முறையினால் வாழைக் கன்று வாங்கும் செலவில் சிக்கனப்படுத்த முடிகிறது.

3. குறிப்பிட்ட பக்கத்தில் வாழையைக் குலைதள்ள வைக்க முடியுமா, முடியாதா என்பதை அறிவதற்காக, வாழைக்கன்றுகளைத் தாய் வாழை மரங்களிலிருந்து பிரித்து எடுக்க எப்பக்கத்தில் வெட்ட வேண்டும், எப்பக்கத்தில் வெட்டுப்பட்ட பாகத்தை வைத்து நடவேண்டும் என்றெல்லாம் சோதனை நடத்தப் பட்டதில், குறிப்பிட்ட பக்கத்தில் குலை தள்ள வைப்பதென்பது முடியாததெனத் தெளிவாகியுள்ளது.

4. வாழைக் கன்றுகளைத் தாய் மரங்களிலிருந்து பிரித்த 15 நாட்கள் வரை நடாமல் காய விட்டுவிட்டுப் பின்பு நட்டாலும், அதனால் வளர்ச்சியோ அல்லது மகசூலோ பாதிக்கப் படாது என்பது புலனாகியுள்ளது. இதன் மூலம் வாழைக் கன்றுகளை நெடுந் தொலைவிலுள்ள இடங்களுக்குக் கொண்டு செல்ல முடியும் என்பதும், கூலியாள் பிரச்சினைகள், பருவ மாற்றங்கள் போன்ற காரணங்களினால் நடுவதில் தாமதம் ஏற்பட்டாலும், வாழைக் கன்றுகள் பாதிக்கப்படாது என்பதும் தெளிவாகியுள்ளது.



5. வாழைக் கன்றை அடிக்கிழங்கிலிருந்து 6 அங்குல உயரம் விட்டு விட்டு, வெட்டி நட லாம். இவ்வாறு வாழைக் கன்றுகளைக் குட்டை யாக வெட்டுவதால் ஓரி டத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு எளிதாகக் கொண்டுசெல்லமுடியும். இதனால் குறிப்பிட்ட பரப்பில் அதிகக் கன்று களை ஏற்றிச் செல்ல இயலுகிறது.




### பருவம்

தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்களில் வாழைக் கன்று நடு வதற்கு ஆகஸ்டு முதல் டிசம்பர் வரையுள்ள பருவமே மிகவும் சிறந்ததாகும். திருச்சி மாவட்ட நன்செய் நிலங்களில் வாழைக் கன்று நடுவதற்கு மார்ச்சு—ஏப்ரல் மாதங்களே ஏற்றதாகும்.

### இடைவெளி

நன்செய் நிலங்களில் வாழைக் கன்று நடுவதற்குக் கன்றுக்குக் கன்று 7 முதல் 8 அடி இடைவெளியும், நிரந்தரமாகத் தொடர்ந்து வாழை பயிரிடப் படும் தோட்டங்களில் கன்றுக்குக் கன்று 9 முதல் 10 அடி இடை வெளியும் விடுவதே சிறந்தது. தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்களில் பூவன் வாழைக் கன்றுகளை ஆகஸ்டு மாதத்தில் 8 அடி இடைவெளியில் நடுவதால் காற்றினால் வாழை மரம் சாய்ந்து விடுவதைத் தடுக்க முடிவதுடன், அடுத்த ஆண்டு நவம்பர் மாத முடிவிற்குள் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு அதிக மகசூல் பெறவும் இயலு கிறது. பொதுவாக நவம்பர் மாத முடிவில் புயல் வீசுவதால், இம்முறை பெரும்பயன் அளிப் பதாக உள்ளது.

### ஒன்றுக்கு மேல் வேண்டாம்

தாய் வாழை மரத்தின் வளர்ச்சிப் பருவத்தில் ஒரே ஒரு பக்கக் கன்றினை மட்டும் விட்டுவிட்டுப் பின் மற்றவைகளை அகற்றி விடுவதால் தாய் மரத் தின் குலை தள்ளும் தன்மையும், காய்கள் நன்கு முதிர்ச்சியடையும் தன்மையும் துரிதமடைகிறது.

### கொத்தி விடுதல்

தொடர்ந்து பல ஆண்டு களுக்குப் பயிரிடப்படும் வாழைத் தோட்டங்களில் 2 மாதங்களுக்கு ஒரு முறை வீதம் மண்ணைக் கொத்தி விடுவதால் மண் கெட்டியாகி விடுவதைத் தடுக் கவும், மண்ணில் ஈரத்தைப் பாதுகாத்து வைக்கவும் இயலு கிறது. நன்செய் நிலங்களில் பூவன் வாழைக்கு ஆண்டு தோறும் 4 முறையும், மொந்தன் வாழைக்கு 6 முறையும் கொத்தி விடுதல் போதுமானது.

### உரமும் உற்பத்தியும்

தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்களில் ஒவ்வொரு வாழைக் கும் 114 கிராம் தழைச் சத்து கொடுக்கக் கூடிய தொழுஎரு வையும், 114 கிராம்தழைச்சத்துக் கொடுக்கக் கூடிய அமோனியம் சல்பேட்டையும் நடவு செய்த மூன்றாவது மாதத்திலும், ஐந்தா வது மாதத்திலும் இடுவதால் வாழையின் மகசூல் அதிமாகிறது. வாழைச் சாகுபடியாளர்களின் வசதிக்கேற்ப, வாழைக் கன்றைச் சுற்றிலும் கிடங்கு வெட்டியோ அல்லது வட்டமாகக் குழி தோண்டியோ இரசாயன உர மிடலாம்.

### நீர்ப்பாசனம்

தஞ்சை மாவட்டப் படுகை நிலங்களில் பயிரிடப்படும் பூவன், மொந்தன் ஆகிய வாழைகளுக்குக் கோடைக் காலத்தில் (வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்படும் பொழுது) பாசனம் செய்வது பய னுள்ளதாக அமைய வில்லை.

### உரப்பயிரே ஊடுபயிர்

பொதுவாக வாழைத் தோட்டங்களிலும், குறிப்பாகப் பல்லாண் டுகளுக்குத் தொடர்ந்து பயிரிடப்படும் வாழைத் தோட்டங்களிலும், வாழை மரங்களின் வரிசைகளுக்கு இடையி லுள்ள பகுதியில் சணப்பு, பில்லிப் பசரா போன்ற தழை உரப் பயிர்களை வளர்த்து, அவைகளை வெட்டிப் போட்டு மண்ணுடன் கலக்கச் செய்தால், தார் உற்பத்தி விரைவில் நிகழ உதவு கிறது.

### பக்கக்கன்று பயனளிக்க..

தார் வெட்டிய பிறகு வாழை மரத்தின் நடுவில் வெட்டி விடுதல் அல்லது முழுமையாக வெட்டா மல் நிலையாகவே விட்டுவிடுதல் பக்கக் கன்றுகளின் நல்வாழ் விற்கு வழி வகுப்பதுடன், அவை பெரும் மகசூல் அளிக்கவும் துணை செய்கிறது.

### மறுதாம்புப் பயிர்

வாழையின் முதற் பயிர் அறு வடைக்குப் பிறகு இரு முறை மறுதாம்புப் பயிர் (கட்டைப் பயிர்) விடுவதே பயனுள்ள முறையாகும்.

### உயர் விளைச்சல் தரும் வாழைகள்

ரொபாஸ்டா : ஆடுதுறை வாழை ஆராய்ச்சி நிலையத்தில் தனிப்படுத்திச் சோதனை நடத்தி யதனல் கிடைத்த ''ரொபாஸ் டா'' வாழை உயர் விளைச்சல் தரவல்லது. இது ஏற்றுமதிக்கு ஏற்றதாகவும், அந்நியச் செலா வணியை அள்ளித் தருவதாக வும் விளங்குகிறது.

காஞ்ச் கேலா : மேற்கு வங்கத் திலிருந்து கொண்டு வந்து, தமிழ் நாட்டில் அறிமுகப்படுத் தப்பட்ட, சமையலுக்கு ஏற்ற வாழையான ''காஞ்ச் கேலா'' என்ற வாழைரகம் பெரும் மக சூல் தருவதாக உள்ளது. இந்த ரகத்தின் ஒரு தார் எடை 31



காஞ்ச் கேலா

கிலோ வரை உள்ளது. ஆனால், வழக்கமாகப் பயிரிடப்பட்டுவரும் மொந்தன் ரகத்தின் ஒரு தார் எடை 16.5 கிலோவே உள்ளது. மொந்தன் வாழையை விடக் ''காஞ்ச் கேலா'' வாழை சிறந்தது என்பதைப் பின் கண்ட அட்டவணை விளக்குகிறது.

அட்டவணை

| விவரம். | மொந்தன். | காஞ்ச் கேலா. |
|---|---|---|
| ஒரு தாரின் எடை (கிலோ) | 16·5 | 31·0 |
| ஒரு தாரில் உள்ள சீப்புகள் | 6 | 9 |
| ஒரு தாரில் உள்ள காய்கள் | 67 | 110 |
| ஒரு காயின் நீளம் (செ.மீ.) | 19·9 | 25 |
| ஒரு காயின் சுற்றளவு(செ.மீ.) | 18·0 | 19·5 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து' காஞ்ச் கேலா'' என்ற வாழை ரகம், சாதாரண மொந்தன்ரகத்தைப் போல் 2 மடங்கு மகசூல் அளிக்கிறது என்பது தெளிவாகின்றது.

மொந்தன் காயைச் சமைத்தால் நார்ப்பொருள்கலந்த காய்கறி போல் இருக்கும். ''காஞ்ச் கேலா'' காயைச் சமைத்தால் உருளைக்கிழங்குபோன்ற கிழங்கு வகைகளைப் போல் இருக்கும். இதற்குக் காரணம்காஞ்ச்கேலா காயின் மாவுப் பொருள் மென்மையாக இருப்பதே யாகும். எனவே, ''காஞ்ச் கேலா'' தரத்திலும் உயர்ந்துகாணப்படுகிறது. ஆகவே, சமையலுக்கு ஏற்ற வகையாகக் '' காஞ்ச் கேலா' என்றவாழைரகத்தை விரைவில் உழவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தகைய பயனுள்ள முடிவுகளைத் தெரிவித்துள்ளஆடுதுறை ஆராய்ச்சி நிலையம், இதுவரை பூவன், மொந்தன் போன்ற வணிக ரகங்களைப் படுகை நிலத்தில் மானாவாரியாகப் பயிரிடுவது பற்றிய ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்தது. தற்பொழுது பல உழவர்கள் குழாய்க் கிணறு அமைத்து, தீவிர வாழைச் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாகத் தஞ்சை மாவட்டம் செம்பொன்னார் கோயிற் பகுதிகளில் இறைவையாகக் குள்ள வாழைச் (Cavendish) சாகுபடி பரவி வருகிறது. எனவே, இவ்வாராய்ச்சி நிலையத்தில் தோட்டக்கால் நிலத்தில்வாழைச் சாகுபடி செய்வதில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காகவும், சிறப்பாகக் குள்ள வாழை, பூவன் வாழை போன்ற ரகங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இவ்வாராய்ச்சி நிலையத்தால், வாழைச் சாகுபடியாளர்களுக்குப் பெரும் பயன் விளையும் என்பது திண்ணம்.



மொந்தன்

# வெண்பாப் போட்டி

## 33. பாலே வளர்வார் பலர்

குப்பை எருவால் கொழுத்து மரம்வளரும்;
வெப்பந் தருந்தியால் வெண்சங்கு— தப்பாமல்
பாலேபோல் தோன்றும் பகைவரினும்நேர்மையின்
பாலே வளர்வார் பலர். [தெம்

—காஞ்சனதேவி, வியாசர்பாடி.

கையின் திறத்தால் கவின்சேர் நெசவாளர்
நெய்வ தணிந்தன்னர் நெஞ்சொளிரச்—செய்வோ மேல்
நூலே பிழைப்பென்னும் நோக்குடனே கைத்தறிநூற்
பாலே வளர்வார் பலர்.

—பி. செள. கருப்பன், மண்டலப் பொறியியல்கல்லூரி.

சிக்கனமாய் வாழ்ந்திடுவார் சீர்பலவும் பெற்றிடுவார்
எக்குறையும் இன்றியிவண் இன்புறுவார்—மிக்கவளத்
தாலே நலம்பெறவே செய்யும் சிறுசேமிப்
பாலே வளர்வார் பலர்.

—எஸ். சுந்தரம், வெண்பா ஊர்.

வெஞ்சிறையிற் போட்டாலென் வெங்கொடுமை செய்தாலென்
நெஞ்சுரமோ டத்தனையும் நேர்கண்டே—அஞ்சுகமே!
காலம் வருங்காலும் காத்திருந்தே தன்பொறுப்
பாலே வளர்வார் பலர்.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்ஸி., அலங்கானூர்.

பார்வை பனிநிலவு; பாகுமொழி பேசுதமிழ்!
கூர்மை மிகுநாசி! கோவையிதழ்—கார்கூந்தல்
ஏலே! பருகழகை! ஏந்திழையின் புன்னகைப்
பாலே வளர்வார் பலர்.

திரு சிவ. இருட்டிணன்; அக்கிரகாரம்.

பச்சைக் குழந்தை பசியறிந்து பால்கொடுப்பாள்
மெச்ச வளர்த்திடுவாள் மேதினியில்-இச்சையுடன்
தாலேலோ என்றினிய தாலாட்டுந் தாயினணைப்
பாலே வளர்வார் பலர்.

—ச. கருணாநிதி, அருப்புக்கோட்டை.

ஒன்றன்பால் வாழ்வில் உயர்வேது? சேர்ந்திருபால்
நின்றன்பால் அன்றோ நிலையின்பம்;—என்றன்பால்
நூலே பயின்று நுகர்வதற்கு முத்தமிழ்ப்பண்
பாலே வளர்வார் பலர்.

—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

மாற்றார்கள் எல்லாம் மகிழ இனியசெயல்
ஆற்றுஞ் சிறப்பில் அமைதிமிகப்—போற்றும்செங்
கோலேபோல் ஞாலம் குடிகள் வணங்குசிறப்
பாலே வளர்வார் பலர்.

—புலவர் சி. துரைசாமி, சி.ஐ.டி. நகர்.

### பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :

காஞ்சன தேவி,
சமூக நல மன்றம்
வியாசர்பாடி, சென்னை-39.

கோபன்...

சோம்பித் திரிந்தே சுகவாழ்வு கண்டாலும்
தேம்பிச் சிதைவார் சிலநாளில்—பூம்பாவாய் ;
காலமதைப் பொன்போல் கருதிக் கடும்உழைப்
பாலே வளர்வார் பலர்.

—அமராவதியான், அரக்கோணம்.

பாரறியப் பைந்தமிழைப் பாங்காய்ப் பரப்பியநம்
பேரறிஞர் அண்ணாவைப் பின்பற்றி—நேரான
சாலச் சிறந்த சலியாத நல்லுழைப்
பாலே வளர்வார் பலர்.

—புலவர் கி. காளியப்பன், காரைக்குடி-4.

அன்பால் வளர்வார் மிகச்சிலர் ; அச்சிலருள்
இன்னும் மிகச்சிலர் ; என்தோழி ;—இன்றுமண்
மேலே தசையாலே வீழும் வெறும்எலும்
பாலே வளர்வார் பலர்.

—மலை-மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

கொஞ்சு தமிழினிலே நெஞ்சம் தடுமாற
வஞ்சி மொழிந்திட்ட மாற்றத்தை—நெஞ்சத்தின்
பாலே சுமந்து அவள்தந்த காதல்அன்
பாலே வளர்வார் பலர்.

—க. இராசலெட்சுமி, மான்கோட்டை நத்தம்.

பிறர்செய் பிழையைப் பெரிதெனக்கொள் ளாது
மறந்திடச் சொன்ன மறையாம்—குறளோடு
நாலே யடிநல்கும் நன்னெறியு ணர்ந்தபண்
பாலே வளர்வார் பலர்.

—கே. முருகாண்டி, அனுப்பானடி.

வளமையிலாப் பன்மொழிகள் வண்புலவா ராலே
இளமைபெறும் இஃதே இயற்கை—உளமகிழ
மேலே தமிழ்பயில்வார் மெய்யாய் அதன்சிறப்
பாலே வளர்வார் பலர்.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

பேராற்று வெள்ளப் பெருக்கில் எதிர்நீச்சல்
சோராது போட்டின்பம் துய்க்கின்ற—சீராளர்
போலே அரசியலில் பொங்கிவரும் பேரெதிர்ப்
பாலே வளர்வார் பலர்.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

குழலுடன் யாழைக் குழைத்தே அமைத்த
மழலையிற் றேன்றும் மகிழ்வால்—பழகிய
சேலே நிகர்விழியாள் சேர்க்கும் இதயஅன்
பாலே வளர்வார் பலர்.

—வித்துவான் மு. சன்னுசி, ஆத்தூர்.

மாற்றானை ஏய்க்காமல் மாண்டாலும் பொய்யகற்றி
ஆற்றுமை நெஞ்சுடனே ஆழவுழ—நாற்றைவிட்டு
மேலேறும் நெல்நட்டு மிக்கவிழிப் போடுழைப்
பாலே வளர்வார் பலர்.

—நத்தம் ந. பொ. கிருட்டிணன், தொளச்சம்பட்டி.

தன்நிலையில் தானுயரான் ; தான்பயிற்றும் மாணவரோ
நன்நிலையில் சென்றுயர்வர் நானிலத்தில்—இன்னலிலும்
நூலோதிக் கற்பிப்பான் ஆசான் ; அவனுழைப்
பாலே வளர்வார் பலர்.

— என். சுந்தரேசன், செங்காடு.

நாத்திறத் தாலே நவநவமாய் நந்தமிழில்
யாத்துத் தருவார் இசைவாணர்—பாத்திறத்
தாலே அதற்குத் 'தமிழரசு' தந்தவாய்ப்
பாலே வளர்வார் பலர்.

—கு. ஜெயப்பிரகாஷ்நாராயணன். திருமங்கலம்.

பாலூட்டிச் சீராட்டிப் பைந்தமிழால் தாலாட்டிக்
கோலமிட்டு வீரம் குழைத்தூட்டிச்—சீலமுடன்
ஞாலம் நனிபுகழ நன்மகனுக் குந்தாயன்
பாலே வளர்வார் பலர்.

—சி. க. அரசன், செக்கச் சமுத்திரம்.

கஞ்சி குடித்தாலும் கந்தை உடுத்தாலும்
நெஞ்சில் கரவு நெருடாது—விஞ்சுசுவை
பாலே பருகாத பாட்டாளி பேருழைப்
பாலே வளர்வார் பலர்.

—செம்பியன், அமதிநகர்.

எக்குடியிற் தோன்றிடினும் ஏழ்மையிலே தோய்ந்திடினும்
தக்கார்தம் நற்றிறனில் தாழாரே—மிக்கோர்கள்
மேலாம்வி டாமுயற்சி மேற்கொண்டே தன்உழைப்
பாலே வளர்வார் பலர்.

—பெ. சுப்பிரமணியன், கலிக்கநாயக்கன்பட்டி.

கடல்கடந்தார் ; கண்டம் பலகண்டார் ; திங்கள்
இடமடைந்தார்; வல்லாட்சி யெங்கும்-தொடர்ந்தாண்டார்
கால மெலாமுழைத்தார், கண்டபலன் ஆம்உழைப்
பாலே வளர்வார் பலர்.

—பூ. அண்ணுமலை, மேலச்சேரி.

புட்டிப்பால் ஊட்டுவித்துப் 'பொய்'த்தாய் வளர்ப்பதற்கு
விட்டுவிடின் சேய்கட்கு மேன்மையுண்டோ?—தொட்டுத்தாய்
'தாலேலோ' பாட்டிசைத்துத் தாய்ப்பாலை ஊட்டுமன்
பாலே வளர்வார் பலர்.

—புலவர் சிக்கந்தர், கோரிக்கடவு.

என்றுமுள தென்றமிழை ஏற்றமுள ஆலயத்தில்
இன்றுள்ள ஆட்சியாளர் ஏற்றிவைத்தார்—தென்றலே
கோலத் தமிழுக் குழைத்திடும் உள்ளப்பண்
பாலே வளர்வார் பலர்.

வை. வைரவன், பூண்டிப்பட்டி.

மேலே முகிற்கூந்தல்; மென்கையோ மின்னலொளி!
மேலே விழியிரண்டும் செவ்விதழோ –மாலைசெய்
பாலே மொழியாகும்; பாவை இவள்சிரிப்
பாலே வளர்வார் பலர்.

—எஸ். சானகி, கணியூர்.

வெற்றி விழுப்புண்ணை வீரத் திருமார்பில்
பெற்று மடிந்தேதம் பொன்னுட்டின்-கற்பதனைக்
காலமெல்லாம் கண்போலக் காக்கும் தியாகப்பண்
பாலே வளர்வார் பலர்.

—க. எழில்வேந்தன், சென்னை-28.

வாய்ப்பால் சிலர்வளர்வார்; வாய்ப்பில் குழந்தைகளோ
தாய்ப்பாலின் ஊட்டத்தால் தாம்வளர்வார்-ஆய்ந்தக்கால்,
பாலின் நிறமேனிப் பைங்கொடியே! என்றும்அன்
பாலே வளர்வார் பலர்.

—என். சிவலிங்கம், பொள்ளாச்சி–2.

உண்மை வழிநடந்து ஓயா துழைத்தயர்ந்து
கண்ணீர்க் கடல்அழுந்து வார்சிலர்-புன்மனத்
தாலே வளம்பெற்றுத் ''தானெல்லாம்'' என்றநினைப்
பாலே வளர்வார் பலர்.

—அ. விசுவநாதன், வால்பாறை.

போரிடலால் பொங்கினிய அன்பால் புரந்திடலால்
ஏரிடலால் ஏந்திடலால் எங்கணும்நல்-லோருறவால்
மாலே யறவுதவும் மன்னனிக ராருழவர்
பாலே வளர்வார் பலர்.

—கு. பரசுராமன், சடையறேடை.

அன்னைத் தமிழே அருமணியே நித்திலமே
முன்னை மொழிகளிலே முன்நின்ருய்-மின்னிடும்
வேலே விழியாது வீற்றிருக்கு முன்அணைப்
பாலே வளர்வார் பலர்.

—ம. இராசலக்குமி, பொருளூர்.

அரசினர் அந்தகர் பள்ளியின் கண்ணே
திறனெடு கற்கின்ற சேய்கள்-அரசுவிருப்
பாலே உணவுண்டு பார்மிசை பாதுகாப்
பாலே வளர்வார் பலர்.

—மு. ப. சங்கரலிங்கம், உடுமலை.

முத்தான வாயால் முகமலர்ந்த கண்ணுடையாள்
அத்தான் எனவழைத் தன்னமிட்டுத்-தத்தையைப்
போலே குலவிடும் வஞ்சியவள் காட்டும்அன்
பாலே வளர்வார் பலர்.

—கா. வாலிதாசன், வளக்கணும்பூடி.

சிந்தனைக்கு நல்விருந்து சீர்திருத்த மாமருந்து
நிந்தனைசெய் வார்க்கு வெடிமருந்து-செந்தமிழின்
பாலே புகழ்பரப்பும் பைந்தமிழ் வேள்உழைப்
பாலே வளர்வார் பலர்

—பி. தங்கவேலு, அமராவதி நகர்.

குறைகொண்டு நல்லாரைக் குத்தாமல் உண்மைக்
குறைவிடமாய்த் தான்விளங்கி உள்ள-நிறைவோடு
மேலான செய்திங்கு மேம்படுவோ மென்னும்பண்
பாலே வளர்வார் பலர்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

அடிக்கப் பணியார்; அம்பொன்னை அள்ளிக்
கொடுக்கப் பணியார்; கொடுஞ்சொல்—தொடுத்திட்ட
தாலும் பணியார்; பணியும் பனிமொழிஅன்
பாலே வளர்வார் பலர்.

—அ. ச. முருகேசன், கொடிங்கியம்.



கலைக்கூடம்
குறளகம்
கதர் கைத்தொழில் அங்காடி,
கைவண்ணப்
களஞ்சியம்
20461
20462 20463
20464 20465

# மண்





வளைந்தோடும் பேராற்றைப் பாரீர்! ஓங்கி
வான்முட்டும் மாமலைகள் பாரீர்! செந்நெல்
விளைந்தாடும் வயல்வெளிகள் பாரீர்! தென்றல்
வீசமலர் அசைந்தாடும் கொடிகள் பாரீர்!
நெளிந்தாடும் நீரருவி பாரீர்! முத்து
நிலத்தினிலே விழுகிறதோ எனவி யக்கக்
களைந்திட்டே ஆடையினை உழவர் வந்து
கழனியிலே சிந்துகின்ற வியர்வை காண்பீர்!

செடிசிரிக்கும் மலர்காண்பீர்! இந்த மண்ணில்
செம்பவளக் கோவையெனப் பழுத்துத் தொங்கக்
கொடிதரித்த கனியோடு மரத்தில் கொத்துக்
கொத்தாகத் தொங்குகின்ற கனிகள் காண்பீர்!
முடிதரித்த அரசெனவே எழிலார் கோலம்
முழக்கிடுநற் சோலைகளை எங்கும் காண்பீர்!
சுடரெரிக்கும் கதிர்மின்னும் பொழுதி லந்தச்
சுடர்க்கொடிகள் தென்றலிலே தழுவல் பாரீர்!

இத்தனையும் சுமக்கின்ற மண்ணைக் கண்டே
எல்லையிலாக் காதலினால் ஓடி வந்து
முத்தமிடும் கடலலைகள் பாரீர்! பொன்னை
மூடித்தான் வைத்திருக்கும் மண்ணைத் தோண்டி
எத்தனையோ கனிவகைகள் எடுத்தல் பாரீர்!
இரும்பொடு நிலக்கரிநல் வைரம் தம்மைச்
சொத்தாக நமக்களிக்கும் இந்த மண்ணின்
தொலையாத பெருமையினைச் சொல்லப் போமோ?








உண்ணுகின்ற உணவினையே தருதல் மண்தான்!
உடுக்கின்ற உடைக்கான நூலனைத்தும்
முன்னின்று பருத்தியாய்ப் பட்டாய் நாளும்
முகிலைப்போல் வழங்குவதும் இந்த மண்தான்!
மண்வீடு கட்டுகின்ற பருவம் கொண்டே
மனையாளின் கிளிப்பேச்சில் மயங்கி நாளும்
"என்வீடு! என்வீடு!" என்றே செல்ல
எழில்வீடு நல்கியதும் இந்த மண்தான்!



திண்ணையிலே பழம்பேச்சுப் பேசு தற்கும்
தெருவினிலே கோலூன்றி நடப்ப தற்கும்
கண்களிலே கண்ணாடி போட்டுக் கொண்டு
கதைபேசி வேதாந்தம் விரித்து ரைத்தும்
"என்நாளில் நான்செய்த செயல்கள் எல்லாம்
எப்படித்தான் அடடாஓ" எனவி யந்து
பின்னாளில் பேசுதற்கோர் இடமும் நல்கிப்
பின்னையொரு புதைகுழியும் தருதல் மண்தான்!



குருதியினை மாரியெனப் பெருக விட்ட
கொடுமைமிகு போர்க்களங்கள்! கண்சி வந்து
பரிதியெனக் காட்சிதரச் சினம்தான் கக்கும்
பழம்வீரர் தம்சிலைகள்! கலைக்கோ யில்கள்!
சரித்திரத்தின் சான்றாக நின்றே நாளும்
சரிகின்ற பெருங்கோட்டை! பொல்லாக் குள்ள
நரித்திறத்தால் வாழ்ந்திட்டார் தமையும் தாங்கி
நற்காடாய் ஆகிநின்ற மண்ணைப் பாரீர்!




# அறிவே துணை!



— பூங்கொடி —

ஓர் ஊரில் ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டில் கொடிய விலங்குகள் வசித்து வந்தன. சிங்கம், புலி, கரடி, யானை எல்லாம் அங்கு இருந்தன. காட்டுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு கிராமம் இருந்தது. அது சுத்தப் பட்டிக்காடு.

சில சமயங்களில் புலி கிராமத்துக்குள் புகுந்து ஆடு மாடுகளைக் கவர்ந்து செல்லும். காட்டுக்குக் கொண்டு போய் அவைகளை அடித்துச் சாப்பிடும்.

கிராமத்து மக்கள் அந்தக் காட்டுப் பக்கம் போகப் பயப்படுவார்கள். அதைப் 'பயங்கரக் காடு' என்றும் கூறுவார்கள்.

வேட்டையாட வெளியூரிலிருந்து பலர் அந்தக் காட்டுக்கு வருவார்கள். புலி, சிங்கம், கரடி முதலிய விலங்குகளை வேட்டையாடுவார்கள்.

அந்தப் பட்டிக்காட்டுக்கு ஆடு மேய்க்கும் ஒருவன் புதிதாகக் குடி வந்தான். அவன் பெயர் சின்னான். அவன் நிறைய ஆடுகளை வைத்திருந்தான். அவைகளை அவன் காலையிலும், மாலையிலும் மேய்த்து வருவது வழக்கம்.

ஒரு சமயம் அந்தச் சின்னான் வழி தவறி அந்தக் காட்டுக்குள் போய்விட்டான். அவனுடன் ஆடுகளும் சென்றன. அப்போது நல்ல இருட்டு. வழி சரியாகவே தெரியவில்லை. சின்னான் திண்டாடினான். ஆடுகளும் 'மே மே' என்று கத்தின.

ஆடு கத்தும் குரல் கேட்டு, ஒரு கிழட்டுப் புலி புதரிலிருந்து வெளியே வந்து பார்த்தது. ஆட்டு மந்தையைக் கண்ணாரக் கண்டது. சின்னானையும் பார்த்தது. மிகுந்த பசியுள்ள அந்தப் புலி ஆட்டு மந்தைப் பக்கம் வந்தது. சின்னான் 'ஓ'வெனக் கத்தினான். அவன் உடல் 'கிடு கிடு' வென நடுங்கியது.

"கத்தாதே! இந்த ஆடுகளை எனக்குக் கொடுத்துவிடு! உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்" என்றது கிழட்டுப் புலி.

சின்னானுக்கோ பதில் சொல்ல நா எழவில்லை. "உயிருக்கு உயிராக வளர்த்து வந்த ஆடுகளையா கொடுத்து விடுவது? ஆடுகளைத் தராவிட்டால் நம்மையல்லவா அடித்துக் கொன்று விடும்? என்ன செய்வது?" என்று யோசிக்கலானான்.

நீதிக்கு ஒரு கதை

"என்ன யோசனை பண்ணுகிறாய்? சீக்கிரம் சொல்! கரடி வந்துவிடப் போகிறது!" என்று மிரட்டியது புலி.

உடனே அவன், "அதோ அந்தத் தென்னை மரப்பக்கம் வந்தால் இந்த ஆடுகளைத் தந்து விடுகிறேன். அதுவரைக்கும் என் உயிருக்குயிரான ஆடுகளைக் கண்ணாரப் பார்த்து விடுகிறேன்" என்றான். புலியும் 'சரி'யென ஒப்புக் கொண்டு அவனுடன் சென்றது.

தென்னை மரம் இருக்குமிடம் வந்தது. புலி ஆட்டு மந்தை மீது பாய முயன்றது. அப்போது ஒரு புதரிலிருந்து ஒரு கரடி மெல்ல வந்தது. புலியைப் பார்த்து, "என்ன சமாச்சாரம்?" என்று கேட்டது. அதற்குக் கிழட்டுப் புலி நடந்ததைச் சொன்னது.

உடனே கரடி புலியைப் பார்த்து "நீ ஆடுகளைச் சாப்பிட்டுவிடு. நான் இவனைச் சாப்பிடுகிறேன்!" என்றது. இதைக் கேட்ட சின்னானுக்குப் 'பக்' என்றது. உடனே அவன் இவற்றின் பிடியிலிருந்து எப்படித் தப்புவது என்று யோசிக்கலானான்.

"என்ன யோசனை பண்ணுகிறாய்? எனக்குப் பசி அதிகமாகயிருக்கிறது!" என்று கத்தியது கரடி.

உடனே சின்னான், "அதோ ஒரு பனைமரம் தெரிகிறது பார்! அங்கே போனால் என் கொழுத்த பெரிய ஆடுகள் எல்லாம் இருக்கின்றன. இந்த ஆடுகள் குட்டி ஆடுகள். அங்கே போனதும் நீங்கள் விருப்பமுள்ள ஆடுகளை நன்றாகச் சாப்பிடலாம்?" என்றான். கரடியும் 'சரி'யென ஒப்புக்கொண்டு அவனுடன் சென்றது. ஆடுகள் 'மே மே' என்று கத்திக்கொண்டே வந்தன.

சின்னன் சுற்று முற்றும் பார்த்தான். மரங்கள் அடர்ந்த பகுதியில் 'சல சல' வெனச் சத்தம் கேட்டது. அங்கு இரண்டு தொப்பிகள் தென்பட்டன! உடனே தன் கையிலுள்ள தடியை வீசித் தொப்பியில் படும்படி எறிந்தான். தடி தொப்பியில் பட்டது.

தொப்பி அணிந்தவர்கள் யார் தெரியுமா? வேட்டையாட வந்தவர்கள்தாம்! அவர்கள் செடி கொடிகளை நீக்கிப் பார்த்தனர். புலியும் கரடியும் வருவதைக் கண்டனர். சின்னன் ஒன்றும் தெரியாதவன் போல வந்து கொண்டிருந்தான்.

உடனே அந்த வேட்டைக்காரர்களில் ஒருவன் புலியைக் குறிபார்த்துத் துப்பாக்கியால் சுட்டான். இன்னொருவன் கரடியைச் சுட்டான். இரண்டும் துடிதுடித்துச் செத்து விழுந்தன.

வேட்டைக்காரர்கள் மறைவான இடத்திலிருந்து வெளியே வந்தார்கள். சின்னனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டார்கள். அவனது சமயோசிதப் புத்தியைப் பாராட்டி அவனுக்கு நூறு ரூபாய் பரிசு கொடுத்தார்கள்.

புலியையும், கரடியையும் தூக்கிக் கொண்டு வேட்டைக்காரர்கள் மகிழ்ச்சியோடு சென்றார்கள்.

தமக்கு இரை கிடைக்கும் என்று ஆவலாயிருந்த புலியும், கரடியும் துப்பாக்கிக்கு இரையாகிவிட்டன. சின்னனும் நிம்மதியாக வீடு போய்ச் சேர்ந்தான். தந்திரமும், நல்ல யோசனையும் இருந்தால், எந்த விபத்திலிருந்தும் விடுபடலாம். ஆபத்துக் காலத்தில் அறிவுதான் தக்க துணை!

### வீட்டு வசதியில் தமிழ் நாடு

'வீட்டு வசதி செய்து தருவதில் தமிழ்நாடு அரசு முன்னணியில் நிற்கிறது' என்று மத்திய அரசு வீட்டு வசதி அமைச்சர் திரு குஜ்ரால் பாராட்டியிருக்கிறார்.

வீட்டு வசதித் துறையில் தமிழ்நாடு அரசு மற்ற எல்லா மாநிலங்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறது. மக்களுக்கு வீடுகள் அமைத்துத் தருவதில் தமிழக அரசு ஆர்வத்துடன் செயல்படுகிறது.

எல்லா இடங்களிலும் வீட்டு வசதிப் பிரச்சினைகள் பெருகிவிட்டன. இந்தப் பிரச்சினையை நல்ல திட்டங்கள் மூலம் எளிதில் தீர்க்க முடியும் என்பதைத் தமிழக அரசு காட்டிவிட்டது.

'ஒரு நாளுக்கு ஒரு ரூபாய் வீதம் சேமித்தால் ஐந்து ஆண்டுகளில் வீடு கிடைக்கும்' என்னும் தமிழக அரசின் திட்டம் மற்றவர்களும் பின்பற்ற வேண்டிய சிறந்த திட்டமாகும்.






# இலவசமாக இசை கற்பிக்கும் கல்லூரி!

தொன்று தொட்டே இசை வளர்க்கும் இடமாகத் திகழ்ந்து வருகிறது திருவையாறு. அங்குள்ள அரசர் இசைக் கல்லூரி, பெண்களுக்கு இலவசமாக இசை கற்பித்து வருகிறது. அரசர் இசைக் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுப் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தின்படி இயங்கி வருகிறது.

இந்தக் கல்லூரியில் பெண்கள் மட்டும்தான் அனுமதிக்கப்படுகின்றனர். பள்ளி இறுதி வகுப்புத் தேர்விலும் (S.S.L.C.) சங்கீதத்தில் கீழ்நிலைத் தேர்விலும் (Lower Grade Government Examination in Music) தேர்ச்சி பெற்றிருந்தால்தான், இந்தக் கல்லூரியில் பயில அனுமதிக்கப்படுவார்கள். இக்கல்லூரியில் ''சங்கீத சிரோன் மணி'' என்ற பட்டப் படிப்பிற்கான இசைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பட்டப் படிப்பு 4 ஆண்டுக் கால இசைப்பயிற்சியாகும்.

திருவையாறு அரசர் இசைக் கல்லூரியில் வாய்ப்பாட்டும், வீணையும், சங்கீத நுட்பவியலும் முக்கியமாகக் கற்பிக்கப்படுகின்றன. இக் கல்லூரியில், இசைப் பயிற்சி பெறும் மாணவிகளுக்கு எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. இசை பயிலும் மாணவிகளுக்கு உணவும், உறையுளும் இலவசமாகவே அளிக்கப்படுகின்றன. எல்லா வசதிகளையும் இலவசமாக அளித்து, இசைக் கலையைத் திறமையுடன் கற்பித்து வரும் இக் கல்லூரியைப் போல், வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

திருவையாற்றின் கரையிலே அமைந்துள்ள அரசர் இசைக்கல்லூரி, மராட்டிய அரசர்களால் கல்விக்கும், இதர அறப்பணிகளுக்கும் தனித்து ஒதுக்கப்பட்ட சொத்துகளிலிருந்து கிடைக்கும் வருவாயைக்கொண்டு, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரின் நிருவாகத்தில் நடைபெறுகிறது.

அரசர் இசைக் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு இசைப் புலமைமிக்க திறமைமிகு ஆசிரியர்களைக் கொண்டு இசைப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே 1969–70, 1970–71 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் நடைபெற்ற இறுதித் தேர்விலும், முதல் நிலைத் தேர்விலும் நூற்றுக்கு நூறு என்ற வகையில் எல்லா மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இக் கல்லூரியில் இசை பயின்று, பட்டம் பெற்ற பலர் பெரும் புகழ் பெற்று விளங்கும் தனியார் நிலையங்களிலும், அரசு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புப் பெற்று, பேரும் புகழும் அடைந்து வருகின்றனர்.




போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில்...
அந்தப் பையன் மணியை அழைச்சுக்கிட்டு வந்திருக்கேன் சார்!
முதலில் அந்தப் பையனின் அப்பாவை மட்டும் அழைத்து வாருங்கள்!
ஆராய்ச்சி மணி
கதை: இளவல்
படம்: கோபண்ணு
4
மணியின் அப்பா வரவில்லை சார்!
மகனைப் போலீஸ் அழைச்சுக்கிட்டுப் போகும்போது கூட பையனின் அப்பா வரவில்லையா?
எல்லாம் நன்மைக்குத் தான்! நமக்கு ரொம்ப சுலபமாப் போச்சு!
என்னுடன் வாருங்கள், நான் சொல்கிறபடி எல்லா ஏற்பாடு களையும் உடனடியாகச் செய்யுங்கள்!
திருஞானம் வீட்டில்...
திருஞானம், என்ன இப்படி உட்கார்ந்திருக் கீங்க... நடக்கவேண் டியதைக் கவனிங்க...
என்ன டாக்டர் சொல்றீங்க!
எனக்கு எல்லாம் தெரியும் சிவஞானம்! மணியைப் போலீசார் கைது செய்திருக்காங்க... அவனைப் பெற்ற குற்றத்திற்காகவாவது ஜாமீனில் எடுக்கவேண்டும் அல்லவா?
இதுவரை ஊரிலே வம்பு செய்துகிட்டு இருந்தான். இப்ப சட்டத்துக்கு எதிரா ஏதோ செய்திருக்கான். தப்பு செய்தவன் தண்டனையை அனுபவித்துத்தானே தீரணும்!
மணி அப்படி என்ன தப்பு செஞ்சிருக் கான்?
என்ன டாக்டர் இப்பத்தான் சொன்னீங்க... எல்லாம் எனக்குத் தெரியும்னு..! அது இருக்கட்டும் இப்ப எப்படியாவது மணியை வீட்டு அழைச்சிட்டுவர ஏற்பாடு செய்யுங்க அப்பாகிட்ட நான் எவ்வளவோ சொல்லிட்டேன்!



கயல்விழி! மிஸ்டர் திருஞானம் இப்படி இருக்கிறதிலேயும் நியாயம் இருக்கு! அவனாலே இவருக்கு எவ்வளவு கெட்ட பெயர்....!
இந்தத் தடவை கடைசி முறையா இருக்கட்டும். நான் மணியை எப்படியாவது திருத்தி விடுகிறேன்! நீங்களும், அப்பாவும் போய் மணியை அழைத்து வாருங்கள்!
மணியோட அப்பான்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமா இருக்கு..!
உங்கள் பையன் மணி போலீஸ் காவலிலிருந்து தப்பிவிட்டான். இங்கே வந்தானா?
இங்கே வரல்லையே...
வீட்டுக்குள் எங்காவது மறைச்சு வைச்சிருக்கீங்களான்னு சோதனை போடணும்! அது எங்கள் கடமை
போலீஸ் ஸ்டேஷனில்...
எல்லா இடங்களுக்கும் தகவல் கொடுங்க... மணி தானாக ஓடிப்போய்விட்டானா யாரும் கடத்திக் கொண்டு போயிருக்காங்களா என்றும் கண்டுபிடிக்கணும் அதற்கும் ஏற்பாடு செய்யுங்க!...
மறுநாள் வெளியாகிய செய்தித் தாள்களில்...
ரயிலிலிருந்து விழுந்து சிறுவன் மரணம்
சந்தேகம்!
தொடரும்

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள்



# வேலை வாய்ப்பு விளம்பரங்கள்.

## கோவை நகராட்சி

கோவை நகராட்சிக்குச் சொந்தமான லாரி (பெட்போர்டு ஜே 4 பெட்ரோல் 1962 மாடல்) பழுது பார்த்துச் சரி செய்ய நகராட்சி ஆணையரால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி வரவழைக்கப்பட்டு நகராட்சிப் பொதுப்பணிப் பொறியரால் 14—6—1972-ம் தேதி மாலை 3 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அவை அன்றே நகராட்சி பொதுப்பணிப் பொறியரால் அவரது அலுவலகத்தில் மாலை 3-00 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் கொடுப்போர், ஒப்பந்தப் புள்ளியில் மேலுறையில் " நகராட்சி லாரி எம்.டி.இ. 5406-ஐ பழுது பார்க்க ஒப்பந்தப் புள்ளி" எனக் குறிப்பிட்டு, ஆணையாளர், கோவை நகராட்சி என்கிற முகவரிக்கு விண்ணப்பித்திருக்கவேண்டும். ஒப்பந்தப் புள்ளி கொடுப்போர் கட்டுத் தொகை ரூ. 500 செலுத்தியிருக்க வேண்டும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளும், பிற விவரங்களும் நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்தில் வேலை நேரங்களில் ரூ. 5·20 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கி, அப்பாநாராயணன்,
ஆணையர்.

(த. 38)

## திருப்பூர் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கான மூடி அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 13—6—1972-ம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி ஆணையருக்காக நகராட்சிப் பொறியாளர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளி விண்ணப்பங்கள் மற்றும் இதர நிபந்தனைகளுக்கு ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே ரூ. 2.07 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

| எண்ணும் வேலை விவரமும். | மதிப்பீடு. | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| 1 1972–73-ம் ஆண்டிற்கான நகராட்சிக்குச் சொந்தமான சாலைகளைப் பராமரித்தல் (சல்லி, சரள் சப்ளை செய்தல்.) | ரூ. 10,000 | ரூ. 250 |

த. 34)

ஆணையர்.

## கிருஷ்ணகிரி நகராட்சி

இந்நகராட்சிக்கு 200 இரும்பு மடக்கு நாற்காலிகள் சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1972 ஆம் வருடம் ஜூன் மாதம் 13 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4–30 மணிக்கு ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

மேற்படி சப்ளைக்கு முன் வைப்புத் தொகை ரூ. 100.

துரை. குருநாதன், பி.ஏ., பி.டி.
ஆணையர்.

(த. 36)

## உதகமண்டலம் நகராட்சி

1972-ஆம் வருடம் ஜூன் மாதம் 14 ஆம் தேதி மாலை 3-30 மணிக்குள் உதகை நகரத்திலுள்ள தீ அணைப்புக் குழாய்களைப் பழுது பார்ப்பதற்காக ஜி.ஐ. உபகரணங்களை விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகளை உதகை நகராட்சி பொறியாளரால் வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளிக்குரிய பத்திரங்களும் நிபந்தனைகளும், 12—6—1972ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 2.06 நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,
உதகமண்டலம் நகராட்சி.

(த. 42)

## சமூக நலத்துறை

அறிக்கை எண் 1/72-73.

தென்னார்க்காடு மாவட்டம், விருத்தாசலம் வட்டம், அசீசுநகர் செட்டில்மெண்டிலுள்ள தொழில் நிலையங்களுக்கு 1972–73-ம் ஆண்டிற்குத் தேவையான பலவகைப்பட்ட நூல் ரகங்களும், மரங்களும் ( Yarn and timber ) வழங்குவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்த விவரங்கள் (Sealed Tenders) பெயர் பெற்ற நிறுவனங்களிலிருந்தும், ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் ( Contractors ) இதனடியில் கையொப்பமிட்டிருப்பவரால் 26—6—1972 செவ்வாய்க்கிழமை பகல் 12-00 மணி வரை வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த விவரங்கள் வந்து சேரவேண்டிய தேதியை ஒத்திக் கொடுப்பதற்கான கோரிக்கை எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2. நெய்வேலி டவுன்ஷிப் கிளைக்கருவூலத்தில் " ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டில்) கட்டுத் தொகை கட்டிய செலானுடன் இணைந்து வராத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

3. ஒப்பந்த விவரங்கள் மேற்கூறப்பட்ட அதே தேதியில் மதியம் 1-00 மணிக்குத் திறக்கப்படும். அப்போது ஒப்பந்த விவரங்கள் கொடுத்திருப்பவர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நேரில் வந்திருக்கலாம். ஒப்பந்த விவரங்களில் கொடுக்கப்படும் விலைப்பட்டியலை அசீசுநகர் செட்டில்மெண்டில் அப்பொருள்களைக் கொண்டு வந்து கொடுப்பதற்கு உடன்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. குறைந்தபட்சம் விலைப்பட்டியலுள்ள ஒப்பந்த விவரங்களைத்தான் இதனடியில் கையொப்பமிட்டிருப்பவர் அங்கீகரிக்க வேண்டுமென்ற கட்டாயம் எதுவுமில்லை. காரணம் கூறுமல் எந்த ஒப்பந்த விவரத்தையும் அங்கீகரிக்கவோ அல்லது நிராகரிக்கவோ அவருக்கு உரிமையுண்டு. இந்த நிபந்தனைகளுக்கு உட்படாத ஒப்பந்த விவரங்கள் எதுவும் கவனிக்கப்படமாட்டாது.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் சரக்குகளை விநியோகம் செய்வதற்கு முன்னதாகவே அவைகளின் விலை மதிப்பீடு துறையில் 10 சதவிகிதமோ அல்லது அடியில் கையொப்பமிட்டிருப்பவரால் நிர்ணயிக்கப்படும் மற்றெந்தத் தொகையோ வைப்புத்தொகையாக (Deposit) செலுத்துவதுடன் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கான உடன்படிக்கை (Agreement) ஒன்றும் எழுதிக்கொடுக்க வேண்டும். வைப்புத் தொகை கட்டத் தவறினுலோ அல்லது உடன்படிக்கைப் பத்திரம் எழுதிக்கொடுக்காவிட்டாலோ பொருள்களை விநியோகம் செய்வதற்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு எந்த நேரத்திலும் ரத்துச் செய்யப்படும்.

6. தேவையான நூல் மற்றும் மர வகைகள் பற்றிய குறிப்பிடுகைகள் (Specifications) நிபந்தனைகள் (Conditions) ஆகியவற்றை இதனடியில் கையொப்பமிட்டிருப்பவர்களிடமிருந்து விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலாளர்,
அசீசுநகர் செட்டில்மெண்டு,
ஊமங்கலம் அஞ்சல்,
தென்னார்க்காடு மாவட்டம்.

(த. 35)

## ஏல விற்பனை

### மாவட்டக் காவல் அலுவலகம்

கோவை மாவட்டக் காவல்துறைக்குச் சொந்தமான கண்டனம் செய்யப்பட்டதுமான கீழே கண்டுள்ள போலீஸ் லாரி **MDE 4391** **5—6—1972-ம் தேதி** காலை 10 மணிக்கு கோவை காவலர் பயிற்சி பள்ளி மைதானத்தில் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும்.

லாரியின் விவரம்

1. ரிஜிஸ்ட்ரேஷன்.—**MDE 4391**
2. விவரம்.—மூடிய **Fargo** லாரி ராயல் புளூ.
3. மாடல்.—1960
4. குதிரை சக்தி.—28.35.

2. ஏல நிபந்தனைகள், அடிஷனல் ரிசர்வ் இன்ஸ்பெக்டர் கோவை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்படி போலீஸ் லாரி எல்லா வேலை நாட்களிலும் போலீஸ் பயிற்சி பள்ளி மைதானத்தில் மேற்படி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

**மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்,**
கோயம்புத்தூர்.

(த.20)

## ஒப்பந்தப் புள்ளி

### நிலநீர் இயக்குநர் அலுவலகம்

**அறிக்கை எண் 20/VI—B/M 2/ 72/6—5—1972.**

**வேலையின் பெயர்.—புவிரசாயனக் கருவிகள் (Geochemical)** வழங்குதல் **ஒளிப்பிழம்பு அளவைக்கருவிகள் (Flame photometer) நீர்க்காய்ச்சி வடிகலன்கள் (Distilled water plans)** பௌதிக, ரசாயன **திராசுகள் (Physical and Chemical balances)** மின் கலவைக் கருவிகள் **(Stirrers)** மற்றும் பல.

தமிழ்நாடு ஆளுநருக்காக அவர் சார்பில் மேற்குறித்த வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்படிவங்கள், நிலநீர் இயக்குநரால் மேற்குறித்த அலுவலகத்தில் 19—6—1972 அன்று மாலை 3-00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் பத்திரங்கள், நிலநீர் இயக்குநரால், மாலை 3-30 மணிக்கு, அதே தேதியில், அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில், மேற்கண்ட அலுவலகத்தில் திறக்கப்படும்.

முன்வைப்புத் தொகை.—ரூ. 2,400

வேலையை முடிக்கும் காலம்.—இரண்டு மாதங்கள்.

10-எ, தண்டபாணித்தெரு, தி. நகர், சென்னை-17 என்ற இயக்குநரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் கிடைக்கும் காலம் 10—5—1972 முதல் 17—6—1972 வரை.

விலை.—ரூ. 15.

விற்பனை வரி.—ரூ. 0·60 காசு.

ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களின் விலை (எச் சூழ்நிலையிலும் திருப்பியளிக்க வியலாதது) ரிசர்வ் வங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ (**"to the Credit of the Exe. Engineer, groundwater Division, Madras—17—under the head of a/c "Public works Remittances III Other remittances"**) என்று குறிப்பிடப்பட்டு செலுத்திப் பெறவேண்டும்.

விற்பனை வரித் தொகையானது ரிசர்வ் வங்கியிலோ அல்லது அரசுக் கருவூலத்திலோ " **XII—Sales tax (b) Receipts under State Sales tax act, General Sales tax,** " என்ற கணக்கின் தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

மேற்கண்ட செலான்களுக்காக மட்டுமே ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் விற்கப்படும். வேறெந்தவிதமான தொகையளிப்பும் ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

**இயக்குநர்,**
நிலநீர் அலுவலகம்,

10-எ, தண்டபாணி தெரு,
தி. நகர், சென்னை-17.

(த. 22)

## ஒப்பந்தப் புள்ளி

### சிறுதொழில் நிறுவனம்

(வரையறுக்கப்பட்டது)

35/2, உட்ஸ் ரோடு, **அண்ணா சாலை,** சென்னை-2

ந.எண். 18762/ஜே3/72.3, நாள் 6—5—1972.

ஒப்பந்தப் புள்ளி ஒப்பந்த உத்திரவு தேதியிலிருந்து 31—3—1973 முடிய பொள்ளாச்சி டான்சி தச்சு மற்றும் மரஅறுவை தொழிற்சாலைக்கு **(Tansi Furniture Works and Saw Mill, Pollachi)** போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள் நியமனத் திற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகளை மேற்கண்ட யூனிட்டிற்கு நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும். அட்டவணை மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கான குறிப்புகளுடன் உள்ள ஒப்பந்தப் படிவம் வேண்டுவோர் விற்பனை வரி உட்பட ரூ. 2.10ஐ ரொக்கமாகவோ அல்லது மணியார்டர் மூலமோ, கண்காணிப்பாளர் " டான்சி தச்சு மற்றும் மர அறுவை தொழிற்சாலை, மீன் கறை ரோடு, பொள்ளாச்சி", அவர்களுக்கு நேரடியாக செலுத்தி பெற்றுக் கொள்ளவேண்டும்.

ஒப்பந்தப் புள்ளிகளை அரக்கு முத்திரையிட்ட உறையினுள் வைத்து உறையின் மேல் " போக்குவரத்து ஒப்பந்தத்திற்கான ஒப்பந்த முடிவு தேதி 9—6—1972" என குறித்து மேற்கண்ட யூனிட் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் யூனிட் கண்காணிப்பாளரால் 9—6—1972 மாலை 4 மணிக்குத் திறக்கப்படும்.

**நிருவாக இயக்குநர்.**

(த. 11)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை

தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் தேசிய நெடுஞ்சாலை வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் மூடி முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் 14—6—1972 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்கு பெற்றுக் கொள்ளப்படும்

| வ. எண். | வேலை விவரம். | முன் வைப்புத் தொகை. |
| --- | --- | --- |
| 1 | தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரி-இராணிப்பேட்டை சாலையில் கி.மீ. 33/0 முதல் 41/0 வரையில் உள்ள சாலையை அகலப்படுத்தி உறுதிப்படுத்துல். | ரூ. 24,950 |

ஒப்பந்தப் புள்ளிகள் 14—6—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தத்திற்கான நமூனுக்கள் வரைப்படங்கள் முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1, இரண்டாவது மாடி குறளக கட்டடம், சென்னை-1 அலுவலகத்தில் 8—6—1672 முதல் 14—6—1972 முடிய (விற்பனை வரி தனி) ரூ. 125 கட்டி பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம் எண் 1, சென்னை-1, அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் " ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசிய நெடுஞ்சாலை கோட்டம், எண் 1, சென்னை-1 பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

**தி. மு. ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.),
தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை-1.

(த.19)

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம்

பொறியியல்பணித்துறை, திருச்சிராப்பள்ளி வட்டம்,
தபால் பெட்டி எண் 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை திருச்சி வட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களால் திருச்சியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்.—(1) பெரம்பலூர் வட்டம்—கரையானூர் கிராமம் கரையானூர் குளத்திற்குச் சிறப்பு மராமத்து வேலை செய்தல்.

(2) உடையார்பாளையம் வட்டம், குருவரப்பர்கோவில் கிராமம்—பொன்னேரிக் குளத்திற்குச் சிறப்பு மராமத்து வேலை செய்தல்.

2. ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம்.—8—6—1972—3.00 மணி வரை.

3. பிணைப் பொறுப்புத் தொகை.—(1) ரூ. 2,300 (முதல் வேலைக்கு) (2) ரூ. 4,100 (இரண்டாவது வேலைக்கு).

4. ஒப்பந்த முறை.—கே. 2

5. ஒப்பந்தப் பத்திரத்தின் விலை.—ரூ. 15·00 (ஒவ்வொரு வேலைக்கும்).

6. விற்பனை வரி.—ரூ. 0.53 (ஒவ்வொரு வேலைக்கும்).

7. ஒப்பந்தப்பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி.—20—5—1972.

8. விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம்.—8—6—1972—3.30 மணி.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலையையும், விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் **"XXXVII Public works-State Revenue Miscellaneous"** மற்றும் **"XII Sales tax (b) Receipts under the State Sales tax Act. General Sales tax"** என்ற தலைப்புக்களின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ரா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சி வட்டமேற்பார்வைப் பொறியாளர்.

(த.14)

---

## தனி மனைகள் ஏலம்

## வீட்டு வசதி வாரியம்

### அறிஞர் அண்ணா நகர்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தாரால் அறிஞர் அண்ணா நகர் திட்டப் பகுதியில் நல்ல அமைப்புடைய ஒவ்வொன்றும் 2½ தரை கொண்ட 25 மனைகள் 4—6—1972 காலை 9 மணிக்கு ஏலம் விடப்படும். விரும்புவோர் அலுவலகத்தில் ரூ. 5 கொடுத்து அதற்கான படிவம் பெற்று விண்ணப்பிக்கலாம். ரூ. 750 முன்வைப்புத் தொகையுடன் படிவம் வந்து சேர கடைசி நாள். 3—6—1972 உயர்ந்த ஏலம் கேட்பவர் கீழ்க்கண்டவாறு மனைக்குரிய தொகையினை கட்ட வேண்டும்.

1. ஏலம் முடிந்த உடனே அவ்விடத்திலேயே 15 சதவிகிதம் பணமாக கட்டப்பட வேண்டும்.

2. விற்பனை உறுதி செய்த ஒரு வாரத்திற்குள் 10 சதவிகிதம் கட்ட வேண்டும்.

3. மீதமுள்ள 75 சதவிகிதம் தொகையினை அரையாண்டு தவணை முறையில் 8½ வட்டியுடன் மூன்றாண்டுகளுக்குள் கட்ட வேண்டும்.

பி. அப்பாசாமி,
தலைமை வருவாய்த்துறை அலுவலர்,
வீட்டு வசதி வாரியம்.

(த. 12)

---

## குடிநீர் வடிகால் வாரியம்

எண் 1139/மு.வ. 1/நாள் 6—5—1972

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க்காணும் பணிக்கு 15—6—1972-ம் நாள் மாலை 3.00 மணி வரை கோவை வட்ட மேற்பார்வைப் பொறியாளரால் அவரது அலுவலகம் 25-1, மூன்றாவது வீதி, டாடாபாத், கோவை-12-ல் வரவேற்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 4-00 மணியளவில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அதிகாரிகளாலோ வரப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

(1) பணியின் பெயர்.—காங்கயம் நகர பஞ்சாயத்து குடிநீர்திட்டம்—இரண்டாவது கட்டம்—நீர்க் கொணரும் குழாய்—வார்ப்பு இரும்பு குழாய்களும், ஆர்.சி.சி. குழாய்களும் பதித்தலும், இணைத்தலும் மற்றும் அது சம்பந்தப்பட்ட பணிகளும்.

(2) ஒப்பந்த முறை.—கே. 2.

(3) கட்டுத் தொகை.—ரூ. 5,260 (ரூபாய் ஐயாயிரத்து இருநூற்று அறுபது மட்டும்.)

(4) ஒப்பந்தப் பத்திரங்கள் விலை.—ரூ. 10.35 (விற்பனை வரி உட்பட).

மேற்படி பணிக்கான ஒப்பந்தப் பத்திரங்கள் ஈரோடு நிருவாகப் பொறியாளர் அலுவலகம், 18 சுவாமியப்ப கவுண்டர் தெரு, திருநகர் காலனி, ஈரோடு-3-ல் 13—6—1972 முடிய, ஒப்பந்தப் பத்திரங்களின் விலைக்குரியப் பணத்தை நேரில் செலுத்தியோ அல்லது "பண அஞ்சல்" மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பிணைப் பணத்தை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் "கேட்பு வரை வோலை" மூலமாகவோ அல்லது மேற்படி வங்கியின் "வங்கி உறுதிச் சான்றிதல்" மூலமாகவோ ஈரோடு நிருவாகப் பொறியாளரின் சார்பில் செலுத்தலாம். மேற்படி பிணைப்பணத்தை ஈரோடு நிருவாகப் பொறியாளரின் சார்பில், நிருவாகப் பொறியாளரின் நிருவாக வரம்பிற்குள் உள்ள கிளைக் கஜானாவில் "பி.டபிள்யூ-3- O.R..—**Credit Adjusted to Executive Engineer "Erode"**— கணக்கில் செலுத்தலாம். பிணைப் பணம் இணைக்கப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

கோவை, மேற்பார்வைப் பெறியாளருக்கு எந்த ஒரு ஒப்பந்தத்தையும் அல்லது அனைத்து ஒப்பந்தங்களையும் காரணம் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

டி. ஜி. சீனிவாசன்,
மேற்பார்வைப் பொறியளர்.

(த- 10)

---

## பொள்ளாச்சி நகராட்சி

### இ1/15116/70

கீழ்க்காணும் வேலைக்கு மூடிமுத்திரைமிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் அவரது அலுவலகத்தில் 12—6—1972 மாலை 4-00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்றே மாலை 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் ஆணையர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் வேண்டுவோர் ரூ. 30-ம் விற்பனைவரி ரூ. 3½சதவிகிதமும் நகராட்சிக்கருவூலத்தில் செலுத்தி செல்லுச் சீட்டுடன் நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களுக்கு விண்ணப்பித்து 9—6—1972 தேதி முடிய பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களுக்கு நகராட்சி மராமத்துப் பொறியர் அவர்களிடம் வேலை நேரங்களில் விசாரிக்கவும்.

கட்டின் நடப்பு எண்—இ1/15116/70

வேலை விவரம்—கோட்டூர் ரோடிலுள்ள தெப்பக்குளம் வழி ஆரம்பப் பள்ளிக்குப் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுதல்.

மதிப்பீட்டுத் தொகை—ரூ. 1,15,586.

முன் வைப்புத் தொகை—ரூ. 2,890.

வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்—6 மாதம்.

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

(த.4)

## வேலைவாய்ப்புப் பயிற்சித் துறை

1972-ம் ஆண்டு பயிற்சிக்குத் தொழிற் பயிற்சி நிலையங்களில்/நிறுவனத்தில் சேருதல்.

இம்மாநிலத்திலுள்ள கீழ்க்கண்ட தொழிற் பயிற்சி நிலையங்கள்/நிறுவனத்தில் 1972-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து (1—8—1972) பொறியியல் தொழில்களிலும், பொறியியல் சம்பந்தப்படாத தொழில்களிலும், பயிற்சி ஆரம்பமாகிறது. அதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தொழில்களின் பெயரும், பயிற்சிக்கால அளவும், குறைந்த பட்ச கல்வித் தகுதியும் கீழே தரப்பட்டிருக்கின்றன.

## பொறியியல் தொழில்கள்

| தொடர் எண்ணும், தொழிற் பெயரும். | பயிற்சிக் காலம் | சேருவதற்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி |
|---|---|---|
| 1 கருமான் | ஓராண்டு | |
| 2 கட்டடம் கட்டுபவர் | இரண்டு ஆண்டுகள் | |
| 3 தச்சர் | ஓராண்டுக் காலம் | |
| 4 பொறிப்பகுதி பொருத்துபவர் | இரண்டு ஆண்டுகள் | |
| 5 இயந்திர வேலையாள் (அரைக்கும் இயந்திரம்) | இரண்டு ஆண்டுகள் | |
| 6 இயந்திர வேலையாள் (மில்லர்) | இரண்டு ஆண்டுகள் | |
| 7 இயந்திர வேலையாள் (கம்போசிட்) | இரண்டு ஆண்டுகள் | |
| 8 இயந்திர வேலையாள் (உருவாக்கும் இயந்திரம், துவாரம்போடும் இயந்திரம், ப்ளேனர்) | இரண்டு ஆண்டுகள் | |
| 9 கம்மியர் (டீசல்) | ஓராண்டு | |
| 10 கம்மியர் (மோட்டார் வண்டி) | ஓராண்டு | |
| 11 அச்சு வார்ப்பவர் | ஓராண்டு | |
| 12 வர்ணம் அடிப்பவர் | ஓராண்டு | |
| 13 குழாய் பொருத்துபவர் | ஓராண்டு | |
| 14 உலோகத் தகடு வேலையாள் | ஓராண்டு | |
| 15 கடைசல் பிடிப்பவர் | இரண்டு ஆண்டுகள் | பள்ளி இறுதித் தேர்வு வகுப்புக்கு (மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான படிப்புக்குக் குறைவாக இரண்டு வகுப்புகள் வரையில் படித்திருக்க வேண்டும். |
| 16 பற்ற வைப்பவர் (காற்றைச் செலுத்திப் பற்ற வைத்தல், மின்சக்தியினால் பற்ற வைத்தல்). | ஓராண்டு | பள்ளி இறுதித் தேர்வு வகுப்புக்கு (மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான படிப்புக்குக் குறைவாக இரண்டு வகுப்புகள் வரையில் படித்திருக்க வேண்டும். |
| 17 கம்பியாள் | இரண்டு ஆண்டுகள் | பள்ளி இறுதித் தேர்வு வகுப்புக்கு (மெட்ரிகுலேஷன் அல்லது அதற்குச் சமமான படிப்புக்குக் குறைவாக இரண்டு வகுப்புகள் வரையில் படித்திருக்க வேண்டும். |
| 18 கைக்கடியாரம், சுவர்க்கடியாரம் செய்பவர் | ஷை | விஞ்ஞானப் பாடத்தை எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு வரையில் அல்லது அதற்குச் சமமான படிப்பு வரையில் படித்திருக்க வேண்டும். |
| 19 மின்முலாம் பூசுபவர் | ஷை | பள்ளி இறுதித் தேர்வில் அல்லது அதற்குச் சமமான தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 20 மின்சாரப் பணியாள் | ஷை | விஞ்ஞானப் பாடத்தை எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமான தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 21 கம்மியர் (கருவிகள்) | ஷை | விஞ்ஞானப் பாடத்தை எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமான தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 22 கம்மியர் (குளிர்சாதனம் தட்ப வெட்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) | ஓராண்டு | விஞ்ஞானப் பாடத்தை எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமான தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 23 கட்டடப்பட வரைவாளர் | இரண்டு ஆண்டுகள் | விஞ்ஞானம், கணிதம், இரண்டையும் விருப்பப் பாடங்களாக எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமானதொரு தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 24 இயந்திரப் பட வரைவாளர் | இரண்டு ஆண்டுகள் | விஞ்ஞானம், கணிதம், இரண்டையும் விருப்பப் பாடங்களாக எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமானதொரு தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 25 கம்மியர் (வானொலி, டெலிவிஷன்) | இரண்டு ஆண்டுகள் | விஞ்ஞானம், கணிதம், இரண்டையும் விருப்பப் பாடங்களாக எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமானதொரு தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 26 மாதிரியமைப்புச் செய்பவர் | இரண்டு ஆண்டுகள் | விஞ்ஞானம், கணிதம், இரண்டையும் விருப்பப் பாடங்களாக எடுத்துப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் அல்லது அதற்குச் சமமானதொரு தேர்வில் தேறியிருக்க வேண்டும். |
| 27 கம்பியில்லாத் தந்தி இயக்குபவர் | ஓராண்டு | விஞ்ஞானப் பாடத்தை எடுத்துப் பள்ளி இறுதித் தேர்வு வகுப்புக்கு (மெட்ரிகுலேஷன்) குறைவாக இரண்டு வகுப்புகள் வரையில் படித்திருக்க வேண்டும். |
| 28 கம்மியர் (இயந்திரக் கலப்பை) | ஓராண்டு | விஞ்ஞானப் பாடத்தை எடுத்துப் பள்ளி இறுதித் தேர்வு வகுப்புக்கு (மெட்ரிகுலேஷன்) குறைவாக இரண்டு வகுப்புகள் வரையில் படித்திருக்க வேண்டும். |

## பொறியியல் சம்பந்தப்படாத தொழில்கள்

| | | | |
|---|---|---|---|
| 29 | புத்தகம் கட்டுதல் | ஓராண்டு | பள்ளி இறுதி வகுப்பிற்கு (மெட்ரிகுலேஷன்) அல்லது அதற்குச் சமமான படிப்பிற்குக் குறைவாக இரண்டு வகுப்புகள் படித்திருக்க வேண்டும். |
| 30 | நேர்த்தியான வேலைப்பாடுகள் கொண்ட துணிகளின் நெசவு வேலை | ஓராண்டு | பள்ளி இறுதி வகுப்பிற்கு (மெட்ரிகுலேஷன்) அல்லது அதற்குச் சமமான படிப்பிற்குக் குறைவாக இரண்டு வகுப்புகள் படித்திருக்க வேண்டும். |
| 31 | துணி வெட்டுதல், தையல் வேலை செய்தல் | ஓராண்டு | பள்ளி இறுதி வகுப்பிற்கு (மெட்ரிகுலேஷன்) அல்லது அதற்குச் சமமான படிப்பிற்குக் குறைவாக இரண்டு வகுப்புகள் படித்திருக்க வேண்டும். |
| 32 | கையால் அச்சுக் கோத்தல், படிதிருத்துதல் | ஓராண்டு | பள்ளி இறுதி வகுப்பு (மெட்ரிகுலேஷன்) அல்லது அதற்குச் சமமான படிப்புப் படித்துத் தேறியிருக்க வேண்டும். |
| 33 | சுருக்கெழுத்து, தட்டச்சுமுறை (ஆங்கிலம்)—முழு நேரம், பகுதி நேரம். | ஷை | முழு நேரம்<br>பள்ளி இறுதித் தேர்வு (மெட்ரிகுலேஷன்) அல்லது அதற்குச் சமமான தேர்வில் தேறியிருக்க வேண்டும்.<br>பகுதி நேரம்<br>பள்ளி இறுதித் தேர்வில் தேறியிருத்தலுடன் தட்டச்சில் நிமிடத்திற்கு 25 சொற்களும், சுருக்கெழுத்தில் அறிவும் இருக்க வேண்டும். |

| | தொழிற் பயிற்சி நிலையங்கள். | அரிசன/ஆதிவாசி மாணவர்களுக்கான ஒதுக்கப்பட்ட இடங்கள் அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது. | பயிற்சி அளிக்கப்படும் தொழில் தொடர் எண். |
|---|---|---|---|
| 1 | கிண்டி, சென்னை-32 | (50) | 4, 16, 17, 18 மற்றும் 22. |
| 2 | அம்பத்தூர், சென்னை-53 | (98) | 1, 2, 3, 4, 6, 10, 14, 16, 17, 20, 21, 23, 24, 25 மற்றும் 27. |
| 3 | வட சென்னை, சென்னை-21 | (67) | 1, 3, 4, 6, 7, 11, 13, 15, 16, 17, 19, 23, 24 மற்றும் 26. |
| 4 | செங்கற்பட்டு | (68) | 4, 6, 7, 8, 10, 14, 15, 16, மற்றும் 17. |
| 5 | உளுந்தூர்ப்பேட்டை (தென் ஆர்க்காடு மாவட்டம்) | (34) | 4, 10, 14, 15, 16 மற்றும் 17. |
| 6 | கடலூர் | (30) | 1, 4, 7, 11, 15, 16 மற்றும் 17. |
| 7 | நாகைப்பட்டினம் | (45) | 3, 4, 7, 11, 15, 16 மற்றும் 17. |
| 8 | தஞ்சாவூர் | (43) | 1, 3, 4, 6, 10, 15 மற்றும் 16. |
| 9 | அரியலூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | (39) | 4, 10, 14, 15, 16, 17, 20, 24, மற்றும் 28. |
| 10 | புதுக்கோட்டை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | (29) | 4, 7, 15, 16, 17 மற்றும் 21. |
| 11 | திருச்சிராப்பள்ளி | (140) | 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 14, 15, 16, 20, 21 மற்றும் 26. |
| 12 | மதுரை | (139) | 1, 3, 4, 7, 8, 10, 11, 14, 15, 16, 17, 20, 21, 26, 29, 33 மற்றும் 34. |
| 13 | தேனி (மதுரை மாவட்டம்) | (28) | 4, 5, 7, 15, 16, 20 மற்றும் 25 |
| 14 | திண்டுக்கல் | (34) | 4, 7, 9, 15, 16 மற்றும் 17. |
| 15 | விருதுநகர் | (32) | 3, 4, 7, 11, 15 மற்றும் 17. |
| 16 | பரமக்குடி | (32) | 3, 4, 10, 15, 16 மற்றும் 17. |
| 17 | காரைக்குடி | (30) | 4, 5, 7, 14, 15, 16 மற்றும் 17. |
| 18 | பேட்டை (திருநெல்வேலி) | (87) | 4, 8, 10, 11, 15, 16 மற்றும் 17. |
| 19 | திருச்செந்தூர் | (41) | 1, 3, 4, 10, 11, 14, 15, 16 மற்றும் 17. |

| | தொழிற் பயிற்சி நிலையங்கள். | அரிசன/ஆதிவாசி மாணவர்களுக்கான ஒதுக்கப்பட்ட இடங்கள் அடைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது. | பயிற்சி அளிக்கப்படும் தொழில் தொடர் எண். |
|---|---|---|---|
| 20 | தூத்துக்குடி .. .. .. .. .. .. .. .. | (33) | 4, 7, 12, 13, 15, 16 மற்றும் 20. |
| 21 | நாகர்கோயில் .. .. .. .. .. .. .. .. | (32) | 4, 10, 16, 17, 19 மற்றும் 23. |
| 22 | வேலூர் .. .. .. .. .. .. .. .. | (62) | 3, 4, 7, 8, 10, 14, 15, 16, 17, 20 மற்றும் 23. |
| 23 | திருவண்ணாமலை .. .. .. .. .. .. .. | (32) | 4, 7, 10, 15, 16 மற்றும் 20. |
| 24 | ஓசூர் (தருமபுரி மாவட்டம்) .. .. .. .. .. .. | (35) | 4, 7, 10, 15, 16, 17 மற்றும் 21. |
| 25 | மேட்டூர் அணை .. .. .. .. .. .. .. | (29) | 4, 7, 14, 15, 16 மற்றும் 20. |
| 26 | சேலம் .. .. .. .. .. .. .. .. | (69) | 1, 4, 5, 6, 7, 10, 11, 15, 16, 17 மற்றும் 20. |
| 27 | தாராபுரம் (கோயம்புத்தூர் மாவட்டம்) .. .. .. .. | (29) | 1, 3, 4, 7, 15 மற்றும் 17. |
| 28 | கோயம்புத்தூர் .. .. .. .. .. .. .. .. | (85) | 3, 4, 5, 6, 8, 10, 11, 14, 15, 16, 17, 20, 21 மற்றும் 25. |
| 29 | ஈரோடு .. .. .. .. .. .. .. .. | (44) | 4, 7, 15, 16, 17 மற்றும் 20. |
| 30 | கூனூர் .. .. .. .. .. .. .. .. | (35) | 1, 3, 4, 10, 15, 17 மற்றும் 20. |
| 31 | தொழிற் பயிற்சி நிறுவனம் ஸ்திரி சேவா மந்திர், சென்னை-17 (மகளிர்க்கு மட்டும்) | (36) | 21, 25, 29, 30, 31, 32 மற்றும் 34 (முழு நேரம் மட்டும்). |

வயது :

1—8—1972-ல் விண்ணப்பதாரர்களின் வயது 15-க்குக் குறையாமலும் 25-க்கு மேற்போகாமலும் இருக்க வேண்டும். இருந்தாலும் வயது வரம்பு கீழ்க் கண்டபடி தளர்த்தப்படும்.

(1) அரிசன/ஆதிவாசிகளுக்கு 27 வயது வரை.

(2) தொழிற் பயிற்சி நிலையங்கள், பொறியியல் கல்லூரிகள், பல தொழிற் பயிற்சி பள்ளிகள் முதலியவற்றில் முனைப்புப் பயிற்சித் திட்டத்தின் கீழ் குறுகிய காலப் படிப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கு 26½ வயது வரை.

(3) முன்னாள் இராணுவப் பணியினருக்கு 45 வயது வரை.

(4) பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கும் கிழக்குப் பாகிஸ்தானத்திலிருந்து குடிபெயர்ந்து வந்தோருக்கும் தேவைப்பட்ட அளவிற்கும்.

தேர்வு முறை :

தேர்வுக்கென்று நியமிக்கப்பட்ட ஒரு குழுவால் விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தேவைப்பட்டால் தேர்வுக்கு முன் திறனாய்வுச் சோதனைக்கு வர வேண்டியிருக்கும்.

ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு தொழிலிலும் உள்ள இருக்கைகளில் 18 சதம் அரிசன/ஆதிவாசிகளுக்கும், 31 சதம் பின்னிலை வகுப்பினருக்கும், 5 சதம் பர்மா இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கும், கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து குடி பெயர்ந்து வந்தோருக்கும், 5 இருக்கைகள் (மொத்தமாக) முன்னாள் இராணுவப் பணியினருக்கும் ஒதுக்கப்படும்.

10 சதவீத இடங்கள் தொழிற்சாலைகளால் அனுப்பப்படும் நபர்களுக்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்கப்படும்.—

(1) தொழில் அதிபர்களால் அனுப்பப்படும் மாணவர்கள் தமிழ் நாட்டில் வசிப்பவர்களாக இருக்க வேண்டும்.

(2) மேலும் சம்பந்தப்பட்ட தொழிற் பயிற்சி முதல்வர்களுக்கு அம்மாணவர்களைப் பயிற்சி முடிந்ததும் தங்களதுதொழிற்சாலையில் வேலை பயில்வோர் சட்டத்தின் கீழ் ( 1961 Apprentices Act ) பயிற்சிக்குச் சேர்த்துக் கொள்வதாகவும் அப்பயிற்சி முடிந்ததும் அவர்களுடைய தொழிற்சாலையிலேயே தகுந்த வேலையில் அமர்த்திக் கொள்வதாகவும் சம்பந்தப்பட்ட தொழிற் அதிபர்களிடமிருந்து ஒரு பொறுப்பேற்றல் கடிதம் தர வேண்டும்.

(3) இவ்வாறு தொழில் அதிபர்களால் அனுப்பப்படும் நபர்கள் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின்கீழ் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டுத் தேர்வுக் குழுவால் சேர்த்துக் கொள்ளத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

இந்த 10 சதவீதம் ஒதுக்கல், பின்னிலை வகுப்பினர் (முன்னாள்) இராணுவத்தினர், அரிசன/ஆதிவாசியினர் மற்றும் சிலோன்,.பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தோர் ஆகியோருக்கு ஒதுக்கப்படும் இடங்களோடு அடங்கியுள்ளது.

பயிற்சி இலவசம்; சில தகுதியுள்ள பயிற்சியாளருக்கு உதவிப் பணம் மாதம் ரூ. 25 கொடுக்கப்படும். நிலையங்களில் சேர்ந்த எல்லா அரிசன/ஆதிவாசி பயிற்சியாளருக்கும் உதவிப் பணம் மாதம் ரூ. 45 கொடுக்கப்படும். பர்மா இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கும், கிழக்கு பாகிஸ்தானத்திலிருந்து குடி பெயர்ந்து வந்தோருக்கும் நிர்ணயிக்கப்பட்ட சில நிபந்தனைகளுக்குட்பட்டு உதவிப் பணம் மாதம் ரூ. 55 அல்லது ரூ. 15 கொடுக்கப்படும்.

விண்ணப்பப் படிவமும், விளக்கக் குறிப்பும் தொழிற் பயிற்சி நிலைய முதல்வரிடமோ அல்லது மாவட்டத் தொழிலமர்த்தும் அதிகாரியிடமிருந்தோ ரூ. 0.50 காசு மதிப்புள்ள கோடிட்ட அஞ்சலகப் பண விடை (போஸ்டல் ஆர்டர்)-யுடன் 50+5=55 காசு அஞ்சல் தலையுடன் தன் முகவரியிட்ட உறை (23 செ.மீ. × 10 செ.மீ.) உடன் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமும், சான்றிதழ்களும் எந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தில் சேர விரும்புகிறீரோ அந்த நிலைய முதல்வருக்கு அனுப்ப வேண்டும்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுபவர்கள் தங்கள் செலவிலேயே வரவேண்டியிருக்கும். நேர்முகத் தேர்வுக்கு வருவதனால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்பது நிச்சயமில்லை.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நிலைய முதல்வர்கள் பெறும் கடைசி நாள் 24—6—1972.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
சென்னை-5.

(க-28)

## ஒப்பந்தப் புள்ளி

### உதகமண்டலம் நகராட்சி

1972-ஆம் வருடம் ஜுன்மாதம் 16 ஆம் தேதி மாலை 3-30 மணிக்குள் 1972–73-ஆம் வருடத்திற்குத் தேவையான தண்ணீர் விநியோகம் செய்யும் கருவிகளை வாங்க ஒப்பந்தப் புள்ளிகளை உதகை நகராட்சிப் பொறியரால் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிக்குரிய நிபந்தனைகளும், பத்திரங்களும் 14—6—1972-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 8.24 நகராட்சி கருவூலத்தில் செலுத்தி அன்று மாலைக்குள் ஒப்பந்தப் பத்திரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,

(த·41) உதகமண்டலம் நகராட்சி.

## ஒப்பந்தப் புள்ளி

### உதகமண்டலம் நகராட்சி

1972 ஆம்வருடம் ஜுன்மாதம் 16 ஆம் தேதி மாலை 3-30 மணிக்குள் 1972–73-ம் வருடத்திற்குத் தேவையான தண்ணீர் விநியோகம் செய்யும் குழாய்களை வாங்க ஒப்பந்தப் புள்ளிகளை உதகை நகராட்சிப் பொறியரால் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிக் குரிய நிபந்தனைகளும், பத்திரங்களும் 14—6—1972-ஆம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 6.18 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி அன்று மாலைக்குள் பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆணையர்,

(த.40) உதகமண்டலம் நகராட்சி.

## ஏல விற்பனை

### கோவை நகராட்சி

கீழ்க்கண்ட கடைகளில் 31—3—1975 வரை வியாபாரம் செய்யும் உரிமையை 15—6—1972-ஆம் தேதி காலை 11-00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். சால்வன்சி இல்லாதவர்கள் டிபாசிட்டை இரட்டிப்பாகக் கட்டி ஏலம் கூறவும். மற்ற நிபந்தனைகளை அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளவும்.

(1) தியாகி குமரன் மார்க்கெட், வண்டிப் பேட்டைக்கு வெளியிலுள்ள புகைபோடும் கடைகள்.—1 முதல் 6 வரை டிபாசிட் ரூ. 200.

(2) பட்டு நூல்காரச் சந்து.—8-ம் எண் கடை—டிபாசிட் ரூ. 100.

(த.39.)

ஆணையர்.

## ஒப்பந்தப் புள்ளி

### நாகர் கோவில் நகராட்சி

இந்நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவின் பார உந்து எண் எம்.டி.கே. 1628-ஐ பழுது பார்க்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—6—1972 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். பழுது தீர்க்க வேண்டிய விவரங்கள், நிபந்தனைகள் முதலியன விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ நகர் நல அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற்கொண்டு விவரங்கள் தேவைப்பட்டால் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

பொறுப்புத் தொகை.—ரூ. 100.

### நிபந்தனைகள்

(1) குறிப்பிடப் பட்டிருக்கும் காலத்திற்குப் பின் கிடைக்கப் பெற்றதும், பொறுப்புத் தொகை இல்லாததுமான ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

(2) உதிரி உறுப்புகளின் விலையும், வேலைக் கூலியும் தனித் தனியாகக் குறிப்பிடவேண்டும்.

(3) ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப் பட்டிருக்கும் வேலையைத் தவிரக் கூடுதல் வேலையோ, கூடுதல் உதிரி உறுப்புகளோ அனுமதிக்கப்படமாட்டாது.

(4) எல்லாப் பழுது வேலைகளும் நகராட்சி வளாகத்தினுள் செய்யப்பட வேண்டும்.

(5) பழுது வேலைகள் நகராட்சிப் பொறியர், ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்குட்பட்டும், தகுதிச் சான்றிதழ் பெறத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

(த. 33)

ஆணையர்.

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

சென்னை மின்சார அமைப்பு (விநியோகப் பிரிவு)

சாற்றுக் குறிப்பெண்—ஏலம் 29.

சென்னை மின்சார (விநியோகப் பிரிவு) திட்டத்தில் ஏலம் நடத்துவதற்கான ஒப்பந்த விவரம்.

1. Underground Cable scraps and other non-ferrous scraps
2. Iron and steel cut bits scraps of various categories both M. S. and G.I.
3. Empty tins of all capacities up to 45 gallons
4. Empty wooden cable and conductor drums.
5. Empty cement Gunny bags.
6. Scraps Motor and Cycle Tyres of all sizes.
7. Fused Lamps, Chokes and Starters of sizes.
8. Condemned machineries.

மேலே குறிப்பிட்டுள்ள மின்வாரியத்திற்குச் சொந்தமான கழிவுச் சாமான்கள், காலி டின்கள், மற்றும் வழக்கிழந்த உபயோகமில்லாத பொருட்களும், எந்தத் தொகுதிகளையும் வாங்குவதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழ்க் கையொப்பமிட்டவரால் 7—6—1972-ம் தேதி பகல் 12 மணி வரை வரவேற்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள விற்பனைக்கான சாமான்கள் மயிலாப்பூர், தண்டையார்ப்பேட்டை, குக்ஸ் ரோடு, பல்லாவரம், ஆகிய இடங்களில் உள்ள வாரியத்திற்குச் சொந்தமான பண்டகசாலைகளில் உள்ளன. மூடி முத்திரையிட்ட உறைகளின் மேல் " கழிவுச் சாமான்கள், காலி டின்கள் மற்றும் வழக்கிழந்த பொருட்களை வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளி" என்று தவறாமல் எழுதி அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட தேதி நேரம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளி கண்டிப்பாக நிராகரிக்கப்படும். குறிப்பிடுகை மற்றும் ஒப்பந்தப் புள்ளி விவரம், விற்பனை நிபந்தனைகள் நகல் வேண்டுவோர் நகல் ஒன்றுக்கு ரூபாய் 5 (ஐந்து ரூபாய் மட்டும்) கணக்கு அலுவலர், சென்னை மின்சார அமைப்பு (விநியோகப் பிரிவு), 155, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ அல்லது பண அஞ்சல் அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. அஞ்சலில் அவை தவற நேரிட்டாலோ அல்லது தாமதம் ஏற்பட்டாலோ அவற்றிற்கு மின்சார வாரியம் பொறுப்பாகாது.

ஒப்பந்தப் புள்ளியில் ஒவ்வொரு வகைக்கும் குறிப்பிடப்பட்ட கட்டுத் தொகையை "கணக்கு அலுவலர், சென்னை மின் இயக்கம், வழங்கு துறை, 155, அண்ணாசாலை, சென்னை-2" என்ற முகவரியில் பணமாகவோ, டிமாண்டு டிராப்டாகவோ செலுத்தப்பட வேண்டும். கட்டுத் தொகை செலுத்துவதற்குப் பண ரசீது அல்லது டிமாண்ட் டிராப்ட்டு இல்லாமல் வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும். கட்டுத் தொகைக்கு எந்த வட்டியும் இருக்காது.

ஒப்பந்தப் புள்ளிகள் 7—6—1972 அன்று மாலை 3-00 மணிக்கு அந்தச் சமயத்தில் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். கீழே கையொப்பமிட்டவருக்கு, எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ உரிமை உண்டு.

விற்பனை மின் துறை தலைமைப் பொறியாளர் அனுமதிக்குக் கட்டுப்பட்டது.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை மின் இயக்கம்,
வழங்குதுறை.

(த.25)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

இராமநாதபுரம் மின்திட்டம்

பரமக்குடி.

இராமநாதபுரம் மின்திட்டம், பரமக்குடி மத்திய பண்டகசாலையில் உள்ள நிராகரிக்கப்பட்ட உந்து வண்டிகள் (லாரி எம்.டி.யு. 5157 டிம்பர்கள் எம்.டி.யி. 3509 மற்றும் 3508) மற்றும் கழிவு இரும்பு, செம்பு, அலுமினியம் இதர பொருட்களையும் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 14—6—1972 மாலை 1-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் 14—6—1972 மாலை 2-00 மணிக்கு விரும்பி வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட முழு விவரங்களடங்கிய தஸ்தாவேஜுகள் அனைத்தும் மதுரை, கோசாகுளம் புதூர் மத்திய அலுவலகத்தில் 26—5—1972 முதல் 12—6—1972 முடிய எந்த வேலை நாட்களிலும் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலே கண்ட ஒப்பந்தப்புள்ளிக்குக் கட்டுத் தொகை ரூ. 500 (ரூபாய் ஐநூறு மட்டும்) இராமநாதபுரம் மின்திட்டம் தலைமைக் கணக்காயர் (செலவினம்) அவர்களிடம் செலுத்தி, செலுத்தியதற்கான ரசீது அல்லது டிராப்டை ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோடு அனுப்பி வைக்க வேண்டும். கட்டுத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளையும் கழிவுப் பொருட்களின் முழு விவரங்களையும் அறிய விரும்புவோர் நேராகவோ அல்லது பணவிடைத் தாள் மூலமாகவோ ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) தலைமைக் கணக்காயர் (செலவினம்), இராமநாதபுரம் மின்திட்டம், கோசாகுளம் புதூர், மதுரை-7, அவர்களிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி விலையான ரூபாய் ஐந்தும் திருப்பித்தரத் தக்கதல்ல.

ஒப்பந்தப்புள்ளி நகல் விண்ணப்பதாரர்களுக்குச் சாதாரண அஞ்சலில் தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயாணத்தின்போது ஒப்பந்தப்புள்ளி நகல் தவறினால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது. பொருட்களைப் பார்வையிட விரும்புவோர், பரமக்குடி மத்தியப் பண்டகசாலையில் அலுவலக தினங்களில் அலுவலக நேரங்களில் அனுமதிக்கப்படுவார்கள்.

ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்தப்புள்ளி நகல் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கதல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
இராமநாதபுரம் மின்திட்டம்.

(த. 15)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

பொள்ளாச்சி நகராட்சிக்குத் தமிழ் தட்டெழுத்து இயந்திரம் ஒன்றும், செஸ்டெட்னர் பிரதி எடுக்கும் இயந்திரம் ஒன்றும் விநியோகம் செய்ய மூடி முத்திரை வைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 15—6—1972-ம் தேதி மாலை 4-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும். அவை அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். விண்ணப்பங்களின் பேரில் விரிவான விள்க்க ஒப்பந்தப்புள்ளிப் பாரங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பி. கே. முகம்மது அலி,
ஆணையர்.

(த.1)

## ஏல விளம்பரம்

### மாவட்டக் கால்நடைப் பண்ணை

திருநெல்வேலி-8

திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ராமய்யம்பட்டி எல்லைக்குள் பலவித அளவுகள் உள்ள 220 உடை மரங்களை 20—6—1972 காலை 10.00 மணிக்குப் பண்ணையின் அலுவலகத்தில் ஏலம் விடப்படும். மேற்படி மரங்களை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

ஏலம் சம்பந்தமான மற்ற விவரங்களைக் கீழ்க் குறிப்பிட்ட அதிகாரியிடம் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்பாளர்,
மாவட்டக் கால்நடைப்பண்ணை,
திருநெல்வேலி—8.

(த.8)

## அறிவிப்பு

### அம்பத்தூர் நகரியம்

அம்பத்தூர், சென்னை 53

1920-ம் வருட தமிழ்நாடு ஜில்லா முனிசிபல் சட்டத்தின் 309-வது விதிக்கேற்ப அம்பத்தூர் நகராட்சி மன்றத்தின் 26—3—1971 தேதியில் தீர்மான எண் 21-ல் முடிவெடுக்கப்பட்ட தீர்மானத்திற் கேற்பவும் அம்பத்தூர் நகரியத்தின் ஆட்சிமொழியாக 1—8—1972 முதல் தமிழாகவே இருக்கவும் அதற்கேற்ப கீழ்க்கண்ட உப விதிகள் இயற்றவும் எண்ணப்பட்டுள்ளதை பொதுமக்களின் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது. இது விஷயத்தில் எந்தவிதமான எதிர் கருத்தோ ஆலோசனைகளோ பொதுமக்கள் தெரிவிக்க விரும்பினால் அவர்கள் தங்களுடைய எண்ணத்தை 30—6—1972-க்குள் நகரியக் குழுவின்புனர் பரிசோதனைக்காக அனுப்பலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உப விதிகள்

1. இந்த நகராட்சியின் ஆட்சிமொழி தமிழாக இருக்க வேண்டும். அலுவலகத்திலிருந்து அனுப்பப்பெறும் எல்லா கடிதங்களும் அப்பொழுதிலிருந்து தமிழில் இருக்க வேண்டும்.

2. ஆங்கிலம் கீழ்க்கண்டவைகளுக்கு உபயோகிக்க வேண்டும்.

(i) சம்பளப்பட்டியல்கள், உதவிச் சம்பளப்பட்டியல்கள் (Stipend bills) சில்லரைச் செலவுப் பட்டியல்கள், பிரயாணப்படி பட்டியல்கள், கஜானா, சென்னை தலநிதி தணிக்கைத்துறை, தலைமை ஆய்வாளர், அரசாங்கக் கணக்குத்துறை தலைவர் ஆகியவர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்கள் ஆகிய இவைகள்.

(ii) அரசாங்கத்துறைத் தலைவர்கள், ராஜ்ய அரசாங்கம், கிராம நீதிச்சபை அல்லாத மற்ற நீதிமன்றங்கள், மத்திய அரசாங்க அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு அனுப்பப்பெறும் கடிதங்கள்.

(iii) சட்டவிதிகளின் கீழ் முறையீடு அல்லது மாற்றத்திற்கு உட்பட்ட உத்திரவுகள்.

டி. எம். வெங்கட்டராமன்,
நிருவாக அதிகாரி.

(த.9)

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

சேலம் நகராட்சியின் அடியில் கண்ட வேலையைச் செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையர் அவர்களால் 13—6—1972-ஆம் தேதி மாலை 3-00 மணிவரைப் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலையே 3-15 மணியளவில் திறக்கப்படும்.

குறிப்பு :

வைப்புத் தொகையையும் ஒப்பந்தப்புள்ளி ஷெட்யூல் கட்டணம் ரூ. 2-ம் நகராட்சிக் கருவூலத்தில் 12—6—1972-ம் தேதிக்குள் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி ஷெட்யூல் பெற்றுக்கொள்ள வேண்டும். ஷெட்யூலில் மொத்தத் தொகையைக் குறிக்கும் பகுதியுட்பட அனைத்துப் பகுதிகளும் பூர்த்தி செய்தல் வேண்டும். அப்படிப் பூர்த்தி செய்யாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.

வேலையின் விவரம்—மணக்காடு நகராட்சி உயர்நிலைப்பள்ளியின் தற்போதைய கட்டடத்தின் மீது முதல்மாடி கட்டுதல்.

மதிப்பீட்டுத் தொகை—ரூ. 27,000.

வைப்புத் தொகை—ரூ. 675.

வேலை செய்து முடிக்க வேண்டிய காலம்—இரண்டு மாதம்.

பி. ஹமீதலி,
ஆணையர்.

(த. 5)

## ஒப்பந்தப் புள்ளி

### பாளையங்கோட்டை நகராட்சி

இந்நகராட்சிக்குத் தேவையான பதிவேடுகள், மற்றும் நமூனக்கள் அச்சிட்டு வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 15–6–1972-ம் தேதி மாலை 4 மணிவரை வரவழைக்கப்படுகிறது. அவைகள் அன்று 4-30-க்கு திறக்கப்படும். மாதிரி முதலிய தேவையான விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. ஜனார்த்தனம்,
ஆணையர்.

(த.3)

## உணவுப்பொருள் வழங்கு துறை

மேடை அளவு கோல் பராமரிப்பு பணி.
யூ3/21360/71.

சென்னை நகரத்திலும் மற்ற மாவட்டங்களிலும் உள்ள அரசாங்கக் கிடங்குகளிலும் விற்பனை நிலையங்களிலும் இருக்கும் மேடை அளவு கோல்களை (Platform Scales) சுத்தம் செய்தல் முதலிய பராமரிப்புப் பணியை ஒப்பந்த மூலமாக நிறைவேற்றுவதற்கான அரசுக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்த நிபந்தனைகள் அடங்கிய விவரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ள வேண்டியது.

2. ஒப்பந்தப் பாரங்களும் இவ்வலுவலகத்தில் கிடைக்கும். ஒப்பந்தப்பாரத்தின் விலை ரூ. 5ம், 3½ சதவிகித விற்பனை வரியும் ஆக ரூ. 5.18 ரிசர்வ் பாங்கில் " Personal Account of the commissoner of civil supplies " என்ற தலைப்பில் செலுத்திச் செலானை இவ்வலுவலகத்தில் கொடுத்து ஒப்பந்தப் பாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியது.

3. அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் சேப்பாக்கம் (சென்னை-6) எழிலகம் கட்டடத்திலுள்ள உணவுப் பொருள் வழங்குதுறை துணை ஆணையர் (விநியோகம்) அவர்களால் 20-6-1972 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு, அவர்களால் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் பிரிக்கப்படும்.

4. மேற்படி ஒப்பந்தங்கள் உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையர் அவர்களால் ஒப்புதல் பெற்றே முடிவு செய்யப்படும்.

5. மேடை அளவு கோல்கள் இருக்கும் கிடங்கு விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அநுபந்தத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆணையர்,
உணவுப்பொருள் வழங்குதுறை,
சென்னை-5.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1 சென்னை .. .. .. .. | உதவி ஆணையாளர் அலுவலகம், ஈ. டி. மில்ஸ், சென்னை-7. | ஜி. 654449 | |
| | | ஜி. 655936 | |
| | | ஜி. 655945 | |
| | | ஜி. 654570 | 500 கி.கி. |
| | | ஜி. 654565 | |
| | | ஜி. 642972 | |
| | | ஜி. 64714 | |
| | | ஜி. 655954 | |
| | | ஜி. 654447 | |
| | | ஜி. 64701 | |
| | | ஜி. 645777 | |
| | | ஜி. 65162 | 300 கி.கி. |
| | | ஜி. 65189 | |
| | அண்ணாநகர் கிடங்கு யூனிட்-2 .. .. .. | ஜி. 65951 | |
| | | ஜி. 651068 | |
| | | ஜி. 653213 | |
| | | ஜி. 651017 | 500 கி.கி. |
| | | ஜி. 651019 | |
| | | ஜி. 651008 | |
| | | ஜி. 653051 | |
| | | ஜி. 651023 | |
| | | ஜி. 651058 | |
| | | ஜி. 64739 | 300 கி.கி. |
| | தங்கசாலை .. .. .. .. | ஜி. 64672 | |
| | | ஜி. 64712 | |
| | | ஜி. 654414 | |
| | | ஜி. 654433 | 500 கி.கி. |
| | | ஜி. 655926 | |
| | | ஜி. 651007 | |
| | கோபாலபுரம் .. .. .. .. | ஜி. 64568 | |
| | | ஜி. 645244 | 300 கி.கி. |
| | | ஜி. 653054 | |
| | | ஜி. 654407 | |
| | | ஜி. 655957 | |
| | | ஜி. 6554582 | 500 கி.கி. |
| | | ஜி. 653202 | |
| | | ஜி. 655950 | |
| | எஸ் கிடங்கு, ஈ.டி. மில்ஸ் சென்னை-7 .. | ஜி. 645661 | |
| | | ஜி. 65420 | 300 கி.கி. |
| | | ஜி. 645775 | |
| | | ஜி. 642930 | |
| | | ஜி. 653057 | 500 கி.கி. |
| | | ஜி. 655952 | |
| | | ஜி. 645737 | 300 கி.கி. |
| | நந்தனம் .. .. .. .. | ஜி. 654476 | 500 கி.கி. |
| | அண்ணாநகர் கிடங்கு யூனிட் 2 .. .. | ஜி. 655944 | 500 கி.கி. |

| | | | |
|---|---|---|---|
| சென்னை | நந்தனம் .. .. .. .. | சி. 653221 | |
| | | சி. 653048 | 500 இ.இ. |
| | | சி. 653197 | |
| | ஈ. டி. மில்ஸ். 23 .. .. .. .. | சி. 653223 | |
| | | சி. 654396 | |
| | | சி. 654443 | 500 இ.இ. |
| | | சி. 654423 | |
| | | சி. 654450 | |
| | ஈ. டி. மில்ஸ் அலுவலகம் .. .. .. | சி. 655925 | 500 இ.இ. |
| | ஈ. டி. மில்ஸ். 23 .. .. .. .. | சி. 6917062 | 1000 இ.இ. |
| | தங்கசாலை | சி. 708720 | |
| | அரசாங்க பங்கீட்டு கடை அடையார் .. | சி. 691031 | |
| | | சி. 663925 | |
| | | சி. 66636 | 300 இ.இ. |
| | | சி. 66170 | |
| | | சி. 66174 | |
| | | சி. 664211 | |
| | நந்தனம் .. .. .. .. | சி. 691092 | |
| | தங்கசாலை .. .. .. .. | சி. 66601 | 300 இ.இ. |
| | | சி. 6910680 | |
| | சி. என். கே. ரோடு .. .. .. | சி. 66390 | |
| | கோபாலபுரம் .. .. .. .. | சி. 994 | 300 சி.இ. |
| | ஹாரிங்டன் ரோடு, சென்னை–31 .. .. | சி. 66659 | |
| | எம். பி. டி. கோட்டர்ஸ் சென்னை–81 .. | சி. 6910054 | 300 இ.இ. |
| | | சி. 6910290 | |
| | அரசாங்க பங்கீட்டுக்கடை வெங்கடேசபுரம் .. | எஎசி. 3701 | |
| | | சி. 66620 | 300 இ.இ. |
| | | சி. 690122 | |
| | எல். கிடங்கு .. .. .. .. | சி. 643185 | 500 இ.இ |
| | | சி. 64709 | |
| 2. கோயம்புத்தூர் .. .. .. | கோயம்புத்தூர் வடக்கு .. .. .. | சி. 653096 | |
| | | சி. 642957 | |
| | | சி. 676307 | |
| | | சி. 65946 | 500 இ.இ. |
| | | சி. 664536 | |
| | | சி. 632750 | |
| | | சி. 686490 | |
| | | சி. 676314 | |
| 3. தஞ்சாவூர் .. .. .. .. | சீர்காழி .. .. .. .. | சி. 68829 | |
| | பட்டுக்கோட்டை .. .. .. .. | சி. 688919 | |
| | அம்மாப்பேட்டை .. .. .. .. | சி. 688134 | |
| | அதிகாரிபூதலூர் .. .. .. .. | சி. 688136 | |
| | கொரடாச்சேரி .. .. .. .. | சி. 688908 | |
| | | சி. 663632 | |
| | நன்னிலம் .. .. .. .. .. | சி. 645853 | 300 இ.இ. |
| | தஞ்சாவூர் .. .. .. .. .. | சி. 644410 | |
| | | சி. 663277 | |
| | | சி. 663869 | |
| | | சி. 663731 | |
| | | சி. 663660 | |
| | | சி. 663477 | |
| | அரந்தாங்கி .. .. .. .. | சி. 645846 | |
| 4. திருச்சிராப்பள்ளி .. .. .. | சி. டபுள்யூ. சி. திருச்சிராப்பள்ளி .. .. | சி. 645846 | 300 இ.இ. |
| 5. மதுரை .. .. .. .. | பழனி .. .. .. .. | சி. 679081 | |
| | | சி. 876423 | |
| | திண்டுக்கல் .. .. .. .. | சி. 679247 | |
| | | சி. 679230 | 300 இ.இ. |
| | மதுரை .. .. .. .. | சி. 679175 | |
| | | சி. 679198 | |
| | | சி. 879138 | |
| | | சி. 679253 | |
| 6. இராமநாதபுரம் .. .. .. | இராமநாதபுரம் .. .. .. .. | சி. 689545 | |
| | | சி. 689902 | |
| | பரமக்குடி .. .. .. .. | சி. 689328 | |
| | | சி. 689917 | 300 இ.இ. |
| | காரைக்குடி .. .. .. .. | சி. 689544 | |
| | | சி. 689896 | |

| | | | |
|---|---|---|---|
| 7. திருநெல்வேலி | திருநெல்வேலி | சி. 663598 | |
| | தென்காசி | சி. 663789 | |
| | செங்கோட்டை | சி. 663564 | |
| | அம்பாசமுத்திரம் | சி. 663785 | |
| | நாங்குநேரி | சி. 663731 | 300 இ.இ. |
| | திருச்செந்தூர் | சி. 663929 | |
| | ஸ்ரீவைகுண்டம் | சி. 663786 | |
| | தூத்துக்குடி | சி. 663681 | |
| | கோவில்பட்டி | சி. 663659 | |
| | சங்கரன்கோவில் | சி. 663669 | |
| 8. செங்கற்பட்டு | திருத்தணி | எம். 048 | |
| | | எம். 035 | |
| | உத்திரமேரூர் | எம். 038 | |
| | ஸ்ரீபெரும்புதூர் | எம். 061 | |
| | திருவள்ளூர் | எம். 013 | 300 இ.இ. |
| | | எம். 065 | |
| | காஞ்சிபுரம் | எம். 008 | |
| | | எம். 016 | |
| 9 கன்னியாகுமரி | அகதிஸ்வரம் தாலுகா | சி. 6 5042 | |
| | அலுவலகம் | சி. 85191 | |
| | நாகர்கோயில் | சி. 65363 | |
| | | சி. 65133 | |
| | கல்குளம் தாலுகா | சி. 65361 | |
| | அலுவலகம் | சி. 65107 | |
| | துக்கடை | சி. 643858 | 300 இ.இ. |
| | தூவாலா தாலுகா | சி. 645015 | |
| | அலுவலகம் | சி. 641650 | |
| | பூரப்பாண்டி | | |
| | விளவன்கோடு தாலுகா | | |
| | அலுவலகம் | | |
| | குழித்துறை | சி. 64[illegible]745 | |

(த. 37)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, அவர்களால் கோயம்புத்தூர்-2 நீலகிரி வட்டம், கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்தில் 16—6—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.—திருப்பூர் அரசு கலைக் கல்லூரியில் மூன்றும் ஆண்டுப் பட்டப்படிப்பு மாணவர்கள் படிப்பு வசதிக்காக மேலும் கட்டடங்கள் கட்டுதல்.

ஒப்பந்தப் படிவம்.—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை.—ரூ, 12,000.

ஒப்பந்தப் பத்திரங்களின் விலை வரைபடத்துடன்.—ரூ. 20·70

வேலை முடிக்க வேண்டிய காலம்.—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேலாளர், திருவாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களுக்கு, எழுதி மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி (திருப்பித்தரப்பட மாட்டாது) 25—5—1972 முதல் எல்லா வேலைநாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**எம். எஸ். கோபாலகிருஷ்ணன்**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை.

த-56.)

## பயிற்சி

### தொழில் நுட்பக் கல்வித் துறை, கிண்டி
### சென்னை-25

கீழ்க் குறிப்பிடப்பட்ட பாலிடெக்னிக்குகளில், ஆறு மாத கால செய்முறைப் பயிற்சியையும் சேர்த்து $1\frac{1}{2}$ வருட கால டிப்ளமோ படிப்பில் சேருவதற்கும் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

1. நகர் மற்றும் அமைப்புத் திட்டம்.—மத்திய பாலிடெக்னிக், அடையாறு, சென்னை-20.

2. ஆட்டோமொபைல் பொறியியல்.—தமிழ்நாடு பாலிடெக்னிக், மதுரை.

### சேருவதற்குக் குறைந்தபட்சத் தகுதி

1. நகர் மற்றும் கிராம அமைப்புத் திட்டம்.—சிவில் எஞ்சினியரிங் டிப்ளமா.

2. ஆட்டோமைபில் பொறியியல்.—ஆட்டோமொபைல் பொறியியல் அல்லது மெக்கானிக்கல் பொறியியல் டிப்ளமா.

மேற்கண்ட படிப்புகளில் சேருவதற்குச் சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக்களின் முதல்வர்களால் மனுக்கள் பெறுவதற்குக் கடைசி நாள் 12—7—1972.

மேற்குறிப்பிட்ட டிப்ளாமாப் படிப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 50 சதவிகித மாணவர்களுக்கு ரூ. 50 விதம் உதவித் தொகை வழங்கப்படும்.

மனு வடிவங்கள் மற்றும் இதர விவரங்கள், சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக் முதல்வருக்கு எழுதித் தன் முகவரியிட்ட (22 செ.மீ. × 9·5 செ.மீ.) அளவுள்ள உறையில் 35 காசு + 5 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் வில்லைகள் ஒட்டி உடன் வைத்து அனுப்பிப் பெறலாம்.

எழுதி அனுப்புவதுடன், யாருக்கு எழுதுகிறோமோ அந்த பாலிடெக்னிக் முதல்வர் அவர்கள் பெறும் வகையில் கோடிட்ட ரூ. 1 அஞ்சல் ஆணையையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

**இயக்குநர்,**
தொழில் நுட்பக் கல்வி.

(த-24)

## ஒப்பந்தப் புள்ளி

### ஈரோடு நகராட்சி

இந்நகராட்சி குடிநீர் இறைப்பு நிலையத்திலுள்ள 70 குதிரை வேகம், 30 குதிரை வேக மின் உந்துகளுக்குத் தேவைப்படும் ஸ்பேர் சாமான்கள் ரூ. 2,100 செலவில் வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 16—6—1972-ம் தேதி மாலை 4-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு நகராட்சிப் பொறியருக்கு விண்ணப்பிக்கவும்.

**ச. சிதம்பரம், பி. ஏ.**
ஆணையர்.

(த. 7)

## ஒப்பந்தப் புள்ளி

### சாத்தூர் நகராட்சி

கீழேகண்ட ஒப்பந்தங்களுக்கு 15—6—1972 தேதி மாலை 4-00 மணி முடிய ஒப்பந்தங்கள் வரவழைக்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் கொடுப்பவர்கள் நகராட்சி தனி அதிகாரியிடமோ அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரிடமோ கொடுக்கலாம். வரவழைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் அன்று மாலை 4-15-க்கு ஆஜராகியுள்ளவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். காலம் கடந்து வரும் ஒப்பந்தங்கள் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்தம் ஒப்புதல் அலுவலக சட்ட திட்டத்திற்குட்பட்டது.

| ஒப்பந்தங்கள். | கட்டுத் தொகை. |
|---|---|
| (கீழே கண்ட இடத்திற்குப் போரிங் பைப்புகள் போட) | (ரூபாய்.) |
| 1 வண்ணார்பேட்டை | 25 |
| 2 வண்ணார்பேட்டை சுகாதாரப் பணியாளர்கள் காலனி | 25 |
| 3 ஆண்டாள்புரம் | 25 |
| 4 குருலிங்கபுரம் | 25 |
| 5 பைபாஸ்ரோடு மேல்புறம் | 25 |
| 6 நென்மேனி ரோடு பக்கம் | 25 |
| 1 டயர் 600 × 16 (2 எண்ணம்) | 50 |
| டியூப் 600 × 16 (2 எண்ணம்) | |
| 2 பேட்டரி 1 எண்ணம் | 25 |

நிபந்தனைகள்.

1 அயிட்டம் 1 முதல் 6 முடிய உள்ள அயிட்டம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே ஒப்பந்தம் கொடுக்க வேண்டும்.

2 மொத்தம் 60 அடி ஆழத்திற்கு 1¼" அளவு போரிங் பைப் போட ஒவ்வொரு அடிக்கும் என்ன ரேட் என்று குறிப்பிட வேண்டும்.

3 போரிங் பைப்புக்கு வேண்டிய ஒவ்வொரு சாமான்களுக்கும் தனித் தனியே ரேட் கொடுக்க வேண்டும்.

1 டயர், டியூப் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே விலையும் கம்பெனி பெயரும் குறிக்க வேண்டும்.

2 அயிட்டம் 2-க்கு பேட்டரியினுடைய பவரும் கம்பெனி பெயரும் குறிக்க வேண்டும்.

**வி. தாமோதரன்,**
தனி அதிகாரி.

(த.2)

## ஏல விளம்பரம்

### வனத் துறை

அரசினர் சந்தனக்கட்டைகள்

தமிழ்நாடு வனத்துறையினரால் 5—7—1972 புதன்கிழமையன்று, வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் கிடங்கில் சுமார் 475 டன்னும், 7—7—1972 வெள்ளிக்கிழமையன்று கோயம்புத்தூர் மாவட்டம், சத்தியமங்கலம் கிடங்கில் 225 டன்னும் எடையுள்ள சந்தனக்கட்டைகளும் இருப்பிலுள்ள வெள்ளைக் கட்டைகளும் ஏலத்தில் விற்கப்படும்.

விவரங்கள் வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் கோட்ட மாவட்ட வன அலுவலரையும், கோவை மாவட்ட, ஈரோடு-கோவை வடக்கு கோட்ட மாவட்ட வன அலுவலரையும் கேட்டறியலாம்.

**சி. வெங்கிடகிருஷ்ணன்,**
வனப்பாதுகாவலர், சேலம்.

(த-26)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியம்—சுருளியாறு நீர்மின் திட்டம்—Supply of Junglewood planks and scantilings at Ambasamudram குறிப்பு எண் : PS—UTMU-1.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காகவும், வாரியத்தின் சார்பிலும், மேலே குறிப்பிட்டுள்ள குறிப்புகளுடன், ஒப்பந்ததாரரின் பெயரும், மேலுறையில் எழுதப்பட்டு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 21—6—1972 பிற்பகல் 3-00 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன் திறக்கப்படும்.

2. ஒப்பந்தப் புள்ளிப் பிரதிகள் வேண்டுவோர் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 2–10 (ரூபாய் இரண்டும் காசு பத்து மட்டும்) (விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்திக் கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். இத்தொகையானது எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரமாட்டாது.

3. மேலே குறிப்பிட்டுள்ள சப்ளைக்கானகட்டுத்தொகை (EarnestMoney Deposit) ரூ. 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐநூறுமட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் காசோலைகள் (Cheques) ஏற்கப்பட மாட்டா. கட்டுத் தொகையின்றிச் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். டிமாண்ட் டிராப்ட் (Bank Demand Draft) அனுப்பவதானால் ஒப்பந்தம் கொடுப்பதற்கு முன்னதாகவே அனுப்பப்படவேண்டும். இந்த ஒப்பந்தப்புள்ளிக்கான கட்டுத் தொகையை ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தாமல் வேறு ஒப்பந்தப்புள்ளிக்காக ஒப்பந்ததாரரால் கட்டப்பட்ட தொகையையோ, வேறு தொகையையோ ஈடு செய்யக் கோரும் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டவுடன் ஒப்பந்தத்திற்குரியவர் இவ்வலுவலகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களுக்குள் பிணைவைப்புத் தொகையை ( Security Deposit ) செலுத்த வேண்டும். இப்பிணைவைப்புத் தொகை கட்டுத் தொகையுடன் சேர்ந்து வழங்க வேண்டிய பொருளின் மதிப்பில் 5 சதவீதம் இருக்கும். இந்தப் பிணைவைப்புத் தொகைக்கும், கட்டுத் தொகைக்கும் வட்டி தரப்பட மாட்டாது. இந்த மொத்தத் தொகையும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி பொருட்களை திருப்திகரமாக சப்ளை செய்த பிறகு திருப்பித்தரப்படும்.

ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்குரியவர் குறிப்பிட்ட தினங்களுக்குள் பிணைவைப்புத் தொகையைச் செலுத்தத் தவறினாலும் ஒப்பந்தம் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஒப்பந்தப்படி சப்ளை செய்தலிலிருந்து பின் வாங்கினாலும் கட்டுத் தொகை திருப்பிக் தரப்பட மாட்டாது.

5. இவ்வலுவலகத்தின் மனுபாரத்தில் இல்லாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறித்த காலம் தள்ளி வரும் ஒப்பந்தங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. மேலே குறிப்பிட்ட பொருட்கள் சப்ளை செய்தலை சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து வழங்குவதற்கோ அல்லது சில ஒப்பந்தப்புள்ளிகளையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகள் சாதாரணத் அஞ்சலிலேயே அனுப்பப்படும். அஞ்சல் போக்குவரத்தில் காலதாமதம் ஏற்படினும் ஒப்பந்தப் பிரதிகள் தொலைந்து போனாலும் இவ்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பாரங்கள் ஒருவர் பெயரிலிருந்து மற்றொருவர் பெயருக்கு மாற்றுதலுக்குரியதல்ல.

(த.27)

**மேற்பார்வைப் பொறியாளர்,**
கோதையாறு நீர்மின் திட்டம்.

## சிவகாசி நகராட்சி

(இ. 1/271266)

கீழ்க்காணும் இந்நகராட்சியின் பணிக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை நகராட்சி ஆணையர் அவர்களால் 21—6—1972 தேதி புதன் கிழமை மாலை 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். கிடைக்கப்பெறும் ஒப்பந்தப் புள்ளிகளை வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 21—6—1972 தேதிமாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஷெட்யூல் இதர விவரங்கள் அடங்கிய பட்டியலை ரூ. 10·35 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி அன்று பிற்பகல் 2-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்கள் வேண்டுவோர் அலுவலக தினங்களில் அலுவலக நேரத்தில் நகராட்சிப் பொறியாளரிடம் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம்.

| வேலை விவரம். | மதிப்பீட்டுத் தொகை. ரூ. | முன்வைப்புத் தொகை. முதல் தவணை. ரூ. | மறு தவணை. ரூ. |
|---|---|---|---|
| சர்வே எண் 301/1 பாகத்தில் நகர் மன்றக் கூடமும், பதிவு வைப்பறையும் மதிப்பீட்டில் உள்ளபடி கட்டுதல். | 1,60,000 | 3,500 | 3,500 |

எஸ். அரங்கநாதன், எம். ஏ.,
நகராட்சி ஆணையர்.

(த. 63)

## மின்சார வாரியம்

## பரம்பிக்குளம் ஆழியாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாகக் கீழே கையொப்பமிடப்பட்டவரால், அடியிற்கண்ட பொருட்களை வாங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண். | ஒப்பந்த எண். | பொருள்களின் விவரம். | அளவு | பொருள்கள் உள்ள இடம். | கட்டுத் தொகை. | முடிவு தேதி. |
|---|---|---|---|---|---|---|
| 1 | SPECN PS/PAL/ 14, dated, 4-5-72. | பரிசோதித்து இறக்குமதி செய்யப்பட்ட முழு மெல்லிய தகடுகள், இரும்பு பிளேட்டுகள், H.T. பிளேட்டுகள், மற்றும் உபயோகமுள்ள சிறிய பிளேட்டுகள். | 270·901 டன்கள். | M/s. GOVA NOLA, Binny Ltd., Cochin. | வாங்கும் மொத்த விலையில் 10 சத வீதம். | மாலை 3-30 தேதி 12—6—1927 |
| 2 | SPECN PS/PAL/ 15, dated, 4-5-72. | பழைய கட்டுமான கருவிகள், இயந்திரங்கள், ஏர் கம்பரஸர்ஸ், கான்கிரீட் கலவை இயந்திரங்கள், கல் உடைப்பான் (Stone Crushers) டம்பர்ஸ் வாகன், கோர் டிரில்கள், ஜீப் டிரெய்லர், டிராக்டர் டிரெய்லர் மற்றும் சிறிய கருவிகள். | 122 பொருள் கள். | மின்வாரிய பில்லூர் அணை பண்டகசாலை | வாங்கும் தொகையில் 10 சத வீதம். | மாலை3-30 தேதி 16-6-72 |

2. இந்த ஒப்பந்த நகல் ஒவ்வொன்றிற்கும் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் 25—5—1972-ற்கு பிறகு எந்த வேலைநாட்களிலும் பணமாகவோ அல்லது பணவிடைத்தாள் மூலமாகவோ ரூபாய் 5 மட்டும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் ஒப்பந்த விலையான ரூ. 5 திருப்பி தரத்தக்கதல்ல.

3. ஒப்பந்தத்தில் கண்ட பொருட்களுக்கு என்ன விலை குறிக்கப்படுகிறதோ அதில் 10— சதவீதம் பிணைத் தொகையாகப் பணமாகவோ அல்லது சிண்டிகேட் பாங்க் (பொள்ளாச்சி)-ன் கேட்பு உண்டியலாகவோ ( Demand Draft ) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்த வேண்டும். செலுத்தியதற்கான ரசீதை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பிணைத் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தங்கள் காரணம் காட்டாது நிராகரிக்கப்படும்.

4. ஒப்பந்த நகல் விண்ணப்பதாரர்களுக்குச் சாதாரண அஞ்சலில் தான் அனுப்பப்படும். அஞ்சல் பிரயாணத்தின் பொழுது ஒப்பந்த நகல் தவறினால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்காது.

5. ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்தங்கள் மற்றவர் பெயருக்கு மாற்றத் தக்கதல்ல.

தந்தி :—PARAMBYDEL, ALIYARNAGAR
தொலைபேசி :—39, மலையாண்டி பட்டணம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
பரம்பிக்குளம்—ஆழியாறு
நீர்மின்திட்டம்.

(த. 67)

## பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 12—7—1972 மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| | மாயவரத்தில் மகளிர் கலைக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுதல் குறித்து. மொத்தத் தொகை. | மன்னார்குடியில் ஆண்கள் கலைக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுதல் குறித்து மொத்த தொகை. |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| 1. ஒப்பந்த வகை .. .. | 25,000 | 25,000 |
| 2. பிணைப்பணம் செலுத்துச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்). | | |
| 3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலத்தில் பொ. ப. செலுத்துத் தொகை III மற்றையச் செலுத்துத்தொகை எனும் தலைப்பில் செயற் பொறியாளர், கட்டடக் கோட்டம் அவர்கள் கணக்கில் செலுத்துதல் வேண்டும்). — | 50 | 50 |
| 4. விற்பனை வரி. அரசினர் கருவூலத்தில் XII விற்பனை வரி பி. பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி சட்டத்தின் கீழ் பொது விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்துதல் வேண்டும். | 1·75 | 1·75 |
| 5. கால அளவு | 12 மாதங்கள். | 12 மாதங்கள். |
| 6. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள். | 21—6—1972 | 21—6—1972 |

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்,
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 69)

## மின்சார வாரியம்

எண்ணூர் அனல் மின் திட்டம்.

குறிப்பு எண். AEP 98.

1. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் அதன் உறையில் "தமிழ்நாடு மின்சார வாரியம்" எண்ணூர் அனல் மின் திட்டம் குறிப்பு எண். **AEP 98 Supply of paints** எனவும் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் குறிப்பிட்ட தேதியில் மாலை 3·30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தங்கள் அன்று மாலை 4·00 மணிக்கு அங்கு வந்திருக்கும், ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

2. தேவையான பொருள்கள் அவற்றின் அளவு, குறிப்பு எண். விவரம், முன் பணம் முதலியன கீழே தரப்பட்டுள்ளன.

S. No. Description—
(a) Enamel gray Paint.
(b) Enamel dark battleship gray paint.

| | |
|---|---|
| Specn No. | AEP. 98 |
| EMD. | Rs. 750 |
| Cost of Tender | Rs. 5 |
| Due Date : | 7—6—72 |

3. ஒப்பந்தப் பத்திரங்களைக் கீழ்க் கையொப்பமிட்டவரிடமிருந்து 20—5—1972 தேதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும்.

4. துறையினரைச் சார்ந்த நமூனுக்களில்லாத ஒப்பந்தங்களும் இறுதித் தேதிக்கும், நேரத்திற்கும் பின்னர் சமர்பிக்கப்பட்ட ஒப்பந்தங்களும், நிராகரிக்கப்படும். ஒப்பந்தங்கள் ஏதாவது ஒன்றையோ, அல்லது எல்லாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும் பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமை உடையவர்.

5. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வழியில் காணமல் போகும் ஒப்பந்தப் பிரதிகளுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்களும் மாற்றத்தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை—57.

(த. 68)

## மின்சார வாரியம்

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்காக கோவை மத்திய பண்டக சாலையிலுள்ளத கழிவு இரும்பு சாமான்கள், துத்தநாக கம்பிகள் உபயோகப்படாத வான் லாரி மற்றும் இதர கழிவுப்பொருள்கள் வாங்குவதற்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 9—6—1972 தேதிமாலை 3 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் பெற்றுக் கொள்யப்படும். மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3-30 மணிளவில் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தப் புள்ளி சம்பந்தப்பட்ட முழு விவரங்களடங்கிய நமூனுக்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ரூபாய் 3 (ரூபாய் மூன்று மட்டும்) (திருப்பித்தரத்தக்கது அல்ல), "தலைமைக் கணக்காயர் (செலவினம்) பைக்கார மின் திட்டம் டாடாபாத் கோவை-12" என்ற விலாசத்திற்கு செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி ஒப்பந்தப் பாரங்கள் 8—6—1972-ம் தேதி மாலை 5 மணி வரைதான் கொடுக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி பாரங்கள் தபால் பிராயணத்தின் போது தவறிலோ அல்லது தாமதமாகக் கிடைத்தாலோ இந்தமின்சாரா வாரியம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது. ஒருவர் பெயருக்கு வாங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பாரங்கள் மற்றவர் பெயருக்கு மாற்றத்தக்கது அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பைக்காரா மின் திட்டம்,
டாடாபாத், கோவை-12.

(த-17)

## அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி சென்னை-10.

அரசாங்கக் கீழ்பாக்க மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குத் தேவையான ஜூலை 1972, 1-ம் தேதி முதல் டிசம்பர் 1972, 1-ம் தேதி முடிய உள்ள காலத்திற்கான மருந்து வகைகள், அறுவை மருத்துவக் கருவிகள் முதலியவற்றின் தேவைகளை நிரப்புவது பற்றிய ஒப்பந்தப் புள்ளி.

முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் (2 நகல்களில்) 15-6-1972 அன்று பிற்பகல் மூன்று மணிவரை மருந்துகள், அறுவை மருத்துவக்கருவிகள் முதலியவற்றின் தேவைகளை நிரப்புவது சம்மந்தமாக பெற்றுக்கொள்ளப்படும்.

ரூபாய் 2-ஐ (எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரபடமாட்டாது) **XXIII Medical miscellaneous** என்ற கணக்கில் கட்டி அந்த வங்கி ரசீதையும் (சலான்) விற்பனை வரியை மற்றொரு வங்கி ரசீதின் (சலான்) மூலம் " **XII Sales tax receipt under the State Sales tax act"** கணக்கிலும் கட்டி மேற்கூறிய வங்கி ரசீதுடன் (சலான் கூடிய விண்ணப்பத்தின் பேரில் இம்மருத்துவமனை அலுவலகத்திலேயே ஒப்பந்தப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறித்த நேரத்தில், குறித்த தேதியும் கடந்து வரும் ஒப்பந்தங்கள் முத்திரையிடப்படாத உறையில் வரும் ஒப்பந்தங்களும் முன் பணவைப்பு வங்கி ரசீது (சலான்) இல்லாத ஒப்பந்தங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

எச். டி. சிங்,
முதல்வர்.

(த. 47)

## கல்வி

### சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

வேப்பேரி, சென்னை–7.

கால்நடை மருத்து விஞ்ஞானப் பட்டம் (Integrated Rivised) 5 ஆண்டு மற்றும் ஒரு பருவக்காலம்.

1972–1973-க்கு மனுதாரர்களைச் சேர்த்தல்.

மேற்கண்ட படிப்பில் சேருவதற்குக் குறிப்பிட்ட வடிவத்திலான மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. மனுக்கள் கால் நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை இயக்குநர் மற்றும் டீன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி அஞ்சல், சென்னை–7 அவர்களுக்கு அனுப்ப வேண்டும். 1972 ஜூன் 9–ஆம் தேதிக்கு மேற்படாமல் அல்லது புகுமுக வகுப்பு ரிசல்ட் வெளியிடப் பட்டதிலிருந்து பத்து நாட்களுக்குள் எது பிந்தியதாக உள்ளதோ அதற்குள் அவர்களுக்கு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

மேற்கண்ட படிப்பில் சேருவதற்கு குறைந்த பட்ச பொதுக் கல்வித் தகுதி சென்னைப் பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்புத் தேர்வில் தேர்வு பெற்றிருக்க வேண்டும். அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலாவது அதற்குச் சமமான ஒரு தேர்வில் கணக்கு, பௌதீகம், இரசாயனம், அல்லது பாகம் 3-ல் இயற்கை விஞ்ஞானம் (Natural Science) குறிப்பிடப்பட்ட துணைப் பாடங்களில் ஏதாவது மூன்று பாடங்களில் மார்க்குகள் "C" plus—க்குக் குறையாமல் இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பைச் சார்ந்த மனுதாரர்கள் விசயத்தில், மேற்கண்ட படிப்பில் சேருவதற்கான குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதி சென்னைப் பல்கலைக் கழக புகுமுகத் தேர்வு அல்லது மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்குச் சமமான தேர்வில் மேற் சொல்லப்பட்ட துணைப் பாடங்களில் தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

சேருவதற்கு மனு செய்கின்றவர்கள் 1972 ஜூலை மாதம் 15-ம் தேதியன்று 15 வருடம் 6 மாதத்திற்குக் குறையாதவர்களாக இருக்க வேண்டும். B.V.Sc. பட்டப் படிப்பில் சேருவதற்கு அதிகப்பட்ச வயது வரம்பு சேருகின்ற ஆண்டில் ஜூலை 1–ஆம் தேதியன்று 23 வருடங்கள் ஆகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த மனுதாரர்கள் விசயத்தில் அதிகப்பட்ச வயது வரம்பு 26 வருடங்கள் ஆகும்.

விண்ணப்பப் படிவங்கள் பெற எழுதிக் கிராஸ் செய்யப்பட்ட ரூ. 1 அஞ்சல் ஆணையைக் கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மற்றும் டீன், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வேப்பேரி அஞ்சல், சென்னை–7 அவர்கள் பெறும் வகையில், 1972 மே 1-ஆம் தேதிக்கு முற்படாதவாறு செலுத்தி, அத்துடன் சுய விலாசம் எழுதப்பட்ட போதுமான அஞ்சல் வில்லைகளை ஒட்டப்பட்ட (65 காசு) (10" × 8") உள்ள உறையுடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் பெற வேண்டி அனுப்பப்படும் மணியார்டர் மற்றும் அஞ்சல் வில்லைகள் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மனுதாரர்கள் உறையின்மேல் "Requisition for B.V.Sc. Degree Application form" என்று குறிப்பிட வேண்டும்.

மேற்கண்ட படிப்பில் சேருவதற்கு விண்ணப்பத்துடன் மனுதாரர் தமிழ் நாட்டைத் தாயகமாய்க் கொண்டவர் என்பதற்கான அத்தாட்சி உடன் வைத்திருந்தால் மட்டுமே கவனிக்கப்படும்.

**வீ. ரத்தின சபாபதி.**

(த. 30)

### தொழில் வணிகத் துறை

சென்னை

தமிழக அரசு கலை மற்றும் கைத்தொழிற் பள்ளி, கும்பகோணம்

பயிற்சிக்கு 1972-73 ஆண்டிற்கான மாணவர்கள்.

தமிழக அரசின் கும்பகோணம் கலைத் தொழில் பள்ளியில் ஐந்து ஆண்டுகளுக்கான நுண்கலைப்பிரிவு டிப்ளமோ பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவமும், தகவல் தொகுப்பும், 50 காசுகளை நேரில் செலுத்தியோ அல்லது பண விடை அஞ்சலில் அனுப்பியோ கும்பகோணம், அரசினர் கலைத் தொழில் பள்ளி, உதவி முதல்வரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல் தலைகளோ அல்லது போஸ்டல் ஆர்டர்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 5—6—1972 மாலை 5 மணிக்குள் பள்ளியின் உதவி முதல்வருக்கு வந்து சேருமாறு அனுப்பப்பட வேண்டும்.

பயிற்சிக்கு வேண்டிய கல்வித் தகுதி :

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தகுந்த தனித்திறன் இருக்குமாயின் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதியவர்களும் கவனிக்கப்படுவார்கள்.

வயது :

விண்ணப்பதாரர்கள் 1—7—1972 அன்று 15 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 35 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

கட்டணம் :

ஆண்டு ஒன்றுக்கு போதனைக் கட்டணம் ரூ. 20 (ரூபாய் இருபது) அல்லது அரசினரால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விகிதத்தில், பயிற்சியாளரிடமிருந்து வசூலிக்கப்படும்.

**இயக்குநர்,**
தொழில் வணிகத் துறை,
சென்னை-5.

(த.29)

## ஒப்பந்தப் புள்ளி

### குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் கீழ்க்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் தமிழ்நாடு பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை (குடிநீர் வடிகால் வாரியம்) பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை அல்லது இவை போன்ற இதர அரசினர் துறைகளில் பதிவு பெற்ற உரிய வகுப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து எண் 17, சர். பி. டி. இராசன் சாலை, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 7—6—1972 புதன் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3–30 மணிக்கு ஒப்பந்தக்காரர்கள முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—ஸ்ரீரங்கம் குடிநீர்ப் பெருக்குத் திட்டம்—முதல் நிலை—50,000 லிட்டர் கொள்ளவுள்ள உயர்மட்ட உறுதி பெறு கற்காரை நீர்த்தாங்கியினைக் கட்டுதல்.

ஒப்பந்த வகை—மொத்தத் தொகை.

முன்வைப்புத் தொகை.—ரூ. 500 (ரூபாய் ஐந்நூறுமட்டும்)

இத்தொகை கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் திருச்சி பொதுச்சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு.—நான்கு மாதங்கள்

ஒப்பந்தப் படிவங்களின் விலை.—ரூ. 5·18.

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் திருச்சி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறை கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து பி 15, தில்லை நகர் மெயின் ரோடு, திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 5—6—1972 அன்று திங்கட்கிழமை மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மேற்பார்வைப் பொறியாளர் (பொ.சு.ப.)**
குடிநீர் வடிகால் வாரியம்.

(த-31)

## பொதுப்பணித் துறை

செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பிலும், அவருக்காகவும், பொதுப்பணித் துறை மற்றும், அரசினர் பிற துறைகளில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே குறிப்பிடப்பட்ட பணிக்காகச் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் 20—6—1972 மாலை 3-00 மணி வரைக்கும் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு, அப்போது வந்து இருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் பிரிக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | ஒப்பந்த முறை. | முன்வைப்புத் தொகை. | ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை வரைபடங் களுடன். | ஒப்பந்தப்புள்ளி முடிக்க வேண்டிய காலம். |
|---|---|---|---|---|
| 1 வடார்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரிக்காக மாணவர் தங்கும் விடுதி கட்டடம் கட்டுதல். | மொத்தத் தொகை. | ரூபாய் 13,400 | ரூ. 20·70 விற்பனை வரி $3\frac{1}{2}$ சதவிகிதம் உட்பட. | 11 மாதங்கள். |
| 2 வடார்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரிக்கு அபிவிருத்தியும் கூடுதல் கட்டடமும். | மொத்தத் தொகை. | ரூபாய் 3,000 | ரூ. 20·70 விற்பனை வரி $3\frac{1}{2}$ உட்பட. | 8 மாதங்கள். |

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 3—6—1972 தேதி முதல் 17—6—1972 தேதி வரை விற்பனைக்குக் கிடைக்கும். ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களுக்கான விலைத் தொகை ரூ. 20.00 ஒரு பத்திரத்திற்கு (அது எந்தச் சூழ் நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் "**P. W. D. Remittances III Other Remittances**" என்ற தலைப்பின் கீழ் "நிருவாகப் பொறியாளர் திருவண்ணாமலை" என்பவர் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

விற்பனை வரி ரூ. 0·70 கருவூலம் அல்லது ரிசர்வ் வங்கியில் "**XII. Sales tax (b) Receipts, Under State Sales Tax Act—General Sales tax**" என்ற தலைப்பின் கீழ் செலுத்தப்படவேண்டும். மேற்படி கருவூலச் செலுத்துச் சீட்டுகளை இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பத்துடன் அனுப்பினால் ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் தரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முன் வைப்புத் தொகை, கருவூலச் சீட்டு வடிவிலோ தேசீயச் சேமிப்புப் பத்திரங்களாகவோ. அல்லது ஷெட்டியூல்டு பேங்குகளின் கால் ரசீது டெபாசிட் வகையிலோ, அல்லது ஷெட்டியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டாகவோ" ஏற்றுக் கொள்ளப்படும். முன்வைப்புத் தொகைக்காகக் கொடுக்கப்படும் ஷெட்டியூல்டு பாங்குகளின் "டிமாண்டு டிராப்டுகள்" செயற் பொறியாளர் பொதுப்பணித் துறை திருவண்ணாமலை கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பெயரால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மாநில அரசுக்கடன் பத்திரங்களும், மின்வாரியப் பத்திரங்களும், நடைமுறை விலையில் 5 சதவிகிதம் குறைத்து ஏற்றுக் கொள்ளப்படும். தேசீயச் சேமிப்பு நற்சாட்சிப் பத்திரங்கள் அந்த அஞ்சல் நிலையத்தாரின் ஒப்புதல்களுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத் தொகை வேறு எந்தப் படிவத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் பெரிய கட்டட வேலைகளில் குறைந்த பட்சம் மூன்று வருட கால அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆர். செல்வராஜன்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்-1.

(த. 13)

## கோயம்புத்தூர் நகராட்சி

1972–73-ஆம் ஆண்டிற்கு அச்சு மற்றும் பைண்டிங் வேலைகளுக்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி 12—6—1972-ம் தேதி மாலை 3-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

நிபந்தனைகள் நகராட்சிக் கருவூலத்தில் ரூ. 1 (ஒன்று மட்டும்) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஆணையர்.**

(த. 43)

## விருதுநகர் நகராட்சி

இந்த நகராட்சி டிராக்டர் எம்.டி.ஆர். 2618 & டிரெயிலர் எம்.டி.ஆர். 4382-க்கு தகுதிச சான்றிதழ் பெற சில ரிப்பேர் வேலைகள் செய்ய ஆணையர் அவர்களால் 12—6—1972 தேதி மாலை 4 மணி வரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக்கொள்ளப்படும். கட்டுத் தொகை ரூ. 50 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி ரசீதுடன் ஒப்பந்தத்துடன் இணைக்கப்படவேண்டும். மற்ற விவரங்கள் நகர் நல அலுவலரது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆணையர்.**

(த. 52)

## மின்சார வாரியம்

விளக்க விவரம் எண். SEG.BB 54.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிட்ட தனித் தனி விலை ஒப்பந்தங்கள் (Tenders) அதன் உறையில் " தமிழக மின் சார வாரியம், பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டம்—இரும்புக் கழிவுத் துண்டுகள், பித்தளை கழிவுத் துண்டுகள், மரத்துண்டுகள்,பழையடயர்கள், காலி பீப்பாய்களும் உபரியான மின் உதிரி உறுப்புக்கள் வாங்குவதற் கான விலை ஒப்பந்தங்கள் " விளக்க விவரம் எண். SEG.BB 54—மற்றும் ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பம் இட்டவரால் 12—6—1972 அன்று பிற்பகல் 1-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகளின் படிவங்களின் விலை ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் ரூ. 5 ஆகும். மேற்படி ஒப்பந்தப் புள்ளி விளக்க விவரப் பிரதிகள் (Tender specification copies) வேண்டுவோர் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 வீதம் துணைத் தலைமைக் கணக்கர், மின் உற்பத்தி நிலையம், பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், சென்னை-12 (Deputy Chief Accountant, Generation,Basin Bridge PowerStation,Madras-12) என்ற முகவரிக்குப் பண அஞ்சல்(Money order) மூலமாகவோ அல்லது நேரிலேயோ செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித்தரப்படமாட்டாது. இத் தொகையை பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரி யையும் தேவையான பிரதிக்குரிய விளக்க விவரஎண்ணையும் (Specification Number) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். அவை உரியவர்க்கு சேர்க்கப் படாவிட்டால் அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் பிறருக்கு மாற்றுக் கொள்ளத் தக்கதல்ல. கீழே கையொப்ப மிட்டவர் எந்த ஒரு விலை ஒப்பந்தத்தையோ அல்லது எல்லா விலை ஒப்பந்தங்களையோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

ஒவ்வொரு குத்தகை ஒப்பந்தத்துக்கும் ரூ. 1500 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) பிணைத் தொகையாக பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தில் நேரில் செலுத்தி அதற்கான ரசீதை விலை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். மேற்படி ரசீது இல்லாத ஒப்பங்களும், உரிய தாள்களில் சேர்ப்பிக்கப்படாத விலை ஒப்பங்களும், குறித்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் விலை ஒப்பங்களும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. 12—6—1972 அன்று மாலை 4-00 மணிக்கு வந்திருக்கக் கூடிய ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களுடைய பிரதி நிதிகள் முன்னிலையில் அடியில் கையொப்பமிட்டுள்ளவரால் அலுவலகத் தில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும்.

மேற்பார்வைப் பொறியாளர்.
சென்னை மின் பெரு வட்டம், மின் உற்பத்தி நிலையம்,
பேசின் பிரிட்ஜ் மின் நிலையம், சென்னை-12.

(த. 58)

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

அறிக்கை எண். 21/XI-A M1/72, நாள் 8—5—1972

வேலையின் பெயர்.—நிலநீர் இயக்குநர் அலுவலகத்தின் ரோட்டரிக்கு கட்கு, ஹாமர் பிட்டுகள் வழங்கல் (Down the hole hammer bits for Roteryrig)

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில் நிலநீர் இயக்குநர் அவர் களால், மேலே குறிப்பிடப்பட்ட வேலைக்கான, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், மேற்கண்ட அலுவலகத்தில் 30—6—1972 அன்று மாலை 3-00 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், நில நீர் இயக்குநர் அவர்களால், மேற்கண்ட அலுவலகத்தில், அதே தேதியில், மாலை 3-30 மணிக்கு, அச்சமயம், அங்கு வந்திருக்கும், ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

முன் வைப்புத் தொகை—ரூ. 15,000.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—மூன்று மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10.

விற்பனை வரி—ரூ. 0.40 காசு.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மேலே குறிப்பிட்ட அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்—10—5—1972—லிருந்து 26—6—1972 வரை.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை (எச் சூழ்நிலையிலும் திருப்பி அனுப்ப இயலாது), அரசாங்கக் கருவூலம் (Government Treasury) அல்லது ரிசர்வ் வங்கியில் " Public Works Remittances III Other Remittances to the credit of Executive Engineer, Ground Water Division, Madras-17" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.

விற்பனை வரித்தொகை, அரசாங்கக் கருவூலம் (Government Treasury) அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) receipts under State Sales Tax act, General Sales Tax"என்ற தலைப்பில் செலுத்தவேண்டும்.

மேற்கூறிய சலான்களைக் கொடுத்தபின்புதான் ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநாதம்,
இயக்குநர்.

10-எ, தண்டபாணித்தெரு,
தி. நகர், சென்னை-17.

(த. 57)

## நிலநீர் இயக்குநர் அலுவலகம்

அறிக்கை எண். 19 XVII-C/M1/72. நாள் 6—5—1972.

வேலையின் பெயர்—நிலநீர் இயக்குநர் அலுவலகத்திற்கு நீரியல் தள வாடங்கள் ( Hydrological Equipments ) வழங்கல்—நீர்மட்ட அளவைக் கருவிகள் (Water level indicators)—நீரோட்ட அளவைக் கருவிகள் (Water meters) வழங்கல்.

தமிழ்நாடு ஆளுநருக்காக, அவர் சார்பில், நில நீர் இயக்குநர் அவர் களால், மேலே குறிப்பிடப்பட்ட வேலைக்கான, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் 15—6—1972 அன்று மாலை 3-00 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள், நிலநீர் இயக்குநர் அவர்களால், மேற்கண்ட அலுவலகத்தில் அதே தேதியில், மாலை 4-00 மணிக்கு, அச்சமயம், அங்கு வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

முன் வைப்புத் தொகை—ரூ. 4,500.

வேலையை முடிக்க வேண்டிய காலம்—2 மாதங்கள்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை—ரூ. 10.

விற்பனை வரி ரூ. 0.40 காசு.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் மேலே குறிப்பிட்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்—10—5—1972 இருந்து 9—6—1972 வரை.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்களின் விலை (எச்சூழ்நிலையிலும் திருப்பி அனுப்ப இயலாது.) அரசாங்கக் கருவூலம் (Government Treasury) அல் லது ரிசர்வ் வங்கியில் "Public works Remittances III Other Remittances to the credit of Executive Engineer, Ground Water Division, Madras-17" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.,

விற்பனைவரித் தொகை, அரசாங்கக் கருவூலம்(GovernmentTreasury) அல்லது ரிசர்வ் வங்கியில் "XII Sales Tax (b) receipts under State Sales Tax act—General Sales Tax" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.

மேற்கூறிய சலான்களைக் கொடுத்தபின்புதான், ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.

சா. பஞ்சநாதம்,
இயக்குநர்.

10-எ, தண்டபாணித்தெரு,
தி. நகர், சென்னை-17.

(த. 6)

## செங்கோட்டை நகராட்சி

தெரு விளக்குகள் உபயோகத்திற்காகக் கீழ்க்கண்ட மின்சார சாதனங்கள் வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 15—6—72-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 4-30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்த தாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் உடைக்கப்படும். ஏனைய விவரங்களை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| (1) | 40 வாட்ஸ்/250 ஒல்ட் பல்புகள் .. .. .. | 300 |
| (2) | 2'—20 வாட்ஸ் குழல் விளக்குகள் .. .. .. | 100 |
| (3) | 4'—40 வாட்ஸ் குழல் விளக்குகள் .. .. .. | 25 |
| (4) | 20 வாட்ஸ் ஸ்டார்ட்டர்கள் .. .. .. .. | 150 |
| (5) | 40 வாட்ஸ் ஸ்டார்ட்டர்கள் .. .. .. .. | 50 |

ஆணையர்.

(த. 71)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—

1. கிருஷ்ணகிரியில் நீதிமன்றத்துடன் இணைந்த கட்டடத்தில் முன் பகுதி (Front wing) கட்டுதல்.
2. கிருஷ்ணகிரியில் நீதிமன்றத்துடன் இணைந்த கட்டடத்தில் பின் பகுதி (Rear wing) கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைகளுக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சேலம்-தருமபுரி வட்டம், சேலம்-4அவர்களால் 5-7-1972 மாலை 3 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள், அதே நாள் மாலை 3-15-க்கு அப்போது வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | வகை 1. | வகை 2. |
|---|---|---|
| | ரூ. மொத்தத் தொகை. | ரூ. மொத்தத் தொகை. |
| 6. ஒப்பந்தப் படிவம் .. .. .. .. | | |
| 2. கட்டுத் தொகை சலான்அல்லது தேசியச் சேமிப்பு சர்டிபிகேட்டுகள் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டிபாசிட் அண்ட் கால் ரிசிப்ட்ஸ் அல்லது செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்ட்ஸ் அல்லது அரசு செக்யூரிட்டீஸ், அல்லது சென்னை மாநில மின் வாரியப் பத்திர வடிவிலோ ஏற்றுக்கொள்ளப்படும் .. .. .. .. .. .. | 10,000 | 10,000 |
| 3. ஒவ்வொரு வேலைக்கும் ஒப்பந்தப்பத்திரங்களின் விலை, கருவூலம் அல்லது ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ "P.W. Remittance III other remittance"என்ற தலைப்பில் நிருவாகப்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடக் கோட்டம், சேலம்-5 அவர்கள் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் .. .. | 30·00 | 30·00 |
| 4. விற்பனை வரி "XII Sales Tax (d) miscellaneous" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் .. .. | 1·05 | 1·05 |
| 5. வேலை முடிக்கவேண்டிய காலம் .. | 12 மாதங்கள். | 12 மாதங்கள். |
| 6. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள், மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை, சேலம்-தர்மபுரி வட்டம், சேலம்-4-ல் விற்பனைக்குக் கிடைக்கும் நாள் .. .. .. | 16-6-72 முதல் 1-7-72 வரை. | 16-6-72 முதல் 1-7-72 வரை. |

(மாநில அரசு செக்யூரிட்டிகள் மற்றும் சென்னை மாநில மின் வாரியப் பத்திரங்கள் அதன் மதிப்பிலிருந்து 25 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.)

ஆர். இராதாகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
சேலம், தருமபுரி வட்டம், சேலம்-4.

(த. 53)

## சங்கரன்கோயில் நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 5-7-1972-ம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகளின் மேல் உறையில் வேலையின் பெயரும் தேதியும் குறிப்பிட்டு ஆணையர், சங்கரன்கோயில் நகராட்சி என்று முகவரியிட்டு அனுப்பி வைக்க வேண்டும். வேலைகளுக்கு எதிராகக் குறிப்பிட்ட தொகையை ஒப்பந்தப் புள்ளியுடன் கட்டுத் தொகையாகக் கட்ட வேண்டும். பாக்கியுள்ள கட்டுத் தொகையை ஒப்பந்தம் ஒப்புக் கொண்டவுடன் கட்ட வேண்டும். நிபந்தனைகளும், ஒப்பந்தப்புள்ளிகளும், ஷெட்யூல்களும், நகராட்சி அலுவலகத்தில் ரூ. 10 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மற்ற விவரங்களை அலுவலக வேலை நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வேலை விவரங்கள்.

| | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. புதிதாகத் தினசரி சந்தை கட்டுதல் .. | 1,97,000 | 3,700 |
| 2. புதிதாகப் பேருந்து நிலையம் கட்டுதல் .. | 1,90,000 | 4,500 |

வெ. ஜானகிராமன்,
ஆணையர்.

(த. 62)

## ஏல விற்பனை

## வனத்துறை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் மத்திய மரக்கிடங்கு, கார்குடி, பாதை ஓரமுள்ள மரக்கிடங்குத்தொரப்பள்ளி ஆகிய மரக்கிடங்குகளில் நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ 8—6—1972 அன்று ஏலம் நடத்தப்படும். ஏலம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

| | மரங்களின் அளவு. |
|---|---|
| தேக்கு .. .. .. .. .. .. .. | 250 கன மீட்டர். |
| மத்தி .. .. .. .. .. .. .. | 200 ,, |
| தடச்சு .. .. .. .. .. .. .. | 15 ,, |
| ஹொன்னே .. .. .. .. .. .. .. | 40 ,, |
| நந்தி .. .. .. .. .. .. .. | 20 ,, |

மற்றும் 300 விறகு அட்டிகள்.

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்குக் கோட்ட மாவட்ட வன அலுவலருக்கோ அல்லது வனச்சரக அலுவலர், முதுமலைச் சரகம், கார்குடி அவர்களுக்கோ எழுதிப் பெறவும்.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர்,
நீலகிரி வடக்குக் கோட்டம், உதகை.

(த. 64)

## தொழில் வணிகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைகளுக்காக மேற்பார்வைப் பொறியாளர் கட்டுமானப் பிரிவு, தொழில் வணிகத்துறை அவர்களால், தொழில் துறை கட்டுமானப் பிரிவு, மற்றும் இதரத் துறைகளின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கீழ்க்கண்ட தேதிகளில் மாலை 3-00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள், மேற் பார்வைப் பொறியாளர், கட்டுமானப்பிரிவு, தொழில் துறை 35/2 உட்ஸ் ரோடு, சென்னை-2 அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசி நாளான கீழே கொடுக்கப்பட்டுள்ள நாளில் மாலை 3-10 மணிக்கு அப்போது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். (1) | கட்டுத் தொகை. (2) | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. (3) | வேலை முடிக்க வேண்டிய காலம். (4) | பத்திரங்கள் கிடைக்கும் நாள். (5) | ஒப்பந்தப் புள்ளி பெறக் கடைசி நாள். (6) |
|---|---|---|---|---|---|
| ஒப்பந்தப்புள்ளி எண். 1.— | | | | | |
| 1 அடையாறு எலக்ட்ரானிக் தொழிற் பேட்டையில் டைப் 1-ல் இரண்டு கட்டடங்கள் கட்டுதல். | ரூ. 1,900 | ரூ. 10·40 | 8 மாதங்கள். | 30—5—1972 | 13—6—1972 |
| ஒப்பந்தப்புள்ளி எண். 2.— | | | | | |
| 1 அடையாறு எலக்ட்ரானிக் தொழிற் பேட்டையில் டைப் 2-ல் மூன்று கட்டடங்கள் கட்டுதல். | 3,300 | 10·40 | 8 மாதங்கள். | 30—5—1972 | 14—6—1972 |

1. ஒப்பந்தப்படிவம்—மொத்தத் தொகை.

2. ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் நிருவாகப் பொறியாளர் அலுவலகம் (கட்டுமானம்) நிருவாக அலுவலகம் வடக்குக் கோட்டம், தொழிற் பேட்டை, கிண்டி, சென்னை-32-ல் மேற்குறிப்பிட்ட தேதிகளில் அலுவலக நேரங்களில் கிடைக்கும்.

3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரியுடன் ரூ. 10·40 ஐ (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது) கருவூலம் அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ "XXIX Industries—Other Receipts" என்ற தலைப்பில் "நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32" அவர்தம் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

4. கட்டுத் தொகை சலான்ஸ் டிபாசிட் மற்றும் ஷெட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்டுகள் வடிவில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகைக்கு, நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) வடக்குக் கோட்டம் தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32 அவர்கள் பெறும் வகையில் ஷெட்யூல்டு வங்கியால் கொடுக்கப்பட்ட டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டுகள், தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்கள் முதலியவைகள் மார்க்கெட் மதிப்பிற்கு 5 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு சர்டிபிகேட்டுகளும் சம்பந்தப்பட்ட அஞ்சல் அலுவலகத்தின் ஆலோசனையுடன் ஏற்றுக்கொள்ளப்படும். தேசியமயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பாங்க் காரண்டியும் கட்டுத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்படும். வேறு வகையில் செலுத்தப்படுபவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள்பெரிய சிவில் வேலைகள் கட்டுதலில் குறைந்தது மூன்றாண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த. 55)

## போடிநாயக்கனூர் நகராட்சி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் வேலைகளுக்குத் தனித்தனியாக ஒவ்வொரு வேலைக்கும் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 1972-ம் வருடம் ஜூன் மாதம் 13-ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி வரை நகராட்சி ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணி அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். வேலைகளின் விவரங்களும், கட்டுத் தொகை விவரங்களுக்கும் இவ்வலுவலகத்திலிருந்து நேரிலோ அல்லது தபால் மூலமோ தெரிந்து கொள்ளலாம். ஷெட்யூல் ஒப்பந்தப் பாரங்கள் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி 12—6—1972-ம் தேதிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

1. தூசிபடியாத சாலைகள் அமைத்தல்—பதினேழு—மதிப்பீடு தொகை—ரூ. 37,450.

2. சிறிய பாலம் வேலைகள்—ஐந்து—மதிப்பீட்டுத் தொகை ரூ. 11,500.

3. 12—12 கேஜ் உள்ள முள் கம்பி 3,905 மீட்டர்கள் சப்ளை செய்தல் (வேலி அமைக்க).

4. கட்டட வேலைகள்—ஏழு—மதிப்பீடு தொகை ரூ. 73,400.

5. டிரம்மிக்சர், ஹூட்மாஸ்டர் சப்ளை செய்தல்.

6. 5 குதிரை வேகமுள்ள கிர்லோஸ்கர் மோட்டார் பம்பு செட்டுகள் கூடியது—மூன்று சப்ளை செய்ய.

பி. பகவதிமுத்து, பி.ஏ.,
ஆணையர்.

(த. 59)

## தமிழ்நாடு சிமிண்ட்ஸ்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட் யூனிட்
(தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள)
தமிழ்நாடு சிமெண்ட்ஸ் ஆலங்குளம் அஞ்சல் (வழி) ராஜபாளையம்.

3,000 டன் மினரல் ( **mined** ) ஜிப்சம் மற்றும்/அல்லது சால்ட்பான் ஜிப்சம் 1972 ஜூலை ஆகஸ்ட் ஆகிய இரண்டுமாத காலத்திற்கு வழங்குவதற்கு 17—6—1972வரை மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. தமிழ்நாடு சிமென்ட்ஸ், ஆலங்குளத்தில் சாமான்கள் ( **meterials** ) வழங்கப்பட வேண்டும். குறிப்பான விவரங்கள், ஒப்பந்தப்புள்ளிப் படிவம் மற்றும் இதர விவரங்கள் பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம் அஞ்சல், (வழி) ராஜபாளையம் அவர்களிடம் ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 10·35 செலுத்தி (திருப்பித்தரப்பட மாட்டாது) 1—6—1972 முதல் 15—6—1972 வரை பெற்றுக் கொள்ளலாம்.

பொது மேலாளர்.

(த. 54.)

---

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—வடார்க்காடு மாவட்டம் செங்கத்தில் புதிய அரசினர் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 14—6—1972வரை நீடிக்கப்பட்டுள்ளது. 14—6—1972 மாலை 3-00 மணிவரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்று மாலை 3-15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் 30—5—1972 முதல் 12—6—1972 வரை அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றமேதுமில்லை.

ஆர். செல்வராசன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 83.)

---

## பொதுப்பணித் துறை
## ஒப்பந்தப் புள்ளி நீட்டிப்பு

வேலையின் பெயர்—செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான மருத்துவ மனைக்கு "எல்" வடிவமுள்ள கட்டடமும், குடும்பக்கட்டுப்பாடு திட்டக் கட்டடமும் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 23—6—1972வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 23—6—1972 மாலை 3-00 மணிவரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் மாலை 3·15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் 7—6—1972 முதல் 21—6—1972வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

ஆர். செல்வராசன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்-1.

(த. 81.)

---

## பல்லவா போக்குவரத்துக் கழகம்
## அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம், சார்பில், கட்டடப் பொறியாளரால், வரும் இரண்டு வருடத்திற்குப் பல்லவா போக்குவரத்துக்கழகம் "அசோக் நகர் பேருந்து நிலையம்" இடத்தில், சிற்றுண்டி சாலை 30'×20' அளவுள்ள கடை ஒன்று குத்தகைக்கு விடப்படும். மேலும் அதில் 4'×4' இணைப்பு ஒன்று, பொருள்களைச் சுத்தம் செய்வதற்காகவும், தின்பண்டங்களை தனியாக வைப்பதற்காக அடைத்து வைக்கும் பெட்டி ஒன்றும், காஸ் ஸ்டவ் வைப்பதற்காக ஒரு மேடை ஒன்றும், பொருள்களை வைப்பதற்காக மாடிப்படிகீழ் ஒரு அறைஒன்றும் கொடுக்கப்படும். முத்திரையிடப்பட்ட கவர்களால் கட்டிடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம்" அண்ணாசாலை, சென்னை-2 அவர்களால் டெண்டர்கள் 21—6—1927 மாலை 3 மணிவரை வரவேற்கப்படுகின்றன. டெண்டர்கள் அதே நாள் 21—6—1972 மாலை 3-15 மணிக்கு திறக்கப்படும். டெண்டர் விதிமுறைகள், கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும், ரூ. 1·04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்த பணம் திருப்பித்தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்,
பல்லவா போக்குவரத்துக் கழகம்.

(த. 82.)

---

## பெரியகுளம் நகராட்சி

கீழ்க்கண்ட தென்னை மற்றும் இதர மரங்களின் பலன்களை 1972–73-ம் ஆண்டுக்கு ஏலம் உறுதி செய்த நாளிலிருந்து 1973-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய அனுபவித்துக்கொள்ளும் பாத்தியதைக்கு, முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தேவையான பொறுப்புத் தொகையுடன் 15-6-72-ம் தேதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்குள் ஆணையர் அவர்களிடம் கொடுக்கக் கோரப்படுகிறது. டி ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 4-30 மணிக்கு ஆணையரால் திறக்கப்படும்.

| குத்தகை விவரம். | பொறுப்புத் தொகை. ரூ. |
|---|---|
| (1) நகராட்சி தங்கும் விடுதியிலுள்ள 21 தென்னை மரங்களின் மகசூல் உரிமை .. .. .. .. | 25 |
| (2) கீழவடகரை கம்போஸ்ட் டிப்போ ட.ச. 1985/1 என் இடத்திலுள்ள 7 தென்னை மரமும், ஒரு பனை மரமும், நகராட்சி தினசரி காய்கறி மார்க்கெட்டிலுள்ள ஒரு இலவமரம் ஆகியவற்றின் மகசூல் உரிமை .. .. .. .. .. .. | 25 |
| (3) புதிய பாலம் அருகில் ட.ச.4464/1, 4465/1. 4466/1, 4467/2, 4468/1பி எண் இடங்களில் உள்ள 53 தென்னை மரங்களின் மகசூல் .. .. .. | 25 |

இது சம்பந்தமாக மற்ற விவரங்களை 8-1-72-ம் தேதிய மதுரை மாவட்ட அரசுச் செய்தித்தாள் தனிசேர்ப்பில் பிரசுரிக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி அறிக்கையிலிருந்தும், இந்நகராட்சி அலுவலகத்தில் நேரிலும், எழுதிக் கேட்டும் தெரிந்து கொள்ளலாம்.

ஜோ. சுருளிராஜ், எம்.ஏ.,
எல்.எல்.பி., பி.டி.,
நகராட்சி ஆணையர்.

(த. 74.)

---

## மன்னார்குடி நகராட்சி

1972–73-ம் ஆண்டிற்கு, இந்நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவு துப்புரவுப் பணிக்கும், யானைக்கால் நோய் தடுப்புத் திட்ட பணிக்கும் தேவையான பினையல் மற்றும் ஆரோமாக்ஸ் (**Aeromax**) எண்ணை வழங்குவதற்கான மூடி, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி ஆணையரால் 14–6–1972 மாலை 4 மணி வரை வரவேற்கப்படுகிறது. ஒப்பப்புள்ளிகள் மாலை 4–30 மணிக்குத் திறக்கப்படும்.

பினையல் வழங்குவதற்கான ஒப்பப்புள்ளிக்கு ரூ. 50-ம், ஆரோமாக்ஸ் வழங்குவதற்கான ஒப்பப்புள்ளிக்கு ரூ. 100-ம் முன்வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சி ஒப்பப் புள்ளிகளுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இதர விவரங்களை நேரிலோ, அஞ்சல் மூலமோ தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தக்காரர் சட்ட திட்டங்களுக்கும் இதர நடைமுறை விதிகட்குட்பட்டு வழங்குதல் வேண்டும்.

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

(த. 73.)

## மீன் துறை

தூத்துக்குடியில் இத்துறைக்குச் சொந்தமான உறைபனி நிலையத்தை (Freezing plant) குத்தகைக்கு விடுவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 30—6—1972 பிற்பகல் 2 மணி வரை சென்னை மீன் துறை இயக்குநரால் ஏற்றுக்கொள்ளப்படும். இது குறித்த விவரங்களை மீன் துறை இயக்குநரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாக அலுவலக் கட்டடங்கள்,
சென்னை-5.

**மீன் துறை இயக்குநர்.**

(த.86).

---

## பொதுப் பணித் துறை

வேலையின் பெயர்.—செங்கற்பட்டிலுள்ள தலைமை மருத்துவமனையில் வெளியிலுமிருந்து வந்து சிகிச்சைபெறும் நோயாளிகளின் கட்டடத்திற்கு மேல் பயிற்சி பெறும் மாணவர்கள் தங்கும் விடுதிக்கான கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குறிய கடைசித் தேதி 14—6—1972 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. 14—6—1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3–15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் 30—5—1972 முதல் 12—6—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

**ஆர். செல்வராசன்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, செங்கற்பட்டு—வடார்க்காடு பெரு வட்டம், வேலூர்-1.

(த.84)

---

## பொதுப் பணித் துறை

வேலையின் பெயர்.—செங்கற்பட்டில், பெண் மாணவிகளுக்குத் தங்கும் விடுதி கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைக் பெறுவதற்குரிய கடைசித் தேதி 14—6—1972 வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. 14—6—1972 மாலை 3 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே நாளில் மாலை 3–15 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் 30—5—1972 முதல் 12—6—1972 வரை அலுவலக நேரங்களில் விற்கப்படும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

**ஆர். செல்வராசன்,**
மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித் துறை, செங்கற்பட்டு—வடார்க்காடு பெருவட்டம், வேலூர்.

(த.79)

---

## வனத்துறை

## வனப் பொறியாளர் கோட்டம்

கீழ்க்காணும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்களை "வனப் பொறியாளர், திருச்சி" தமிழ்நாடு ஆளுநர் சார்பாக வரவேற்கிறார்.

"களக்காடு—செங்கல்தேரி சாலை அமைத்தல்—2·481 கி.மீ. நாங்குனேரி வனச் சரகம் திருநெல்வேலி தெற்கு வனக் கோட்டம்".

அச்சாரம் (இ.எம்.டி.) ரூ. 3,475. டெண்டர் பெற்றுக்கொள்ளவும், திறக்கவும் கடைசி நாள் 5—6—1972, நேரம் முறையே மாலை 3 மணி 3–05 மணி.

2. ஒப்பந்தப் பத்திரங்களை "வனப் பொறியாளர், 1-எ,ராயல் ரோடு, கண்டோன்மெண்ட், திருச்சி-1" என்ற முகவரியிலிருந்து ரூ. 1·04 பணமாகவோ அல்லது பண ஆணை மூலமாகவோ செலுத்தி விண்ணப்பத்தின்பேரில் 22—5—1972 முதல் 3—6—1972 வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**வி. பா. துரைராஜ்,**
வனப் பொறியாளர்.

(த.80)

---

## மின்சார வாரியம்

குறிப்பிடுகை எண் சி. 1105.

குந்தா நீர் மின் திட்டம் நான்காவது கட்டம், மூன்றும் நிலையத்துடன் இணையவிருக்கும் மூன்றுவது அழுத்த நீர்க்குழாயைத் தயாரித்து அனுப்பிக் கொடுத்து, நிர்மாணிக்க—

1. தமிழ்நாடு மின் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் குந்தா நீர் மின் திட்டத்தின் நான்காவது கட்டத்திற்குட்பட்ட, மூன்றுவது நிலையத்தின், மூன்றுவது அழுத்த நீர்க் குழாயைத் தயாரித்தும், அனுப்பிவைத்தும் நிர்மாணித்தும் கொடுக்கவேண்டிய வேலைக்கு, அரக்கு முத்திரையிடப்பட்டு முகவுரையின்கண் அனுப்புநரின் பெயருடன் "குறிப்பிடுகை எண் சி. 1105 குந்தா நீர் மின் திட்டம் நான்காவது கட்டம்–மூன்றும் நிலையத்துடன் இணையவிருக்கும் மூன்றுவது அழுத்த அழுத்த நீர்க் குழாயைத் தயாரித்து, அனுப்பிக் கொடுத்து, நிர்மாணிக்க, என்று எழுதப்பட்டதுமான குத்தகை (டெண்டர்) மனுக்களை சென்னை-2, அண்ணாசாலையில் 157-ம் எண்ணில் மேற்பார்வைப் பொறியாளர் (தொழில் நுட்பம்) பொதுவியல் என்பவரால் 1972-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26-ம் நாள் புதன்கிழமை பகல் 12–00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை (டெண்டர்) மனுக்கள் அன்று மாலை 2–30 மணியளவில் வந்திக்கும் குத்தகை மனுதார்கள் அல்லது அவர்களது உறுப்பினர்கள் முன்னிலையில் திறக்கப்படும். குத்தகை மனு அனுப்புநரின் பெயரும் குறிப்பிடுகை எண் சி. 1105 அரக்கு முத்திரையிடப்பட்ட உறையின்மீது தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும். மேலே குறிப்பிட்ட காலவரம்பிற்குப்பின்னல் வரும் மனுக்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

2. மேற்குறிப்பிட்ட குறிப்பிடுகை எண் சி. 1105-ன் ஒரு நகலின் விலை ரூ. 50. இத்தொகையை ரொக்கமாகவோ அன்றி பணஅஞ்சல் (மணி ஆர்டர்) மூலமாகவோ, அக்கௌண்ட்ஸ் ஆபிஸர் (ஸ்பெஸிபிகேஷன்) சென்னை மின்சார திட்டம் (விநியோகம்) (எம்.இ.எஸ். டிஸ்டிரிபியூஷன் 157, அண்ணாசாலை, சென்னை–2 என்ற முகவரிக்கு அனுப்பிப் பெறப்பட்ட ரசீதை இணைத்து விண்ணப்பித்து கொள்வதன் பேரில் குறிப்பிடுகை எண் சி. 1105-இன் நகலை கீழே ஒப்பமிட்டவரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அக்கௌண்ட்ஸ் ஆபிஸரிடம் பணம் கட்டும்போதோ அல்லது பண அஞ்சல் அனுப்பும் போதோ குறிப்பிடுகை எண் சி. 1105 என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேலே கூறப்பட்ட இத்தொகை எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டா.

3. குறைந்த வீதக் குத்தகையோ (டெண்டரோ) அன்றி எந்த குத்தகையோ (டெண்டரையோ) ஒப்புக்கொள்வதற்கு இத் தமிழ்நாடு மின்சார வாரியம் தன்னை கட்டுப்படுத்திக்கொள்ளாது. எந்தக் குத்தகையையோ (டெண்டரையோ) அல்லது எல்லா குத்தகைகளையும் டெண்டர்களையும்) எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் முழு உரிமை இவ்வாரியத்திற்கு உண்டு.

157, [illegible]

**மேற்பார்வைப் பொறியாளர்,**
தொழில் நுட்பம் (பொதுவியல்).

([illegible]

## பயிற்சி

## பொது (செய்தி & மக்கள் தொடர்பு) துறை, சென்னை

### திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனத்தில் சேருதல் அடையார், சென்னை-20

1972–73 ஆண்டு, திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனத்தின், சென்னை 20-ல் நடத்தப்படும் கீழ்க்கண்ட முறையான படிப்புகளில் முதல் ஆண்டில் சேருவதற்கு மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

| படிப்புகள். | தேவையான குறைந்தபட்சக் கல்வித் தகுதி. | படிப்புகளுக்கான காலம். |
|---|---|---|
| | | வருடம் |
| 1 இயக்குதல். | கலை அல்லது விஞ்ஞானத்தில் பட்டம் அல்லது மோசன் பிக்சர், போட்டாகிராபி, சவுண்ட் எஞ்சினீரிங் மற்றும் சவுண்ட் ரிகார்டிங் மற்றும் பிலிம் எடிட்டிங் ஆகியவற்றில் திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனத்தில் டிப்ளமா அல்லது அதற்குச் சமமான டிப்ளமா. | 3 |
| 2. திரைக்கதை எழுதுதல். | கலை அல்லது விஞ்ஞானத்தில் பட்டம் அல்லது மோசன் பிக்சர், போட்டாகிராபி, சவுண்ட் எஞ்சினீரிங் மற்றும் சவுண்ட் ரிகார்டிங் மற்றும் பிலிம் எடிட்டிங் ஆகியவற்றில் திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனத்தில் டிப்ளமா அல்லது அதற்குச் சமமான டிப்ளமா. | 3 |
| 3. சினிமா போட்டாகிராபி. | புகுமுக வகுப்புத் தேர்வில் பௌதிகம் மற்றும் இரசாயனத்துடன், அல்லது அதற்கு சமமாக (Physical Science) தேறியிருக்க வேண்டும். அல்லது தமிழ்நாடு, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி மாநிலக் குழுவின் புகுமுக தொழில் நுட்பத் தேர்வில் தேறியிருக்க வேண்டும். | 3 |
| 4. ஒலிப்பதிவு மற்றும் ஒலி. | புகுமுக வகுப்புத் தேர்வில் பௌதிகம் மற்றும் இரசாயனத்துடன், அல்லது அதற்குச் சமமாக (Physical Science) தேறியிருக்க வேண்டும். அல்லது தமிழ்நாடு, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி மாநிலக் குழுவின் புகுமுகத் தொழில் நுட்பத் தேர்வில் தேறியிருக்க வேண்டும். | 3 |
| 5. பிலிம் புராசசிங். | புகுமுக வகுப்புத் தேர்வில் பௌதிகம் மற்றும் இரசாயனத்துடன், அல்லது அதற்கு சமமாக (Physical Science) தேறியிருக்க வேண்டும் அல்லது தமிழ்நாடு, தொழில்நுட்பக் க[illegible] மற்றும் பயிற்சி மாநிலக் கு[illegible] புகுமுக தொழில் நுட்பத் தே[illegible] தேறியிருக்க வேண்டும். | 3 |
| 6. தொகுப்பு. | புகுமுக வகுப்பில் கலை அல்லது அதற்குச் சமமாகத் தேறியிருக்க வேண்டும். | 1 |
| 7. நடிப்பு. | எஸ்.எஸ்.எல்.சி .. .. .. | 2 |

குறிப்பு :

மனுதாரர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தமிழ்நாட்டிற்கு அப்பபல் தங்கள் தகுதிக்கான தேர்வில் தேர்வு பெற்றிருப்பார்களேயானுல் தங்கள் தகுதிக்கு அனுமதி பெற்ற பின்னரே உறுதி செய்யப்படும். இயக்குதல், நடித்தல், திரைக்கதை எழுதுதல் ஆகிய படிப்புகலில் சேர விரும்புகிற மாணவர்கள் தமிழில் செயல் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

மனுக்கள் மற்றும் புராஸ்பெக்டஸ் :

தேவையான மனுப்படிவங்கள் புராஸ்பெக்டஸ்கள், முதல்வர், திரைப்படத் தொழில்நுட்ப நிறுவனம், அடையார், சென்னை-20 அவர்களுக்கு எழுதி, சுயவிலாசம் எழுதப்பட்ட உறையில் (22 செ.மீ. 9.5 செ. மீ.) 50 காசு மதிப்புள்ள அஞ்சல் வில்லைகள் ஒட்டப்பட்டு, மேற்கண்ட நிறுவனத்தின் முதல்வர் அவர்கள் பெறும் வகையில் ரூ. 1 கிராஸ் செய்யப்பட்ட அஞ்சல் ஆணையையும் சேர்த்து அனுப்பிப் பெறலாம்.

சேருதல் :

மனுதாரர்கள் தங்கள் சொந்தச் செலவில் சென்னையில் நேர்முகப் பேட்டிக்கு வரவேண்டும்.

கட்டணம் :

ஆண்டு ஒன்றுக்கு படிப்புக் கட்டணம் ரூ. 180 இரண்டு இன்ஸ்டால் மெண்ட்களில் கட்டலாம்.

(ஆ) தனிக் கட்டணம் ரூ. 40 சேரும்போது கட்ட வேண்டும்.

ஸ்காலர்சிப்ஸ் மற்றும் உதவித்தொகை :

(எ) மாணவர்களில் 50 சதவிகித்தினருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 உதவித் தொகை வழங்கப்படும்.

(பி) பாலிடெக்னிக் மாணவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வழக்கமான ஸ்காலர்சிப்கள் பெற இந்த மாணவர்கள் தகுதியுடையவர்கள்.

(சி) மூன்றுண்டுக்காலப் பயிற்சியில், முதல் ஆண்டுப் படிப்பில் சேர்ந்துள்ள மிகுந்த கஷ்டப்படுகின்ற (most deserving) மாணவர்களுக்கு நான்கு ஸ்காலர்சிப்புகளைத் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் நிறுவியுள்ளது.

சேருவதற்கான பூர்த்தி செய்யப்பட்ட மனுக்கள் முதல்வர், திரைப்பட தொழில் நுட்ப நிறுவனம், அடையார், சென்னை-20 அவர்களுக்கு 18–6–1972, 5 மணிக்கு முன்னரே வந்து சேர வேண்டும்.

**இயக்குநர்,**
பொது (செய்தி—மக்கள் தொடர்பு) துறை,
சென்னை-9.

(த.44)

## ஏல விளம்பரம்

தஞ்சாவூர் வனக் கோட்டத்தில் சேகரம் செய்யப்பட்ட முந்திரிக் கொட்டைகளின் ஏல விளம்பரம் பின் வருமாறு.

| ஏல நாளும் நேரமும். | ஏலப் பொருள் அளவு உத்தேசமாக. | | ஏலம் நடைபெறும் இடம். |
|---|---|---|---|
| 5–6–72 காலை 11 மணி. | 15 டன் | .. | கந்தர்வ கோட்டை கிடங்கு.. |
| 20–6–72 ,, | 15 டன் | .. | ஷை |
| 6–6–72 ,, | 13 டன் | .. | கீரமங்கலம் கிடங்கு |
| 21–6–72 ,, | 7 டன் | .. | ஷை |

ஏலம் குறித்து மேல் விவரங்களைத் தஞ்சாவூர் மேல ராஜ வீதியிலிருக்கும் மாவட்ட வன அலுவலகத்திலிருந்தும், தஞ்சாவூர் பட்டுக் கோட்டை வனச் சரக அலுவலகங்களிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்.

**அ. ஜஸ்டஸ்,**
மாவட்ட வன அலுவலர்.

(த. 46)

## வீட்டு வசதி வாரியம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் கட்டுவதற்காகச் சென்னை நகரில் இரண்டு இடங்களை நீண்ட காலமாகக் குத்தகைக்கு விடத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் திட்டமிட்டுள்ளது.

சென்னை நகரில் அழகாக, விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் தென்பகுதியில் இருக்கும் இயற்கையான குளுமையான நீரோட்டப் பகுதிக்குப் பெயர் பெற்ற எட்வர்டு எலியட் கடற்கரைப் பகுதியில் வங்காள விரிகுடாவை நோக்கிச் சிறப்புப் பெற்றிருக்கும் 5 ஏக்கர் நிலப்பகுதி.

குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளும் மற்றும் வரை படமும் ரூ. 100 ரொக்கமாகச் செலுத்தித் (திருப்பித்தரப்படமாட்டாது) தலைவர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், அண்ணா சாலை, சென்னை-35 அவர்தம் அலுவலகத்தில் பெறலாம்.

ஒவ்வொரு மனைக்கும் தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

டி. வி. வாசுதேவன்,
தலைவர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.

(த. 21)

## பால்பண்ணை வளர்ச்சித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் நந்தனம், சென்னை-35-ல் தற்பொழுதுள்ள கிடங்கை (Godown) மாற்றி மத்தியக் குளிர் பதனக் கிடங்காக மாற்றுதல் மற்றும் வராந்தா (Verandha) (சிவில் வேலைகள் மட்டும்) கட்டும் வேலைக்காக மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை வளர்ச்சி ஆணையர் அலுவலகம், பால் காலனி அஞ்சல், சென்னை-51-ல் எல்லா வேலை நாட்களிலும் காலை 11-00 மணி முதல் மாலை 4-00 மணி வரை.

ஒப்பந்தப் புள்ளிகள் 27—6—1972 மாலை 3-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

என். ஹரிபாஸ்கர்,
ஆணையர்.

(த. 85)

## கோயம்புத்தூர் நகராட்சி

1972-73-ம் ஆண்டிற்குக் கோயம்புத்தூர் நகராட்சி அலுவலகத்திற்குச் சுமார் ரூ. 40,000 மதிப்புள்ள எழுது பொருள்கள் வழங்குவதற்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 19—6—1972-ம் தேதி மாலை 3-00 மணிவரை பெறப்படும். தேவையான பொருட்களின் விவரங்களும், நிபந்தனைகளும் நகராட்சிக் கருவூலத்தில் ரூ. 1 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,
கோயம்புத்தூர் நகராட்சி.

(த. 89)

## அரசு பொது மருத்துவமனை, சென்னை-3

இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட மருத்துவமனைகளின் உபயோகத்திற்காக 1,22,10,000 மருந்து எழுதிக் கொடுக்கும் சீட்டுகள் (Prescription Chits) அச்சிட்டு வழங்குவதற்கு 16—6—1972 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் "மேற்பார்வையாளர்" அரசு பொது மருத்துவமனை, சென்னை-3 என்ற முகவரிக்கு முத்திரையிட்ட உறையில் "மருத்துவமனைகளுக்கு மருந்து எழுதிக் கொடுக்கும் சீட்டுகள் அச்சிட்டு வழங்குவதற்கு 16—6—1972-ஆம் தேதிய ஒப்பந்தப்புள்ளி" என்று குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

மாதிரி மற்றும் காலம் மற்றும் நிபந்தனைகள், இந்த மருத்துவமனையின் எழுதுபொருள் துறையில் உள்ளன. இவைகளை எல்லா வேலை நாட்களிலும் காலை 10-30 மணி முதல் மாலை 5-00 மணி வரை காணலாம்.

டாக்டர் டி. ஹரிராஜன்,
மேற்பார்வையாளர்.

(த. 93)

## உதகமண்டலம் நகராட்சி

1972-73-ஆம் ஆண்டுக்கு இந் நகராட்சிக்குத் தேவையான எழுது பொருள் சாமான்கள் வழங்க ஆணையர், உதகமண்டலம் நகராட்சி அல்லது அவர் இல்லாவிடில் மேலாளர், நகராட்சி அலுவலகம், உதகமண்டலம் அவர்களால் 12—6—1972 திங்கட்கிழமை மாலை 3-30 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4-00 மணிக்குத் திறக்கப்படும்.

ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் பத்திரங்களுக்கு இந்த அலுவலகத்தில் செட் ஒன்றுக்கு ரூ. 6-18 காசுகள் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரெங்கசாமி,
நகராட்சி ஆணையர்.

(த 45)

## ஏல விற்பனை

## வீட்டு வசதி வாரியம்

பொருள்.—18—6—1972 அன்று கொரட்டூரில் தனிச் சிறப்பு மனைகள் (Special Plots) ஏலம்.

கொரட்டூர் திட்டப் பகுதியில் ஒவ்வொன்றும் இரண்டு கிரவுண்டு அளவுள்ள நன்றாகச் செப்பனிடப்பட்ட 22 பிளாட்டுகள் விற்பதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1972 ஜூன் 18 அன்று காலை 10-00 மணிக்கு ஏலம் நடத்தப்படும். விருப்பம் உள்ளவர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில் பிரதி ஒன்றுக்கு ரூ. 5 செலுத்திக் குறிப்பிடப்பட்ட படிவத்தைப் பெற்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கட்டுத் தொகை ரூ. 750-வுடன் மனுக்கள் பெறுவதற்கான கடைசி நாள் 1972 ஜூன் 17-ஆம் தேதியாகும். உயர்ந்த தொகைக்குக் கேட்பவர் மனையின் விலையைக் கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டும்.

(அ) ஏலம் முடிந்ததும் அந்த இடத்திலேயே உடனடியாக 15 சதவிகிதம் ரொக்கமாகச் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) விற்பனை உறுதிப்படுத்திய நாளிலிருந்து ஒரு வாரத்திற்குள் 10 சதவிகிதம் செலுத்தப்படவேண்டும்.

(இ) மீதமுள்ள 75 சதவிகிதத் தொகையை 8½ சதவிகிதம் வட்டியுடன், 3 ஆண்டுகளில் அரையாண்டுத் தவணை முறையில் செலுத்தப்பட வேண்டும்.

டி. வி. வாசுதேவன்,
தலைவர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.

(த. 94)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசு பொதுப்பணித் துறை

### வைகைச் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்கள் சார்பிலும், கீழ்க்காணும் வேலைகளுக்காக கே. 2 ஒப்பந்த வகையில், அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள், மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, மதுரை வட்டம், மதுரை-2 அவர்களால், மதுரை-2-ல் உள்ள அவர்களது அலுவலகத்தில் 28-6-1972 அன்று மாலை 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். பெற்றுக்கொள்ளப் பட்ட ஒப்பந்தங்கள், அதே நாள் மாலை 4-00 மணிக்கு, அப்போது வந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயரும். | முன் வைப்புத் தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1 மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே வைகை நதியின் குறுக்கே, அமையவிருக்கும் ரெகுலேட்டருக்கு இடதுபுறம் தலைமதகு கட்டுதல். | 7,500 |
| 2 மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே, அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 10, 11, 12 கட்டுதல். | 12,000 |
| 3 மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே அமையவிருக்கும் ரெகுலேட்டரில் பகுதிகள் 13, 14, 15 கட்டுதல். | 12,000 |
| 4 மதுரை மாவட்டம், மதுரை வட்டம், விராகனூர் அருகே, வைகை நதியின் குறுக்கே பகுதிகள் 16, 17, 18 கட்டுதல். | 12,000 |

ஒவ்வொரு வேலைக்கான, ஒப்பந்த நிபந்தனைகள், வரைபடங்கள், மற்றும் பத்திரங்களின் விலையான ரூ. 20-ஐ (இருபது மட்டும்), "P. W. III O. R." என்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, வைகைச் சீரமைப்புக் கோட்டம், மதுரை-20 அவர்கள் வரவில் சேரும்படியும், மேற்கண்ட ஒவ்வொரு ஒப்பந்தப் பத்திரங்களின் விலைக்கான விற்பனை வரி ரூ. 0·75-ஐ "XII Sales-tax (d) Miscellaneous" என்ற தலைப்பிலும், தனித்தனியே அரசுக் கருவூலங்களில் செலுத்தி, அதற்கான ரசீதுகளைக் கொடுத்து, மதுரை வட்ட (பொதுப்பணித்துறை) மேற்பார்வைப் பொறியாளர், மதுரை-2 அலுவலகத்தில் 26-6-1972-ம் தேதிக்குள், மேற்கண்ட ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வேலைக்கான முன் வைப்புத்தொகையும், கருவூலச் சீட்டு வடிவிலோ, அல்லது செட்யூல்ட் வங்கிகளின் "கால் ரசீது டெபாசிட்டு" வகையிலோ அல்லது செட்யூல்ட் வங்கிகளின் "டிமாண்ட் டிராப்ட்டு" களாகவோ ஏற்றுக்கொள்ளப்படும். தேசீயச் சேமிப்புப் பத்திரங்களும், தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்களும் மதிப்பில் ஐந்து விழுக்காடுகள் குறைத்துப் பெற்றுக்கொள்ளப்படும். முன் வைப்புத்தொகை வேறு எந்தவடிவிலும் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வ. துரைராஜு,
மேற்பார்வைப் பொறியாளர், (கூடுதல் பொறுப்பில்),
மதுரை வட்டம், மதுரை.

(த. 90)

## ஒப்பந்தப் புள்ளி நீட்டிப்பு

### குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்—

1. பள்ளப்பட்டி குடிநீர் வழங்கு திட்டம் 3-ஆம் கட்டம், பகுதி 1-க்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை ஆர்.சி.சி. சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்.

2. பள்ளப்பட்டி குடிநீர் வழங்கு திட்டம்—3-ஆம் கட்டம், பகுதி 2-க்கு 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை ஆர்.சி.சி. சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்.

3. பள்ளப்பட்டி குடிநீர் வழங்கு திட்டம்—3-ஆம் கட்டம், பகுதி 3-க்கு ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை ஆர்.சி.சி. சர்வீஸ் ரிசர்வாயர் கட்டுதல்

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்குக் கடைசி நாள் 5-6-1972-க்கு மேலும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தப் படிவங்கள், நிருவாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிர்வாகக் கோட்டம், பி-15, தில்லை நகர் மெயின் சாலை, திருசி-18-ல் 2-6-1972 மாலை 5-00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பின் மற்ற நிபந்தனைகள் மாற்றப்படாது.

மேற்பார்வைப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
நிருவாக வட்டம், மதுரை-2.

(த 28)

## தேவை

### பொது விளம்பரம்

### ஊராட்சி ஒன்றியம் வலங்கைமான்

(தஞ்சை மாவட்டம்.)

தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஆவூரில் உள்ள ரெகுலர் டிஸ்பென்சரிக்கு மருத்துவ அதிகாரி பதவிக்கு எம்.பி.பி.எஸ். எல்.எம்.பி. அல்லது ஜி.சி.ஐ.எம். படிப்பு யோக்யதாம்சம் கொண்ட மருத்துவ அதிகாரிகளிடமிருந்தும் மேலும் இவ்வொன்றியத்தைச் சார்ந்த அரித்துவாரமங்கலம் கிராம வைத்தியசாலைக்கு எல்.ஐ.எம்.எ. வகுப்பு அல்லது பி வகுப்பு கிராம மருத்துவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தால் 25—6—1972-க்குள் வரவேற்கப்படுகின்றன. சம்பள விகிதம், கல்வி யோக்யதாம்சத்திற்கு தக்கவாறு நிர்ணயித்து வழங்கப்படும்.

யோக்யதாம்சம் மற்றும் முன் அனுபவம் இருப்பின் முழு விவரங்களுடன் தெரிவிக்கவும். தாமதித்து வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப் படமாட்டாது.

தி. விவேகாநந்தம்,
ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம்,
வலங்கைமான்.

(த. 60)

## திருவண்ணாமலை நகராட்சி.

1972–73ம் ஆண்டிற்கு நகராட்சிக்குத் தேவையான சுமார் ரூ. 13,000 மதிப்புள்ள தண்ணீர் விநியோகப் பொருள்கள் சப்ளை செய்ய அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 17-6-1972ம் தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அன்று காலை 4-30 மணிக்கு அவைகள் திறக்கப்படும்.

கட்டவேண்டிய பொறுப்புத் தொகை விவரத்திற்கும், மற்றும் இதர விவரங்களுக்கும் அலுவலகத்திற்கு எழுதியோ அல்லது அலுவலக நேரத்தில் நேரிலோ ரூ. 1.50 செலுத்தித் தெரிந்து கொள்ளலாம்.

இராமகிருஷ்ணன்,
ஆணையர்.

(த. 95)

## ஏல விற்பனை

### பால் பண்ணை வளர்ச்சித்துறை

இத்துறையின் கீழ்க்கண்ட வாகனங்கள் பணிக்கூட எல்லைக்குள், பால் காலனி, மாதவரம், சென்னை-51-ல் 19—6—1972 அன்று காலை 11–30 மணிக்கு இத் திட்டத்தின் உதவிப்பொறியாளர் (மெக்கானிக்கல்) அவர்களால் பொது ஏலத்தில் விற்கப்படும்.

எண்ணிக்கை—300 முதல் 400 வரை.

வாகனத்தின் விவரம்—willys Jeep 7736, Tempo Hanseat (Petrol) Tempo MSX 8808 மூன்று சக்கரம், லேலண்ட், பென்ஸ் மற்றும் வில்லீஸ் ஜீப்புகள் போன்ற போக்குவரத்து வாகனங்களின் பழைய வீணான டயர்கள்.

மாடல்—1956, 1960.

விற்பனைக்கான காலமும் நிபந்தனைகளும் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை ஆணையர் அலுவலகம், சென்னை-51-ல் எல்லா வேலை நாட்களிலும், அலுவலக நேரங்களில் பெறலாம். வாகனங்கள் ஏலம் விடப்படும் இடத்தில் எல்லா வேலை நாட்களிலும் அலுவலகம் நேரங்களில் பார்வைக்குக் கிடைக்கும்.

என். ஹரிபாஸ்கர்,
ஆணையர்.

(த.61)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க் குறிப்பிட்ட வேலைக்காக, நிருவாகப் பொறியாளர் (பொதுப்பணித் துறை), கட்டடக் கோட்டம், திருநெல்வேலி-2 அவர்களால் 20—6—1972 மாலை 4-00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4–30 மணிக்குத் திறக்கப்படும்.

1. வேலையின் பெயர்—திருநெல்வேலி மாவட்டம், அபிசேகப் பட்டியில் இராணி அண்ணாதுரை அரசு பெண்கள் கலைக் கல்லூரிப் பகுதில் உள்ள குழாய்க் கிணறுகள் (Bore Wells) மின்சாரத்தால் இயக்கப்படும் ஆழ்கிணறு டர்பைன் பம்புகள் வழங்குதல் மற்றும் பொருத்துதல்.

2. ஒப்பந்தப் படிவம்—கே. 2.

3. கட்டுத் தொகை—ரூ. 250.

4. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 5.

5. விற்பனை வரி—0.15 காசுகள்.

6. வேலை முடிக்க வேண்டிய காலம்—ஒரு மாதம்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித்தரப் படமாட்டாது) எந்தக்கருவூலத்திலாவது "P.W. III Other Receipt" என்ற தலைப்பில் நிருவாகப் பெறியாளர், பொதுப் பணித் துறை கட்டடக் கோட்டம், பாளையம் கோட்டை அவர்தம் கணக்கிலும் விற்பனை **"XII S.T.(c) Receipt Under the State Sales Tax General Sales Tax"** என்ற தலைப்பிலும் செலுத்த வேண்டும்.

ஒப்பந்தப் படிவங்கள் மற்றும் இதர பத்திரங்கள், தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, கட்டடக் கோட்டம், பாளையம்கோட்டை, அவர்தம் அலுவலகத்தில் 1—6—1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் மேலாளர் அவர்களுக்கு விண்ணப்பிப்பதுடன் ஒப்பந்தப் பத்திரத்தின் விலை விற்பனை வரி செலுத்தப்பட்ட ரிசிப்ட் சலானையும் வைத்து அனுப்பிப் பெறலாம்.

மற்ற விவரங்கள் இந்த அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம்.

நிருவாகப் பொறியாளர், கட்டடக் கோட்டம், பாளையங்கோட்டை அவர்களுக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை உண்டு.

நிருவாகப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை.
கட்டடக் கோட்டம், பாளையங்கோட்டை.

(த.66)

## தொழிற் கல்வி

### தொழில் நுட்பக் கல்வித்துறை, சென்னை-25

1. 1972-73-க்கு மத்திய பாலிடெக்னிக், சென்னையில் நடத்தப்படும் கீழ்க்கண்ட டிப்ளமா மற்றும் ( Horticulture ) தாவர இயல் சர்டிபிகேட் படிப்புகளில் சேருவதற்கு மனுக்கள் 30—6—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் முதல்வர் அவர்களுக்கு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

| 2. படிப்பின் பெயர். | படிப்பின் காலம். |
|---|---|
| (அ) தோட்டக்காரர்களுக்கான சான்றிதழ் படிப்பு. | 6 மாதங்கள். |
| (ஆ) சாலையோரத் தோட்டக்காரர்களுக்கான (Road Gardeners) சான்றிதழ் படிப்பு. | 1 வருடம். |
| (இ) தோட்ட மேற்பார்வையாளர்கள்—லேண்ட் ஸ்கேப் ஆர்கிடெக்ட்ஸ். | 2 வருடம். |

3. சேருவதற்கான குறைந்தபட்சத் தகுதி :—

| | |
|---|---|
| (அ) தோட்டக்காரர்களுக்கான சான்றிதழ் படிப்பு: | பழைய மூன்றும் படிவம் அல்லது இன்றைய VIII-ஆம்வகுப்பில்தேர்வு பெற்றிருக்கவேண்டும். |
| (ஆ) சாலையோரத் தோட்டக்காரர்களின் சான்றிதழ் படிப்பு. | எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்க வேண்டும். |
| (இ) தோட்டமேற்பார்வையாளர்கள்—லேண்ட் ஸ்கேப் ஆர்கிடெக்ட்ஸ். | எஸ்.எஸ்.எல்.சி.-யில் தேர்வு (பல்கலைக் கழகப் படிப்புகளில் சேரத் தகுதி உண்டா இல்லையா.) |
| 4. வயது வரம்பு | 1—7—1972 அன்று மனுதாரர்கள் 25 வயது பூர்த்தி அடையாதவராக இருக்க வேண்டும். |

5. மனுப்படிவங்கள் மற்றும் இதர விவரங்கள் முதல்வர், மத்திய பாலிடெக்னிக், சென்னை–25 அவர்களுக்கு எழுதி தன் முகவரியிட்ட உரையில் (22 செ.மீ. × 9·5 செ.மீ.) அஞ்சல் வில்லைகள் 35 காசு 5 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் வில்லை ஒட்டி உடன் வைத்து அனுப்பிப் பெறலாம்.

6. மனுப்படிவம் வேண்டி எழுதும் பொழுது ரூ. 1 கிராஸ் செய்யப் பட்ட அஞ்சல்-ஆணை (15—6—1972 முன்பு செலுத்தப்பட்டிருக்கக் கூடாது) பாலிடெக்னிக் முதல்வர் அவர்கள் (யாருக்கு எழுதுகிறோமோ) பெறும் வகையில் செலுத்தி அதைச் சேர்த்து அனுப்ப வேண்டும்.

7. அரசுத் துறைகள் மற்றும் தனியார் நிலையங்களில் ஏற்கெனவே வேலைசெய்து கொண்டிருக்கும் மனுதாரர்கள் முதலிடம் கொடுக்கப் படுவார்கள்.

8. மனுக்கள் முதல்வர் அவர்களின் பெயரில் அல்லாமல் பதவிப் பெயரை மட்டுமே குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

இயக்குநர்,
தொழில் நுட்பக் கல்வி.

(த.50)

## ஒப்பந்தப் புள்ளி

### போக்குவரத்துத் துறை

மதுரையில் உள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறையின் விரைவுப் பெருந்து நிலையத்தில் "சிற்றுண்டி விடுதி—பயணியர் தங்கும் விடுதி" கட்டடத்தில் கீழே உள்ள இரண்டு கடைகளில் வடக்குப் பக்கம் உள்ள கடை எண். 2 குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்கள் பெறுவதற்கான கடைசி தேதி 12—6—1972.

2. ஒப்பந்தம் திறக்கப்படும் நாளும், நேரமும்: 12—6—1972 மாலை 3.30 மணி.

3. கடையின் குத்தகைக் காலம் :—2 வருடங்கள்.

4. ஒப்பந்தப் படிவம் வேண்டுவோர் ரூபாய் 1 (ரூபாய் ஒன்று மட்டும்) கூட்டு இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை, திருச்சிராப் பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி–17 அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

ம. பிராணப்பன்,
கூட்டு இயக்குநர்.

(த. 77)

## தொழிற் கல்வி

### தொழில் நுட்பக் கல்வித் துறை சென்னை-25

1972–73-ஆம் ஆண்டுக்கு நெசவுத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை-2-ல் நடத்தப்படும், நெசவுத் தொழில் நுட்ப டிப்ளமா படிப்பில் சேருதல்.

1. மேற்கண்ட படிப்பில் சேருவதற்கான மனுப்படிவங்கள், முதல்வர், நெசவுத் தொழில் நுட்ப நிறுவனம், சென்னை–20, அவர்களுக்கு எழுதி, முதல்வர், நெசவுத் தொழில் நுட்ப நிறுவனம் சென்னை அவர்கள் பெறும் வகையில் செலுத்தப்பட்ட ரூ.1 கிராஸ் செய்யப்பட்ட அஞ்சல் ஆணையை (1—5—1972-க்கு முன்னர் செலுத்தப் பட்டிருக்கக்கூடாது) தன்முகவரி எழுதப்பட்ட (22 செ. மீ. × 9.5.செ.மீ.) உறையில் 50 காசு+5 காசு அகதிகள் நிவாரண அஞ்சல் வில்லைகள் ஒட்டி உடன் வைத்து அனுப்பிப் பெறலாம்.

2. சேருவதற்கான தகுதி: எஸ். எஸ். எல். சி. யில் அல்ஜீப்ரா மற்றும் ஜியோமிட்ரி அல்லது பௌதிகம் அல்லது இரசாயனம் அல்லது எலக்டிவ் பாடத்தில் பொறியியல் இவற்றில் தேறி இருக்க வேண்டும். மற்றும் பல்கலைக்கழகப் படிப்புகளில் சேருவதற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

ஆங்கிலோ–இந்தியன் உயர்நிலைப் பள்ளித் தேர்வில் அல்ஜீப்ரா, டிரிக்னோமெட்ரி, ஜியோமிட்ரி, பௌதிகம், மற்றும் இரசாயனம் இவற்றில் எந்த இரண்டு எலக்டிவ்களிலாவது தேர்வு பெற்று பல்கலைக் கழகப் படிப்பில் சேருவதற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும்.

மெட்ரிக்குலேசனில் கணக்கு மற்றும் விஞ்ஞானத்தில் தேறி இருக்க வேண்டும்.

அல்லது

தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிப் படிப்பில் இறுதியாண்டுத் தேர்வில் தேறி இருக்க வேண்டும்.

அல்லது

தமிழ்நாடு, உயர்நிலைப் பள்ளிக் கல்விக் குழுவினால், அங்கீகரிக்கப் பட்ட மேற்குறிப்பிட்டவைக்குச் சமமான வேறு எந்தத் தகுதியாவது இருக்க வேண்டும்.

3. வயது வரம்பு: இந்தப் படிப்பில் சேருவதற்கு வயது வரம்பு குறிப்பிடப்படவில்லை.

4. மேற்கண்ட நிறுவனத்தில் சேருவதற்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மனுதாரர்கள் மட்டுமே கவனிக்கப்படுவார்கள். மத்திய அரசு ஊழியர்களின் குழந்தைகள் மற்றும் தனி அல்லது பொதுப் பதிவு செய்யப்பட்ட ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளில் நிரந்தர ஊழியர்களின் குழந்தைகள், இந்த மாநிலத்தைத் திரும்பக் குடியிருப்பாகக் கொண்டவர்கள், அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் ஊழியர் களின் குழந்தைகளும் விண்ணப்பித்து மற்ற மனுதாரர்களைப் போலவே தங்கள் குடியிருப்பைப்பற்றிக் கவனியாது போட்டியில் ஈடு படலாம். மனுதாரர் விண்ணப்பிக்கும் பொழுது பெற்றோர் அல்லது பாதுகாவலர் இந்த மாநிலத்தில் வேலைபார்ப்பவராக இருந்தால், பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு வேலை கொடுத்தவரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி மனுவுடன் வைத்து அனுப்ப வேண்டும்.

(அ) மேற்கண்ட படிப்பில் சேருவதற்கான மனு முதல்வர், நெசவுத் தொழில் நுட்ப நிறுவனம், அவர்களுக்கு பெயரைக் குறிப்பிடாமல், பதவிப் பெயரை மட்டுமே குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

(ஆ) 1972, ஜூலை 21, மாலை 5·00 மணி வரை இந்த நிறுவனத்தின் முதல்வர் அவர்களால் மனுக்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்.

(த.48)

## ஏல விற்பனை

### வாணியம்பாடி நகராட்சி

இந் நகராட்சியின் உபயோகத்திற்காக 40 குப்பைத் தொட்டிகள் சப்ளை செய்ய ரூ. 200 ஒப்பந்த டெபாசிட்டுடன் கீழ்க் கையொப்பமிட்ட வரால் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 5—6—1972-ம் தேதி மாலை 4 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அன்றையத் தினம் மாலை 4.30 மணிக்கு ஒப்பந்தம் கீழ்க் கையொப்பமிட்டவரால் திறக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் தெரிந்துகொள்ளலாம்.

சிமெண்ட் காங்கிரீட் தொட்டிகளின் விவரம்.

உயரம். 2'—3".
சுற்றளவு 2'—6".
பருமன். 0'—3".

மேற்கண்ட அளவுகளின்படி சதுர வடிவத்தில் செய்யப்பட வேண்டும்.

எச். திருநாவுக்கரசு:
நகர் நல அதிகாரி.

(த.76)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர்—நீலகிரி வட்டம் அவர்களால் கோயம்புத்தூர் அவர் தம் அலுவலகத்தில் 16–6–1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்.—உடுமலைப்பேட்டை அரசுக் கலைக் கல்லூரிக்குப் பின் பிளாக்கில் Ground Floor (அடித்தளத்திற்கு மேல்)கட்டுதல்.

ஒப்பந்தப்படிவம்.—மொத்தத்தொகை.

கட்டுத் தொகை.—ரூ. 6,750.

ஒப்பந்தப் பத்திரத்தின் விலை வரை படத்துடன்.—ரூ. 10.35.

வேலை முடிக்க வேண்டிய காலம்.—3½ மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேலாளர், நிருவாகப் பொறியாளர் அலு வலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களுக்கு எழுதி மேற் குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி (திருப்பித் தரப்பட மாட்டாது) 25–5–1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
கோயம்புத்தூர், நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்–1

(த.65)

## ஏல விலம்பரம்

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சேர்ந்த ஒரு வில்ஸ் ஊர்தி (4 × 475) (ஸ்டேஷன் வாகன்) 1956–ம் ஆண்டு மாடல் 104.5" W. B. பதிவு எண். MDT 3478, தற்போது இருக்கின்ற நிலையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். ஏலம் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 30–6–72 வெள்ளிக்கிழமை மாலை 2·30 மணிக்கு நடைபெறும். ஏலம் கோர விரும்புபவர்கள் ஊர்தியை மேற்குறித்த இடத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏல விற்பனை சம்பந்தமான நிபந்தனைகள் மேற்குறித்த அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் வரும் கோரிக்கைகள் எழுத்து மூலமாக இருப்பதோடன்றி சுய விலாசமிட்ட போதிய அஞ்சல் தலைகள் ஒட்டப்பட்ட ஒரு உறையுடன் அனுப்பப்படவேண்டும்.

**கண்காணிப்பாளர் பொறுப்பு,**
செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை, செங்கற்பட்டு.

(த. 92)

## ஒப்பந்தப் புள்ளி

### மாநில துறைமுகத் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் மாநில துறைமுக அலுவலர், சென்னை அவர்களால் சென்னை-1, முதன் லைன் பீச் சாலை, பழைய உயர் நீதிமன்றக் கட்டடத்திலுள்ள அவருடைய அலுவலகத்தில் 23–6–1972 மாலை 3.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றையத் தினம் மாலை 3·30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலையின் பெயர் :

நாகைப்பட்டினம் துறைமுகத்தின் "ஆர்.சி.சி. பாலத்திலுள்ள குத்துக் கழிகளையும், உத்திரங்களையும் பழுது பார்த்தலும் புதுப்பித்தலும்."

ஒப்பந்தப் பத்திரம் வேண்டுவோர் செட் ஒன்றுக்கு ரூ. 20.73 (ரூபாய் இருபதும் காசு எழுபத்து மூன்று மட்டும்) (திருப்பித் தரப்பட மாட்டாது) செலுத்தி மாநிலத் துறைமுக அலுவலர், சென்னை அவர்களுக்கு மனுச் செய்து பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப் பத்திரங்கள் 19–6–1972 வரையில் மட்டும் சப்ளை செய்யப்படும்.

**எல். ஜி. ஹர்தாஸ்,**
மாநிலத் துறைமுக அலுவலர்.

(த. 91)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு அரசு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித் துறை, கோயம்புத்தூர்—நீலகிரி வட்டம், அவர்களால் கோயம்புத்தூர் அவர்தம் அலுவலகத்தில் 16—6—1972 மாலை 3.00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப் படுகின்றன

வேலையின் பெயர் : உடுமலைப்பேட்டை, அரசு கலைக் கல்லூரியின் முன் பகுதியில் அடித்தளம் உட்பட கிரவுண்ட் ப்ளோர் மற்றும் முதல் அடுக்குக் கட்டுதல்.

ஒப்பந்தப்படிவம் : மொத்தத் தொகை.

கட்டுத் தொகை : ரூ. 17,500.

ஒப்பந்தப்பத்திரத்தின் விலை வரை படத்துடன் : ரூ. 20.70.

வேலை முடிக்க வேண்டிய காலம் : 10 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் மேலாளர், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களுக்கு எழுதி மேற்கண்ட தொகையைச் செலுத்தி (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) 25–5–1972-லிருந்து எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை,
கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டம்,
கோயம்புத்தூர்.

(த. 70)

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

சேலம் நகராட்சி அம்மாப்பேட்டை அண்ணா மருத்துவ மனைக்கு தேவையான மருந்துகளை விநியோகம் செய்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 12–6–1972-ம் தேதி மாலை 4 மணிக்குள் ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். மற்றுமுள்ள விவரங்களுக்கு ஆணையருக்கு விண்ணப்பிக்கவும்.

**பி. ஹமீதலி, பி.ஏ., பி.எல்.,**
ஆணையர்.

(த. 88)

## வேலை வாய்ப்பு

### உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம்

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சாலவாக்கம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்கு எம்.பி.பி.எஸ். தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ரூ. 400–15–475–20–575 25–650 என்ற சம்பள விகிதத்தில் ஊதியமும், மற்றும் அனுமதிக்கப்பட்ட பஞ்சப்படியும் வழங்கப்படும். விருப்பம் உள்ளவர்கள் 15–6–1972 க்குள் தங்களுடைய விண்ணப்பங்களை "ஆணையர், ஊராட்சி ஒன்றியம், உத்திரமேரூர் (வழி) செங்கற்பட்டு" என்ற முகவரிக்குச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஆணையர்.**

(த. 87)

## ஒப்பந்தப் புள்ளி

### நாகர்கோவில் நகராட்சி

இந் நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவின் பார உந்து எண் எம். டி. கே. 956–ஐ பழுது பார்க்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 12—6—1972 மாலை 4 மணி வரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். பழுது பார்க்க வேண்டிய விவரங்கள், நிபந்தனைகள் முதலியன விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ நகர் நல அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கூடுதல் விவரங்கள் தேவைப்பட்டால் நேரில் தெரிந்துகொள்ளலாம்.

பொறுப்புத் தொகை ரூ. 100.

#### நிபந்தனைகள்

1. குறிப்பிடப்பட்டிருக்கும் காலத்திற்குப் பின் கிடைக்கப்பெறுவதும் பொறுப்புத் தொகை இல்லாததுமான ஒப்பந்தப் புள்ளிகள் அங்கீகரிக்கப்படமாட்டா.
2. உதிரி உறுப்புகளின் விலையும், வேலைக் கூலியும் தனித் தனியாக குறிப்பிட வேண்டும்.
3. ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலையைத் தவிர கூடுதல் வேலையோ கூடுதல் உதிரி உறுப்புகளோ அனுமதிக்கப்பட மாட்டா.
4. எல்லா பழுது வேலைகளும் நகராட்சி வளைவினுள் செய்யப் பட வேண்டும்.
5. பழுது வேலைகள் நகராட்சிப் பொறியர், ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்கு உட்பட்டும், தகுதிச் சான்றிதழ் பெறத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

**ஆணையர்.**

(த. 32)

## சிறு தொழில் கழகம் லிமிடெட்

35/2, உட்ஸ் சாலை, அண்ணாசாலை, சென்னை–2

இக்கழகத்தின் ஒரு யூனிட்டான வட ஆர்க்காடு மாவட்டம், விண்ண மங்கலம் மின்னூர் அஞ்சல், டான்சி டென்னேரிக்குத் தேவையான தோல் பதனிடும் இரசாயனப் பொருட்கள் ஆண்டுக்குத் தேவை யானவற்றை வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வர வேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும் ஒவ்வொரு வகைக்கும் எதிரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(கீழ்க்கண்ட ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான ஒப்பந்தப் பத்திரத்தின் விலை, விற்பனை வரி உட்பட ரூ. 5.25)

| வரிசை எண்ணும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்ணும். | ஸ்டோர் சாமான்களின் வகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் பெறக் கடைசி நாளும், நேரம். | |
|---|---|---|---|
| 1. No. 46273/PBI/72 | Cutch Block Extract | 6-6-72 | 2-00 p.m. |
| 2. No. 46274/PBI/72 | Ammonium Sulphate | 6-6-72 | do. |
| 3. No. 46275/PBI/72 | Basic Chrome Sulphate | 7-6-72 | do. |
| 4. No. 46278/PBI/72 | Sodium Sulphate Solid | 8-6-72 | do. |
| 5. No. 46279/PBI/72 | Bichromate of Soda | 9-6-72 | do. |
| 6. No. 46280/PBI/72 | Sulphuric Acid | 12-6-72 | do. |
| 7. No. 46283/PBI/72 | Sodium Bicor-bonate | 13-6-72 | do. |
| 8. No. 46284/PBI/72 | Pungam oil | 14-6-72 | do. |
| 9. No. 46287/PBI/72 | N. C. Lacquer (Clear) | 15-6-72 | do. |
| 10. No. 46289/PBI/72 | N. C. Thinner | 15-6-72 | do. |
| 11. No. 46290/PBI/72 | Wattle Bark Imported | 16-6-72 | do. |
| 12. No. 46291/PBI/72 | Wattle Extract (Indegenous) | 17-6-72 | do. |
| 13. No. 46293/PBI/72 | Myrabalam Nuts | 19-6-72 | do. |
| 14. No. 46294/PBI/72 | Packing Gunny (New) | 20-6-72 | do. |

ஸ்டோர் சாமான்களின் ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியான ஒப்பந்தப் பத்திரங்கள் வாங்க வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் இந்த நிறுவனத்தின் துணை மேலாளர் (வாங்குதல்) அவர்களிடம் ரூ. 5.25 (திருப்பித் தரப்பட மாட்டாது, விற்பனை வரி உட்பட) ரொக்க மாகவோ அல்லது இந்தக் கழகத்தின் சீனியர் கணக்கு அலுவலர் அவர்கள் பெறும் வகையில் மணியார்டர் மூலமாகவோ ஒவ்வொரு ஒப்பந்தப் புள்ளிக்கும் செலுத்திப் பெறலாம்.

ஒப்பந்தப் பத்திரத்திற்குப் பணம் அனுப்பும் ஒப்பந்ததாரர்கள் மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த அறிவிப்பு எண்களையும் குறிப்பிடத்தவறினால் அந்தக் குறிப்பிட்ட ஒப்பந்தப் புள்ளிப் பத்திரம் அனுப்பத் தவற நேரி டலாம் என்பதை முக்கியமாக உணர வேண்டும். அதற்கு இக்கழகம் பொறுப்பல்ல.

நிருவாக இயக்குநர்.

(த.51)

## தொழில் வணிகத்துறை

வேலையின் பெயர்.—மேட்டூரில் உள்ள மேம்படுத்தப்பட்ட பிளாட்டு களுக்கு (Plot) தண்ணீர் வழங்குவதற்கு ஸ்டான்லி நீர்த் தேக்கத் திலிருந்து தண்ணீர் எடுக்கும் டவர் ( Intake Tower ) கட்டுதல் மற்றும் அதன் தொடர்பான வேலைகள்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைக் காக, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் வணிகத் துறை அவர்களால், தொழில் வணிகத்துறை கட்டுமானப் பிரிவு மற்றும் இதர அரசுத் துறைகளின் உரிய பிரிவைச் சார்ந்த ஒப்பந்த தாரர்களிடமிருந்து 20–6–1972 மாலை 3–00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு தொழிற் துறை, 35/2, உட்ஸ் சாலை, சென்னை–2 அவர்களால், அதே நாள் மாலை 3–10 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர் களின் முன்னிலையில் திறக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. ஒப்பந்த வடிவம் | .. .. | மொத்தத் தொகை. |
| 2. கட்டுத் தொகை | .. .. | ரூ. 10,000 |
| 3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை வரை படத்துடன் விற்பனை வரி உட்பட. | | ரூ. 10.40. |
| 4. வேலை முடிக்க வேண்டிய காலம். | | 8 மாதங்கள். |

ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் (கட்டுமானம்) 35/2, உட்ஸ் ரோடு, சென்னை–2 அவர் தம் அலுவலகத்தில் 17–5–1972 முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரி உட்பட ரூ. 10.40-ஐ (எந்தச் சூழ் நிலையிலும் திருப்பித்தரப்பட மாட்டாது) கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவிலோ "XXIX Industries other receipts " என்ற தலைப்பில் "நிருவாகப் பொறி யாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம் எண்–4, தியாகராஜபுரம் வேலூர் " அவர் தம் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத் தொகை சலான், டெபாசிட் அட் கால் ரிசிப்ட், மற்றும் ஷெட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்ட்கள் வடிவத்தில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். கட்டுத் தொகைக்கு, நிருவாகப் பொறியாளர் (கட்டுமானம்) மேற்குக் கோட்டம், வேலூர், அவர்கள் பெறும் வகைகளில் ஷெட்யூல்டு வங்கியால் கொடுக்கப்பட்ட டிமாண்டு டிராப்டுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசு செக்யூரிட்டிகள், தமிழ்நாடு மின்வாரியக் கடன் பத்திரங்கள் முதலியவைகள் மார்க்கெட் மதிப்பிற்கு ரூ. 5 சதவிகிதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பாங்க் காரண்டியும் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசியச் சேமிப்பு சர்ட்டி பிகேட்டுகளும் சம்பந்தப்பட்ட தபால் அலுவலகத்தின் ஆலோசனை யுடன் ஏற்றுக் கொள்ளப்படும். வேறு வகையில் செலுத்தப்படுபவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெரிய சிவில் வேலைகள் கட்டுதலில் குறைந்தது மூன்றுண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பிரிவு.

(த.49)

## துறையூர் நகராட்சி

ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் ஷெட்யூல் பி வகையில் (டிராக்டர்கள் மற்றும் வழங்குவதற்கு) 1–5–72 தமிழரசில் வெளியிடப்பட்டுள்ளன. 18–4–72-ஆம் தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 15–6–72-ஆம் தேதிக்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

சையட் அப்துல் காதர்,
தனி அலுவலர்.

(த.75)

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணா சாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.